

மு.தயாளன்

# இதிகா

நெடுங்கதை

பாகம் 1

மகுடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதிகா

பாகம் 1

A. KUGAN
78, 2nd LANE
ANANDAPURI
TRINCO
0771960160

மு. தயாளன்

மகுடம்

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000

இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மகுடம் பதிப்பக வெளியீடு - 48**


ISBN : 978-624-5849-06-2

● நூல் - இதிகா ● வகை - நாவல் ● ஆசிரியர் - மு.தயாளன் ● உரிமை - ஆசிரியருக்கு ● முதல் பதிப்பு - மார்கழி - 2021 ● பக்கங்கள் - 200 ● வெளியீடு - மகுடம் பதிப்பகம் 90, பார்வீதி, மட்டக்களப்பு. 30000 ● தொ.பே. இல. 0774338878 ● அச்சு - வணசிங்க அச்சகம், மட்டக்களப்பு. ● விலை - 500.00

● Book - IHTHIKA ● Author - M. Thayalan ● © Author ● First Edition - December - 2021 ● Size - 1/8 ● Pages-200 ● Published by - Magudam Publication. 90, Bar Road, Batticaloa. ● Ph.No. 0774338878 ● Book & Cover Design : LEC Design ● email - magudammichael@gmail.com ● Printing - Wanasinghe Printers, Batticaloa ● Price - 500.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எனது உணர்வுகளோடும் சிந்தனைகளோடும்

ஒன்றித்து மிக மிக நீண்டதொரு பயணத்தில்

கைகோர்த்துக் கதைபேசிச் சிரித்துத் தன்வயம் இழந்து

மகிழ்ந்து விளையாடிய என் நண்பன்

நந்தினிசேவியருக்கு

மனதோடும் கண்ணீரோடும்

சமர்ப்பிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றிக்குரியவர்கள்

* ஆர்த்தி துவாரகன்
* சாருகேசி நற்குணதயாளன்
* ரமணன் நற்குணதயாளன்
* சரண்யா தனபாலசிங்கம்
* வி. மைக்கல் கொலின்
* வணசிங்க அச்சகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மகுடம் பதிப்பகத்தின் 48வது வெளியீடாக மு. தயாளனின் இதிகா நாவலை வெளியிடுவதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

வருடத்திற்கு இரண்டு நூல்கள் என்ற திட்டமிடலுடன் படைப்புக்களை வெளிக்கொணர்பவர் மு. தயாளன்.

இந்த வருடம் ஏற்கனவே எதிரொலி (*ECHO*) சிறுகதைத் தொகுப்பும், வின்னிமண்டேலா சுயசரிதை நாவல் ஒன்றும் வெளிவந்த நிலையில், மூன்றாவது நூலாக இதிகா என்ற இந்த நாவல் வெளியாகின்றது.

இதிகா வெறும் சமூக நாவல் அல்ல, இது ஒரு வரலாற்று நாவலாகும். ஓர் இனத்தின் விடுதலை வேட்கை இங்கு புதிய பரிமானம் கொள்கிறது.

எமது ஈழ விடுதலைப் போராட்டம் ஆரம்பமான கால கட்டத்தில் நிகழும் சம்பவங்களே இதிகா நாவல் எங்கும் விரவிக் காணப்படுவதன் காரணமாக இது ஒரு இனத்தின் வரலாறாகவும் வாழ்கிறது.

இதிகாவின் இரண்டாம் மூன்றாம் பாகங்கள் விரைவில் எழுதப்பட வேண்டும். அது எமது விடுதலைப் போராட்ட காலங்கள் தொடர்பான ஒரு முழுமையான பதிவினை உண்மையாகவும், சரியாகவும் பதியும் ஓர் முழுமையான வரலாற்று நாவலாக படைக்கப்பட வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துகளுடன்

**- மகுடம் வி. மைக்கல் கொலின்**

(ஆசிரியர் - மகுடம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலோடு நான்....

இந்தக் கதை தமிழர்களுக்கான விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலகட்டத்தில் நிகழ்கிறது.

அந்த நேரத்தில் இளைஞர்களினதும் மக்களினதும் மனோநிலையைப் படம்பிடிக்க முயற்சித்திருக்கிறேன். முன்பு கடல் கடந்து போனவர்கள் என்ற என் முதல் நாவலில் இந்தக் காலகட்டத்தை வைத்தே ஒரு நாவலைப் படைத்திருந்தேன். அந்த நாவலில் மனதளவில் திருப்திப்படாததால் இதிகா என்ற இந்த நாவலைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த நாவல் மூன்று பாகங்களைக் கொண்டது. இது முதற்பாகம். இரண்டாவது பாகமும் மூன்றாவது பாகமும் விரைவில் வெளிவரும். மூன்று பாகங்களையும் ஒன்றாக வெளியிடும்போது புத்தகத்தின் பருமன் அதிகரிப்பது இன்றைய அவசரமான உலகத்திற்கு ஏற்றதாகப் படவில்லை. அதனாலேயே மூன்று பாகங்களாகப் பிரித்து வெளியிடுகின்றேன்.

தமிழ் மக்களுக்கான விடுதலை அவசியம் என்பதில் எவ்விதமான விட்டுக் கொடுப்புமில்லை.

இன்று தவறுகள் தெரிந்த புரிந்த நிலையில் அவை அன்றே பேசப்பட்டன என்பதைக் காட்டியுள்ளேன்.

அந்தக் காலகட்டத்தில் விடப்பட்ட தவறுகளால்தான் இன்று எமது நிலை கேள்விக்குறியாகி உள்ளது என்பதை நான் உறுதியாக நம்புகிறேன். சிங்களவர்களும் தமிழர்களும் திருமணம் செய்வதால் இனப்பிரச்சினை தீர்ந்துவிடும் என்றும் பலர் கூறுவதை அவதானித்திருக்கிறேன். இந்த நம்பிக்கையின் தோல்வி அன்றே ஆரம்பித்துவிட்டதை சுட்டிக்காட்டி இருக்கிறேன். அந்த நேரத்தில் அரசாங்கங்களின் மக்கள் ஆதரவற்ற அரசியல்வாதிகளின் மனோபாவத்தையும் தெளிவு படுத்தியுள்ளேன்.

இதிகா, சுவந்திகா, சாந்தா போன்ற பல பெண்கள் அக்காலகட்டத்தைத் தைரியமாக எதிர் கொண்டிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலகட்டத்தில் பத்திரிகைச் சுதந்திரம் பட்ட துயரத்தையும் வெளியில் கொண்டு வந்திருக்கிறேன்.

அந்த நேரத்தில் இடதுசாரி அமைப்புகள் மௌனம் சாதித்த சந்தர்ப்பங்களையும் முடிந்தளவு கொண்டு வந்திருக்கிறேன். விடுதலை இயக்கங்கள் தவறான கண்ணோட்டத்தில் இடதுசாரிக் கருத்துக்களைக் கொண்டவர்களை அழித்த தவறினையும் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்த நாவலில் பெயர்கள் மட்டுமே வேறு. இந்த நாவலில் வரும் பாத்திரங்கள் இதுவரை யாராலும் பேசப்படவில்லை. இவர்கள் விடுதலைக்கு எதிரானவர்களுமில்லை. இவர்கள் காட்டிக் கொடுப்பாளர்களாயும் இருக்கவில்லை. சாதாரண மனிதர்களே. ஆனால் இவர்கள் அன்றும் கருத்திற் கொள்ளப்படவுமில்லை ஏன் இன்றும் அவர்கள் புறந்தள் ளப்பட்டே உள்ளனர்.

இந்தக் கதை நிகழும் காலகட்டங்களில் நான் அங்கு வாழ்ந்தவன். அதன்பின் என்னுடைய வாழ்க்கை கொழும்பில்தான் இருந்தது. சில நிஜங்களைத் தத்ரூபமாகக் கொண்டு வருவதில் சில இடர்ப்பாடுகள் தோன்றியிருப்பினும் செய்திகளின் வாயிலாக நான் கேட்டவையும் நண்பர்களின் மூலமாக அறிந்து கொண்டவைகளும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

சம்பவங்கள் கற்பனையல்ல. அவை நிஜம். வாழ்ந்தவர்களின் வரலாறுகளே.

உங்கள் அபிப்பிராயங்களே இந்தக் கதையின் அடுத்த பாகங்களுக்கு உரமாக இருக்கும். மனத்துணிவோடும் மனச் சுத்தத்தோடும் உங்கள் பெறுமதிமிக்க அபிப்பிராயங்களை எனது email க்கு அனுப்புங்கள்.

- மு. தயாளன்
(sirukathai1@gmail.com)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

கரவெட்டி என்பது மிக அழகான கிராமம். பச்சைப்பசேல் என்ற வயல்களும் வளம் நிரம்பத் தரும் பனை மரங்களும் மனிதர்கள் ஆறி அமர்ந்து தம் துன்பங்களைக் கூறி முறை யிடும் ஆலயங்களும் வீட்டுக்கு வீடு ஆசிரியர்களும் கூத்து, நாடகம், வில்லுப் பாட்டு என்ற அழகிய கலைகளும் நிரம்பி வழியும் கிராமம் தான் கரவெட்டி.

இந்தக் கிராமத்தில்தான் இந்தக் கதை ஆரம்பமாகிறது. இன விடுதலையை நோக்கிய யுத்தம் அரும்பிய நேரம்தான் இக் கதையின் களம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஆயுதம் ஏந்துவதே வழி என்று இளை ஞர்கள் எண்ணத் தொடங்கிய முக்கியமான காலகட்டத்தின் பங்குதாரர்களே இக்கதையின் நாயகர்கள்.

எல்லாவற்றிலும் சிறந்து விளங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி சாதித் தடிப்பிலும் பெயர் பெற்ற ஊராக இருந்தமை வெள்ளைத் துணியில் ஒரு கறுப்புக்கீறல் இருந்தது போலா யிற்று.

இந்தக் கரவெட்டியில் ஓர் ஆசிரியருக்குப் பிறந்த மூன்று பிள்ளைகளில் ஒருத்திதான் இதிகா. சுந்தரம் மாஸ்டரின் இரண்டாவது மகள் தான் இவள்.

இதிகா அழகி மட்டுமல்ல புத்திசாலியும் கூட. எதையும் நுணுக்கமாக அணுகும் திறன் கொண்டவள் இவள். இவளின் அப்பா சுந்தரம் மாஸ்டர் பண்பான மனிதர். பழகுவதற்கு இனியவர். ஒரு முற்போக்காளர். சமூக சேவையாளர். இன்னும் நெருங்கிச் சொல்வதானால் இவர் ஒரு கம்யூனிஸ்ட். இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம். மூன்று பிள்ளைகளைப் பெற்று இல்லற வாழ்வை இனிதே கழித்துக் கொண்டிருக்கும் அவ்வூரின் புத்திசாலிகளில் இவரும் ஒருவர். அவருடைய மனைவி சிறிய வயதிலேயே காலத்தோடு இணைந்துவிட்டார். சுந்தரம் மாஸ்டர் தனி ஒருவராகப் பிள்ளைகளை ஒழுங்காக வளர்த்திருந்தார்.

இவர்கள் வாழுகின்ற இந்தக் கிராமத்திற்கு அழகியதும் சிறியதுமான ஒரு பட்டணம் உண்டு. இதன் பெயர் நெல்லியடி. இரண்டு தியேட்டர்கள். பத்துப் பதினைந்து கடைகள். ஒரு பெரிய சந்தை. இரண்டு பெற்றோல் நிலையங்கள். இரண்டு தியேட்டர்களுக்கும் லக்சுமி, மகாத்மா என்று பெயரிட்டிருக்கிறார்கள்.

இப் பட்டணத்தின் நாற்சந்தியில் நின்று கொண்டு கிழக்கே பார்த்து நடக்க நூறு யார் தூரத்தில் லட்சுமித் தியேட்டர் வருகிறது. அந்தத் தியேட்டரைத் தொட்டுக்கொண்டு செல்லும் கொடிகாம வீதியில் செல்லும் போது ஒரு முடக்கு வருகிறது. அந்த முடக்கால் வளைந்து கொடிகாமம் நோக்கிச் செல்லக் கூப்பிடுதூரத்தில் ஒரு புளியமரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறது. அந்தப் புளியமரத்தில் இருந்து வடக்குப் பக்கமாகச் செல்லக் கன்பொல்லை வீதி வருகிறது. அந்தக் கன்பொல்லை வீதியில் முதலில் வலப்பக்கமாக வருவது அந்திராண் முருகமூர்த்தி ஆலயத்திற்குச் செல்லும் ஒழுங்கை . அதற்குள் செல்லாமல் நேராகச் செல்ல இடது பக்கத்தில் பெரியதொரு கல்வீடு இருக்கிறது. அதுதான் சுந்தரம் மாஸ்டரின் வீடு. அழகான கல்வீடு. நாலைந்து வாழை மரங்கள், ஒரு பலாமரம், ஒரு கிணறு, மூலையில் ஒரு மாமரம், காய்த்துக் குலுங்கும் கறுத்தக் கொழும்பான் மாமரம் , இடப்பக்க மூலையில் ஒரு நெல்லிமரம் ஆகியவை அந்த வீட்டுக்கொரு அழகைத் தந்து கொண்டிருந்தன. வீட்டுக்கு முன்னால் சிறிது தூரம் சதுரப்படப் புல் செதுக்கப்பட்டு வெறுந்தரை கம்பீரமாகப் படுத்திருந்தது.

இவ்வளவு அழகும் இனிமையும் கொண்ட அந்த வீட்டினுள் அன்று இதிகா பரபரப்பாக இருந்தாள். இதிகா கவலையோடு வாசல்வரைக்கும் போவதும் வருவதுமாக இருந்தாள். நாட்டின் நிலைமை அவ்வளவு நல்லதாக இல்லை. வீதியால் செல்பவர்களை இராணுவம் பிடித்துச் செல்வதும் அடித்துத் துவைப்பதும் சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருந்தன. இதிகாவால் நிலையாக ஒரு இடத்தில் இருக்க முடியவில்லை.

தாயைச் சிறு வயதிலேயே பறி கொடுத்து விட்டாள். ஒரு அண்ணன் கொழும்பில் வேலை செய்கிறான். தம்பி யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருக்கிறான். தாயின் மறைவுக்குப்பின் இதிகா பட்டப்படிப்பை முடித்துவிட்டு வேலை தேடாமல் வீட்டுப் பொறுப்புகளைத் தனதாக்கிக் கொண்டாள். சுந்தரம் மாஸ்டர் அவளுக்குப் பலதடவை படித்த படிப்பு வீணாகக் கூடாதென்றும் சிறிய வேலையாயினும் தேடும்படி கூறியதை அவள் கேட்கவேயில்லை. அவள் மறுத்துவிட்டாள். அப்பாதான் அவளுக்கு எல்லாமாக இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்பகுதி சமீப காலமாகப் பதட்டமான சூழ்நிலையில்தான் இருந்து வருகிறது. இளைஞர்கள் பொறுமையிழந்த நிலையில் இருந்தார்கள். 1979 ஆம் ஆண்டு பிக்குமார்களின் தூண்டுதலால் பிரதமர் சிறீமாவோ பண்டாரநாயக்கா கல்வியில் தரப்படுத்தல் அமுல்படுத்திய நேரம். மாணவர்கள் கொதித்துக் கொண்டிருந்தார்கள். அதற்கான தீர்வைக் கண்டுபிடிக்க முடியாத அரசியல்வாதிகள் இளைஞர்களைத் தூண்டிவிடுவதில் தங்கள் நேரத்தைச் செலவு செய்து கொண்டிருந்தார்கள். ஊர்வலங்கள் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக நடந்தன. இந்த நேரத்திற்தான் தமிழ் அரசியல்வாதிகள் மாணவர்களைத் தங்கள் சுயநலத்திற்காக ஆயுதப் போராட்டமே சிறந்த வழியென உணர்ச்சிவசப்பட வைத்தார்கள். தமிழர்களின் பிரச்சினைக்கு தமிழ் ஈழமே தீர்வு என்று இளைஞர்களை நம்ப வைத்தார்கள். இதன் விளைவு வடபகுதியும் கிழக்குப் பகுதியும் அமைதியை இழந்தன.

வேகமாக இயங்கி வந்த இடதுசாரிகளும் தங்களுக்கிடையில் உள்ள உட்பூசல்களால் மௌனமாக இருந்தனர். ஆனால் சுந்தரம் மாஸ்டர் மற்றைய இடதுசாரிகளைப்போல் அமைதியாக இருக்கவில்லை. தமிழ் இளைஞர்களின் இந்தப் போராட்டத்தைப் பகிரங்கமாக விமர்சித்தார். இப்படி வேறும் பல இடதுசாரிகள் துணிந்து விமர்சித்தனர். இதனால் இயக்கத்தை சேர்ந்த சிலர் சுந்தரம் மாஸ்டர் வீடுவந்து எச்சரித்துவிட்டும் சென்றனர்.

இதிகாவும் அவரைப் பேசாமலிருக்கும்படி கூறியும் அவர் கேட்கவில்லை. அந்தக் காலகட்டம் இயக்கம் பெரிதாக வளராத கட்டம். அதிகளவு போராளிகள் இருக்கவில்லை. ஆனாலும் அவர்கள் தங்கள் வளர்ச்சி கருதிப் புதிதாக யாரையும் தமிழ்ப் பகுதிகளுக்குள் வரவிடுவதில்லை. அதே நேரம் தங்களுக்கெதிராக யாரையும் கதைக்கவிடுவதில்லை. ஏற்கனவே பல இடசாரித் தோழர்களுக்கு அவர்கள் மரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனை என அறிவித்து அதை நிறைவேற்றியும் இருந்தார்கள். அன்றும் அப்படித்தான் வெளியே போயிருந்த சுந்தரம் மாஸ்டர் இன்னும் வரவில்லை. இதிகாவுக்குக் கலக்கமாகவிருந்தது. பக்கத்துவீட்டு அக்காவிடம் சென்று விடயத்தைக் கூறி அழுதாள். அவவும் " நீ அழாதை இதிகா, நான் போய்ப் பார்த்துக் கொண்டுவாறன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டுச் சென்றா.

பக்கத்து வீட்டில் இருக்கும் கனகா ஒரு கைம்பெண். நல்ல பெண். யார் உதவி கேட்டாலும் மறுக்காமல் செய்கின்ற பெண். அவ போனபின் திரும்பவும் இதிகா வீட்டுக்கு வந்து விளக்கேற்றிவிட்டு வாசற்படியில் காத்துக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

**வா**சிகசாலையில் இருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த சுந்தரம் மாஸ்டர் அப்போதான் நேரத்தைப் பார்த்தார். மாலை மணி எட்டாக இருந்தது. இதிகா பதட்டப் படப் போகிறாளே என்று அவசரப்பட்டுச் சைக்கிளையும் எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டார். வருகின்ற வழியில் லக்சுமி தியேட்டர் தாண்டி வரும் முடக்கில் கூட்ட மாகச் சனங்கள் நிற்பதைப் பார்த்து எட்டிப் பார்த்தார். ஒரு இளைஞன் விழுந்து கிடக்கி றான். அவனுக்கு அருகில் சுற்றவர நிற்பவர்கள் பார்வையாளர்களாக இருக்கிறார்கள். அவ ருக்கு வியப்பாக இருந்தது.

அருகில் நின்றவரிடம் என்ன நடந்தது என விசாரித்தார். அந்த மனிதரும் நடந்தவிடயத்தைத் தெளிவாகக் கூற அதிர்ச் சியடைந்த சுந்தரம் மாஸ்டர் சைக்கிளைப் பொத்தென்று போட்டுவிட்டு விழுந்து கிடந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவரின் அருகில் சென்று மூக்கில் கையை வைத்துப் பார்த்தார். முகத்தைத் திருப்பிப் பார்த்தார். புதிய முகமாக இருந்தது. அப்போ நடந்தது என்னவென அவருக்குப் புரிந்தது.

" வைத்தியசாலைக்குக் கொண்டு போவமா?" என்று அங்கிருந்தவர்களிடம் கேட்டார். யாரும் முன்வரவில்லை. அவர் தன் சைக்கிளில் கட்டியிருந்த தண்ணீர்ப் போத்தலை எடுத்துவந்து அவன் முகத்தில் தெளித்தார். அவன் மெதுவாகக் கண்விழித்தான்.

" உங்கள் ஆருக்கும் இவரைத் தெரியுமோ" என்று கேட்டார். யாரும் பதில் சொல்லவில்லை. அப்போது யாரோ

" மாஸ்டர் இது இயக்கம்தான் அடிச்சிருக்கும். உங்களுக்கு ஏன் இந்த வேலை பேசாமல் போங்கோ. ஏற்கனவே உங்களிலை பெருங்காய்ச்சலிலை இருக்கிறாங்கள்." என்று சொல்ல அந்தச் சொன்ன நபரை எரிச்சு விடுவதுபோல் சுந்தரம் மாஸ்டர் பார்த் தார். பின்பு அந்தப் பையனைப் பார்த்து

" தம்பி. வீட்டைபோவம்" என்றார். எப்படிக் கொண்டு போவது என்று சிந்தித்துக்கொண்டிருந்தபோது இன்னுமொரு குரல் அவர்களுக்கருகில் வந்தது.

"என்ரை சைக்கிளிலை வைச்சுக் கொண்டு போகலாம் மாஸ்டர்" என்றொரு குரல் வந்தது. அது வேறுயாருமல்ல சுந்தரம் மாஸ் டரிடம் படித்த ஒரு மாணவன். இப்போ அவன் ஒரு தோழன். அந்தப் புதியவனை அந்தப் பையன் தன்னுடைய சைக்கிளிலை ஏற்ற முன்னால் மாஸ்டர் தன் சைக்கிளில் சென்றார்.

இவர்கள் வீட்டுக்குச் செல்லும்போது நேரம் ஒன்பதரையாகியிருந்தது. அழுதபடி வாசலில் இருந்து வெளிக்கதவைப் பார்த்தபடி இதிகா இருந்தாள். கதவு திறக்கத் துள்ளிக் கொண்டு போன இதிகா தகப்பனுடன் இரு இளை ஞர்கள் வருவதையும் ஒருவர் மயக்க நிலையில் இருப்பதையும் கவனித்தாள். ஒரு இளைஞனை இதிகாவுக்குத் தெரியும். மற்ற இளைஞன் யாரென்பது அவளுக்குப் புரியவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற இளைஞனை ஒரு பாயைப்போட்டுப் படுத்திவிட்டு மற்றப் பையனுக்கு நன்றி கூறி அனுப்பி வைத்தார் சுந்தரம் மாஸ்டர். இதிகாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

" பிள்ளை நான் எல்லாம் பிறகு சொல்லிறன். இந்தப் பைய னுக்குக் கொஞ்சம் தேத்தண்ணி போட்டுக் கொண்டுவா. கையோடை எனக்கும் ஒண்டு கொண்டு வா" என்று கூறிவிட்டு அருகில் இருந்த சாய்மனைக் கதிரையில் படுத்தார்.

தேத்தண்ணியைப்போட்டு வந்து தகப்பனுக்குக் கொடுத்துவிட்டு அந்தப் பையனுக்கருகில் அவனுக்குரியதை வைத்துவிட்டுத் தகப்பனுக்கு அருகில் வந்து இருந்தாள் இதிகா. தகப்பனைப் பார்த்து " இவர் ஆரப்பா?" என்றாள்.

"எனக்கும் தெரியாதம்மா. வாசிகசாலையாலை வரேக்கை இந்தப் பையனை றோட்டிலை ஆரோ அடிச்சுப் போட்டிட்டுப் போட்டாங்கள். சனமெல்லாம் நிண்டு வேடிக்கை பார்க்குது. நான் பதகழிச்சு அவரை இஞ்சை கூட்டி வந்திட்டன்" என்றார்.

" உங்களுக்கெல்லே சொன்னனான் வேண்டாத விசயங்களிலை தலை போடாதையுங்கோ எண்டு."

" அப்பிடியில்லையம்மா..ஆராயிருந்தாலும் உதவி செய் யோணும்" என்று ஒருவாறு சுந்தரம் மாஸ்டர் சமாளித்தார்.

" ஆராயிருக்கும்?" இதிகா கேட்டாள்.

" எனக்கும் தெரியேல்லை. ஊருக்குப் புதிசாயிருக்கும்.. அதுதான் உந்த இயக்ககாரர் அடிச்சிருப்பாங்கள். நல்ல வேளை கொலை செய்யாமல் விட்டாங்கள்"

இப்படி இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும்போது அந்தப் பையன் மெதுவாக அசைந்து கண்ணை முழித்தான்.

" தம்பி பக்கத்திலை தேத்தண்ணி இருக்குது. எடுத்துக் குடி யுங்கோ." என்றார் சுந்தரம் மாஸ்டர்.

அவனும் மெதுவாக எழுந்து தேத்தண்ணியை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தான்.

" தம்பி ஆரெண்டு தெரியேல்லை. ..." என்று இழுத்தார் சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்டர்.
"நான் கொழும்பிலையிருந்து வந்தனான். என்ரை பெயர் சிவகுமார். நீங்கள் சுந்தரம் மாஸ்டரெல்லோ."
சுந்தரம் மாஸ்டரும் இதிகாவும் திகைத்துப் போய்விட்டனர்.
" தம்பி நீங்கள் கரவெட்டியோ?"
"ஓம் மாஸ்டர் நானும் கரவெட்டிதான். ஆரெண்டு பிறகு சொல்லிறன். " என்று சொல்லிவிட்டு முதுகை நெளித்தான்.
" ஏன் தம்பி நோகுதே? நீங்கள் படுங்கோ நான் போய் ஊர்ப் பரியாரியைக் கூட்டிக் கொண்டு வாறன்"
" இதிகா தம்பியைப் பார்த்துக் கொள்ளம்மா. எட்டிப்போய் பரியாரியாரைக் கூட்டிக் கொண்டு வாறன்." என்று கூறிவிட்டு வேகமாக வெளியே இறங்கி நடக்கத் தொடங்கினார்.
போய் ஐந்து நிமிடத்திலை பரியாரியாரோடை வந்தார் மாஸ்டர். பரியாரியார் சிவகுமாரின் சேட்டை கழற்றச் சொல்லிப் பரிசோதித்தார். சில இடங்களிலை கை வைச்சு அமத்தினார். அவர் அமத்தேக்கை சிவகுமார் சத்தமிட்டான்.
" இரண்டு மூண்டு இடங்களிலை அடி பலமாய்ப்பட்டிட்டுது. நான் ஒரு எண்ணைதாறன் அதை ஒவ்வொரு நாளும் பூசுங்கோ எல்லாம் ரண்டு நாளிலை குணமாகும்" என்று கூறிவிட்டு ஒரு போத்தில் நிறைய எண்ணெயையும் கொடுத்துவிட்டுப் போய்விட்டார். பரியாரியார் போனதும் " தம்பி கொஞ்ச நேரம்படும் பிறகு கதைப்பம். இதிகா நீ போய்ச் சாப்பாட்டைச் செய்யம்மா" என்று கூறிவிட்டு அன்றைய பத்திரிகையை எடுத்துப் புரட்டி னார்.
" நீங்கள் புட்டுச் சாப்பிடுவியளே?" என்று அவனிடம் இதிகா கேட்டாள்.
"ஓம்" என்று கூறிவிட்டு அவன் திரும்பிப் படுத்து விட்டான். இதிகா சமையல் வேலையைக் கவனிக்க குசினிக்குள் போய்விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

அடுத்த நாள் காலை விடிந்தபோது சிவகுமார் வெள்ளனவே எழும்பி முற்றத்தில் நின்றி ருந்தான்.

சுந்தரம் மாஸ்டர் பாடசாலைக்குப் போயி ருந்தார்.

" இந்தாங்கோ தேத்தண்ணி குடியுங்கோ" என்று இதிகா கூற சிரித்துக்கொண்டே அதைச் சிவகுமார் வாங்கினான்.

இதிகா கதிரையொன்றை வெளியில் கொண்டு வந்து போட்டுவிட்டு " இதிலை இருந்து குடியுங்கோ." என்று அவள் கூற இப்பொழுதும் சிரித்துக் கொண்டே கதிரையில் அமர்ந்தான். அவனுடைய அந்தச் சிரிப்பின் அர்த்தம் இதிகா வுக்குப் புரியவில்லை. அவளும் அருகில் உள்ள கல்லொன்றில் அமர்ந்தாள்.

" உங்களை ஆர் அடிச்சவை?"

" எனக்கு ஆரெண்டு சொல்லிப்போட்டுத்தான் அடிச்சவங்களாக்கும்" என்றான் .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது இந்தக் குறும்புத்தனமான பதில் அவளுக்குப் பிடித்திருந்தது.

" இல்லை.. அடிச்சவங்களைப் பார்த்தது நீங்கள்தானே"

" அவங்களை ஆர் பார்த்தது.ஒரு நாலுபேர் இருக்கும். தமிழ்தான் கதைச்சவங்கள். நிச்சயமாய் ஆமிக்காரரில்லை."

" அப்ப எங்கடை ஆக்கள்தான்"

" என்ன உங்கடை சொந்தக்காரரோ?"

"இல்லையில்லை.. இயக்கப் பொடியன்களாகத்தான் இருக்க வேணும் எண்டன்".

" ம்..இருக்கலாம்..அவை ஏன் எனக்கு அடிச்சவை.."

"நீங்கள் ஏதும் வாயடிச்சனீங்களோ?"

"நான் பஸ்சாலை வந்து..புளியடியிலை இறங்க. ஒருவன் வந்து நீ யார்? இஞ்சை ஏன் வந்தனீ? என்று கேட்க நான் பதில் சொல்லாமல் அவனோடை சத்தம்போட..திடீரென்று பார்த்தால் வேறையும் நாலுபேர் வந்து ..விறுவிறுவென்று அடிக்கத் தொடங்கியிட்டாங்கள்.... நான் பொத்தென்று நிலத்திலை விழ..வாகனம் ஒண்டுவர ஓடியிட்டாங்கள்.." என்றான் அவன்.

அவன் கதை சொன்ன விதத்தினைப் பார்த்து ரசித்தாள்.

" பிறகு அதுக்குப் பிறகு...." என்று அவன் தொடங்க அவள் அவனை நோக்கிக் கையைக் காட்டி " அதுக்குப் பிறகு நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும்." என்றாள்.

" ஆனால் எனக்கு ஒரு விசயம் மட்டும் விளங்கேல்லை.." என்றாள். அவன் அவளை என்ன என்று கேட்பதுபோல் பார்த்தாள்.

" உங்களுக்கு என்ரை அப்பாவை எப்படித் தெரியும்.?"

இந்தக் கேள்விக்கு அவன் உடனே பதில் சொல்லவில்லை. மௌனம் சாதித்தான்.இனிமேல் மறைப்பதால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதால் சொல்லுவதற்குத் தயாரானான்.

" எனக்கு அவரைத் தெரியும். அவ்வளவுதான் பிறகு விவரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிறன். இப்ப நான் வெளியிலை ஒருக்கால் போகவேணும்" என்று அவன் கூறியபோது இதிகா அவனைத் தடுத்து " அப்பா வருமட்டும் நீங்கள் எங்கையும் போகேலாது. வெளியிலை நிலமை சரியாயில்லை. இயக்ககாரர் வெளியிலிருந்து ஆரும் உள்ளுக்கை வர விடிறதில்லை. அப்படி ஆரும் மீறி வந்தால் அடிப்பினம் அல்லது முடிச்சிடுவினம். அதனால்தான் உங்களுக்கு அடி விழுந்திருக்குது. அத்தோடை ஆமிக்காரரின்ரை அட்டூழியமும் கூட. பிடிச்சுக் கொண்டு போனால் போனவை திரும்ப வாறதில்லை."

அவன் வியப்போடு அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் தொடர்ந்தாள். " உங்களை எங்களுக்கு ஆரெண்டும் தெரியாது. நீங்களும் சொல்லமாட்டனென்றிறியள். இப்ப நீங்கள் இங்கை இருக்கிறது அவங்களுக்கோ ஆமிக்கோ தெரிஞ்சால் நாங்கள் முடிஞ்சம்..ஆதலால என்ன அலுவலிருந்தாலும் இப்ப வெளியிலை போக வேண்டாம்.

சிவகுமார் அதற்குப்பின் எதுவும் பேசவில்லை.

இதிகா சமைப்பதற்குக் குசினிக்குள் போய்விட்டாள். சிவகுமார் உள்ளே சென்று பத்திரிகையை எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.

நேரம் நான்கு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது.

சுந்தரம் மாஸ்டர் வரும் நேரம்.

கதவு திறந்து கேட்டது. சுந்தரம் மாஸ்டர்தான் வந்து கொண்டிருந்தார்.

மாஸ்டர் கிணற்றடிக்குச் சென்று கைகால் கழுவிவிட்டு சிவகுமாருக்கு முன்னாலிருந்த சாய்மனைக் கதிரையில் இருந்தார்.

" இப்ப எப்படி தம்பி சுகம்?"

" பரவாயில்லை மாஸ்டர்"

" தம்பி என்ன கொழும்பிலையிருந்தோ வாறியள். இஞ்சை ஆரிட்டை வந்தனீங்கள்"

" முந்தி எனக்குச் சொந்தக்காரர் கனபேர் இருந்தவை. நான் இருபது வருசத்திற்கு முந்தியே கொழும்புக்குப் போட்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்ன வயதிலேயே போயிட்டன். அங்கையிருந்துதான் படிச்சனான். கொழும்புப் பல்கலைக் கழகத்திலை இடம் கிடைச்சு விஞ்ஞானப் பட்டதாரியானவன். அதுக்குப் பிறகு ஒரு பத்திரிகையிலை உதவி ஆசிரியராய் இருந்தனான். உங்களை என் அப்பா அடிக்கடி சந்திக்கிறவர் அவரோடை வரேக்கை உங்களைக் கண்டிருக்கிறன். அந்தச் சின்ன வயசிலேயே உங்கடை முகம் என்ரை நெஞ்சிலை பதிஞ்சிட்டுது. எனக்கு இஞ்சை ஆசிரிய வேலை கிடைச்சிட்டுது. அதுதான் வந்தனான்."

" கையிலை பை ஒன்றையும் காணயில்லை..."

"ஓ..அண்டைக்கு நடந்த களேபரத்திலை எனக்கு அடிச்சவங்கள் தூக்கிக்கொண்டு போயிட்டாங்கள்" என்றான் சிவகுமார்.

" வீடொண்டு பார்க்கவேணும். நாளைக்குப் பகல் போய்ப் பார்க்கலாமெண்டு நினைக்கிறன்"

"அதெல்லாம் கிடக்கட்டும் தம்பி நீ யாரெண்டு சொல்லுமன்" கொஞ்சநேரம் யோசித்தான் சிவகுமார். சரி இனி மறைக்கிறதிலை பயனில்லை. சொல்லுவம் என்று தீர்மானிக்கிறான்.

" நான் கன்பொல்லையிலை இருந்த கதிர்காமனுடைய கடைசிப்பிள்ளை" வியப்போடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தார் சுந்தரம் மாஸ்டர். தான் காப்பாற்றிவிட்ட சிறுவன் இப்போ இளந்தாரியாகி முன்னே நிற்பது அவருக்கு வியப்பை ஏற்படுத்தியது.

" உன்னைச் சிறுவனாகப் பார்த்ததற்குப் பின் இன்றுதான் பார்க்கிறன். அப்பவும் உன்னை நான்தான் காப்பாற்றினனான். இப்பவும் நான்தான்"

"ஓம் மாஸ்டர் அப்ப நீங்கள் என்னை மறைச்சு வைச்சு தவராசா அண்ணனிட்டை குடுத்தது இப்பவும் ஞாபகத்திலை இருக்குது" சுந்தரம் மாஸ்டரின் நினைவில் பழையவை....

........................................................................................

இருபது வருடங்கள் முந்திய நிலை முற்றிலும் வேறுபட்ட சூழல். அன்று இன்றைய தேசியப் பிரச்சினை கூர்மையாக இருக்கவில்லை. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஆதிக்க சாதியினருக்கு எதிரான தீண்டாமை ஒழிப்பு வேகமாக நடந்து கொண்டிருந்த காலம். சாதியம் தன் கொடூரத்தைக் காட்டிக் கொண்டிருந்த காலம். அரசியலிலும் கம்யூனிய அரசியல் தன் ஆழு மையைக் காட்டிய காலம். சிவகுமாரின் அப்பா கதிர்காமன் படிப்பறிவில்லா விட்டாலும் கம்யூனிச அரசியலால் கவரப்பட்டுத் தன் இனத்தின் துன்பங் களை உள்வாங்கிக் கிளர்ந்தெழுந்தவன்.

ஊரில் இருக்கக்கூடிய உடையார் - விதானையார் - கோயில் தர்மகர்த்தா இவர்களையெல்லாம் அவன் மதிப்பதே இல்லை. இவர்களைச் சாத்தானின் சொந்தக்காரர்கள் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வான். சாதி என்ற பெயரால் தன்னையும் தன் இனத்தவர்களையும் கொடுமைப்ப டுத்தியவர்களை அந்தக் கிராமத்தில் முதன் முதலில் எதிர்த்தவர்களில் முதன்மையானவன் கதிர்காமன்.

அவனுடைய ஆளுமையால் அந்த ஊரில் உள்ளவர்கள் அவன் சொல்லைக் கேட்டு நடக்கத் தொடங்கினார்கள். தங்களைத் தாழ்ந்த வர்களாக ஆதிக்க சாதியினரால் காட்டப்படும் அல்லது அடையாளம் காண வைக்கும் குறியீடுகளை எல்லாம் அழிப்பதில் கவனமாக இருந்தான். அதன் ஒரு விளைவுதான் தன் மகனுக்குச் சிவகுமார் எனப் பெயரிட்டது. அந்த நாட்களில் அந்தப் பகுதியில் தங்கள் வேலைத் திட்டங்களை விரிவுபடுத்திக் கொண்டிருந்த சீனச் சார்பு கம்யூனிசக் கட்சியின் அரவ ணைப்பும் அவனுக்கு இருந்தது. அவனது இந்த நடத்தைகள் ஆதிக்க சாதிக்காரர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருந்தது. எப்படியாவது இவனை ஒழிக்காவிட்டால் தங்களது செல்வாக்கு அந்தக் கிராமத்தார் மத்தியில் எடுபடாது போய்விடும் என்பதால் கதிர்காமனை ஒழிப்பதற்கான திட்டங்களைத் தீட்டத் தொடங்கினார்கள். இதனை அறிந்து கொண்ட சுந்தரம் மாஸ்டர் கதிர்காமனை எச்சரித்து வைத்தார்.

சுந்தரம் மாஸ்டருக்கு அப்போ முப்பது வயது. அப்போ தான் ஆசிரியத் தொழிலில் இணைந்திருந்தார். மிக உற்சாகமான இளைஞர் அவர். அவருக்கும் சீனக் கொம்யூனிஸ்ட் காரருக்கும் ஒத்துவரு வதில்லை. அவருக்கு ரஸ்சிய சார்புக் கொம்யூனிஸ்டுகளையும் சீனச் சார்புக் கொம்யூனிஸ்ட்டுகளையும் அறவே பிடிப்பதில்லை. அவர் யாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சார்ந்திராத முற் போக்கு எண்ணங்கள் நிறைந்த ஒரு மார்க்சியவாதி. இதனால் ஊரில் அவருக்கு மிகுந்த மதிப்புண்டு.

கதிர்காமனை ஒழிப்பதென்பது இலகுவான காரியமு மல்ல. கதிர்காமனின் தொடர்புகள் அவன் கிராமத்தைத் தாண்டி வெளியிலும் இருந்தது. அந்நாளில் மிக மும்முரமாக இயங்கிக் கொண்டி ருந்த சீனக் கம்யூனிட் கட்சியினரிடம் அவன் தொடர்பு மிகப் பலமாக இருந்தது. அவர்கள் இதனை யூகித்து அவனை எச்சரித்துமிருந்தார்கள்.

அக்கட்சியைச் சேர்ந்த தவராசாவிடம் கதிர் காமனின் பாதுகாப்பைப் பார்க்கும்படி பணித்திருந்தார்கள். தவராசா தத்துவரீதியாக வளர்ந்திருந்தாலும் குடிப்பழக்கத்தினால் இயங்கு நிலையில் குறைவான சக்தி கொண்ட வராகவே இருந்தார். இது ஆதிக்க சாதியினருக்குப் போதுமானதாக இருந்தது. மேல் சாதியினரில் ரவுடித்தனத்துக்குப் பெயர்போன தரனும் அவன் தம்பியும்தான் முன்னுக்கு நின்றார்கள். எவ்வளவுதான் முன்னேற்பாடுகள் இருந்தாலும் அன்று பகற்பொழுதில் அவர்கள் நினைத்தது நிறைவேறி விட்டது. பட்டப் பகலிலே கதிர்காமனின் குடிசை கொழுத்தப்பட்டது. குடிசைக்குள் கதிர்காமன் அவன் மனைவி கைக்குழந்தை. உதவிக்கு யாருமே வரவில்லை.

அவனது வீடு எரிக்கப்படுவதற்கு சற்று முன்தான் ஏதோ சாமான் வாங்குவதற்காகச் சிவகுமார் கடைக்குப் போயி ருந்தான். இதனால் சிவகுமார் அந்தக் கொடுமையிலிருந்து தப்பி இருந்தான்.

கடையால் அவன் திரும்பி வந்தபோது வீடு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. வீடு எரிக்கப்பட்ட சம்பவம் சுந்தரம் மாஸ்டருக்குத் தெரிந்ததும் உடனடியாகவே அங்கு சென்றுவிட்டார். வீடு எரிவதையும் சிவகுமார் ஓரமாக நின்று அழுவதையும் கண்டு பதகழித்து ஓடிப்போய் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

இநதச் சம்பவத்தைக் கேள்விப்பட்ட தவராசாவும் ஏனைய தோழர்களும் அவசர அவசரமாக விரைந்தனர். பொலிசார் இன்னும் வரவில்லை. பொலிசாரையும் தாமதமாக வரச் செய்து விட்டார் கள் ஆதிக்க சாதிக்காரர். கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தண்ணி வாளியால் அள்ளி அள்ளி ஊற்றிக் கொண்டிருந்தார்கள். தவராசாவுடன் மற்றத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்களும் கிராமத்தவருடன் சேர்ந்து நெருப்பையணைக்கப் போரா டினர். எல்லோரும் சேர்ந்து நெருப்புக்குள் அகப்பட்டவர்களைக் காப்பாற்று வதில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரே களேபரமாக இருந்தது. அழுது குழறும் சத்தம் விண்ணை முட்டிக் கொண்டிருந்தது. தவராசாவும் தோழர்களும் நெருப்பு அணைந்த பகுதிக்குள் நுழைந்து கதிர்காமனையும் குடும்பத்தையும் தேடினார்கள். மூலையில் எரிந்த நிலையில் இருந்த கதிர்காமனைப் பார்த்து ஓவென்று கத்தினான் தவராசா. இன்னொரு மூலையில் தன் கைக்குழந்தையைக் கட்டிப் பிடித்தவாறு கருகிப் போயிருந்தாள் கதிர்காம னின் மனைவி சந்தணம்.

தவராசாவின் நெஞ்சு கொதித்தது. கதிர்காமனின் மற்றப் பிள்ளையைத் தேடியது தவராசாவின் கண்கள். அவனை எங்குமே காணவில்லை. அப்போ சுந்தரம் மாஸ்டர் அருகில் வந்து அவன் காதுக் குள் ஏதோ சொல்ல அவரைப் பின் தொடர்ந்து சென்று சிவகுமாரைக் கண்டு தவராசா எல்லாரையும் விலக்கிக்கொண்டு சிவகுமாரை அள்ளிக் கொண்டு ஓடினான். எப்படியாவது அவனைக் காப்பாற்றிவிட வேண்டு மென்ற துடிப்பில் பனை வடலிக்குள்ளால் ஓடினான். தவராசாவின் தோழர்களும் அவனைத் தொடர்ந்து ஓடினார்கள். போகும் போது இந்தப் பிள்ளை தப்பியதை யாரும் பொலிசுக்குச் சொல்லக் கூடாது என்று கேட்டபடியே ஓடிக் கொண்டிருந்தார்கள்.

.........................................

*அப்போ தவராசா மூலமாகக் கொழும்புக்குப் போன சிவகுமார் இப்போ நெடி துயர்ந்த தோற்றத்தில் சுந்தரம் மாஸ்டருக்கு முன்னால் நிற்கிறான்.*

*இப்போ சுந்தரம் மாஸ்டருக்கு 50 வயது. இன்னும் அவரை மறக்காமல் மனதில் வைத்திருக்கிறான் என்பதை நினைக்கும் போது சுந்தரம் மாஸ்டருக்குப் பெருமையாகவிருந்தது.*

*இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு மூவரும் நித்திரைக் குப் போய்விட்டனர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

அடுத்த நாள் காலை எழும்பியதும் வழமை போல் சுந்தரம் மாஸ்டர் வேலைக்குப் போய் விட்டார். படுக்கையைவிட்டு எழுந்த சிவகுமார் கைகளை முன்னே நீட்டி உடம்ப லுப்பை முறித்துக்கொண்டபடி முற்றத்திற்கு வந்தான். முற்றத்தில் இதிகா கூட்டிக்கொண்டு நின்றாள். சிவகுமாரைக் கண்டதும் விளக்கு மாற்றைப் போட்டுவிட்டுக் " கொஞ்சம் பொறுங்கோ தேத்தண்ணி போட்டுக்கொண்டு வாறன்" என்று கூறிவிட்டு குசினிக்குள் போனான்.

அவர்களுடைய வீடு பூஞ்சோலை போல் இருந்தது. மாமரம், பப்பாசி மரம், மாதுளை மரம், வாழை என்று தேவையான மரங்கள் எல்லாம் சிரித்துக் கொண்டு நின்றன. அவைகளையெல்லாம் ரசித்துக் கொண்டு நின்ற சிவகுமாரை
" இந்தாங்கோ தேத்தண்ணி" என்ற சத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஜ உலகுக்குக் கொண்டு வந்தது.

" மாஸ்டர் வீட்டு வளவை நல்லாய்த்தான் வச்சிருக்கிறார்."

" ஓம் அப்பாக்கு இதிலை நல்ல விருப்பம்.. பள்ளிக் கூடத்தாலை வந்தால் இதுக்குள்ளைதான் நிற்பார் அங்கை பாருங்கோ மூலையிலை சதுரப்பட வெண்டிக்காய் வைச்சிருக்கிறார் பக்கத்திலை மிளகாய்க் கண்டு நிற்குது.. கிழக்கு மூலையிலை தக்காளி மரங்களும் நட்டிருக்கிறார்" என்றாள் இதிகா.

" நல்ல பிரயாசைக்காரர்"

இதற்குள் வீட்டுக்குள் ஓடிச் சென்று கதிரை ஒன்றை எடுத்து வந்து முற்றத்தில் போட்டு " இதிலை இருங்கோ" என்றாள்.

" தேத்தண்ணி நல்லாயிருக்குது" என்றான் சிவகுமார்.

அவள் அவனைப் பார்த்துச் சிரித்துச் சிரிப்பால் நன்றி கூறி னாள். " நீங்கள் வேலைக்குப் போறதில்லையா?" என்று அவன் கேட்க

" நான் பொருளாதாரத்திலை பட்டப்படிப்பு பெரதேனியாவிலை படிச்சனான். வேலைக்குப் போறதிலை அவ்வளவு விருப்பமில்லை. எனக்கு அப்பாதான் முக்கியம். வேலை எண்டு வெளிக்கிட்டால் கிட்டவாய்க் கிடைக்காது. தூரப் போனால் அப்பாவை ஆர் பார்க்கிறது." என்று தன் பக்க நியாயங்களைக் கூறினாள்.

" அப்ப நீங்கள் கலியாணம் கட்டினாற்போலை என்ன செய்வியள்.? எப்படியோ விட்டிட்டுப் போகத்தானே வேணும்." என்று அவன் கூறியபோது

" இல்லை நடக்காது. நான் கல்யாணம் கட்டமாட்டன்." என்று அவள் கூற அவன் அவளை வியப்போடு பார்த்தான்.

" நீங்கள் இங்கை என்ன விசயமாய் வந்தனீங்கள்?"

" எனக்குக் கன்பொல்லைப் பள்ளிக்கூடத்திலை ஆசிரியப் பதவி கிடைச்சிருக்கு. அதுக்குத்தான் வந்தனான். நாளைக்குப் போய் வேலையிலை சேர முன்னம் தங்கிறதிற்கு ஒரு வீடு பார்க்கவேணும்?"

" நீங்கள் இந்த ஊரே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓம் எல்லாம் அப்பாவிட்டைச் சொல்லியிருக்கிறன் கேட்டு அறியுங்கோ. நான் ஒருக்கா வெளியிலை போய் வரலாமென்று பார்க்கிறன்”

“என்ன இண்டைக்கோ? வேண்டாம் வெளியிலை பிரச்சினை. எங்கடை பொடியன்களாலையும் பிரச்சினை. ஆமியாலையும் பிரச்சினை. நீங்கள் வீடு பார்க்கப்போகிற விடயத்தை அப்பா விட்டைச் சொன்னனீங்களோ?”

“இல்லை இன்னும் சொல்லேல்லை. இண்டைக்குச் சொல்ல வேணும்”

“அதுதான் நல்லது. அப்பாவெண்டால் ஆரும் தெரிஞ்சவை யின்ரை வீட்டிலை ஒரு அறையெடுத்துத் தருவர்”

“அது சரி எங்கடை பொடியள் ஏன் எங்களுக்கு அடிக்கிறாங்கள். நாங்கள் என்ன அவங்களுக்கு எதிரியே”

“ அவங்கள் தங்கடை பாதுகாப்புக்கு இது அவசியமாம். எங்கடை ஆக்களிலையும் காட்டிக் குடுக்கிற ஆக்கள் இருப்பி னமாம்.”

“ ம்.. இருக்கலாம்..” அத்தோடு கதையை இருவரும் நிறுத்திக் கொண்டனர்.

“இந்தாங்கோ பேப்பர் வாசிச்சுக் கொண்டு உள்ளை இருங்கோ நான் சமைக்கப்போறன்” என்று கூறிவிட்டு அவள் உள்ளே போய்விட்டாள். அப்பதான் தபாற்காரன் வந்து மணியடித்தான். இதிகா ஓடிப்போய் கடிதங்களை வாங்கி வந்துவிட்டு திரும்பவும் குசினிக்குள் போய்விட்டாள். சமைத்து முடித்துவிட்டுச் சிவகுமாரைச் சாப்பிட அழைத்தாள். தனக்குப் பசிக்கவில்லை யென்றும் மாஸ்டர் வந்தாப்போலை சாப்பிடலாம் என்றும் கூறினான். “ அப்பா வர நாலு மணியாகும். அதுவரை இருப்பியளே?”

“இப்ப இரண்டு மணியாச்சு டக்கெண்டு நாலு மணி வந்திடும். நான் இருப்பன். உங்களுக்குப் பசிச்சால் நீங்கள் சாப்பிடுங்கோ” என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியென்று கூறிவிட்டுக் காலையில் வந்த கடிதங்களை எடுத்துப் பிரித்தாள். ஒன்று அவளின் அண்ணன் காந்தனிட மிருந்து வந்திருந்தது. ஆவலோடு அதனை எடுத்துப் பிரித்தாள். வாசித்தபோது அவளுக்குச் சந்தோசம் தாங்க முடியவில்லை. சிரித்துவிட்டாள். " என்ன சிரிக்கிறியள் சந்தோசமான செய்தியோ?" என சிவகுமார் கேட்டான்.

" ஓம் அண்ணர்தான் போட்டிருக்கிறார். அண்ணர் கொழும் பிலைதான் இருக்கிறார். பெயர் காந்தன். வாறகிழமை வாறாராம்."

" நல்ல செய்தி. மறந்திட்டன் நீங்கள் உங்கடை குடும்பத் தைப்பற்றி ஒன்றும் சொல்லயில்லை."

" மறந்திட்டன். நாங்கள் அப்பாவோடை சேர்த்து நாலுபேர். அண்ணர் கொழும்பிலை வேலை செய்கிறார். தம்பி யாழ்ப் பாணத்திலை தங்கியிருந்து படிக்கிறான்."

"ம்"

" உங்கடை குடும்பம்..."

" என்ரை குடும்பம் அம்மா அப்பாவோடை சேர்த்து ஐஞ்சு பேர். நான்தான் மூத்தவன். எனக்குப் பிறகு இரண்டு தங்கச்சிமார். ஆனால் இப்ப குடும்பத்திலை நான் மட்டும்தான் இருக்கிறன்."

" ஏன் மற்றவை எங்கை?"

" அவையிப்ப உயிரோடை இல்லை. இதுக்குமேலை கேளாதை யுங்கோ.. உங்கடை அப்பாவிட்டைக் கேளுங்கோ அவர் எல்லாம் விபரமாய்ச் சொல்லுவார்." என்று கூறிவிட்டுக் கண்களைக் கசக்கிக் கொண்டான். இதிகாவுக்கு ஏன் கேட் டோமென்றாகிவிட்டது. மனதிற்குள் கவலைப்பட்டாள்.

நாலுமணியாகிக் கொண்டிருந்தது. இதிகா வாசலை வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தாள். கதவு திறந்து சத்தம் கேட்டது. சுந்தரம் மாஸ்டர் வந்து கொண்டிருந்தார். இதிகா சின்னப் பிள்ளைபோல் தகப்பனிடம் துள்ளிக்கொண்டு போனாள். அந்த அழகைப் பார்த்து ரசித்தான் சிவகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் மாஸ்டர் போய் கைகால் கழுவிவிட்டு உள்ளே வந்தார்.
" என்ன தம்பி சாப்பிட் டிட் டீங்களோ?" என்று சிவகுமாரைக் கேட்க "நான் பல தடவை கேட்டிட்டன் அவர் நீங்கள் வந்தாப்போலை சாப் பிடலாம் எண்டிட்டார்."
" ஓ.. அப்பிடியோ.. சரி வாங்கோ தம்பி.." என்று கூப்பிட் டுக்கொண்டே சாப்பாட்டு மேசையில் போய் அமர்ந்தார். சிவகுமாரும் வந்தமர்ந்தான்.
" தம்பி எப்ப வேலைக்குப் போகவேணும்?" சாப்பிட்டுக் கொண்டே கதைத்தார்.
" வாற கிழமை மாஸ்டர்."
" அங்கை உங்கடை பாடசாலையிலை சிங்களமும் படிப்பிக் கினமாம்."
" அது நல்லதுதானே சேர்"
"அது உனக்கு விளங்குது.. எனக்கு விளங்குது..இஞ்சை சில பொடியளுக்கு விளங்காதாம்" என்றார்.
" எனக்குந்தான் அது பிடிக்கேல்லை. அது என்ன எங்கடை தமிழ் மொழியை அவங்கடை ஆக்கள் படிக்கினமே.. பிறகு ஏன் இஞ்சை படிப்பிப்பான்." இதிகா கோபமாகச் சொன்னாள்.
" இந்த விசயத்திலை நான் பொடியங்களின்ரை பக்கந்தான்." தொடர்ந்து சொன்னாள்.
"இதிகா கன்பொல்லையிலை இருக்கிறவையை குறைஞ்சவை என்று சொல்லி ஒதுக்கி வைச்சிருந்ததாலைதானை அவங்கள் புத்தர் சகிதம் அங்கை நுழைஞ்சவங்கள். இப்ப அந்தச் சனத்திற்கு நல்ல சாப்பாடும் கிடைக்குது. நல்ல படிப்பும் கிடைக்குது." இப்படிச் சுந்தரம் மாஸ்டர் கூறியதும் இதிகா வாயை அடக்கிக் கொண்டாள்.

சிவகுமாரின் முகமும் மாறி எழும்பிப்போய் கைகழுவினான். சுந்தரம் மாஸ்டருக்கு அவனின் தாக்கம் புரிந்தது. இதிகா எதுவும் புரியாமல் முழித்தாள். கதையை மாற்ற " அப்பா அண்ணை வாற கிழமை வாறாராம்." என்றாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

அடுத்தாள் காலை சுந்தரம் மாஸ்டர் எழும்பியவேளை இதிகாவும் எழும்பி அவர் தேனீர் குடித்துக் கொண்டிருந்தபோது சிவகுமார் வீடு பார்க்கப்போகும் விடயத்தைக் கூறினாள்.

" ஏன் இதிகா சிவகுமாருக்கு எங்கடை வீட்டிலை ஒரு அறையைக் கொடுப்பதில் உனக்கு ஏதும் ஆட்சேபணை இருக்கா?" என்று கேட்டார்.

" எனக்கொண்டுமில்லை அப்பா" என்றாள் அவள்.

" அப்பிடியெண்டால் தம்பி எழும்பியதும் வீடு விசயமாக அப்பா வந்ததும் கதைப்பார் எண்டும்.. வெளியிலை நிலைமை சரியில்லை எண்டும்..வீட்டிலேயே இருக்கச் சொல்லு.. அத்தோடை .. கடைசி அறையை அவர் இருக்கக் கூடியவிதமாக தயார் பண்ணு" என்று கூறிவிட்டுப் போய்விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார் எழும்பும்வரை காலைச் சாப்பாடு செய்வதற்கான ஆயத்தங்களைக் குசினியில் செய்து கொண்டிருந்தாள். ஒன்பது மணியளவில் எழும்பிய சிவகுமார் காலைக் கடன்களை முடித்துவிட்டு முற்றத்திற்கு வந்தான். காத்திருந்ததுபோல் தேநீரைக் கொண்டுவந்து நீட்டினாள்.

ஒரு சிறு புன்னகையோடு அதனை வாங்கிக் குடித்தான். அருகில் நின்ற சிவகுமாரிடம்

" அப்பாவோடு உங்கடை தங்குமிட வசதிபற்றிக் கதைச்சனான். அப்பா சொன்னவர் அது சம்பந்தமாக தான் பின்னேரம் வந்து கதைக்கிறாராம். வெளியிலை போகவேண்டாம் எண்டும் சொன்னவர். வெளியிலை நிலைமை சரியில்லையாம். நேற்றுச் சந்தியிலை நிண்டு கதைச்சுக்கொண்டு நின்ற கன பொடியளை ஆமிக்காரன் கைது செய்து கொண்டு போயிட்டானாம்" என்று சொன்னவர்.

சிவகுமார் கொஞ்ச நேரம் பேசாமலிருந்துவிட்டு

" திட்டமிடல் எதுவுமில்லாமல் எழுந்தமானமாக எங்கடை பொடியள் செய்யிற வேலை எவ்வளவு ஆபத்தை விளைவிக்குது." என்று சொன்னான்.

" அப்ப என்ன செய்யச் சொல்லிறியள். திட்டமிட்டுக் கொண்டிருந்தால் அவன் அரைவாசிப்பேரை அழிச்சுப் போடுவான். நீங்கள் கொழும்பிலை இருந்ததாலை இஞ்சை நடக்கிற தொன்றும் தெரியாது. தொடங்கியிட்டுத் திட்டமிட்டு நகர்வது நல்லம் என்று நான் நினைக்கிறன்." என்றாள். இப்படி ஒரு பதிலை அவளிடமிருந்து சிவகுமார் எதிர்பார்க்கவில்லை. வியப்போடு அவளைப் பார்த்தான்.

" அரசியலை வெளுத்து வாங்கிறியள்."

" ஏன் பொம்பிளையள் அரசியல் கதைக்கக் கூடாதே. அதுவும் நான் சுந்தரம் மாஸ்டரின்ரை மகள்." என்றாள்

சிவகுமார் அவள் சொன்னவிதத்தை பார்த்துச் சிரித்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பின் விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமல் ஆயுதத்தைக் கையில் தூக்கினால் அந்த ஆயுதம் தூக்கியவனையே கொன்று விடும். "

"எதிரி ஆயுதத்தால் பதில் சொல்லும்போது நாங்களும் ஆயுதத்தாலை பதில் சொல்வதில் என்ன தவறு" இதிகாவும் விடாமல் கதைத்தாள்.

இதிகாவைப் புரிந்து கொண்ட சிவகுமார் அதற்குமேல் கதைக் கவில்லை மௌனமாகிவிட்டான்.

இதிகாவும் மேற்கொண்டு பேச்சை வளர்க்காமல் குசினிக்குள் சென்றுவிட்டாள்.

மாலையானதும் வீட்டுக்கு வந்த சுந்தரம் மாஸ்டர் தேநீர் அருந்திக் கொண்டே சிவகுமாரை அழைத்தார்.

" தம்பி இதிகா சொன்னாள் நீங்கள் வீடு பார்க்கப் போக வுள்ளதாக. ஏன் நீங்கள் இங்கே இருக்கக்கூடாது. இந்த வீட்டிலை ஆறு அறை இருக்கு. இங்கை இருக்கிறது நானும் இதிகாவும்தான். உங்களுக்கு ஒரு அறை தருவதாலை நாங்கள் ஒண்டும் குறையப் போறதில்லையே."

அவர் கூறியவற்றை அவதானமாகக் கேட்ட சிவகுமார்

" நான் இங்கை இருக்கிறதாலை உங்களுக்கு ஏதும் பிரச்சினை வராதா?" என்று கேட்டான்.

"என்ன தம்பி பிரச்சினை. நீங்கள் நினைக்கிற பிரச்சினை இந்தக் கிராமத்திலை எங்கை போனாலும் வரும். அதைப் பற்றிக் கவலைப்படாதையும். உமக்கு என்னைப் பற்றித் தெரியும்தானே" என்று அவர் கூறியதும் அவன் சம்மதித்தான்.

அவன் சம்மதித்தவுடன் இதிகாவுக்குள் ஒரு சந்தோசம் உருவானது. அது ஏனென்று அவளுக்குப் புரியவேயில்லை.

சிவகுமாருக்குரிய அறை ஏற்கனவே இதிகாவினால் தயார் செய்யப்பட்டு விட்டது.

அந்த அறைக்குள் தன் பொருட்களைக் கொண்டு சென்று வைத்தான். இதிகாவும் அதற்கு உதவி செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உங்களுக்கு இந்த அறை பிடிச்சிருக்கா?" என்று கேட்டாள்.
"ஓம்" என்று தலையாட்டினான்.
அறைக்குள் ஒரு கட்டில் ஒரு மேசை ஒரு கதிரை இருந்தது. வலப்பக்கத்துச் சுவரில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி கொழுவப்பட்டிருந்தது. இடப் பக்கத்துச் சுவரில் அவனுடைய உடுப்புகளைக் கொழுவுவதற்காக மரத்தால் செய்யப்பட்ட கொழுக்கி ஒன்று இருந்தது.
" சரி நீங்கள் ஓய்வெடுங்கோ. நான் சாப்பாடு செய்துவிட்டு வந்து சொல்கிறேன்" என்று கூறிவிட்டுப் போய்விட்டாள் இதிகா.

தகப்பனிடம் சென்று " அப்பா அண்ணன் வரேக்கை தம்பியும் நிண்டால் நல்லது. அறிவிக்கட்டே" என்று கேட்டாள். அவரும் மறுப்புக் கூறாது " அதுக்கென்ன உன்ரை விருப்பம்.." என்று கூறிவிட்டார்.
விறுவிறுவென்று அடுத்த வீட்டுக்குப் போய் தொலைபேசியில் சந்திரனுக்கு விடயத்தை அறிவித்துவிட்டு வந்து சமையல் வேலையில் ஈடுபட்டாள்.

சமையல் செய்தாளே ஒழிய மனம் அதில் முற்றாக ஈடுபடவில்லை. அவளுடைய மனதில் தமையனைப் பற்றி அவள் கேள்விப்பட்ட விடயம் உறுத்திக் கொண்டிருந்தது. நாளைக்கு அவர் அதுபற்றிக் கதைக்கத்தான் வாறாரோ என்று அவள் மனது சொல்லிக் கொண்டது. அவளால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என்ன இருந்தாலும் எங்கடை குடும்பத்துக்கை ஒரு சிங்களப் பெட்டை வாறதை அவள் அடியோடு விரும்பவில்லை.
பார்ப்போம் நாளை என்று பேசாமல் இருந்துவிட்டாள்.
சமையல் முடிந்ததும் சிவகுமாரைக் கூப்பிடப்போனாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

காலை விடிந்து விட்டதற்கான அடையாளமாகக் காகங்கள் கரைந்தபடி பறந்து கொண்டிருந்தன. வயலை நோக்கிச் செல்லும் வண்டில்களின் கடாபுடாச் சத்தங்கள் அந்தக் கருக்கலில் கேட்டுக் கொண்டிருந்தன. ஆலயங்களின் மணியோசையும் காதுகளில் இனிய இசையாகப் பரிணமித்திருந்தன. இதிகா தூங்கிக் கொண்டிருந்தாள்.

கருக்கல் என்று சொல்லப்படுகின்ற அப்பொழுதில் கையில் சூட்கேசுடன் கதவைத் தட்டிக் கொண்டிருந்தான் காந்தன். துடித்துப் பதைத்து எழுந்த இதிகா மெதுவாகக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள். பிரயாண இம்சையில் தலை கலைந்து தூங்காததால் கண்கள் சிவந்து மேலங்கி கசங்கிப் பரதேசி போல நின்ற காந்தனைப் பார்த்தாள்.

கதவைத் திறந்துவிட்டு விலகி நின்றாள். உள்ளே வந்த காந்தன் அருகிலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரையில் அமர்ந்தான். பிரயாண அலுப்பு உடலை வதைத்தது. ஒரு தேனீர் குடித்தால் என்ன என மனம் கேட்டது. நிமிர்ந்து இதிகாவைப் பார்த்தான். இதிகா தூங்குவதுபோல் பாசாங்கு செய்வதைப் புரிந்து கொண்டான்.

'இதிகா"என்று மெதுவாகக் கூப்பிட்டான். பதிலில்லை. மீண்டும் கூப்பிட்டான். இப்போ மெதுவாக அசைந்து 'என்ன?"என்றாள்.

'ஒரு தேத்தண்ணி போட்டுத்தாவன்?"என்று அவன் கேட்டபோது அந்தக் குரலிலிருந்த சோகமும் ஆற்றாமையும் அவள் நெஞ்சைப் பிழிந்தது. அவளுக்கு என்னவோ போலிருந்தது.

சட்டென்று எழும்பிக் குசினிக்குள் போனாள்.

அவள் போவதையே கண்கொட்டாமல் பார்த்த காந்தன் "நல்லாய் வளர்ந்து மெலிஞ்சு போனாள்" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டான். தேனீரைக் கொண்டுவந்து வைத்து விட்டு ஒரு ஓரமாக இருந்தாள்.

"இதிகா"என்றான்.

"ம்"பதில் சூடாக வந்தது.

"இன்னுமா உன் கோபம் மாறவில்லை. உன் கடிதம் எனக்குக் கிடைத்தது. "

"மாறிறதுக்கு இது என்ன ரத்தக் காயமே" பதில் நிரம்பப் பலமாக வந்தது.

அவன் வெலவெலத்துப் போய்விட்டான்.

இதற்குள் சத்தங்கேட்டுச் சுந்தரம் மாஸ்டர் கண் விழித்து விட்டார்.

நேற்று வந்திருந்த சந்திரன் மேற்குப் பக்கம் திரும்பிப் படுத்தான். கண்ணுக்கு முன்னே காந்தன் இருப்பதைப் பார்த்துக் கலங்கிப் போன சுந்தரம் மாஸ்டர் கண்ணைக் கசக்கிக்கொண்டு மீண்டும் பார்த்தார். அவன்தான்! அவருக்கு நா எழவில்லை.

அவரின் உணர்ச்சி நிலையைப் புரிந்து கொண்ட காந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா எப்படி இருக்கிறீர்கள்?" என்று கேட்டான். அவனது இந்தக் கேள்விக்கு அவர் பதில் கூறவில்லை. பல நாட்களாக வராததும் கடிதம் கூடப் போடாததும் அவருக்கு வருத்தம்.

"இஞ்சை சரியான பிரச்சினை போலை. வாறவழியிலை எத்தனை செக்கிங்" என்று அவன் சலித்தபோது இதிகா அவனை எரித்துவிடுவதுபோல் பார்த்தாள். நாட்டிலை எவ்வளவோ பிரச்சினைகள் கொழுந்து விட்டெரிந்து கொண்டிருக்கத் தனக்கும் அவற்றுக்கும் சம்பந்தமில்லாதது போலக் கதைக்கும் அவனைப் பார்க்க அவளுக்கு எரிச்சலாக வந்தது. ஆனால் தகப்பனுக்கு முன்னால் அவனைத் தாக்கிப் பேச அவளால் முடியவில்லை.

அமைதியாக இருந்தாள். இவர்களுடைய எந்த உரையாடலையும் செவிமடுக்காது பொழுது விடிந்து கொண்டிருந்தது. சத்தங் கேட்டுச் சந்திரனும் எழும்பிவிட்டான். "என்னண்ணை எப்பிடி?"என்று கேட்டுக் கொண்டு பக்கத்தில் வந்திருந்தான்.

தகப்பன் தம்பி அண்ணன் மூவரும் கதைக்கத் தொடங்கி விட்டார்கள். இந்த உரையாடலின் இடையில் சிவகுமார் இங்கிருப்பதைப் பற்றியும் சுந்தரம் மாஸ்டர் அவர்களுக்குக் கூறத் தவறவில்லை.

பிறகு தனக்கு அங்கு வேலை இல்லை என்று நினைத்த இதிகா முற்றத்தைக் கூட்டுவதற்காக எழும்பிப் போனாள். சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்துவிட்டுச் சந்திரன் முகம் கழுவுவதற்காகக் கிணற்றடிக்குப் போனான். காலைக் கடன்களை முடித்துவிட்டுச் சாரத்தை அணிந்து கொண்டு முற்றத்துக்கு வந்தான் காந்தன். ஒருதரம் காணியைச் சுற்றிக் கண்களைச் சுழலவிட்டான் .

வீட்டின் ஒரு மூலையில் நின்ற வேப்பமரத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணவில்லை. வேப்பமரம் நின்ற இடத்தில் நாலைந்து வாழை மரங்கள் குலை தள்ளிக்கொண்டு நின்றிருந்தன. வடக்குப் பக்கத்தில் இருந்த கிடுகு வேலி மதிலாக மாறியிருந்தது. கிழக்கு மூலையிலிருந்த இரண்டு பப்பாசி மரங்களும் காணாமல் போயிருந்தன. பப்பாசி மரங்களுக்குப் பதில் மதிலோடு சாய்ந்த படி மாமரம் நின்றிருந்தது. எட்டு வருடங்களுக்குள் எவ்வளவு மாற்றங்கள். இப்படியே பார்த்தபடி இதிகாவுக்கு அருகில் வந்தான்.

"இதிகா உன்னோடை கொஞ்சம் கதைக்கவேணும்."என்றான். அவள் அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டுத் தன் வேலையில் முனைப்பாக இருந்தாள்.

" இதிகா, அப்பாவுக்கு ஏன் உந்த வேலை. ஆரெண்டு தெரியாத வங்களையெல்லாம் வீட்டிலை இருக்கச் சம்மதிச்சிருக்கிறார்"

" அவர் அப்பாவுக்கு நல்லாய்த் தெரிஞ்சவர். நல்ல மனிசன். அதாலைதான் அப்பா வீடு குடுத்தவர். ஆடிக்கொருக்கால் அமாவாசைக்கொருக்கால் வாற உனக்கு என்ன செய்யுது?"

" இப்ப நாடிருக்கிற நிலைமையிலை உதெல்லாம் தேவையே?"

"அண்ணை நீ நாட்டிலைதான் இருக்கிறியோ அல்லது வேறை நாட்டுக்குப் போயிட்டியோ? இஞ்சை இப்ப ஆரெண்டும் பாராங்கள். கண்டபாட்டுக்குக் கைது செய்யிறாங்கள். றோட் டிலை நடந்து போகேலாது. ஆரெண்டும் பாராமல் அடிச்சித் துவைக் கிறாங்கள். ஆர் கேட்கிறது?"

"நிலைமை அவ்வளவு மோசமாய்ப் போகுதே. நீங்கள் அவங்களோடை சருவினால் விடுவாங்களே. பேசாமல் இருக் கிறது தானே."அவனுடைய இந்தப் பதில் அவளைக் கொதிக்கச் செய்தது. அடக்கிக் கொண்டாள்.

"ஓ உனக்கு இப்ப எல்லாம் அப்படித்தான் படும். நானும் எல்லாம் கேள்விப்பட்டனான்தான்."

"என்ன அப்பிடிக் கேள்விப்பட்டனீ.."

"நான் சொல்லிப் போடுவன். பேசாமலிரு. என் வாயைக் கிளறாதை"

'நீ என்னைத் தவறாய் நினைக்கிறாய். உன்ரை கடிதத்திலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப்பற்றி எழுதியிருந்தனி. எனக்கெண்டும் சில ஆசையள் அபிலாசைகள் இருக்கெண்டதை ஏன் ஏற்றுக் கொள்ளாயாம்."

"உனக்கெண்டு ஆசையள் இல்லையெண்டு ஆர் சொன்னது. குடும்பத்தையும் சமூகத்தையும் நடுக்கடலிலை விட்டிட்டு உன்ரை சுய நலத்தை முன்னுக்குக் கொண்டு வந்தால் ஆர்தான் ஏற்பினம்." இதிகாவின் வார்த்தைகள் வெப்பத்தோடு வெளி வந்தன.

உள்ளுக்கிருந்து இவர்களின் சம்பாசணையை சந்திரன் அமைதி யாகக் கேட்டுக் கொண்டிருந்தான். தமையனின் கதைகளைக் கேட்கச் சந்திரனுக்கும் இரத்தம் கொதித்தது. இதிகாவின் கதைகளைக் கேட்டுக் காந்தன் வியப்படைந்தான். தன்னை அவள் சுயநலவாதி என்று குற்றஞ்சாட்டுவதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

'நீ எதை வைச்சு உப்பிடிக் கதைக்கிறாய் எண்டு எனக்கு விளங்குது. அது என்ரை தனிப்பட்ட விடயம்."

"அப்பிடியெண்டால் நீயும் தேவையில்லாமல் நாட்டு விசயத்தைப் பற்றிக் கதைக்காதை. அப்பாவைப் பார்க்க வந்தால் பார்த்திட்டு நாளைக்கே கிளம்பிப்போய் உன்ரை சிங்களக் காதலியோடை உல்லாசமாய் இரு." இதிகா குமுறிக் கொட்டினாள்.

"சிங்களப் பெண்ணை விரும்பிறது தப்பே. ஏன் இப்படிப் பட்டிக்காட்டுப் பெண்ணைப்போலைக் கதைக்கிறாய்" இதிகாவுக்குக் கோபம் தலைக் கேறிவிட்டது.

"தப்புத் தப்புதான். இதற்கு நூற்றெட்டுக் காரணங்கள் சொல்லாதை. எனக்குப் பிடிக்கேல்லையெண்டால் பிடிக்கேல் லைத்தான்." இதிகாவின் இந்த ஆக்ரோசமான சத்தத்தால் காந்தன் திடுக்கிட்டு விட்டான்.

உள்ளே இருந்து கதைகளைக் கேட்டுக் கொண்டிருந்த சந்திரனுக்குக் காந்தனின் காதல் விவகாரம் புதிதாகவே இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் குடும்பத்தை மறந்ததாய்ச் சொல்லிறாய். நான் என்டைக்கும் அப்படி இருந்தவனில்லை. நான் கடிதம் போடாததை வைச்சு அப்பிடி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறாய். உண்மையில் எனக்கிருந்த மனப்பயம்தான் காரணம்."
"உப்பிடி மனப்பயம் இருக்கிறவை ஏன் தவறு செய்வான்?"
"பிழை.. பிழை என்டு கத்திறாய் காதலிக்கிறது பிழையே?"
"எங்கடை சமுகத்தோடை ஒத்து வாழ முடியாத இன்னொரு சமூகப் பெண்ணைக் காதலிக்கிறது தவறுதான்."
"அர்த்தமேயில்லாத உன்ரை இந்தத் தீவிரத்தன்மை எந்த நன்மையையும் தராது இதிகா"
"நன்மை தீமை பற்றி எனக்குக் கவலையில்லை. றோட்டிலை போற வயது போனவங்களையெல்லாம் இரக்கமில்லாமல் அடிக்கிறான்கள். இப்படியான காட்டுமிராண்டிக் கூட்டத் திலிருந்து வாற பெண் எனக்கு மச்சாளாயும் அப்பாவுக்கு மருமகளாயும் எப்படி இருக்கேலும்?"

அவள் வாயிலிருந்து வெளிவந்த இவ் வார்த்தைகள் அவனை ஈட்டியாய்க் குத்தின. சிறிதுநேரம் சூழலை மௌனம் கௌவிக் கொண்டது. குழம்பிப்போன அவனை உற்றுப் பார்த்த இதிகாவுக்கு என்னவோ போலிருந்தது. மனசுக்கு ரொம்பக் கஸ்டமாக இருந்தாலும் சமாளித்துக் கொண்டு
"சரி அண்ணை பழசை எல்லாம் விடுவம். இனி என்ன நடந்திட்டுது. எப்ப கலியாணம் செய்யப்போறாய்" என இறுக்கத்தைத் தளர்த்தி அமைதியாகக் கேட்டாள். திடீரென்று மாறிவிட்ட அவளின் நிலை அவனுக்குப் பயத்தைக் கொடுத் தாலும் வெளிப்படையாகக் கேட்டது தெம்பாக இருந்தது.
"கலியாணத்துக்கு இப்ப என்ன அவசரம். உனக்குக் கலியாணம் முடியட்டும். அதுக்குப் பிறகு பார்ப்பம்"
"இந்தா உந்த வரட்டுத் தியாகம் எல்லாம் எனக்குப் பிடிக்காது. சட்டுப் புட்டென்று உன்ரை அலுவலை முடி. என்ரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலை நான் பார்ப்பன்" இப்படி அவள் சொன்னதும் காந்தனுக்கு வியப்பாக இருந்தது. அவளைப் புரிந்து கொள்ளவே அவனால் முடியவில்லை.
" அறையிலிருக்கிற சிவகுமாரைப்பற்றி விசாரிச்சியளே?"
" ஆருக்குத் தெரியும் போய் அப்பாவிட்டைக்கேள்."
" ஒரு பொம்பிளைப் பிள்ளை இருக்கிற வீட்டிலை ஒரு இளைஞனைக் குடிவைக்கிறது எவ்வளவு ஆபத்து. இது இந்த அப்பாவுக்குத் தெரியாதே.. என்ன சாதியோ ஆருக்குத் தெரியும்"
'என்ன சொன்னனீ...... சாதி குறைவோ..... எங்கேயோ இருக்கிற சிங்களத்தி உன்ரை சாதியே.... உங்கடை சமய சாஸ்திரங்களைத் தூக்கி குப்பையிலை போடு.... காலத்துக்கொவ்வாத அவை யெல்லாத்தையும் எரிக்கவேணும். மனிசனைத் தொழில் ரீதியாய் பிரிச்சு ஒரு பிரிவினரை அடிமையாகவும் ஒரு பிரிவினரை எஜமானர்களாகவும் மாற்றின உங்கடை சாத்திரங்களைக் கொண்டு போய்க் குப்பையிலை போடு" இதிகாவின் கோபத் தைக் கண்டு காந்தன் வியப்படைந்தது மட்டு மல்ல அவளின் புத்திசாதுரித்தனமான பேச்சையும் கேட்டு வியப்படைந்தான்.
"அதுக்கேன் உப்படிக் கத்திறாய்?"
"நீயும் கதைக்கிறதைச் சரியாய்க் கதை. இப்படி இவர்கள் கதை இழுபட்டுக்கொண்டிருக்கும் போது சுந்தரம் மாஸ்டர் அவர்க ளுக்கருகில் வந்தார்.
"தம்பி எத்தனை நாள் நிற்பாய்?"
"கனநாள் நிற்கேலாதப்பா....லீவு இல்லை" என்று அவன் சொல்லவும்
"கனநாள் களிச்சு வந்திருக்கிறாய்... ஒரு பத்து நாள் நிண்டால் என்னவாம்" என்ற குரலில் இழையோடிய பாச ஆதங்கத்தை இருவருமே எதிர் பார்க்காதபடியால் இதிகாவை வியப்போடு பார்த்தனர்.
அப்போது பக்கத்து வீட்டிலை இருக்கிற கனகமக்கா உள்ளே வந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்னக்கா திடீரென்று வாறியள். " என்று இதிகா கேட்டாள். " இதிகா சந்தியிலை ஆமிக்காரன்களடி. போறவாற எல்லோருக்கும் அடிக்கிறான்கள். ஒவ்வொரு வீடாய்ச் செக் பண்ணப் போறான்களாம்" என்று அவள் கூறியதும் சுந்தரம் மாஸ்டர் பதகழித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7

கனகமக்கா அந்தச் செய்தியைக் கூறியவுடன் இதிகாவுக்கு கையும் ஓட வில்லைக் காலும் ஓடவில்லை. இளை ஞர்கள் போராட்டம் என்று புறப்பட்ட காலம் இது. தமிழ்த் தலைவர்களால் தமிழ் ஈழம் ஒன்றே தமிழர்களுக்கான தீர்வு என வட்டுக்கோட்டை மகாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் தூண்டப்பட்ட இளைஞர்கள் சினிமாப் பாணியில் ஆயுதங்களோடு கள மிறங்கிய காலம். வங்கிக் கொள்ளைகளும் சிறுசிறு கொலைகளும் நடந்து கொண்டிருந்த காலம். இவற்றை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென அரசாங்கம் ஒவ்வொரு வீடாக நுழைந்து இளைஞர்களையும் இளம் பெண் களையும் கைது செய்து அட்டகாசம் புரிந்து கொண்டிருந்த காலம்.

இந்த நேரம் பார்த்துச் சந்திரனும் வீட்டில் நிற்கிறானே! இக்கட்டான சூழ்நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனையும் கொண்டு போய்விடுவார்கள். இதிகாவைக் கண்டால் அந்தப் பிணந்தின்னிக் கழுகுகள் விடமாட்டுதுகள். காந்தனைக் கொண்டு போய் உரிச்சுப் போடுவாங்கள் என மனதுக்குள் புலம்பினார். காந்தனுக்கு இந்த நிலமை புதிது. போதாக்குறைக்குச் சிவகுமாரும் இருக்கிறார்.

கொழும்பில் இருப்பவர்களுக்கு இங்கு நடக்கும் நிலை தெரியாத காலகட்டம். ஏதோ நடக்கப்போகிறது என்பது மட்டும் விளங்கியது. சந்திரன் பதட்டப்பட ஆரம்பித்திருந்தான்.

இதிகாவின் இதயம் வேகமாக அடிக்கத் தொடங்கி இருந்தது. அவள் தன்னைக் காப்பாற்றுவதைவிடக் காந்தனையும் சந்திரனையும் சிவகுமாரையும் எப்படியும் காப்பாற்றிவிட வேண்டுமெனத் துடித்தாள். காந்தனுக்கு இவர்களின் பதட்டம் பயத்தை உருவாக்க மனதிற்குள் முருகனை நினைத்தான். முருகன் எப்படியும் தன்னைக் காப்பாற்றி விடுவான் என்றே நினைத்தான். இப்போதும் எவ்வளவு சுயநலம்! முருகன் தன்னைக் காப்பாற்றுவான் என்று நினைத்தானேயொழிய இந்தச் சமூகத்தைக் காப்பாற்றுவான் என்று நினைக்கவேயில்லை. சுந்தரம் மாஸ்டர் தன்னால் முடிந்த மட்டும் யோசித்தார். வழி தென்படவில்லை. இதிகாவின் மூளையில் ஒரு மின்னல்.

"எல்லாரும் கிணத்துக்குள்ளை இறங்கியிருப்பம்"என்றாள்.

"சுணங்காமல் போங்கோ நான் சமாளிக்கிறன். என்ன நடந்தாலும் வெளியிலை வராதையுங்கோ.. இதிகா தம்பி சிவகுமாரையும் கூட்டிக் கொண்டு போ" என்றார். இதிகா சிவகுமாரின் அறையைத் தட்டி நிலைமையை விளக்கி அவனை அழைத்து வந்தாள்.

"அப்பா நீங்களும் வாங்கோவன்"என்று சந்திரன் கேட்டான்.

"இல்லை தம்பி ஒருவரும் இல்லையெண்டால் அவங்களுக்கு ஐமிச்சமாய்ப் போயிடும் என்னைப்பற்றி யோசிக்காமல் நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போங்கோ"என்று அவசரப்படுத்தினார். அரை மனதோடு மூவரும் ஓடினர். இவர்கள் போய் ஐந்து நிமிடத்துக்குள் பூட்ஸ் கால்களின் சத்தம் கேட்டது. சுந்தரம் மாஸ்டர் முற்றத்திலேயே இருந்தார். அவர்களைக் கண்டதும் பதற்றப்படாமல் மெதுவாக எழும்பினார். வந்தவர்களில் ஒருவன் என்ன நினைத்தானோ தெரியாது திடீரென்று பாய்ந்து அவரின் நெஞ்சுக்கு நேரே துப்பாக்கியைப் பிடித்துக் கொண்டு எழும்ப வேண்டாம் என்றான்.

அவர் இருந்து விட்டார். வீட்டுக்குள் நுழைந்து அக்கு வேறு ஆணி வேறாய்த் தேடினார்கள். எதுவுமே அகப்படவில்லை. ஒரு போட்டோ அகப்பட்டது. அதில் அவர்களின் குடும்பமே இருந்தது. ஒவ்வொருவராகக் காட்டி எங்கே என்று கேட்டான். இதிகாவும் காந்தனும் கொழும்பில் வேலை செய்வதாகக் கூறினார். சந்திரன் யாழ்ப்பாணத்தில் தங்கிப் படிக்கிறான் என்றும் கூறினார்.

சந்திரன் விடயம் சற்றுச் சிக்கலாகியது. அவர்களுக்கு நம்ப முடியவில்லை. மகாலிங்கத்தாரின் பிடரியில் அடி விழுந்தது.

"அடுத்த முறை வரேக்கை மகனைத் தரோணும் விளங்குதா?" என்று கூறிவிட்டுத் திரும்பினார்கள். இரை கிடைக்கவில்லையே என்ற கோபம் ஒருவனுக்கு! பூட்ஸ் காலால் ஒரு மிதி மிதித்தான். தூரத்தில் போய் விழுந்தார். இடுப்பு விண்ணென்று வலித்தது. மெல்ல மெல்ல எழும்பி அவர்கள் போய்விட்டதை உறுதி செய்து கொண்டு கிணற்றுப் பக்கம் சென்று பிள்ளைகளைக் கூப்பிட்டார்.

நனைந்த நிலையில் நடுங்கிக் கொண்டு நால்வரும் வெளியில் வந்தனர். காந்தனுக்கும் சிவகுமாருக்கும் இது முதல் அனுபவம். இதிகாவிற்கும் சந்திரனுக்கும் இது முதல் அனுபவமாக இருந்தாலும் இந்தச் சூழ்நிலை பழக்கப்பட்டுப்போன ஒன்று. காந்தனால் இந்த அனுபவத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீரணிக்க முடியவில்லை. நிரம்ப மனம் உடைந்து போய் இருந்தான். உடுப்புக்களை மாற்றி விட்டு மூவரும் முற்றத்துக்கு வந்தனர். சிவகுமார் தன் அறைக்குச் சென்றுவிட்டான். இதிகாவின் மனம் குமுறிக் கொண்டிருந்தது. இது இனி அடிக்கடி நடக்கப்போகுது. இப்படி எத்தனை நாளைக்குக் கிணத்துக்குள்ளை ஒளிக்கிறது. சுந்தரம் மாஸ்டர் தேநீர் போட்டுக் கொண்டு வந்திருந்தார். விறைப்புத் தீர மூவரும் சுடச்சுடக் குடித்தனர். இதிகா போய், சிவகுமாரை அழைத்து வந்து தன் அண்ணனையும் தம்பியையும் அறிமுகப்படுத்தி வைத்தாள்.

"இப்படி நெடுக நடக்குமோ?" காந்தன் கேட்டான்.

" இது மோசமாக இருக்குதே?" என்றான் சிவகுமார்.

"எங்கடை வீட்டுக்கு இதுதான் முதல் தடவை. ஆனால் பல வீடுகளிலை பல தடவை நடந்திட்டுது" என்று முறாய்ப்பாய்ப் பதில் சொன்னான் சந்திரன்.

ஏதோ வெளிநாட்டிலிருந்து வந்தவன் போல் நடிக்கிறானே? எல்லாம் தெரிந்தும் தெரியாதது போல் நடிக்கிறானோ? அல்லது கொழும்பில் இருக்கும் தமிழர்களின் நிலை இது தானோ? என்று தனக்குள் முணு முணுத்துக் கொண்டாள் இதிகா. நால்வரும் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை.

வேலிப்பக்கம் சென்ற இதிகா கனகமக்காவைக் கூப்பிட்டு நன்றி கூறிவிட்டு " என்ன நடக்குது ஆரையும் அரஸ்ட் பண்ணியிட்டாங்களோ?" என்று கேட்டாள். கனகம் ஏதோ கூற அதைக் கேட்டுக் கொண்டு திரும்ப வந்தாள்.

"என்னவாம் பிள்ளை?"

"கனகசபை மாஸ்ரரின்ரை கார்த்திகாவைப் பிடிச்சுப் போட்டாங்க ளாம்" சந்திரன் ஏங்கிப் போய் விட்டான். அவனது மனம் பதட்டப் பட்டது.

"இது என்ன கரைச்சல். அவர் பாவம். நல்ல மனிசன். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டையும் நல்லவள்தான்." என்று இழுத்தார்சுந்தரம் மாஸ்டர்.

"இந்தப் பெடியன்களுக்குத் தேவையில்லாத வேலை. உவங்க ளாலைதான் இவ்வளவு பிரச்சனையும்" என்றான் காந்தன்.

கிடக்கிற கம்பால் அவனுக்குச் சாத்தவேண்டும் போலிருந்தது இதிகாவிற்கு. அடக்கிக்கொண்டாள். சிவகுமார் எதுவும் சொல்லவில்லை. அவனுக்கு இதிகாவைப்பற்றித் தெரியும் அதனால் அமைதியாகவிருந்தான்.

"கொழும்பிலை இருந்து வாற மணியோடரிலைதான் அடுப்பெரியுது. அதுக்குள்ளை விடுதலையாம். என்ன மண்ணாங்கட்டி விடுதலை. ஏதோ இவைதான் கடவுள் எண்ட நினைப்பு" காந்தன் தொடர்ந்தும் வாயில் வந்தபடி கதைத்துக் கொண்டு போனான். சந்திரன் கையிலிருந்த டம்ளரை கோபத்தோடு எறிந்தான். அது சுவரில் பட்டு எகிறிக் குதித்து 'டணார்"என்ற சத்தத்தை எழுப்பியது. திடீரென்று மௌனம் சூழ் நிலையைக் கௌவிக்கொண்டது. சிவகுமார் சூழ்நிலையின் இறுக்கம் உணர்ந்து மெதுவாக அறைக்குள் போய்விட்டான். சூழ்நிலை இறுகிப் போனதை உணர்ந்த சுந்தரம் மாஸ்டர் கதையை மாற்றி

"ஊர் வம்பு உனக்கேன் தம்பி....... உன்ரை கலியாண விசயத்துக்கு வருவம். உன்ர நிலை இப்ப என்ன?" தகப்பன் நேரடியாகவே களத்துக்குள் இறங்கி விட்டதை உணர்ந்தான் காந்தன்.

"இப்ப கலியாணம் அவசரமில்லை. இதிகாவிற்கு முதல் முடியட்டன்" என்ற காந்தனை நன்றியோடு பார்த்த அவர் என்ன இருந்தாலும் அவனுக்குப் பொறுப்பிருக்குது என்று மனதுக்குள் கூறிக்கொண்டார்.

"இஞ்சை எனக்காக ஒருவரும் அடைகாக்க வேண்டாம். அவரவருக்குப் புடிச்சதைச் செய்யலாம்" என்றாள். அவளின் வாரத்தைகள் வெடிகுண்டு போல் இருந்தன. காந்தனுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கவில்லை. அவன் எழும்பிப் போய் விட்டான்.

"ஏன் பிள்ளை உப்பிடிக் கதைக்கிறாய்?"என்று சுந்தரம் மாஸ்டர் கூற அவரை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவளும் எழும்பிப் போய் விட்டாள். இருவரும் போவதைப் பார்த்துப் பெருமூச்சு விட்டவாறு சுந்தரம் மாஸ்டர் எழும்பி வேலிக்கரைக் கறையான் தட்டச் சென்றார். சந்திரன் மட்டும் அசையாமல் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8

அடுத்த நாள் காலை பள்ளிக்கூடம் செல்வ தற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டான் சிவகுமார். சிவகுமார் படிப்பிக்கப்போகும் பள்ளிக்கூடம் அவர்கள் வீட்டிலிருந்து 15 நிமிடத்தில் போகக்கூடிய தூரத்தில் இருந்தது.

கன்பொல்லை என்கின்ற அந்த இடம்தான் சிவகுமார் பிறந்த இடம். இந்த உண்மை சுந்தரம் மாஸ்டருக்கு மட்டுமே தெரியும். நடந்தே போவதென்று முடி வெடுத்து நடக் கத் தொடங்கினான்.

போகும் வழியில் வீடுகளையெல்லாம் புதினம் பார்த்துக் கொண்டு போகும்போது எதையும் அடையாளம் காண முடியாமல் இருந்தது. சிறுவயதில் கொழும்புக்குப் போனதால் எல்லாமே புதிதாக இருந்தது. பாடசாலைக்குள் நுழைந்தபோது அவனை எதிர் கொண்டவர் தலைமை ஆசிரியர்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சிவகுமாரைப் பார்த்து யார் நீங்கள் என்பதுபோல் பார்த்தார். சிவகுமாரும் தான் வந்த நோக்கத்தைக் கூற அவனையும் அழைத்துக் கொண்டு தன் அறைக்குள் சென்றார். அவன் கொண்டுவந்த கடிதத்தை வாங்கி வைத்துவிட்டுப் பாடசாலையைப் பற்றிக் கூறினார். பாடசாலையில் நானூற்றைம்பது பிள்ளைகள் படிப்பதாகவும் பதினான்கு ஆசிரியர் வேலை செய்வதாகவும் கூறினார்.

அடுத்துப் பிள்ளைகளைப்பற்றிக் கூறினார். எல்லாப் பிள்ளைகளும் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள பிள்ளைகள்தான். படிப்பதில் அவ்வளவு அக்கறை காட்ட மாட்டார்கள் என்றும் கூறிவிட்டு அவனுக்கருகில் வந்து " இங்கை படிக்கிற பிள்ளையள் எல்லாரும் சாதி குறைஞ்சாக்களின்ரை பிள்ளையள்தான். பெரிசாய் நீர் கஸ்டப்பட்டுப் படிப்பிக்க வேண்டியதில்லை." என்று அவர் சொன்னபோது சிவகுமாருக்குத் திக்கென்று இருந்தது.
" இரண்டு சிங்கள ஆசிரியர்மார் இருந்தவை. எங்கடை பொடியள் பிரச்சினை தொடங்கினாப்போலை விட்டிட்டுத் தெற்குக்குப் போயிட்டினம். நானும் றான்ஸ்பருக்கு முயற்சிக்கிறன். கிடைச்சால் போயிடுவன்." என்று கூறி நிறுத்தினார். எல்லாவற்றையும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த சிவகு மார் " அதெல்லாம் நான் கவனிக்கிறன்" என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டு " எனக்கான நேர சூசி தயாரோ?" என்று கேட்டான். "கொஞ்ச நேரத்திலை மல்லிகா ரீச்சர் கொண்டு வருவா. நீர் உதிலை இரும்" என்று கூறிவிட்டு அவர் வெளியில் போய்விட்டார்.

ஐந்து நிமிடங்கள் கழிய " நீங்கள்தான் புதிசாய் வந்த மாஸ்டரோ" என்றொரு பெண்குரலைக் கேட்டுத் திரும்பினான் சிவகுமார். " ஓமோம் நான்தான்" என்று கூறியபடி எழும்பினான்.
" என்ரை பெயர் சிவகுமார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இந்தாங்கோ உங்கடை நேர சூசி" என்று அவனை நோக்கி நேரசூசியை நீட்டினாள் மல்லிகா ரீச்சர்.
" உங்களுக்கு முதல்பாடம் மூன்றாம் வகுப்பு. சரியான குழப்படியான பிள்ளையள். கெட்டித்தனமாகச் சமாளிக்க வேணும். இதுதான் உங்களுக்கு முதல் வேலையோ?" என்று கேட்டாள் மல்லிகா ரீச்சர்.
" ஆசிரியத் தொழில் இதுதான் முதல். இதற்கு முதல் வேறை வேலையும் பார்த்திருக்கிறன்"
இப்படி இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது தலைமை ஆசிரியர் ஒரு வட்டம் சுற்றிவிட்டு வந்து விட்டார்.
" சிவகுமார் மல்லிகாதான் இஞ்சை எல்லாம். நான் சும்மா பேருக்குத்தான் தலைமை ஆசிரியர். என்ன பிரச்சினை யெண்டாலும் என்னட்டை வராமல் நேராய் அவவிட்டையே போய்விடும்" என்று கூறிவிட்டு ஏதோ பகிடி விட்ட நினைப்பில் பெரிசாகச் சிரித்தார். சிவகுமார் பேசாமல் நின்றான்.
" வாங்கோ மாஸ்டர் வகுப்பைக் காட்டிறன்" என்று அவனைக் கூட்டிக்கொண்டு சென்றாள் மல்லிகா.
மூன்றாம் வகுப்புக்குமுன் போய் இருவரும் நின்றனர்.
வகுப்பில் ஆசிரியர் ஒருவரும் இல்லை. அவர்கள் ஓடுவதும் பாய்வதுமாகச் சத்தமிட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.
" ஏன் இவைக்கு இப்ப ஒரு பாடமுமில்லையே."
" கந்தையா மாஸ்டரின்ரை பொறுப்புத்தான் இப்ப. அவர் இப்பிடித்தான் வகுப்புக்கு வரமாட்டார். அங்கை ஆசிரியர் அறையிலை இருந்து கதைச்சுக் கொண்டிருப்பார்."
" வாங்கோ அந்த அறையையும் காட்டிறன்." என்று அவள் கூற "இல்லை இல்லை .. இப்ப இந்த வகுப்பை இப்படிவிட்டிட்டு வரேலாது. வகுப்பு முடிய வாங்கோ. " என்று கூறிவிட்டு வகுப்பினுள் நுழைந்தான்.

நுழைந்தவன் ஏதும் சத்தமின்றி அவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றான். சிறிது நேரத்தில் ஒவ்வொருவராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் இருப்பிடத்தில் போய் இருந்தனர். இதனைப் பார்த்துக் கொண்டு நின்ற மல்லிகா திகைத்துவிட்டாள்.
அதே வேகத்தில் ஆசிரியர் அறைக்குச் சென்று சகலதையும் கூறிவிட்டுத் தன் வகுப்பிற்குப் போய்விட்டாள்.

வகுப்பறையில் சிவகுமார் ஒவ்வொரு மாணவனாக அறிமுகப்படுத்தச் சொன்னான். அவர்களும் அதனைச் செய்தார்கள். பின்பு சிவகுமார் தன்னைப்பற்றிச் சொன்னான். " என் பெயர் சிவகுமார். உங்களுக்குப் படிப்பிப்பதற்காக இங்கு வந்துள்ளேன். படிப்பு என்பது ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானது. படிப்பு இருந்தால் எல்லோரும் உங்களை மதிப்பார்கள். உங்களின் அப்பா அம்மா எவ்வளவு கஸ்டப்படுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்களைப் போலக் கஸ்டப்படாமல் இருக்க நீங்கள் நன்றாகப் படிக்கவேண்டும். நான் எங்கே பிறந்தவன் என்று தெரியுமோ? நானும் உங்களைப்போல இந்தக் கிராமத்தில்தான் பிறந்தவன்" என்று அவன் சொல்ல பிள்ளைகள் எல்லாரும் ஆச்சரியமும் திகைப்பும் அடைந்தாலும் அவனை ஒரு நட்புணர்வோடு பார்க்கத் தொடங்கினார்கள்.

அன்று முழு நேரமும் சிவகுமாரைப்பற்றித்தான் ஒரே கதை. சிவகுமார் தன் பிறப்பின் ரகசியத்தைச் சொன்ன பிறகு அதை முழுமையாக அறியவேண்டுமென்று அதிபரும் ஏனைய ஆசிரியர்களும் முயன்று கொண்டிருந்தார்கள். யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

மாலை 3.30 மணிக்குப் பாடசாலை முடிவடைந்தது. அங்கு நிற்காமல் வீட்டிற்குப் புறப்பட்டுவிட்டான். போகும் போது தனக்கு ஒரு கிழமை விடுமுறை வேண்டுமென்றும் தான் கொழும்பு சென்று தன் உடமைகளையும் முன்பு வேலை செய்த இடத்திற்குச் சென்று முறையாக விலக வேண்டுமென்றும் அதிபருக்குக் கூறினான். அதிபரும் அனுமதிக்க பாடசாலையைவிட்டு வெளியே வந்து சுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஸ்டர் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான்.
வீட்டுக்கு வந்தபோது காந்தன் முன் மண்டபத்தில் இருந்தான். சந்திரன் முற்றத்தில் இருந்தான். மாஸ்டர் அப்போதுதான் பாடசாலையால் வந்து கொண்டிருந்தார்.
அவர் வரும்போதே " எப்படி சிவகுமார் இண்டைக்குப் பள்ளிக்கூடம்?" என்று கேட்டார். " பரவாயில்லை சேர்."
என்று கூறிவிட்டுக் கிணற்றடி சென்று முகம் கைகால் எல்லாம் கழுவிவிட்டு உடுப்பை மாற்றிக் கொண்டு முன் மண்டபத்திற்கு வந்தான்.
காந்தனுக்குப் பக்கத்தில் இருந்த கதிரையில் இருந்தான் சிவகுமாரன்.
" அப்பா சொன்னார் நீங்கள் கொழும்பிலையிருந்து வந்ததாக. இதுதான் உங்கடை முதல் வேலையோ?" என்று கேட்டான்.
" இல்லையில்லை.. நான் ஒரு பத்திரிகையிலை உதவி ஆசிரியராக இருந்தனான். ஆசிரியத் தொழிலுக்கும் விண்ணப்பிச்சுப்போட்டு இருந்தனான். இப்பதான் கிடைச்சுது. இன்னும் அந்த வேலையை விடவில்லை. நாளைக்குக் கொழும்புக்குப் போறன். வேலை அலுவல் இருந்த வீட்டலுவல் எல்லாத்தையும் பார்த்துவிட்டு வரவேணும்"
இப்படிச் சிவகுமார் சொல்லிக் கொண்டிருக்கும்போது அங்கு வந்த சுந்தரம் மாஸ்டர் " ஆரது கொழும்புக்குப் போறது?" எனக் கேட்டுக் கொண்டே கதிரையில் அமர்ந்தார்.
" நான்தான் மாஸ்டர்.. அங்கை கன வேலை கிடக்கு அவற்றினை முடிச்சுப்போட்டு வரவேணும்" என்று பதிலளித்தான் சிவகுமார்.
" காந்தன் இந்தத் தம்பியை நான் கண்ட விசயம் தெரியுமே..." என்று அவர் தொடங்க சந்திரனும் அதை அறியும் ஆவலில் உள்ளே வந்தான்.
" அண்டைக்கு வாசிகசாலைக்குப் போட்டு வரேக்கை இந்தத் தம்பியை ஆரோ அடிச்சு றோட்டுக் கரையிலை போட்டிட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிட்டாங்கள். சனங்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு நிற்குதுகள். நான் கண்டிட்டுக் கூட்டிவந்து பரியாரியாரைக் கூப்பிட்டு மருந்து போடுவிச்சன்" என்றார்.

" ஆர் அடிச்சவங்கள்?" என்று காந்தன் கேட்டான்.

"வேறை யார்? இயக்கப் பொடியள்தான்" என்றார் அவர்.

" அதாரப்பா இந்த இயக்கப் பொடியள். நீங்கள் இது சரியென்று நினைக்கிறியளே" என்று காந்தன் கோபமாகக் கேட்டான்.

" ஆரப்பு சரியெண்டது. தமழரின்ரை உரிமையை உப்பிடி எடுக்கலாமெண்டு உந்த அரசியல்வாதியள் பொடியளுக்குக் கீ குடுத்து விட்டிருக்கிறான்கள். ஆடுறாங்கள்."

" ஆரும் கேட்கேலாதே" காந்தன் கொதித்தான்.

"மெல்லப் பேசு நாளைக்கு உன்னை முடிச்சுப்போடுவாங்கள். புதிசாய் ஆரும் வடமாகாணத்துக்கை வந்தாலும் இப்படித் தான் அடிக்கிறாங்கள்"

இவர்கள் இருவரும் இப்படிக் கதைப்பது இதிகாவுக்கோ சந்திர னுக்கோ பிடிக்கவில்லை.

சிவகுமார் எந்த அபிப்பிராயமும் சொல்லாமல் பேசாமலி ருந்தான்.

"என்ன தம்பி நீர் ஒண்டும் சொல்லாமல் இருக்கிறீர்?" என்று சுந்தரம் மாஸ்டர் சிவகுமாரைக்கேட்டார்.

" மாஸ்டர் நான் கொழும்பிலை இருந்த ஆள். எங்களுக்கு இஞ்சை நடக்கிற விசயமெல்லாம் பத்திரிகை வாயிலாகவே தெரியும். அதுவும் பத்திரிகையிலை யாழ்ப்பாணத்திலை ஏதோ தப்பு நடக்கிறதாய்த் தான் போடுவார்கள். நான் இன்றிலிருந்துதான் ஆசிரியர். இதுவரை நான் பத்திரிகையாளன். நான் பட்டப்படிப்பு முடிச்ச உடனே எனக்குக் கிடைச்ச வேலை உதவிப் பத்திரிகையாளன். நாளைக்குக் கொழும்புக்குப் போய் நிலைமைபற்றிக் கட்டுரை எழுதுவன் அப்ப பாருங்கோ. நான் பத்திரிகைத் துறை வேலையை விடத்தான் இருந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பத்திரிகை ஆசிரியர் ,ஆசிரியத் தொழிலோடு பத்திரிகை வேலையையும் பார்க்கச் சொல்லி நிற்கிறார். பார்ப்பம். " என்றான்.

"பத்திரிகைத்துறை நல்லது தம்பி அவங்கள் விரும்பினால் அதை விடாதையும்" என்றார்.

" எனக்கு ஆசிரியத் தொழிலிலை நல்ல விருப்பம். நான் இந்தப் பள்ளிக்கூடத்தை விரும்பிக்கேட்டுதான் வந்தனான். அது ஏனென்பதும் உங்களுக்குத் தெரியும்."

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த இதிகாவின் மனது கவலைப்பட்டது. சிவகுமார் போவதில் அவளுக்கு இஸ்டமில்லை. அதை அவள் காட்டிக் கொள்ளாமல் பேசாமலிருந்தாள்.

" சரி மாஸ்டர் நான் படுக்கப்போறன் நாளைக்கு காலைமை வெளிக்கிடவேணும்" என்று எல்லாரிடமும் கூறிவிட்டு தன் அறைக்குப் போய்விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9

**கொ**ழும்புக்கு வந்த சிவகுமார் நேராகப் பத்திரிகை அலுவலகத்துக்குப் போனான். வாசலடியில் காவல்காரன் நின்று கொண்டிருந்தான். அவன் சிவகுமாரைக் கண்டதும்

"வணக்கம் சார்" என்றான்.

மெல்லிய புன்சிரிப்பை அவனுக்கு வழங்கிவிட்டு அவசர அவசரமாக அலுவலகத்துக்குள் நுழைந்து இருக்கையில் அமர்ந்தான். மேசையில் ஓர் கடிதம் இருந்தது. ஒரு கிழமை லீவில்தான் போவதாக டைப்பிஸ்ட் நிர்மலா எழுதியிருந்தாள். அவனுக்கு எரிச்சலாக இருந்தது. சமாளித்துக் கொண்டு ஆசிரியரைச் சந்திக்கப் போனான். ஆசிரியர் யாருடனோ டெலி போனில் கதைத்துக் கொண்டிருந்தார். கதவைத் தட்டி விட்டு உள்ளே எட்டிப் பார்த்தான். வந்தமரும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைகை செய்தார். ரெலிபோன் உரையாடல் முடிந்ததும் வழமையான பாணியில் செருமிக் கொண்டு கதிரையில் முதுகைத் தொங்கப் போட்ட வண்ணம்

"என்ன சிவகுமார் போன காரியம் எப்படி?ஆசிரியத் தொழில் பிடிச்சிருக்கா?" என்று கேட்டார் கைலாசம். சிவகுமார் அந்தக் கிராமத்துக்குப் போனதையும் அங்கு நடந்தவைகளையும் உணர்ச்சிவசப்பட்டுக் கூறினான். எல்லாவற்றையும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த கைலாசம் பதில் கூறாமல் அவனையே பார்த்துக்கொண்டிருந்தார்.

"உன்னுடைய வேகத்தைப் பார்த்தால் கட்டுரை காரசாரமாய் வரும் போலை கிடக்கு"

"கண்ணாலை கண்ட உண்மை எப்பவும் எழுத்திலை நெருப்பாய்த்தான் இருக்கும்"

"உன்னுடைய வயதிலை உன்னைவிட திறப்புாய் எழுதினவன் நான்"

"நீங்கள் சொல்லிறது எனக்கு விளங்கவில்லை. உண்மையான பிரச்சனைகளை மக்களுக்குத் தெரியப்படுத்திறது தானே எங்கடை கடமை"

"உண்மைதான் மறுக்கவில்லை. ஆனால் இன்றைய யதார்த்த நிலைமை அப்பிடியில்லையே"

"யதார்த்த நிலமையை மக்களுக்குத் தெரியப்படுத்திறதுதானே பத்திரிகையின்ரை கடமை"

"எனக்கு விளங்கும் உனக்கு விளங்கும் இந்தப் பத்திரிகையின்ரை முதலாளிக்கு விளங்கவில்லையே"

"ஏன் அவர் ஏதும் சென்னவரே?"

"அவருக்கு அரசாங்கத்தைப் பகைக்க விருப்பமில்லை. அரசாங்கத்தை எதிர்த்து எந்தச் செய்தியும் வரக்கூடாதாம். இராணுவத்துக் கெதிராய் எந்தச் செய்தியும் வரக்கூடாதாம். நான் என்ன செய்யிறது சிவகுமார். அதோடை யாழ்ப்பாணத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடியன்களைப் பற்றியும் எதுவும் வரக்கூடாது. அவங்களைப்பற்றி வந்தால் அது எங்கடை உயிருக்கே ஆபத்து. அதாலை பொதுவா எதையும் எழுதுவம்."

சிவகுமாருக்கு எரிச்சலாக இருந்தது.

"ஏன் நீங்கள் பத்திரிகையின்ரை ஆசிரியர் தானே!" சிவகுமார் இப்படிக் கேட்டதும் கைலாசம் விழுந்து விழுந்து சிரித்தார். அவரது சிரிப்பைக் கேட்ட சிவகுமாருக்குச் சினமாக இருந்தது.

"ஆசிரியர் தான்! யார் இல்லையெண்டது. இந்த ஆசிரியர் தொழில் கிட்டத்தட்ட ஒரு கிளாக்கின்ரை தொழில் மாதிரித் தான் தம்பி. நான் மூன்று பொம்பிளைப் பிள்ளையளுக்குத் தகப்பன். எனக்குப் பணம் வேணுமெண்டால் அவர் சொன்னதைத்தான் செய்ய முடியும். இங்கை பத்திரிகைச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் இதைப் பற்றி எல்லாம் மூச்சும் விடக்கூடாது. உனக்குப் பணம் வேணுமெண்டால் என்னை நீ பகைக்கக் கூடாது. இது பணத்தை முதன்மையாகக் கொண்ட ஒரு சங்கிலித்தொடர் தம்பி. வீணாய் ஏன் நேரத்தை வீணாக்கிறாய்....... போய் ஒரு கலைஞரைப் பேட்டிகாண். அதை ஒரு பக்கம் போட்டு வெளுத்து வாங்குவம்" அவரைப் பார்க்க அவனுக்கு வெறுப்பாக இருந்தது. அதே நேரம் அவரைப் பார்க்கப் பரிதாபமாகவும் இருந்தது.

அவருடைய இந்தப் பங்கலோட்டுத் தனமான பேச்சு அவனை வேதனைப்பட வைத்தது. எதுவும் சொல்லாமல் சட்டென்று எழும்பி வெளியே போய்விட்டான். தன்னுடைய இருக்கைக்கு வந்த சிவகுமாருக்குத் தலை வலித்தது. நேர்மையான பத்திரிகையாளனுக்கு இந்த உலகத்தில் வரும் சோதனைகள் அவனைக் கலங்க வைத்தன. இன்று வேலை செய்யும் மன நிலையில் அவன் இல்லை. தொலைபேசி எடுத்துத் தனக்கு அரை நாள் லீவு வேண்டுமென்று கேட்டான். அவனுடைய மன நிலையைப் புரிந்து கொண்ட கைலாசம் மறுக்காமல் விடுமுறை கொடுத்தார். வெளியில் வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமாருக்கு எல்லாமே சூனியமாக இருந்தது. எங்கே போவது? அறைக்குப் போகும் மன நிலையில் அவன் இல்லை. கால்போன போக்கில் கொழும்பு வீதிகளில் நடந்தான். அவனை அறியாமலே அவனது கால்கள் அவனைக் காலிமுகக் கடற்கரைக்குக் கொண்டு சென்று விட்டன. ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு வானத்தைப் பார்த்தான். அவன் தனியே இருப்பதைப் பார்த்த ஒரு பெண் அவனுக்கு அருகில் வந்தாள்.

“ஹலோ”என்றாள்.

அவன் திரும்பிப் பார்த்தான். கறுப்புக் கண்ணாடி போட்டிருந்தாள். காய்ந்து வெடித்துப்போன சொண்டிற்கு வலுக் கட்டாயமாகச் சாயம் தடவியிருந்தாள். கறுப்புமில்லைச் சிவப்புமில்லை என்றிருந்த சொக்குப் பிரதேசத்தில் பவுடர் அப்பியிருந்தாள். சுமாரான தேகம். சுண்டியிழுக்கக் கூடிய சில வளைவுகள். என்னதான் நவீன அழகு சாதனங்களைப் பயன்படுத்தியிருந்தாலும் இவள் அவள்தான் என்பதை அவளின் தோற்றம் பறை சாற்றிக் கொண்டிருந்தது. அவள் நின்ற நிலையும் கறுப்புக் கண்ணாடியைத் தூக்கி அவனைப் பார்த்த பார்வையும் சிவகுமாருக்கு அருவருப்பைக் கொடுத்தன. அவளைப் பாராமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான் சிவகுமார். அவள் விட்ட பாடில்லை. அவளுக்குத் தேவை காசு. எப்படியாவது அவனை மடக்கிவிட வேண்டுமென்று நினைத்து அவன் தோளில் தட்டி

“வாறியா?”என்று பச்சையாகக் கேட்டாள். சிவகுமாருக்கு அவள் மேல் கோபம் வந்தாலும் எவ்வளவு சுதந்திரமாகத் தன் தொழிலைச் செய்கின்றாள். இவளுக்கிருக்கிற அளவுக்குக் கூடச் சுதந்திரம் தன் தொழிலுக்கில்லையே என்பதை நினைக்கும்போது சிவகுமாருக்குத் தன் மேலேயே வெறுப்பு வந்தது. அவன் யோசிப்பதைப் பார்த்துப் பணப் பிரச்சினை என்று நினைத்தாளோ என்னவோ

“பரவாயில்லை பத்து ரூபாய் கொடு”என்றாள். அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று யாரும் அகப்படவில்லை போலுள்ளது.
இனிமேலும் இங்கிருப்பது ஆபாசம் என உள்மனம் உணர்த்தியதால் கையைத் தட்டி விட்டு நடந்தான்.
"சரியான ஒரு...." அவள் வாயில் எழுத முடியாத அளவிற்கு வார்த்தைகள் வருகின்றன.
சிவகுமார் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. நடந்து கொண்டேயிருந்தான். மனம் மட்டும் எங்கோ அலைந்து கொண்டிருந்தது. நேரம் ஐந்து மணியாகி இருந்தது. இப்போதும் அறைக்குப்போக விருப்பமில்லை. படம் பார்த்தால் என்ன? மனசு கேட்டது. உடனே கால்கள் தியேட்டரை நோக்கி நடக்கத் தொடங்கின. தியேட்டரில் கமலகாசன் நடித்த படம் போய்க் கொண்டிருந்தது. ரிக்கற் எடுத்து கொண்டு உள்ளே போனான். அவ்வளவு சனமில்லை. படம் ஆரம்பமாகி விட்டது.
"சும்மா இரப்பா..."
"நீர் கொஞ்சம் தள்ளி இரும்.... அங்க முன்னாலை ஆள் இருக்குது"
"இருந்துட்டுப் போகட்டன். அந்தாள் படம் பார்க்குது. இங்கை ஏன் பார்க்கப் போகுது?"
"தியேட்டரிலை வேண்டாமப்பா"
சட்டென்று சிவகுமார் திரும்பினான்.
"கொஞ்சம் படம் பார்க்க விடிறியளா?"என்று கேட்டான் சிவகுமார்
"படம் முன்னாலை தானே போகுது. நீர் ஏன் பின்னாலை பார்க்கிறீர்"
"இஞ்சைவாறது படம் பார்க்கத்தான். உதையெல்லாம் வீட்டிலை நாலு சுவருக்குள் வையுங்கோ"
"நாங்கள் வீட்டிலயும் வைப்பம். றோட்டிலையும் வைப்பம். நாலு சுவருக்குள்ளையும் வைப்பம். நாலு சுவர் இல்லாமலும் வைப்பம். இது எங்கடை சுதந்திரம். நீர் உம்மடை வேலையைப் பாரும்"எதிர் வார்த்தைகள் சூடாகவும் கரடுமுரடாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தபோது சிவகுமார் சற்று உணர்ச்சி வசப்பட்டாலும் அந்த மனிதன் பாவித்த சுதந்திரம் என்ற சொல் அவனைப் பெட்டி பாம்பாக அடக்கி விட்டது. இவர்களுக்குள்ள சுதந்திரம் கூடத் தனக்கில்லையே என்று அவனின் மனம் வேதனைப்பட்டது.

அடுத்தநாள் பத்திரிகைக் காரியாலத்திற்குச் சென்ற அவன் கைலாச்தைப் பார்த்து " என்னாலை நீங்கள் சொல்லிமாதிரி நடக்கேலாது. நான் ஆசிரியத் தொழிலிலேயே இருந்திடிறன். என்னை விட்டிடுங்கோ" என்று கூறித் தனது ராஜினாமாக் கடித்ததைக் கொடுத்துவிட்டு வெளியேறிவிட்டான்.

வெளியேறிய சிவகுமார் தான் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்று குடுக்கவேண்டிய பணத்தையும் கொடுத்துவிட்டுத் தன் பொருட்களோடு புறப்பட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10

மனதுக்குள் திடமான ஒரு முடிவை ஏற் படுத்திக்கொண்ட நிறைவை சிவகுமார் அடைந்திருந்தான். வெளியில் வந்து புகையிர நிலையத்தை நோக்கி நடந்தான்.

வெறிபிடித்த பைத்தியக்காரன் போல் புகையிரதங்கள் போவதும் வருவதுமாக இருந்தன. பல கனவுகளையும் பல துன்பங் களையும் பல இன்பங்களையும் சுமந்த மனிதர் களை எவ்வித அலுப்பும் சலிப்புமில்லாமல் ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்தன புகை யிரதங்கள். யாழ்ப்பாணம் போகும் புகையிரதத் தில் வந்து ஏறினான் சிவகுமார். அவனது மனது எதிர்காலத்தை நோக்கி வட்டமிட ஆரம்பித் தது. சுதந்திரம் - சொந்தம் என்ற இரு சொற்க ளும் அவனுள் பரதநாட்டியம் ஆடிக் கொண்டிருந்தன.

தன்னுடைய எழுத்து வன்மையால் இந்த உலகில் பலவற்றைச் சாதிக்க விரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவனுக்குத் தேவை சுதந்திரம். அந்தக் களத்தைத் தானே உருவாக்க விரும் பினான்.

சமூகத்திற்குத் தன் எழுத்துச் சக்தியை வழங்கத் திட்டமிட்ட சிவகுமார் இந்தச் சமூக அமைப்பை மறந்து விட்டான். தான் வாழ்கின்ற இச் சமூகம் ஒரு பயங்கரமான பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டதென்ற உண்மையை அவன் உணரவில்லை. முற்போக்கு குணாம்சங்களின் அர்த்தமுள்ள அறை கூவல்களை தங்களின் கவசங்களாகப் பிற்போக்காளர்கள் பாவிக்க ஆரம்பித்து விட்டார்கள் என்ற வரலாற்று விபத்தைத் சிவகுமார் உணரவில்லை. அதேநேரம் முற்போக்குக் குணாம்சம் கொண்டவர்கள் சமூக பாரம்பரி யங்களைப் புரிந்து கொள்ளாது வெறுமனே வெளிநாட்டு தத்துவங்களைக் கடன் வாங்கித் தங்கள் தனித்துவங்களை இழந்து பொம்மைகளாய் மாறிவிட்டமையும் வரலாற்றில் நாம் குறித்து வைக்க வேண்டிய ஒன்று தான்.முற்போக்குவாதிகள் என்றால் அவர்கள் கம்யூனிஸ்ட்டுகள் மட்டும்தான் என்ற தவறான பரப்புரைகளால் சமூகம் சிறுமைப்படுத்தப்பட்டுள்ளது என்பது கூட புரியாமல் இருந்தான் சிவகுமார்.

புகையிரதம் ஆடி ஆடிச் சென்று கொண்டிருந்தது. தன்னுடைய இந்தத் திட்டத்திற்கு இதிகா என்ன சொல்லுவாள்? இதிகாவோடு இதுவரை எதுவும் அவன் கதைத்ததில்லை. ஆனால் அவளுள் விடுதலை வேட்கை ஒன்று கொழுந்து விட்டெரிவதை அவன் அவதானித்திருந்தான். அவளது வதனம் அவனைக் கண்டதும் மலர்வதையும் காணாதபோது வாடுவதையும் கூட அவன் அவதானித்திருந்தான். அவனுக்கும் கூட அப்படியான உணர்வுகள் ஏற்பட்டன என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். அவளோடு கதைக்காவிட்டாலும் இந்தச் சமூகம் பற்றிய பார்வையும் இதிகாவின் பார்வையும் வேறுபட்டனவாக இருக்கின்றன என்பதும் அவனுக்குப் புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தன்னுடைய எதிர்காலத் திட்டங்களுக்கு இதிகா உதவவேண்டுமென்று மனதார அவன் விரும்பினான். இதிகா என்னோடு ஒத்துழைப்பாளா? இப்படிப் பல வினாக்களை அவன் மனசு எழுப்பிக் கொண்டிருந்தது. வங்கியிலிருக்கும் பணத்தை மனதுக்குள் கூட்டிப்பார்த்தான். ஐம்பதாயிரம் தேறும் போலிருந்தது. வெறுமனே ஆசிரியராகக் கடமை புரிவதா அல்லது ஆசிரியத் தொழிலோடு சொந்தமாகப் பத்திரிகையும் நடத்துவதா என்ற மனப் போராட்டத்தில் அவன் தத்தளித்துக்கொண்டிருந்தான்.

புகையிரத யன்னலூடாக வெளியே பார்த்தான். மரங்கள் புகையிரதத்துக்கு எதிர்த்திசையில் ஓடிக் கொண்டிருந்தன. மனிதனோடு பயணிக்க அவற்றிற்கும் விருப்பமில்லைப்போலும். பறவைகள் கூட்டம் கூட்டமாகப் பறந்து கொண்டிருந்தன. முன்னால் இருந்த மனிதரைப் பார்த்தான். தாடி வளர்த்திருந்தார். அவர் முகத்தில் வெறுமை தெரிந்தது. அவர் தன் மனத்தோடு உரையாடிக் கொண்டிருக்கிறார் என்று நினைத்தான். ஏதோ ஒரு சோகத்தில் அவர் இருப்பதாக அவனுக்குப்பட்டது. அவரும் தனக்குள் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தார். தாடி வளர்த்தவருக்குப் பக்கத்தில் ஒரு இளம் பெண்ணிருந்தாள். சுமாரன அழகு. நீண்ட கூந்தல். கண்ணாடி போட்டிருந்தாள். அவளுக்குச் சோகம் இருந்ததோ என்னவோ உசாராக இருந்தாள். கையில் பிரபல எழுத்தாளரின் நாவல் இருந்தது. அதைச் சிறிது படிப்பதும் பிறகு வெளியில் பார்ப்பதுமாக இருந்தாள். அவனுக்கு முன்னால் இருந்த தாடி வளர்த்த மனிதனுக்கு அவனுடன் கதைக்க வேண்டும் போல் இருந்திருக்க வேண்டும். அவனைத் தட்டி "தம்பி யாழ்ப்பாணமோ?"என்றார்.

"ஓம் கொடிகாமம்..."என்று அவன் கூறவும்

"தம்பி யாழ்ப்பாணத்திலை சரியான பிரச்சினை போலை"

சிவகுமாருக்குக் கதைக்க விருப்பமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இருக்கும்" என்று மொட்டையாகக் கூறினான்.

அத்தோடு அவர் கதையை விட்டுவிட்டார். புகையிரதம் ஒரு குலுக்கு குலுக்கி நின்றது. எட்டிப் பார்த்தான். கொடிகாமம் என்ற பெயர்ப் பலகை சிரித்துக் கொண்டு நின்றது. பெட்டியைத் தூக்கிக் கொண்டு இறங்கினான். இறங்கும் போது அவளைப் பார்த்தான். அவள் நாவலில் மூழ்கியிருந்தாள்.

நிலையத்தை விட்டு வெளியில் போகும்போது அசையும் புகையிரதத்தை மீண்டுமொரு முறை பார்த்தான். அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். மனம் ஒரு குரங்கு என்ற பாட்டு நிலையத்திற்கு முன்னாலுள்ள தேநீர்க் கடையிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்தது. நிலையத்தை விட்டு வெளியில் வந்தான். வெளியில் புகை வண்டியின் வருகைக்காக பஸ் வண்டிகள் வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருந்தன. தூங்கிக் கொண்டிருந்த பஸ் டிரைவரும் கொண்டக்ரரும் சனசந்தடி கேட்டு எழுந்து தயாரானார்கள். சிவகுமார் போய் பருத்தித்துறை போகும் பஸ்ஸில் ஏறிக் கொண்டான். இ.போ.ச வண்டி தனக்கேயுரித்தான சத்தங்களை எழுப்பிக் கொண்டு புறப்பட்டது. சிவகுமார் கடைசிச் சீற்றில் போய் இருந்து கொண்டான். எல்லார் வாயிலும் நாட்டுப் பிரச்சினைதான். சிலர் அரசுக்குச் சார்பாகவும் சிலர் பொடியங்களுக்குச் சார்பாகவும் கதைத்தார்கள். சிவகுமார் எதிலும் கலந்து கொள்ளவில்லை. எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டு அவதானித்துக் கொண்டு வந்தான். பத்திரிகைக்காரனாச்சே.! கொண்டக்டர் கரவெட்டி..... கரவெட்டி என்று கத்தினான். சிந்தனையில் இருந்த சிவகுமார் திடுக்கிட்டுப்போய் பஸ் நின்றதும் இறங்கிக் கொண்டான். நேரே இதிகா வீட்டுக்குத் தான் போனான். நேரம் அப்போது நாலு மணி முப்பது நிமிடம். கதவைத் தட்டினான். காந்தன் தான் கதவைத்திறந்தான்.

"ஓம் வாரும்" என்று அழைத்து வந்து அமரச் சொன்னான் காந்தன். சிவகுமாரை இருக்கச் சொல்லிவிட்டுக் கிணற்றடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கும் தகப்பனுக்குக் குரல் கொடுத்தான்.

"அப்பாவும் இதிகாவும் கிணற்றடியில நிற்கினம். வருவினம். போன அலுவலெல்லாம் சரியோ" என்று கேட்டான்.

இப்படி இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது சுந்தரம் மாஸ்டரும் இதிகாவும் வந்துவிட்டனர். இதிகா இவ்வளவு விரைவாக வந்துவிடுவானென்று எதிர்பார்க்க வில்லை. சுந்தரம் மாஸ்டர் குசலம் விசாரித்தார். இடையில் குறுக்கிட்ட காந்தன்.

"நான் இண்டைக்கு ரெயிலிலை பயணம்.... குறை நினையா தையும் ஆயத்தப்படுத்தப்போறன்." சிவகுமார் ஒரு புன்சிரிப் போடு விடை கொடுத்தான்.

"என்ன விரைவாக வந்திருக்கிறியள். போன அலுவலெல்லாம் முடிஞ்சுதோ?" இதிகா கேட்டாள்.

"அதெல்லாம் பெரிய கதை ஆறுதலாய்ச் சொல்லிறன்."என்று கூறிவிட்டு மாஸ்டரோடு உரையாட ஆரம்பித்தான்.

இதிகா அவனுக்கு தேனீர் போட எழும்பிக் குசினுக்குள் போனாள்.

"தம்பி வரேக்கை வழியிலை சரியான செக்கிங்கோ?"

"செக்கிங் வழமைதானே மாஸ்டர்." என்று கூறிக் கொண்டி ருக்கும்போது தேனீரைக் கொண்டு வந்து வைத்தாள் இதிகா.

இதற்குள் தனது பெட்டியோடு வந்த காந்தன்

"அப்ப சிவகுமார் நான் போட்டு வாறன். முடிந்தால் கொழும்பிலை சந்திப்பம்"என்றான். பின்பு இதிகாவையும் தகப்பனையும் பார்த்துக் கூறிவிட்டு வெளிக் கதவை நோக்கி நடந்தான். கதவடியில் சந்திரன் சைக்கிளையும் வைத்துக் கொண்டு நின்றிருந்தான். வாசல் மட்டும் போன சுந்தரம் மாஸ்டர் காந்தனைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சி விட்டு

"மறக்காமல் ஒவ்வொரு கிழமையும் கடிதம் போடு மோனை" என்று விடைகொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

இதிகா ஒரு புன் சிரிப்புடன் சிவகுமாருக்கு முன் வந்தமர்ந்தாள். இருவரும் கதைக்க வில்லை.

"என்ன பிறகு சொல்லிறன் என்றியள்" என்று மௌனத்தைக் கலைத்தாள்.

கொழும்பில் நடந்த விடயங்களை விளக்க மாகச் சொன்னான் சிவகுமார்.

"நல்லதுதானே ஏன் கவலையாகச் சொல்லி றியள். நான் அண்டைக்கே சொல்லப் பார்த்த னான். தேவையில்லாமல் இரண்டு தோணி யிலை ஏன் கால் வைப்பான். உங்களுக்கு இங்கை நிரந்தரமான ஆசிரியத் தொழில் இருக்குத்தானே!" என்று அவள் கூறியபோது இடைமறித்த சிவகுமார் " அது சரிதான். ஆனால் அதுதான் வாழ்க்கையில்லை. ஒவ்வொரு மனிசனுக்கும் அவனுடைய மனசோடை நெருக்கமான ஒரு இலட்சியம் இருக்கும். அந்த இலட்சியம் கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நழுவிப்போகும்போது மனசு வலிக்கும்தானே" என்றான். அவனை அவள் வியப்போடு பார்த்தாள். இவ்வளவு தன்னம்பிக்கையும் தன்மானமும் கொண்டவரா இவர் என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள்.

"சரி...இப்ப என்ன செய்யிறதாய் உத்தேசம்?"

"என்ன செய்யலாமெண்டு நினைக்கிறாய்?"

அவன் தன்னை இப்படி ஒருமையில் அழைத்தமை தனக்குள் ஒரு வித இனம் புரியாத கிளுகிளுப்பை உண்டு பண்ணுவதை அவள் உணர்ந்தாள். ஆனாலும் அதை வெளிக் காட்டிக் கொள்ளாமல் மௌனமாக இருந்தாள். சிறிது நேரம் இருவரும் எதுவும் கதைக்கவில்லை. தன்னையும் ஒரு பொருட் டாகக் கருதி ஆலோசனை கேட்கிறானே என்பது அவளுக்கு வியப்பைக் கொடுத்திருந்தது. என்ன சொல்வ தென்றும் அவளுக்குப் புரியவில்லை. ஆனாலும் எழுந்தமா னத்தில்

"உங்களிட்டைப் பணமிருக்கா?" என்று கேட்டாள். அவளு டைய இந்தக் கேள்வி அவனுக்கு வியப்பைக் கொடுத்தது.

"பெரிய அளவிலை இல்லை. கூட்டிக் கழிச்சால் ஒரு ஐம்பது தேறும்"

"அவ்வளவு காணும்"

"எதுக்கு?"

"ஒரு பத்திரிகை தொடங்கத்தான்" சிவகுமார் பதில் ஏதும் கூறாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். எவ்வளவு சுலபமாக முடிவெடுக்கிறாள்!

"நீங்கள் அப்படி முடிவெடுத்தால் நானும் ஒத்துழைப்புத் தருவன்." இது சிவகுமாரை இன்னும் உற்சாகப்படுத்தியது. அப்போது அங்கே வந்த சுந்தரம்மாஸ்டர் சிவகுமாருக்குப் பக்கத்தில் வந்தமர்ந்தார்.

"என்ன தம்பி எப்படி இப்ப சொல்லுங்கோ?"

" ஒரு பிரச்சினையுமில்லை மாஸ்டர். ஆனால்..." அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிக்கமுன் இதிகா கொழும்பில் நடந்த சகல விடயங்களையும் தகப்பனுக்கு எடுத்துக் கூறினாள்.
அவர் மேற்கொண்டு ஏதும் கேட்காமல் சிந்தனையில் ஆழ்ந்தார். அப்போது சந்திரன் உள்ளே வந்தான்.
"என்ன சந்திரன் யாழ்ப்பாணம் போகயில்லையோ?"என்று பேச்சை ஆரம்பித்தான் சிவகுமார்
"இன்னும் இல்லை. அங்கை ஒரே பிரச்சினையாகக் கிடக்குது. அப்பாவும் அக்காவும் பயப்பிடிகினம்"
"அதுவும் சரிதான் என்னத்துக்கு அவசரப்பட்டு வம்பை விலைக்கு வாங்குவான்."
" உங்கடை பத்திகை வேலையினையும் பகுதி நேரமாகத் தொடரப்போறியளோ?" என்று சந்திரன் கேட்க இப்பவும் இதிகா குறுக்கிட்டு கொழும்புப் பிரச்சினைகளை சந்திரனுக்கும் கூறினாள்.
"என்ரை எண்ணங்களுக்கு அங்கை சுதந்திரமில்லை. சும்மா எண்ணங்களையும் சுதந்திரங்களையும் அடகு வைச்சு என்னாலை வாழேலாது. அதனாலை அதை உதறியிட்டன்... நான் ஒரு சொந்தமாய் ஒரு பத்திரிகை தொடங்கினால் என்னவெண்டு அக்கா கேட்கிறா. அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறன்"
"அக்கா சொன்ன ஐடியா நல்லம். நீங்கள் செய்யுங்கோ நானும் ஒத்துழைப்புத்தாறன்" என்றான் சந்திரன். சிவகுமாருக்குத் தான் ஏதோ வானத்தில் பறப்பது போன்று உணர்வு ஏற்பட்டது.
கொல்லைக்குப் போன இதிகா அங்கே தகப்பன் மாட்டுச் சாணத்தைக் கூட்டி அள்ளிக்கொண்டு நிற்பதைக் கண்டாள். அவருக்கு ஒத்தாசை செய்ய அருகில் போனாள். அவள் அருகில் போக வெள்ளைப்பசு காலைத் தூக்கியடித்தது. அதை மெதுவாகத் தடவி விட்டவாறே தகப்பனோடு சேர்ந்து வேலை செய்ய ஆரம்பித்தாள்.
"பிள்ளை..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா....?"

"அந்தத் தம்பி சிவகுமாரை எங்கடை வீட்டிலை இருக்கச் சம்மதிச்சிட்டடம். ஊரிலை நாலு கதை கதைப்பினம். நீ கவனமாய் இரு. எனக்கு உன்னிலையும் அந்தத் தம்பியிலையும் அசைக்க முடியாத நம்பிக்கையிருக்குது."

"அப்ப ஏன் ஊருக்குப் பயப்பிடிறியள். ஆபத்து வரேக்கை ஊரா வரப்போகுது. ஊர் வேடிக்கை தான் பார்க்கும். ஊரை விட்டுத் தள்ளுங்கோ அப்பா" என்றவள் இரண்டு கைகளிலும் வைக்கோலைப் பிடித்துக் கொண்டு சாணத்தை அள்ளிப் பெட்டியிலை போட்டாள்.

"அப்பா சிவகுமார் பத்திரிகை விடப்போகிறாராம். அதுக்கு நாங்கள் கொஞ்சக் காசு கொடுத்து உதவுவமே."

"எனக்கும் உதவ விருப்பம் தான் ஆனால் உனக்கெண்டு கொஞ்சக் காசு சேர்த்து வைத்திருக்கிறன். அதை இப்படிச் சிரைச்சிட் டனெண்டால் உனக்கென்னம்மா நான் செய்யிறது"

"அவரிட்டை ஒரு ஐம்பதினாயிரம் இருக்காம். நாங்கள் ஒரு ஐயாயிரம் குடுப்பம்"

"சரி.... நீ தீர்மானிச்சிட்டாய் போல இருக்குது"

"நான் செல்லிறதைவிட நீங்களே அவரிட்டைச் சொல்லுங்கோ"

"அதுக்கென்ன வேலையை முடிச்சிட்டுப் போய்க் கதைப்பம்"

பின்பு இருவரும் எதுவும் கதைக்காமல் வேலையிலீடுப்பட்டனர். இவர்கள் இப்படியிருக்கச் சந்திரனோடு கதைத்துக் கொண்டிருந்த சிவகுமாருக்குச் சந்திரனை மிகவும் பிடித்திருந்தது.

"நீங்கள் நினைக்கிற மாதிரி நியாயமாக நேர்மையாகப் பத்திரிகை விடலாமெண்டு நினைக்கிறியளோ" என்றான் சந்திரன்.

"முடிஞ்ச வரைக்கும் அப்பிடிவிடப் பார்க்கவேணும். அது தான் பத்திரிகா தர்மம். இல்லையெண்டால் அர்த்தமில்லை"

"என்ன இரண்டு பேரும் கதையிலை வெளுத்து வாங்கிறியள்" என்று கூறிக் கொண்டே இதிகா அவர்களுக்கிடையில் வந்து புகுந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சந்திரனுக்கும் பத்திரிகைத் தொழிலிலை நல்ல ஆர்வம் இருக்கு" என்று சிவகுமார் சொல்ல

"ஏன் அவன் சொல்லயில்லையே நல்லாக் கதையும் எழுதிறவன்."

"என்ன கதை எழுதுறவரோ. எனக்குச் சொல்லவேயில்லை"

"இரண்டொரு கதை பத்திரிகையிலும் வந்திருக்கு. ஏதோ தர்மதாசன் என்ற பெயரிலை எழுதுறவன்"

"அருமையான புனைபெயர்"

"ஆனால் இவன் கதை எழுதிறது எங்களுக்கு விருப்பமில்லை"

"ஏன்?"

"இப்ப படிக்கிற வயது."

"ஏன் குழம்புமெண்டு யார் சொன்னது"

"ஏன் ஆரும் சொல்லவேணும். சும்மா எந்த நேரமும் அதே தியானமாய் இருந்தால் எப்படிப் படிக்கிறது"

இதையெல்லாம் அமைதியாய் குனிந்த தலை நிமிராமல் அடக்கமாகக் கேட்டுக் கொண்டிருந்தான் சந்திரன்.

அவர்களுக்கருகில் வந்த சுந்தரம் மாஸ்டர் வெத்திலையை எடுத்து அதற்குள் சிறிது பாக்கு வைத்து நுனி இலையில் சிறிது சுண்ணாம்பு பூசிவிட்டு அப்படியே நாலாக மடித்து வாய்க்குள் வைத்த அந்தக் கம்பீரத்தை அணு அணுவாக ரசித்தான் சிவகுமார்

"தம்பி சிவகுமார் ஏதோ பத்திரிகை தொடங்கப் போறதாக மகள் சொன்னாள்"

"ஓம் மாஸ்டர் எனக்குப் பிடிச்சதுறை அதாலை தொடங்கினால் நல்லாச் செய்யலாமெண்ட நம்பிக்கை இருக்கு"

"நம்பிக்கை தான் தம்பி எல்லாத்துக்கும் அடிப்படை உம்முடைய இந்த முயற்சிக்கு நானும் ஒரு ஐயாயிரம் தாறன் தம்பி"

சிவகுமார் ஸ்தம்பித்துப்போய் நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

சுந்தரம் மாஸ்டரின் வீட்டில் சிவகுமாருக்கு முன்னறை ஒதுக்கப் பட்டமை ஒரு துணிச்சலான முயற்சியாகவேபட்டது. அந்தக் கிராமத்தின் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சிவகுமாருக்கு உயர் சமூகத்தைச் சேர்ந்த சுந்தரம் மாஸ்டரின் வீட்டில் இருப்பிடம் என்றால் யார்தான் சகித்துக் கொள்வார்கள். ஆனால் இந்தச் சாதி அமைப்புகளுக்கெதிராகக் தொடர்ந்து குரலெழுப்பும் சுந்தரம் மாஸ்டருக்கு ஊர்ச்சனங்கள் எழுப்பும் எதிர்ப்பும் பொருட்டாகத் தெரியவில்லை. ஊருக் குள் பரவலாகச் சல சலப்பு எழத்தான் செய்தது. பலர் சுந்தரம் மாஸ்டரைச் சபித்தார்கள். சுந்தரம் மாஸ்டரின் வேலைத்தளத்திலும் பல ஆசிரியர்கள் வெளிப்படையாகவே தங்கள் அதிருப்தியை வெளிப்படுத் தினார்கள். ஊரில் நடைபெற்ற சந்தோசமான நிகழ்வுகளுக்கும் துக்கமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளுக்கும் அவரைப் புறக்கணித்தார்கள். இதிகாவின் நடத்தையிலேயே களங்கம் சுமத்திக் கதைத்தார்கள். ஆனால் சுந்தரம் மாஸ்டரோ இதி காவோ முன் வைத்த காலைப் பின் வைக்கவில்லை. அவர்கள் மேல் சுமத்தப்பட்ட எல்லா அவச் சொற்களையும் எவ்விதமான கசப்புமின்றி விழுங்கிக் கொண்டனர்.

இதிகாவும் சிவகுமாரும் முற்றத்தில் அமர்ந்திருந்தனர். நல்ல நிலவு காய்ந்து கொண்டிருந்தது.

"நீங்கள் ஒரு கம்னியூஸ்டாய் இருந்தனீங்களே?"இதிகாவின் இந்த எதிர்பாராத கேள்வியில் திடுக்கிட்ட சிவகுமார் அவளைப் பார்த்துப் புன்னகைத்துக்

"கம்னியூஸ்ட் அல்ல ஆதரவாளன்" என்றான்.

"உங்களுக்கும் அந்தக் கொள்கைகள் பிடிக்குமோ?"என்றான் சிவகுமார்

"எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது"

"ஏன்?"

"என்னவோ தெரியாது. பிடிக்காது" என்றாள் இதிகா.

"கம்னியூஸ்டுக்களின் தவறான அணுகுமுறைதான் இன்றைய பிரச்சனைகளுக்குக் காரணம். தமிழர் இன்றைக்கு ஆயுதம் ஏந்திப்போராடும் அளவுக்கு வந்ததுக்கு பிற்போக்கு அரசியல் வாதிகளைவிட முற்போக்கு அரசியல் வாதிகள்தான் காரணம்" இப்படிச் சிவகுமார் சொன்னதும் இதிகா சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிறாய்?"

"இல்லை. நீங்கள் நம்பிற கொள்கையை நீங்களே விமர்சிக்கிறியள்" புத்திக்கூர்மையும் அரசியல் அறிவும் உள்ள ஒரு பெண்ணுக்கு முன்னால் தான் இருப்பதை இப்போது உணரத் தொடங்கினான் சிவகுமார். சிறிது நேரம் இருவரும் பேசாமலிருந்தனர்.

இதிகா பேச ஆரம்பித்தாள்.

"ஏன் ஆயுதமேந்திப் போராடுறது தவறே. பாம்பு கடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரேக்கை பாம்பைக் கம்பால் அடிக்கலாமேயொழிய தூக்கிக் கொஞ்சேலாது"

அவளின் இந்தச் சாதுரியமான பேச்சை சிவகுமார் ரசித்தான்.

"இதிகா... தர்க்கரீதியாகப் பல உதாரணங்களைத் தூக்கிப் போடலாம். ஆனால் உண்மையை மறைக்கேலாது. தமிழருடைய சுயநிர்ணய உரிமைதான் முதற் கட்டம். இந்தச் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான போராகக் கோரிக்கை வைத்திருந்தால் போர் இரு இனம் கலந்த போராக வெடித்திருக்கும். பதிலாக நிலத்துக்கான கோரிக்கை முதலிலை வைக்கப்பட்டதாலை இரு வர்க்கங்களுக்கிடையிலான போராக இல்லாமல் இரு இனங்களுக்கிடையேயான போராகப் போராட்டம் உருவெடுத்திட்டுது. இதனால் எல்லாவற்றிற்கும் காரணமான பொது எதிரி எங்கோ இருந்து உல்லாசமாகப் பொழுதைப் போக்குகின்றான். இந்தப் பொது எதிரியைத் தப்பவிட்டது இரு இனத்துக்குமே ஆபத்தானது என்பதை யாருமே உணராதது தவறே"

"நீங்களும் உங்கடை முற்போக்கு வாதிகளும்! சொற் சிலம்பம் தான் ஆடுவியள்" இந்த வாதத்தைத் தொடரச் சிவகுமார் விரும்பவில்லை. கதையை மாற்றினான்.

"சரி இதிகா உந்தக் கதையைப் பிறகு கதைப்பம்.

பத்திரிகைக்கு என்ன பெயர் வைக்கலாம்"

சிவகுமார் இரண்டு மூன்று பெயர்களைச் சொன்னான். இதிகாவுக்கு அவை பிடிக்கவில்லை. இப்படி இவர்கள் யோசித்துக் கொண்டிருக்கும்போது சந்திரன் வந்திருந்தான்.

"என்ன? ஆழமாய் யோசிக்கிறியள்?"என்று கேட்டான்.

"பத்திரிகைக்கு என்ன பெயர் வைக்கலாம் சந்திரன்?"

" **திறப்பு** என்று வைப்பம்" சந்திரன் சொன்ன இந்தப் பெயர் இருவருக்கும் பிடித்துப் போயிற்று. தூரத்தில் ஏதோ அலுவலாக நின்ற சுந்தரம் மாஸ்டரும்

"உது நல்ல பெயர் தம்பி" என்றார். பிறகென்ன பத்திரிகையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் சூட்டு விழா வெற்றிகரமாக நடந்துவிட்டது. சிறிது நேரம் மூவரும் இருந்து ஊர் விடயங்களைக் கதைத்த பின்னர் நேரம் ஒரு மணியாகிவிட்டது. அமைதியோடு படுக்கைக்குச் சென்றனர். தன்னுடைய அறையில் மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளை யெல்லாம் நிரைப்படுத்திவிட்டு அமைதியோடு படுக்கைக்குச் சென்றான் சிவகுமார்.

காலை கதவு தட்டிச் சத்தம் கேட்டு நேரத்தைப் பார்த்தவன் அதிக நேரம் தூங்கி விட்டதால் வெட்கத்தோடு கதவைத் திறந்தான். இதிகா நின்றிருந்தாள்.

"இப்பொழுது நேரம் பத்து மணி"என்றாள்.

" இன்றைக்குப் பள்ளிக்கூடம் இல்லையா?" என்று இதிகா கேட்டாள்.

" இல்லை.. ஒரு கிழமை லீவிலை நிற்கிறன்"

என்று கூறிய வண்ணம் கிணற்றடியை நோக்கிப் போனான். குளித்து உடையணிந்து சிவகுமார் வர இதிகா கோப்பியுடன் வரவும் சரியாக இருந்தது. கோப்பியை வாங்கிக் குடித்துவிட்டு வேகமாக வெளியே புறப்பட்டான்.

விந்தையான மனிதன் என்று மனதுக்குள் முணு முணுத்துக் கொண்டாள். கடைத் தெருவுக்குள் வந்த சிவகுமார் அச்சகம் ஒன்றைத் தேடிப் போனான். தமிழ்ப்பூங்கா என்ற பெரிய எழுத்தில் பலகை மாட்டப்பட்ட அச்சகம். அதனுள் நுழைந்ததும் ஒரு வயது போனவர் அவன் அருகில் வந்து வணக்கம் என்றார். சிவகுமாரும் பதிலுக்கு வணக்கம் கூறினான்.

"என் பெயர் சிவகுமார்.." என்று அவன் கூறு முன்பே

"தெரியும்" என்றார்.

"என்னைத் தெரியுமா உங்களுக்கு" என்று வியப்போடு கேட்டான் சிவகுமார்

"உம்மடை சரித்திரமே எனக்குத் தெரியும்" என்று அவர் சொன்னதும் இந்த அச்சகம் சரிவராது போலை என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டான். பழுத்த கிழவரான அவர் பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதிலுள்ள சகல விதமான கஸ்ட நஸ்டங்களையும் எடுத்துச் சொன்னார். அவர் சொன்னதிலுள்ள உண்மைகள் பத்திரிகையாளனான அவனுக்கும் புரியாமலில்லை! ஆனால் லாபநோக்கில் விடப்படும் பத்திரிகைக்கும் இலட்சியத்தோடு விடப்படும் பத்திரிகைக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அவருக்கு எடுத்துரைத்தான். இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைத்தவர்கள் பாதையில் வரும் துன்பங்களையும் இன்பங்களாகக் கருதவேண்டும் என்று கூறினான். அவனை அன்போடு பார்த்துப் புன்னகைத்தார் அவர். தன்னால் முடிந்தளவுக்கு உதவிகளைச் செய்வதாகக் கூறி அவனை வாழ்த்தி அனுப்பினார். அச்சக உரிமையாளரின் உதவிக்கரம் நீண்டமை அவனுக்கு மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது. **திறப்பு** பற்றிய நினைவுகளுடன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான் சிவகுமார். நேரம் நாலாகி விட்டிருந்தது. இன்னும் சாப்பிடவில்லை. இதிகா காத்துக் கொண்டிருந்தாள். சுந்தரம் மாஸ்டர் பாடசாலையால் வந்திருக்கவில்லை. அவன் விறுவிறுவென்று வீட்டுக்குள் நுழைந்தான். இதிகா ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவன் அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டு அறைக்குள் நுழைந்து விட்டான்.

அவனுடைய சிந்தனைகள் முழுக்க **'திறப்பு'** வில் இருந்ததால் இதிகாவின் முகத்தில் ஓடிய சோகத்தைக் கவனிக்கவில்லை. புத்தகம் படிக்கிறாள் ஏன் குழப்புவான் என்று போய்விட்டான். அவன் வந்தபோது மெதுவாகக் கண்ணை நிமிர்த்தி அவனை நோக்கியதை அவன் கவனிக்கவில்லை. அவன் கிணற்றடிக்குப் போகும் போது "சாப்பிட்டீர்களா?" என்று ஆற்றாமையால் கேட்டாள்.

"இல்லை இதிகா. பத்திரிகை அலுவலிலை மறந்திட்டன் என்று கூறிக்கொண்டு கிணற்றடிக்குப் போய்விட்டான்.

"நீ சாப்பிட்டியா?"என்று கேட்பானென்று எதிர்பார்த்திருந்த இதிகாவுக்கு அவன் அப்படிக் கேளாதது நிரம்ப வேதனையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தது. சாப்பாட்டை மேசையில் வைத்துவிட்டுக் காவலி ருந்தாள். மேசைக்கு வந்த சிவகுமார்

"நீ சாப்பிட்டியா இதிகா?" என்று கேட்டான் அப்படி அவன் கேட்டவுடன் அவள் உடல் முழுவதும் குளிர்ந்து விட்டது. சாப்பிட்டபடியே காலையில் நடந்த விடயங்களை இதிகா வுக்குக் கூறினான்.

"நான் காலைமை தமிழ்ப் பூங்கா அச்சகத்திற்குப் போனனான். அதின்ரை முதலாளி நல்லவர். எனக்கு உதவுவதாகச் சொன் னவர்"

என்று சிவகுமார் கூறினான்.

" ஓம் அவர் நல்லவர். பள்ளிக்கூடத்திலை நான் படிக்கேக்கை அவரின்ரை மகள் என்னோடை படிச்சவள். நல்ல குடும்பம்.

"ம்"

சாப்பிட்டு முடிந்தபின்

" சரி இதிகா எனக்குப் பள்ளிக்கூட வேலை கிடக்குது. நாளைக்குக் கதைப்பம்" என்று கூறிவிட்டுச் சிவகுமார் தன் அறையுள் சென்றுவிட்டான்.

இதிகா தகப்பனின் வருகைக்காகக் காத்திருந்தாள். சுந்தரம் மாஸ்டரும் சிறிது நேரத்தில் வந்து முகம் கைகால் கழுவிவிட்டு இதிகாவைப் பார்த்து தேனீர் கொண்டுவரும்படி கூறிவிட்டு கதிரையில் அமர்ந்தார். இதிகா எழும்பிக் குசினிக்குள் சென்றாள்.

சுந்தரம் மாஸ்டர் நாட்டு நிலைமையால் சந்தி ரன் பற்றியே கவலைப்பட்டார். சந்திரன் இங்கிருப்பதால் ஆமிக்காரன் கொண்டு போவான் அல்லது இயக்கத்தில் சேர்ந்து விடுவான். இதைத் தவிர்க்க வேண்டுமென்றால் அவனை வெளியில் அனுப்புவதே நல்லது என்று சிந்தித்துக் கொண்டி ருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13

காலை பள்ளிக் கூடம் வந்தபோது சூழ்நிலை வித்தியாசமாக இருந்தது. எதையும் கவனியாமல் ஆசிரியர்கள் அறைக்குச் சென்று அன்றைய தினசரியை எடுத்துப் படிக்கத் தொடங்கினான் சிவகுமார்.

அறைக்குள் வந்த ஆசிரியர்கள் அவனை ஒரு தினுசாகப் பார்க்கத் தொடங்கி இருந்தனர். யாரும் அவனுடன் கதைக்க வில்லை.

அப்போது அங்கு வந்த மல்லிகா ரீச்சர் " சிவகுமார் சார் உங்களை அதிபர் வரச் சொன்னார்" என்று கூறினாள்.

அவள் கூறியதும் விறுவிறுவென்று எழுந்து அதிபரின் அறையை நோக்கிப்போனான் சிவகுமார்.

அதிபர் அறைக்கதவைத் தட்ட " வாருங்கோ" என்ற சத்தம் வந்தது. உள்ளே சென்ற சிவகுமார் " கூப்பிட்டீங்களாம் சேர்" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஓமோம் முதலிலை இருங்கோ " என்று அவர் கூற அவருக்கு முன்னாலிருந்த கதிரையில் சிவகுமார் அமர்ந்தான்.
" ம்..கொழும்புக்குப் போன அலுவலெல்லாம் முடிஞ்சுதோ?" என்று அதிபர் கேட்டார்.
" ஓம் சேர் எல்லாம் முடிஞ்சுது"
" சரி இப்ப நீர் எங்கை இருக்கிறீர் ? அண்டைக்கு இந்தப் பத்திரத்தை நிரப்பித் தரயில்லை. இது பைலுக்கை வைக்கத் தேவை." என்று கூறி ஒரு பத்திரத்தை அவனிடம் நிரப்பக் கொடுத்தார்.
அதை வாங்கிப்படித்த சிவகுமார் தன்னுடைய பேனையை எடுத்து நிரப்பத் தொடங்கினான்.

அதில் அவனுடைய அப்பா அம்மாவின் பெயர் கேட்கப்பட்டிருந்தது. சிறிது நேரம் யோசித்தவன் எவ்வித தயக்கமுமில்லாமல் அப்பா பெயர் கதிர்காமன் என்றும் அம்மா பெயர் சந்தணம் என்றும் எழுதினான். இருக்குமிட விலாசத்திற்கு சுந்தரம் மாஸ்டரின் வீட்டு விலாசத்தை எழுதினான்.

இவ்வளவற்றையும் அவதானமாகப் பார்த்துக் கொண்டிருந்தார் அதிபர். சிவகுமார் அதனைக் கையொப்பமிட்டு அவரிடம் கொடுத்துவிட்டு " நான் போகலாமா சேர்?" என்று கேட்டான்.
" சரி நீர் போட்டு வாரும்" என்றார் அதிபர்.
அன்று ஆசிரியர்கள் மத்தியில் அவனுடைய அடையாளம் தெரியப்பட்டிருந்ததுபோல் இருந்தது.
ஒவ்வொரு ஆசிரியரும் அவனுடைய வகுப்பறையைத் தாண்டும்போது சற்றுத் திரும்பி ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டுச் செல்வதை அவன் அவதானித்தான்.
அவன் அதைப் பெரிதாய் எடுக்காமல் வகுப்பெடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

பிள்ளைகள் அவன் சொல்வதை ஆர்வத்தோடு செவிமடுத்தார்கள். இடைக்கிடை கல்வியோடு கல்வியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் பற்றியும் சொல்லிக் கொடுத்தான்.

அவர்களுக்கு இதுவரை நாளும் முறையான கல்வி கொடுக்கப்படவில்லை என்பதைப் பிள்ளைகள் மூலமாக அறிந்து கொண்டான்.

அன்று பாடசாலை முடிந்ததும் சில பிள்ளைகளின் வீடுகளுக்குச் செல்ல வேண்டுமென்று மனதிற்குள் தீர்மானித் துக்கொண்டு நான்கு பிள்ளைகளை மட்டும் நிற்கச் சொல்லிவிட்டு தன் வேலைகளை அவசரமாக முடித்துவிட்டு அவர்களையும் அழைத்துக் கொண்டு அவர்களின் வீடுகளை நோக்கிச் சென்றான்.

அங்கே அவன் சென்றபோது அவர்கள் மிகுந்த பதட்டப்பட்டார்கள். அவன் இருந்த காலம் போல் அப்பகுதி இல்லை. பெரும்பாலான வீடுகள் கல்வீடுகளாக இருந்தன. அன்று அவன் போன வீடு குடிசையாகவே இருந்தது.

அங்கு அவன் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டான். தான் கதிர்மாமனின் மகன் என்றும் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு கொழும்பு போனதையும் படித்ததையும் விளக்கமாகச் சொன்னான். அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தங்களைச் சேர்ந்த ஒருவன் படித்துப் பட்டதாரியாகி தங்கள் பிள்ளைகளுக்குப் பாடம் படிக்க வந்தது அவர்களுக்குப் பெருமையாகவிருந்தது.

அவர்கள் வாழ்க்கை முறைகளையும் வறுமை நிலையையும் உள்வாங்கிக் கொண்டு சுந்தரம் மாஸ்டர் வீட்டை நோக்கி நடக்கத் தொடங்கினான் சிவகுமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14

ஒரு நாட்டின் தலை நகரத் துக்குத் தனி மவுசு உண்டு. அதிகார பர வலாக்கம் செய்யப்படாத நாடாக இருந்தால் தலைநகரம் மிகுந்த நெருக்கடி மிகுந்த பிரதேசமாக இருக்கும். கொழும்பும் அப்ப டித்தான். பிரதான காரியாலயங்கள்! பிரதான தொழில் நிலையங்கள்! நகரத்தின் பெரும் பகுதியை வளைத்துப் பிடித்திருந்தன. இதனால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் பிழைப்புத் தேடித் தலைநகரத்தை நோக்கிப் படையெடுத்தனர்.

பல இன மக்க ளும் பலவித மொழி பேசுபவர்களும் தங்கள் தங்கள் கலா சாரா உடைகளுடன் உலாவுகின்ற பிர தேசம் தான் கொழும்பு. பல இன மக்கள் உலாவிக் கொண்டிருந்தாலும் கூடுதலாகப் பெரும் பான்மை இனமான சிங்கள மக்களே கண்களிற் பட்டனர். புத்தரைக் கடவுளாகக் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மக்கள் புதுமையான உடைகளுடன் உலவிக் கொண்டி ருந்தனர். வியாபாரிகளின் கூவல்களும் தனியார் பஸ்களின் ஆட்சேர்ப்புச் சத்தங்களும் இயல்பான கலகலப் பையே உண்டு பண்ணியிருந்தன.

இந்தக் காலி வீதியின் முகம் காலிமுகத்திடல் எனப்படும். இந்தக் காலி முகத்திடலிலிருந்து புறப்பட்டு முக்கால் மணித்தியாலப் பயண முடிவில் வருவதுதான் இரத் மலானை. இந்த இரத்மலானை நகரிலிருந்து காலி வீதியில் செல்ல வருகின்ற நான்காவது வீடுதான் சுவந்திகாவின் வீடு.

சுமாரான அழகு கொண்ட வீடு. ஒரு நாட்டின் பெரும்பான்மை இனத்தினுடைய கலாச்சார வடிவத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அவர்கள் வீடு அமைந்திருந்தது. திடீரென்று உங்கள் முன்னே அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுவந்திகா என்ற பெயர் சம்பந்தமான செய்தியால் நீங்கள் ஆச்சரியமடைந்திருக்கலாம். இவள் காந்தனின் காதலி. சிங்கள சமூகத்தைச் சேர்ந்தவள். சிங்கள சமூகத்தின் உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவள்.

சுவந்திகாவிற்கு அன்று விடுமுறை. கதிரை யொன்றில் இருந்து கதைப் புத்தகம் வாசித்துக் கொண்டி ருந்தாள். ஒரே காரியாலயத்தில் சுவந்திகாவும் காந்தனும் வேலை செய்கின்றனர். காந்தனுடைய அழகும் அவனது அடக்கமான சுபாவமும் அவளைக் கவர்ந்ததில் ஆச்ச ரியமேதுமில்லை. சுவந்திகாவின் கலகலப்பான பழகும் தன்மையும் எந்நேரமும் சிரித்த முகமும் காந்தனுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்ததில் யாரும் வியப்புக் கொள்ள முடியாது. ஆனால் இவர்களோடு விதியும் தன் பந்தத்தை உருவாக்குகிறது என்பதைத் தெரியாமல் இருந்தார்களே என்பதை நினைக்கும்போது வேதனையாக இருக்கிறது.

சுவந்திகா உலக நடப்புகளோடு தன்னை ஈடுப டுத்திக் கொள்வதில் விருப்பம் கொண்டவள். சுவந்திகாவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பன் அப்பகுதி அரசியல் அமைப்பாளர் பதவி வகித்து வருபவர். ஓரளவுக்குப் பிரமுகர். இதனால் உள்நாட்டு அரசியல் விவகாரங்களில் சுவந்திகாவிற்கு ஈடுபாடுண்டு. தமிழர் சமபந்தமான அரசியல் விடயங்களில் அடிக்கடி சுவந்திகாவுக்கும் சுவந்திகாவின் தகப்பன் திலகரத்னாவுக்கும் இடையில் விவாதம் நடக்கும். திலகரத்னாவின் ஆளும் கட்சி எடுக்கும் முடிவுகளை எல்லாம் சுவந்திகா விமர்சிப்பாள். ஆட்சிக்கு வருபவர்களின் தவறான அணுகு முறைகள்தான் இந்தப் பிரச்சனைக்குக் காரணம் என்பது சுவந்திகாவின் விவாதம். திலகரத்னாவைப் பொறுத் தவரை தலைவர்கள் சொல்வது வேதவாக்கு. ஒரு சமயம் அரசாங்கம் தமிழர்களுக்கெதிரான மசோதாவைக் கொண்டு வந்தபோது சுவந்திகாவின் வீட்டில் ஒரு யுத்தமே நிகழ்ந்தது. அந்த மசோதாவுக்கெதிராகக் கொழும்பில் வெளிவரும் முற்போக்குப் பத்திரிகையொன்றுக்கு நீண்டதொரு கட்டுரை எழுதினாள் சுவந்திகா. அந்தக் கட்டுரை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அதுவும் ஆளுங்கட்சியின் பிரதேச அமைப்பாளரின் மகள் அரசுக்கெ திராகக் கட்டுரை எழுதியமை நிரம்பச் சிக்கலையே உரு வாக்கியது.

தலைமைப் பீடத்தால் அழைக்கப்பட்ட திலகரத்னா கடுமையாகக் கண்டிக்கப்பட்டார். தமிழர் சிங்களவர்களுக்கிடையில் ஏற்பட்ட பிரச்சினைகளை ஆதி யோடந்தமாக அறிந்து வைத்திருந்தாள் சுவந்திகா. எல்லா வற்றிற்கும் அடிப்படைக் காரணகர்த்தாக்கள் தமிழ் அரசியல் வாதிகளும் சிங்கள அரசியல்வாதிகளும் தான் என்பதில் அசையாத நம்பிக்கை அவளுக்கு. தங்கள் சுயலாபங்களுக்குக்காக மொழி என்ற போர்வையில் மக்களைப் பகடைக் காய்களாகப் பாவிக்கிறார்கள் என்பது அவள் வாதம். முற்று முழுதாக எதையும் புரிந்து கொள்ளாமல் அரசியல் வாதிகளின் பம்மாத்து வார்த்தைகளில் மயங்கித் தமிழர்களைப் பரமவைரிகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணும் தகப்பனை அவளால் திருத்தவே முடியவில்லை.

இப்படியான மன நிலையையும் அறிவுத் தரத்தையும் கொண்ட சுவந்திகாவுக்குக் காந்தன் என்ற தமிழன் மேல் காதல் வந்தது விபத்தல்ல நிகழ்வுதான். இதைத் திலகரத்னா அறிந்து கொண்டால் உண்டாகப் போகும் பிரளயத்தையும் அவள் புரியாதவளில்லை. சுவந்திகா உண்மையிலேயே ஓர் அப்பட்டமான யதார்த்தவாதிதான். தமிழைப் படித்தாள்! ஒரு தமிழனை விடத் தமிழில் தேர்ச்சி பெறவேண்டுமென்ற வெறியுடன் படித்தாள் சுவந்திகா.

பதினொரு மணியாகியிருந்தது. கதைப் புத்தகத்தை வைத்து விட்டுச் சோம்பல் முறித்தபடி வெளியில் வந்தாள் சுவந்திகா. திலகரத்னா வெளியில் இருந்து பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்தார். அவருக்கருகில் போய் இருந்தாள். பழைய பத்திரிகையொன்றை வைத்துக்கொண்டு வாசிப்பதும் பின்பு குறிப்பெடுப்பதுமாக இருந்த அவரை வியப்போடு பார்த்தாள். பத்திரிகையைத் தானும் நோட்டம் விட்டாள். யாழ்ப்பாணத்தில் துரையப்பா மரணம் என்ற தலைப்புச் செய்தி இருந்தது. யாழ் மேயர் கோவிலுக்கு வழிபாட்டுக்காகச் சென்ற பொழுது மறைந்து நின்று விடுதலைப் போராளிகள் சுட்டதாக இருந்தது.

“ஏனப்பா பழைய பத்திரிகை படித்துக் கொண்டிருக்கிறியள்”என்று சாவதானமாகச் சிங்களத்தில் கேட்டாள்.

நாளைக்கு ஒரு கூட்டம் இருப்பதாகவும் அதில் பேசுவதற்காகத்தான் குறிப்பெடுப்பதாகவும் கூறினார்.

“துரையப்பாவின் சாவுக்கும் உங்கடை பேச்சுக்கும் என்ன சம்பந்தம்” என்று அவள் எதுவும் புரியாதது போல் கேட்டாள். அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு விறுக்கென்று எழும்பிப் போய்விட்டார்.

சுவந்திகா மனதுக்குள் சிரித்துக்கொண்டாள். அவள் காந்தனைக் காதலிக்க ஆரம்பித்த பின் தமிழர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டம் பற்றி மிக விரிவாகவே அறிந்து வைத்திருந்தாள். போராட்டம் குழு நிலையில் ஆரம்பித்த அக் காலத்தில் களையெடுப்பும் கூடுதலாக நடைபெற்றுக் கொண்டே இருந்தது.

ஒரு சமயம் துரையப்பாபற்றிக் காந்தனோடு உரையாடி இருக்கிறாள். காந்தனுக்கு இந்த அரசியல் விவகாரங்களில் அவ்வளவாக நம்பிக்கையும் இல்லை. அவன் அதை அறிவதற்கும் விரும்புவதில்லை. அதனை இப்போது நினைத்துப் பார்த்தாள். காந்தனை அவள் விரும்பத் தொடங்கிய காலகட்டம்.

"காந்தன் யாழ்ப்பாண இளைஞர்கள் ஏன் துரையப்பாவைச் சுட்டவை?" என்று கேட்டாள்.

" நீர் ஏன் அதைப்பற்றியெல்லாம் விசாரிக்கிறீர்?"

"அப்பிடியில்லை உங்கடை சமூகத்துக்கை வரப்போற நான் அந்தச் சமூகத்தை புரிஞ்சு கொள்வதுதானே சரி"

" அதைப்பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது?"

" நான் நினைக்கிறன் துரையப்பா அரசோடு சேர்ந்து விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்த இளைஞர்களைக் காட்டிக் கொடுக்க முற்பட்டார் என்றும் அதற்காகவே அவர் சுடப்பட்டார்" என்று அவள் சொன்னபோது அவளை இடைமறித்து "அப்பிடி இருக்காது" என அவன் மறுதலித்தபோது அவனுக்குப் பலவிடயங்கள் தெரியும் என்பதையும் மறைக்கிறான் என்பதையும் சுவந்திகா புரிந்து கொண்டாள்.

" சுவந்திகா சும்மா தெரியாத விசயங்களைப்பற்றிப் பேசாதையும்" என்று கொஞ்சம் கோபமாகச் சொன்னான் காந்தன்.

" சரி உங்களுக்குத் தெரியுமெண்டால் சொல்லுங்கோவன் என்றாள்.

சிறிது நேரம் பேசாமல் இருந்த காந்தன் அவளைப் பார்த்து "எனக்கு இந்த அரசியல் எல்லாம் பிடிக்காது. நானும் ஊரிலை இருக்கேக்கை கேள்விப்பட்டதுதான். நான் நினைக்கிறன் அந்தக் கொலை 1975 ஆண்டுதான் நடந்தது. எங்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவுக்கெல்லாம் பிடிக்கவில்லை." என்று கூறிவிட்டு பேசாமல் இருந்தான்.

" அப்ப எனக்கு 25 வயது. எனக்கும்தான் பிடிக்காமல் இருந்தது. அந்த மனிசன் யாழ்ப்பாணத்துக்கு பலவேலைகள் செய்திருக்கிறார். அவரை ஏன் சுட்டாங்கள் என்று நாங்கள் மட்டுமல்ல எல்லாச் சனமும் அப்படித்தான் கதைத்தவை. யாழ்ப்பாண நூல்நிலைய எரிப்பிலையும் அவருக்குப் பங்கிருக்கிறதென்றும் கதைத்தவை"

" ஆனால் சுவந்திகா.. அதன் பின்னணியிலை வேறையொரு கதையும் இருந்தது." சுவந்திகா அவனை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"1972 ஆம் ஆண்டு நடந்த உலகத் தமிராய்ச்சி மகாநாடும் ஒரு காரணம். இந்த மகாநாட்டை கொழும்பிலை வைக்க அரசு விரும்பினது. ஆனால் அதன் அமைப்பாளர்கள் அதனை யாழ்ப்பாணத்தில் வைக்க விரும்பிச்சினம். பெரிய இழுபறிகளுக்குப்பிறகு யாழ்ப்பாணத்தில் வைக்க முடிவு செய்யப்பட்டது. அது அரசுக்குப் பிடிக்காமல் உதவியாகத் துரையப்பாவையும் தம் பக்கம் சேர்த்துக் கொண்டது அரசு. துரையப்பாவின் அந்த முடிவால் மகாநாட்டிலன்று 11 தமிழர்களின் உயிர்கள் அரச படைகளால் பறிக்கப்பட்டன. அதன் எதிரொலிதான் துரையப்பாவின் கொலை " என்று கூறி முடித்தான். சுவந்திகாவுக்குக் காந்தனைப் பார்க்க வியப்பாக இருந்தது. இவ்வளவு விடயங்களையும் தெரிந்து கொண்டு அமசடக்கியாக இருந்திருக்கிறானே.

பழைய நினைவுகளிலிருந்து மீண்ட சுவந்திகா தகப்பன் வெளியே போய்க் கொண்டிருப்பதைப் பார்த்து கொஞ்சம் கலக்கமடைந்தாள். தகப்பன் போனவேகம் அவ்வளவு யதார்த்தமாக இருக்கவில்லை. மனது குழம்பிப் போயிருந்தது. பேசாமல் அறைக்குள்போய் கட்டிலில் விழுந்து படுத்து விட்டாள். சமையலறைக்குள்ளிருந்த சுவந்திகாவின் தாய் வேலைகளை முடித்துவிட்டு அறைக்குள் வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவந்திகா படுத்திருப்பது வியப்பைக் கொடுத்தது. ஒரு நாளும் சுவந்திகா பகலில் படுத்தது கிடையாது. காய்ச்சலாக இருக்குமோ? என்ற ஐயத்தில் தொட்டுப் பார்த்தாள். அப்படியில்லை. ஏதும் அலுப்பாக இருக்கும் என்று நினைத்துத் தன்னுடைய மற்ற வேலைகளைப் பார்க்கப் போய்விட்டாள். வெளியில் போயிருந்த திலகரத்னா திரும்பி வந்த போது முகத்தில் இறுக்கம் தெரிந்தது. சுவந்திகா இன்னும் படுக்கையில்தான் இருந்தாள். அறைக்குள் எட்டிப் பார்த்த திலகரத்னா எழும்பட்டும் என்று வாய்க்குள் முணுமுணுத்தபடி வெளியில் வந்து இருந்தார். நேரம் ஆறுமணி படுக்கையை விட்டு எழும்பிய சுவந்திகா முகம் கழுவிச் சோம்பலை முறித்துக் கொண்டு குசினிக்குள் போய்த் தாயிடம் தேநீர் கேட்டு வாங்கினாள்.

"சுவந்திகா இஞ்சை வா"என்று திலகரத்னா ஆவேசத்துடன் கூப்பிட்டார். தகப்பன் கூப்பிட்டதும் அருகில் சென்றாள் . சிறிது நேரம் இருவரும் எதுவும் கதைக்கவில்லை. குசினிக்குள் சுவந்திகாவின் அம்மா சமைக்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. பக்கத்து வீட்டு லொக்கு பண்டா தனது பழுதான ரக்டரைத் திருத்திக் கொண்டிருக்கும் கறார் புறார் சத்தமும் கேட்டுக் கொண்டிருந்தது. மகளைச் சிறிது நேரம் வாஞ்சையோடு பார்த்துக் கொண்டிருந்த திலகரத்னா தொண்டையைச் செருமிக் கொண்டு

"சுவந்திகா நான் கேள்விப்பட்டது உண்மையா?" என்று கேட்டார்.

"என்னப்பா கேள்விப்பட்டனீங்கள்?"

"உனக்கும் உன்னோடை வேலை செய்யிற தமிழ்ப் பொடியனுக்கும் இடையிலை...." இந்த விசாரணையை அவள் எதிர்பார்த்திருந்தாள். ஆனால் அது இவ்வளவு சீக்கிரமாக வந்தது வியப்பைக் கொடுத்தது.

"உண்மை தானப்பா..." வெள்ளம் தலைக்கு மேல் வந்த பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணை கட்டுவது முட்டாள்தனம் என்பதால் துணிந்தது அவள் மனம். ஒரு மனிதனைத் துணிவு ஆக்கிரமிக்கும் போது உண்மையைத் தவிர வேறு எதுவுமே வாயிலிருந்து வராது. ஏனென்றால் பொய் கூறிக் காப்பாற்ற வேண்டிய உயிரைத் துணிவு வரும்போது துச்சமென மதிப்பதால்தான். இந்த நிலையில்தான் சுவந்திகா இருந்தாள். துணிந்து கூறிவிட்டாள்.

"அவர் நல்லவரப்பா அவரைத்தான் கலியாணம் கட்டப் போறன்"என்றாள்.

"எனக்கு அவன் நல்லவனோ கெட்டவனோ என்பது பற்றிக் கவலையில்லை ஆனால் தமிழன். ஒரு தமிழனைக் கட்டக் கடைசி வரைக்கும் விடமாட்டன்"

"ஏனப்பா... அவர் படிச்சவர். நல்ல வேலை பார்க்கிறார்."

"ஆனால் எங்கடை இனம் இல்லையே"

"ஏனப்பா அவற்றை உடம்பிலை பச்சை இரத்தமா ஓடுது. அவரும் இலங்கையன் தானே"

"உப்பிடியெல்லாம் வாதஞ் செய்ய நல்லாய்த்தான் இருக்கும் வாழ்க்கைக்கு ஒத்து வராது"

"அதெப்படிச் சொல்லுவியள். நீங்கள் செய்து வையுங்கோ நாங்கள் வாழ்ந்து காட்டிறம்"

"எண்டைக்கும் தமிழருக்கும் சிங்களவருக்கும் உறவு சரிப்பட்டு வராதம்மா"

"நீங்கள் என்ன சொன்னாலும் நான் அவரைத்தான் கட்டுவன்"

இதற்குமேல் திலகரத்னாவால் பொறுக்க முடியவில்லை. அவரது ஐந்து விரல்களும் சுவந்திகாவின் கன்னத்தில் பதிந்தன. சுவந்திகா சுருண்டு விழுந்தாள். திலகரத்னா வெளியில் போய் விட்டார். சத்தம் கேட்டு வெளியில் வந்த சுவந்திகாவின் அம்மா பதை பதைத்துப் போய் விட்டாள். சுவந்திகாவை அணைத்து வந்து கட்டிலில் படுத்தினாள். சுவந்திகாவின் மனம் குழம்பிக் கொண்டிருந்தது. தீர்மானம் எடுக்க முடியாமல் தத்தளித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட காந் தன் கொழும்பு வந்திறங்கு மட்டும் யாழ்ப்பா ணச் சம்பவங்கள் பற்றி அவனுக்குத் தெரி யாது. வந்திறங்கியவுடன் பத்திரிகைகள் பர பரப்பாக விற்பனையாவது அவனைப் பரபரப்படைய வைத்தாலும் பிரயாண அலுப் பில் எதையும் கவனிக்காமல் புறப்பட்டு விட்டான். அறைக்கு வந்தவன் எல்லா வற்றையும் கட்டிலில் போட்டுவிட்டு அலுப் புத் தீரக் குளித்தான். வானொலியில் கோவிந்த ராஜனுடைய பக்திப் பாடல் போய்க் கொண் டிருந்தது. குளித்து முடிந்து வெளியில் வந்து அறையின் மூலையில் இருந்த முருகனைக் கும்பிட்டான். கதவு தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தான். சுவந்திகா நின்றிருந்தாள். சுவந்திகாவைக் கண்டதும் அலுப்பெல்லாம் போய்விட்ட மாதிரி இருந்தது.

"வா சுவந்திகா வந்திரு"என்று அழைத்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருத்திவிட்டு யன்னலைச் சிறிது திறந்துவிட்டான். மெல்லிய இளந்தென்றல் மெதுவாக உள்ளே வந்தது.
"எப்படி ஊர்ப் புதினங்கள்?" சுவந்திகா கேட்டாள்.
"ஊர் புதினத்திற்கென்ன. ஒரே பிரச்சினைதான். வீட்டிலையும் பிரச்சினை" என்றான் சலிப்பாக. சலிப்படைந்து நிற்கும் அவனுக்குத் தன்னுடைய பிரச்சனையைக் கூறுவது மேலும் அவனைக் குழப்பத்திலாழ்த்தும் என்றெண்ணி
"அப்பாபாடு எப்படி?" என்று கேட்டாள்.
" அவருக்கென்ன சந்தோசமாய் இருக்கிறார்" என்றான்
"நேற்று நீங்கள் யாழ்ப்பாணத்தாலை வெளிக்கிட்டாப் போலை நடந்தது தெரியுமே" என்றாள்.
"ஏன் என்ன?"
"யாழ்ப்பாணத்திலை நாலு பொலிஸ்காரரைப் பயங்கரவாதிகள் சுட்டுப் போட்டாங்கள்"
"சுவந்திகா... தமிழ்ப் பொடியங்களைப் பயங்கரவாதிகள் என்று நீரும் சொல்லாதையும். எனக்கொரு மாதிரிக் கிடக்குது" என்று கூறிய காந்தனை சுவந்திகா வியப்போடு பார்த்தாள். சிறிது நேரம் பேசாமலிருந்த அவன்
"பொலிஸ்காரர் சரியாய் நடந்தால் ஏன் சுடுகினம்?" என்றான்.
"சரியில்லாத எல்லோரையும் உங்கடை பொடியள் சுட்டுச் சாக்காட்ட யார் அதிகாரம் கொடுத்தது"
"அதிகாரம் சரியாக இல்லாவிட்டால் றோட்டிலை போறவையும் அதிகாரத்தைக் கையிலை எடுத்துச் சன்னதமாடிறது தவிர்க்க முடியாதது தானே" சுவந்திகா திகைத்துப் போய் விட்டாள். காந்தனால் இப்படியும் கதைக்க முடியுமென்று அவள் எதிர்பார்க்கவேயில்லை.
"காந்தன் எதிர்க் கருத்துக் கொண்டவர்களைக் கொலை செய்யிறது எங்கடை கொள்கையின்ரை பலவீனத்தைத்தான் காட்டுமேயொழிய பலத்தையல்ல"
"எதிர்க்கருத்துக் கொண்டவங்களைக் கொலை செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது தான். ஆனால் தனிப்பட்ட சமூகத்திற்குக் கொடுமை செய்யிறவையைக் கொல்லலாம்தானே" சுவந்திகா சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. இந்த விடயத்தை அவள் தொடர்ந்து கதைக்க விரும்பவில்லை.

"எனக்கும் வீட்டிலை பிரச்சினை" என்று குண்டைத் தூக்கித் தொம்மென்று போட்டாள்.

காந்தன் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான்.

"எங்கடை அப்பா ஒரு மாதிரியான ஆள். அரசியல் செல்வாக்கும் இருக்கு. பலவந்தமாய் எனக்குக் கலியாணம் செய்து வைச்சாலும் வைச்சிடுவார். அதாலை நான் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்கிறன். அவளை ஏறிட்டுப் பார்த்தான் காந்தன். நாங்கள் இருவரும் பதிவுத் திருமணம் செய்யிறதைத் தவிர வேறு வழியில்லை" என்ன துணிச்சல்! காந்தனுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. காதலிக்கும் போது உண்டான தைரியம் இப்போது வர மறுத்தது.

"எனக்கும் கொஞ்சம் யோசிக்க அவகாசம் கொடு"என்றான்.

" சுவந்திகா.. நான் இண்டைக்கு வேலைக்கு வரமாட்டன். அறிவிச்சுவிடு" என்றான்.

" ஏன்? "

" எனக்குச் சரியான அலுப்பாய் இருக்கு. நாளைக்கு வாறன்"

" சரி நாளைக்குச் சந்திப்பம்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டாள்.

காந்தனது மனம் தளம்பிக் கொண்டிருந்தது. மண்டையைப் பிய்த்துக் கொண்டு ஓடவேண்டும் போல் இருந்தது. பேசாமல் படுத்துவிட்டான். மறுநாள் வெள்ளெனவே எழும்பி வேலைக்குப் போவதற்குத் தயாரானான். அப்போ கீழ் அறையில் இருப்பவர் வந்து தொலைபேசி வந்திருக்கிறதாகக் கூற கீழே இறங்கிப் போனான்.

தொலைபேசியில் அவனுடைய அப்பா தான் வந்திருந்தார்.

" தம்பி இஞ்சை நிலைமை சரியில்லை. சந்திரனை சிவகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரோடை உங்கை அனுப்பிறன். ஆரையும் பிடிச்சு அவனை வெளி நாட்டுக்கு அனுப்பிவிடு." என்று கூறிவிட்டுக் காந்தனின் பதிலையும் எதிர்பாராது தொலைபேசியை வைத்துவிட்டார். காந்தனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தனது அறைக்கு வந்து உடுப்பை மாற்றிக் கொண்டு வேலைக்குப் புறப்பட்டான். வேலைத் தலத்தில் அவனால் வேலையில் மனதைச் செலுத்த முடியவில்லை. சுவந்திகாவைத் திரும்பிப் பார்த்தான். அவள் எவ்வித சலனமுமில்லாமல் வேலையில் மூழ்கியிருந்தாள்.

எந்தக் காரணத்தையும் கொண்டு சுவந்திகாவை இழக்க அவன் விரும்பவில்லை. சுவந்திகா கூறிய காரணமும் இலேசில் தட்டிக் கழிக்கக் கூடிய ஒன்றல்ல. உண்மையில் சுவந்திகாவின் தகப்பன் பொல்லாதவர் தான். அதுவும் பெரிய அரசியல் செல்வாக்குள்ள அவரால் இப்படியான விசயங்களை வெகு சுலபமாகச் சாதிக்க முடியும். சுவந்திகாவே துணிந்து விட்டாள். பிறகென்ன?

காந்தன் குழம்பிப்போய் இருந்தான். தன்னால் முடிந்தளவுக்குச் சிந்தித்தான். முடிவு சுவந்திகாவுக்குச் சாதகமாகவே வந்து கொண்டிருந்தது. அவன் துணிந்து விட்டான். இப்போ அவன்முன் இரண்டு பிரச்சினைகள். ஒன்று சுவந்திகா கூறியதை ஏற்றுக் கொள்ளவேண்டும். மற்றது நாளைக்குச் சந்திரன் வரப்போகிறான். அவனை வெளியில் அனுப்ப வேண்டும். அவனுக்கு யாரையும் தெரியாது. இதற்கும் சுவந்திகாவைத்தான் கேட்கவேண்டும். அவள் இருக்குமிடத்தைப் பார்த்தான். தனது மேசைக்கு எதிரே வேலையில் மூழ்கியிருந்த சுவந்திகாவை நிமிர்ந்து பார்த்தான். வந்த தொடக்கத்திலேயே காந்தன் குழம்பிய நிலையில் இருப்பதை சுவந்திகா அவதானித்திருந்தாள். அவன் பார்த்ததும் என்ன வென்று கேட்டாள். அவளை வெளியில் வரும்படி சைகை செய்து விட்டு அவனும் எழும்பி வெளியே போனான். இருவருமாகக் கன்ரீனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார்கள்.
" என்ன பிரச்சினை ஒரு மாதியாக இருக்கிறியள்?" எனச் சுவந்திகா மௌனத்தை உடைத்தாள்.
"அப்பா...." பெருமூச்சோடு சொன்னான்.
"என்னவாம்? நேற்றுத்தானே வந்தனீங்கள்."அவன் பதில் கூறாமல் அவர் காலையில் போன் பண்ணியதையும் சந்திரன் வரவிருப்பதையும் கூறினான்.
"இதுக்கேன் கவலை. அப்பா சரியாகத்தானே செய்திருக்கிறார்."
"நீங்கள் ஏன் யோசிக்கிறியள். ஆரையும் பிடிச்சு வெளிநாட்டுக்கு அனுப்புவம்...." அவளின் உறுதியான ஆதரவு நிறைந்த முடிவு அவனுக்கு இதயத்தில் ஒரு நிறைவைக் கொடுத்தது. சிறிது நேரம் இருவரும் அமைதியாக இருந்தனர். இந்தப் பிரச்சனை தீர்க்கப்பட்டாலும் அவசரமானதும் அவசியமானதுமான தன்னுடைய பிரச்சனைக்கு எவ்வித முடிவும் சொல்லாமல் இருக்கிறானே என்று வருத்தத்தோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.
"சுவந்திகா நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன்" மௌனத்தைக் கிழித்துக்கொண்டு அவன் கூறிய அந்த வசனம் அவளது இதயத்தை ஊடுருவியது.
"என்ன.?" என்று வியப்போடு கேட்டாள்.
"ஓம் சுவந்திகா வாறது வரட்டும். என்னாலை உன்னை இழக்க முடியாது" இப்படிக் கூறும் போது அவன் கண்கள் கலங்கி விட்டன. சுவந்திகாவுக்குத் தலை கால் புரியாத சந்தோசம். அவனையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.
"ஏய் சுவந்திகா என்ன இது....?" காந்தன் அவளைத் தட்டி நிஜ உலகுக்குக் கொண்டுவந்தான்.

இருவரும் சேர்ந்து பல திட்டங்கள் போட்டார்கள். பலருக்குச் சொல்லாமல் தங்களுடைய நெருங்கிய நண்பர்களுக்கு மாத்திரம் சொல்வதென்றும் தீர்மானித்தனர். அடுத்த வெள்ளிக்கிழமையென்று நாளும் நிச்சயிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் இருவரும் இப்படி முடிவெடுத்துக் கொண்டிருக்கும் போது விதி வேறு முடிவை எடுத்து விட்டதென்பது யாருக்குப் புரியும்? பெரியதொரு பிரச்சனைக்கு முடிவெடுத்த திருப்தி யில் கந்தோரை விட்டு வெளியில் வந்தான் காந்தன். மனசு சந்தோசத்தில் சிறகடித்துப் பறந்து கொணடிருந்தது. சிவன் கோவிலுக்குப் போனால் என்ன என்று மனம் கேட்டது. புறப்பட்டான். கந்தோருக்கு முன்னால் உள்ள பஸ் நிலையத்தில் **105** ஆம் இலக்க பஸ்ஸில் ஏறிக் கோவிலின் முன்னால் அவன் இறங்கிய போது நேரம் சரியாக ஐந்து மணி. முற்றிலும் கருங்கல்லால் கட்டப்பட்ட சிவன் கோவிலில் ஒரு மணித்தியால மாக மனமுருக வழிபட்டான்.

அவனுடைய குரல் ஆண்டவனுக்குக் கேட்டதோ என்னவோ கேட்க வேண்டும் என்ற நோக்கில் மனதாரக் கும்பிட்டான். கோவில் வழிபாட்டை முடித்துக் கொண்டு அறைக்கு வர நேரம் ஏழரை மணியாகிவிட்டது. மனச் சந்தோசத்தில் கட்டிலில் தொப்பென்று விழுந்தான். கண்கள் கூரையைப் பார்த்துக் கொண்டிருக்க நெஞ்சம் இனிய கற் பனையில் ஆழ்ந்திருந்தது. அவன் கட்டிலில் படுத்துப் பத்து நிமிடம்தான் இருக்கும் கதவு படபடவென்று தட்டப்பட்டது. கோபத்தோடு போய்க் கதவைத் திறந்தான். வெளியில் பொலிசார் நின்றிருந்தனர். அவன் என்னவென்று விசாரிக்க முன்பே அவனை வளைத்துப் பிடித்துக் குப்புறப்படுத்திக் கைகளைப் பின்னுக்கு வைத்துக் கட்டினர். அறையின் மூலை முடுக்கெல்லாம் அக்குவேறு ஆணி வேறாகச் சோதிக்கப் பட்டது. யாரோ ஒரு பொலிஸ்காரன் சுவாமிப் படத்தை எறியப் போனபோது

"ஏய் அது சுவாமிப்படம்" என்று கத்தினான் காந்தன். காந்தன் கத்தி வாய் மூட முன்னம் அருகில் நின்ற பொலிஸ்காரன் பூட்ஸ் காலால் அவன் வாயில் மிதித்தான். காந்தன் சுருண்டான். காந்தனைத் தள்ளிக்கொண்டு ஜீப்பில் ஏற்றினர். "தெம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லபண்டி"என்று சிங்களத்தில் திட்டினார்கள். "கொட்டியாகே யாலுவா"( புலியின் நண்பன்) என்றான் ஒருவன். காதுக்குள் நாராசமாக விழுந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு பேசாமலிருந்தான் காந்தன்.

பத்து நிமிடம் ஓடியபின் ஜீப் நின்றது. ஜீப்பில் இருந்து அவனை ஒரு மிருகத்தை இழுப்பது போல் இழுத்து வந்து ஸ்ரேசனுக்குள் தள்ளினர். அங்கிருந்த பொலிஸ்காரரும் அவனைத் தட்டிப் பதம் பார்த்துக் கொண் டனர். காந்தனுக்கு மூட்டெல்லாம் வலித்தது. கடைவாயில் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அந்த ஸ்ரேசனின் இன்ஸ் பெக்டர் வந்தான். இளம் வயது. உசாரான தோற்றம். முகத்தில் கண்டிப்பு இயற்கையாகவே அமைந்திருந்தது. ஒரு பொலிஸ் கான்ஸ்டபிள் இன்ஸ்பெக்டரிடம் நல்லபெயர் சம்பாதிப்பதற்கா கக் காந்தனைப் பாய்ந்து மிதித்தான். காந்தன் சுருண்டு சுவரோடு மோதி நிலத்தில் தொப்பென்று விழுந்தான். பொய் மூக்கு உடைந்து இரத்தம் வழிந்தது. இரத்தம் வழிந்து வாய் நோக்கி வந்து கொண்டிருந்தது. கையால் துடைக்க முடியாது. கைகளில் விலங்கு பூட்டப் பட்டிருந்தது. காந்தனுக்கு எரிச்சலாக இருந்தது. இன்ஸ்பெக்டர் காந்தனையே பார்த்துக் கொண்டி ருந்தான். என்ன நினைத்தானோ தெரியாது. விலங்கைக் கழற்றும்படி சொன்னான். விலங்கு கழற்றப்பட்டது. காந்த னுக்கு வியப்பாக இருந்தது. அவனுக்கு இப்போது தைரியம் வந்திருந்தது.

"என்னை எதற்குக் கைது செய்தீர்கள்?"என்று கேட்டான்.

"உம்மைப் பற்றி எங்களுக்கு ஒரு தகவல் வந்ததாலைதான் கைது செய்தனாங்கள். உமக்கும் பயங்கரவாதிகளுக்கும் தொடர்பு இருக்கிறதாகத் தகவல் வந்தது." காந்தனுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"சும்மா ஒரு ஆள் வந்து சொன்னால் நீங்கள் ஆரையும் பிடிச்சு அடிப்பியளோ" ஆங்கிலத்தில் வெளுத்து வாங்கினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தன்.

"ஓ.கே .....எனக்கு விளங்குது. நாங்கள் என்ன செய்யிறது. எப்படி நாங்கள் கண்டு பிடிக்கிறது? அந்த முயற்சியிலை உம் மைப் போலை அப்பாவிகளும் பாதிக்கப்படுகினம்தான்....." என்று கூறிய அவனைக் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டி ருந்தான் காந்தன். அந்தப் பொலிஸ் அதிகாரிக்குக் காந்தனது குற்றமில்லாத்தன்மை நன்கு புரிந்தது.

"நான் உங்களை விடுதலை செய்யிறன். உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் என்னை நாடலாம். என் பெயர் சில்வா"

"தாங்கஸ் சில்வா"

"அதேபோல உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் என்னை நாடலாம்" என்று கூறிவிட்டு வெளியே வந்தான். கால்கள் இரண்டும் வலித்தன. என்ன மாதிரி அடித்தார்கள். வழியில் வந்த ராக்ஸியை மறித்து வீட்டு விலாசத்தைக் கூறிவிட்டுப் பின் சீற்றில் சரிந்தான் காந்தன்.

உடம்பு வலியால் வேதனைப்பட்டது. அவனு டைய மனதில் தன்னைப்பற்றிப் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தது யாராக இருக்கும் என்ற வினா எழுந்து கொண்டே யிருந்தது. சிலவேளை சுவந்திகாவின் அப்பாவாக இருக்குமோ என்றும் நினைத்தான். அப்படி நினைத்துக் கொண்டே காரினுள் அயர்ந்துவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16

சந்திரன் வேகமாக வந்ததைப் பார்த்து இருவரும் பயந்து விட்டனர். சந்திரன் வியர்வையால் நனைந்திருந்தான்.

"என்ன நடந்தது?"

ஒரே நேரத்தில் சுந்தரம் மாஸ்டரும் இதிகாவும் கேட்டனர். சந்திரனது கண்கள் கலங்கியிருந்தன.

"ஆமிக்காரன் கலைக்கிறான்" என்று பதட்டத்தோடு கூறினான்.

"கன பெடியளை சந்தியிலை வைச்சுப் பிடிச்சுக் கொண்டு போறான்கள்."

"இரண்டு பொலிஸ்காரரை இயக்கப் பொடியள் முடிச்சுப் போட்டான்கள். நான் வளவுக்குள்ளாலை ஓடிவாறன். என்ன நடக்கப் போகுதோ தெரியாது" விக்கி விக்கிச் சொன்னான் சந்திரன். சுந்தரம் மாஸ்டரும் இந்த விடயத்தைக் கேள்விப்பட்டுத்தான் வெள்ளனவே பாடசாலையிலிருந்து வந்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் வந்து சொன்னதும் அவர் பதட்டம் அதிகமானது. மற்ற மூவரும் பதட்டமடைந்த நிலையில் சிவகுமார் பதட்டமடையவில்லை. ஆயுதப்போர் என்று பிரகடனப்படுத்திய பின் இவைகளை எதிர் கொள்ளத்தான் வேண்டும். முதல் பொலிஸ்காரனைச் சுட்டபோதே இப்படியான நிகழ்வுகளுக்கு அழைப்பு விடப்பட்டுவிட்டது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிவகுமார் நினைத்துக் கொண்டான்.

"சந்திரன் வயதுப் பெடியளைத்தான் பிடிக்கிறான்கள்"

சுந்தரம் மாஸ்டரின் முகம் இறுகிக் கறுத்திருந்தது.

"தம்பி சிவகுமார் நான் முதலிலை கேட்ட விடயத்தை மறக்காமல் இந்தக் கிழமையே செய்யும். இல்லையெணடால் சந்திரனை ஆருமே பார்க்க முடியாது தம்பி" என்று குரல் தழுதழுத்தபடி சொன்னார்.

மனதுக்கு என்னவோ போலிருந்தது. நாளைக்கே அவனைக் கொழும்பு கூட்டிப் போவதாக சிவகுமார் உறுதியளித்தான். விடுதலைப் போராட்டத்தை நூறுவீதம் ஆதரித்துத் தட்டிக் கொடுக்கும் இவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தப்ப வைப்பதற்காகப் பிரயத்தனப்படுவதை மாத்திரம் சிவகுமாரால் ஜீரணிக்க முடியவில்லை. இந்தப் போராட்டம் சரியானதா? அல்லது தவறான திசையில் ஆரம்பித்துவிட்டதா? என்பதையும் சிவகுமாரால் தீர்மானிக்க முடியவில்லை. **பொடியங்கள்** எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்கள் என்ற மனநிலையை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

காந்தனுக்குத் தந்தியடிக்கச் சுந்தரம் மாஸ்டர் வெளியே போனார். முன்பெல்லாம் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் கிணத்துக்கை ஒழி என்று ஆரவாரப்படுகிற அப்பா இப்போ சர்வ சாதாரணமாக வெளியில் போவதுபற்றிச் சிந்திப்பது அவளுக்கு வியப்பைக் கொடுத்தது. இதைப்பற்றிச் சிவகுமாருக்குக் கூறத் திரும்பியவள் சிவகுமாரைக் காணாது உள்ளே திரும்பிப் பார்த்தாள். சிவகுமார் சாப்பாட்டு மேசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவள் மனதுக்குள் சிரித்துக் கொண்டு அவனருகே சென்று பரிமாறினாள்.

"ஏதோ கனவு காண்பதாய் சொன்னியள். பிறகு விட்டிட்டியள்"

"இந்தச் சமுதாயத்திற்கு என்னை அர்ப்பணிக்கவேணும். என்னு டைய உடலின் ஒவ்வொரு அணுவும் இந்தச் சமூகத்தின் விடுதலைக்காகத் துடிக்கவேணும். இயல்பாக எனக்கு வந்த எழுத்துத் திறமை இந்தச் சமூகத்தின் விடுதலைக்காகப் பயன்பட வேணும்" இப்படி அவன் கூறும் போது அவன் முகத்தில் தோன்றிய ஒளி எவ்வளவு பிரகாசமானதாக இருந்தது!

"எந்தச் சமூகத்தைப்பற்றிக் கதைக்கிறியள். ஒருக்கால் போராட்டமே பிழை என்கிறியள். பிறகு இந்தச் சமூகத்தின் விடுதலைக் காக வாழ்வையே அர்ப்பணிக்கவேண்டும் என்கிறியள் எனக்கு விளங்கவேயில்லை."

"தமிழ் மக்கள் இந்த அடக்கு முறையிலிருந்து வெளியிலை வர வேண்டுமென்பதிலை எனக்கு எந்த மறுப்புமில்லை. ஆனால் அதற்கு இண்டைக்குத் தேர்ந்தெடுத்திருக்கிற பாதையிலைதான் உடன்பாடில்லை." என்றான் சிவகுமார் மெதுவாகக் கதையை மாற்றி.

"இப்ப உங்கடை வீட்டைப்பார். போராட்டத்தில் பங்குபற்றக் கூடிய ஒரு இளைஞனை உங்கடை அப்பா வலுக்கட்டாயமாக வெளிநாட்டுக்கு அனுப்பப் பார்க்கிறார். இந்தப் போராட்டம் ஆயுதம் தூக்க முன்னர் கீழ்மட்டத்திலிருந்து சரியான முறை யில் விளக்கப்பட்டு மக்களைத் தயாராக்கியபின் தொடங்கி யிருந்தால் உங்கடை அப்பாவைப் போன்றவர்களெல்லாம் இப்படி நடந்திருக்க மாட்டார்கள்." அவனுடைய அந்த வாதத் திற்கு இதிகாவினால் பதில் சொல்ல முடியவில்லை.

" சரி இதிகா இந்த வாதம் எல்லாம் காலங்கடந்த வாதம்.. நாங்கள் பத்திரிகைபற்றிக் கதைப்பம். இந்த உலகத்தில் இலக்கியம் ஒன்றே கூர்மையான ஆயுதம். என்னுடைய இந்தப் பத்திரிகை முற்று முழுதாக மற்றப் பத்திரிகைகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுபட்டதாக இருக்க வேணும்" என்றான் சிவகுமார்
"அப்படியென்றால்.... சாதாரண ஏழைப் பாமர மக்களின் விடுதலைக்காகப் பத்திரிகை குரல் எழுப்பவேணும். இன்றைய நிலையில் உது சாத்தியப்படுமா?"
"சாத்தியப்பட வைக்கிறதுதான் என் இலட்சியம்"
"இன்னும் கொஞ்சம் சோறு போடவா?"
"வேண்டாம்... காணும்" என்று கூறிக்கொண்டே கை கழுவ எழும்பிப் போனான். அவன் வரும்வரை காத்திருந்த இதிகா "உங்கடை லட்சியத்துக்கு என்ரை உதவி எப்ப தேவைப் பட்டாலும் கேளுங்கோ"என்றாள்.
"நிச்சயமாய் உன்ரை உதவியில்லாமல் என்ன நடக்கும்?"
அவன் இப்படிக் கூறியது அவளுக்குப் பெருமையைக் கொடுத் தது.

சிவகுமார் அறைக்குப்போய் கடிதம் எழுத ஆரம்பித்தான். பத்துக் கடிதம் எழுதியிருப்பான். யாரோ கதவைத் தட்டினார்கள். கதவைத் திறந்தான். சுந்தரம் மாஸ்டர் வெளியில் நின்றிருந்தார்.
"தம்பி.... இண்டைக்கு வெளியிலே போகாதையும். நிலமை சரியில்லை. எங்கடை இயக்கப்பெடியள் எங்கேயோ கண்ணிவெடி வைச்சு 5 ஆமிக்காரன்கள் சரியாம்."
சிவகுமாருக்குத் திகைப்பாக இருந்தது. ஆயுதப்போர் திசை மாறிப் போவது போலிருந்தது. பின் விளைவு எவ்வளவு பாதகமாக இருக்கப்போகிறது.
"கொஞ்சம் கூட அறிவில்லாத பொடியன்கள்" மனதுக்குள் முணுமுணுத்துக்கொண்டான். அதே வேகத்தோட அறைக்குள் நுழைந்தவன் **திறப்பு**க்கான முதற் தலையங்கத்தை எழுதினான். இன விடுதலையா? இன அழிப்பா? இது தான் அந்தத் தலையங்கம். அதை உடனே இதிகாவைக் கூப்பிட்டுக் காட்ட விரும்பினான். அறைக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்தான். இதிகா முற்றத்தில் காய்ந்த மிளகாய்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுக்கிக் கொண்டிருந்தாள். இதிகா என்று மெதுவாகக் கூப்பிட்டான். அவனுடைய அழைப்பில் தன் வலுவிழந்த இதிகா மெல்ல எழுந்து வந்தாள். தலையங்கத்தை அவளிடம் காட்டினான். அவளுக்கு அது பிடிக்கவே இல்லை.

"இது என்ன குழந்தைத்தனமான தலைப்பு?"என்று நேரே கேட்டுவிட்டாள். சிவகுமாருக்குச் சப்பென்று போய்விட்டது. ஆயினும் தன்னைச் சமளித்துக் கொண்டு

"ஆமிக்காரனைக் கொல்லுறது பிழை. இதாலை எதையும் சாதிக்கேலாது. இப்படியான செயற்பாடுகளால் எங்கடை இனத்தை நாங்களே அழிக்கப் போகிறம். " என்றான்.

"சும்மா விசர்க் கதை கதையாதையுங்கோ. உங்கடை கொம்னிசத்திலை அரசு என்றால் என்ன? அரசியல்வாதியளா அரசு? அரசு என்ற இயந்திரத்தை கட்டிக்காக்கிறது ஆர்?அரசியல் வாதியளா அல்லது படையளோ?"

தத்துவரீதியாகத் தாக்கப்பட்ட சிவகுமாருக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

"இவ்வளவு நாளும் குட்டக் குட்ட குனிந்து அரசியல்வாதிதான் எல்லாம் என்றிருந்த பொடியன்கள் இப்பத்தான் சரியான எதிரியைக் கண்டு பிடிச்சு வெளிக்கிட்டிருக்கிறான்கள்"

தொடர்ந்து இதிகா கூறக்கூற இமைவெட்டாமல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான் சிவகுமார்

"தமிழரின்ரை சுய நிர்ணய உரிமைக்காகப் போராடலாம். ஆனால் நிலத்துக்காகப் போராடிறது தவறு"என்றான் சிவகுமார்

"எனக்கு விளங்கேல்லை. சுயநிர்ணய உரிமையையும் நிலத்துக்கான போராட்டத்தையும் ஏன் வேறுபடுத்திறியள். சுய நிர்ணய உரிமை என்பதே நிலத்திலிருந்துதானே ஆரம்பிக்கிறது. ஒரு இனத்துக்கான பாரம்பரிய பிரதேசம் கலை கலாச்சாரம் ஏற்றுக் கொள்ளப்பட்டால் மாத்திரம் தானே சுயநிர்ணய உரிமையைப் பற்றியே கதைக்கலாம். ஏன் எழுந்தமானமாகக் கதைக்கிறியள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ந்து விழுந்தாள் இதிகா.

"நீங்கள் இந்த விசயத்தைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்க வேணும். இந்தச் சமுதாய அமைப்பைக் கவனிச்சியளென்டால் தெளிவாய் விளங்கும். எங்கடை சமூக அமைப்பு ஐரோப்பியர் வரமுந்தி வந்தபின்பு போனபின்பு ஆகிய மூன்று கட்டங்களைக் கண்டிருக்குது. ஐரோப்பியர் வரமுந்தி நிலப் பிரபுக்களின் ஆட்சியும் அந்த நேரம் விடுதலைப் போராட்டங்கள் வர்க்கங்களுக்கு இடையிலும் விவசாயிகளுக்கிடையிலும் விவசாயிகள் மட்டத்திலிருந்து உருவாகின. ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின் முற்று முழுதாக ஒரு தொழிற்புரட்சி உருவாகி நிலப்பிரபுக்களைவிட வலிமை வாய்ந்த முதலாளிவர்க்கம் உருவானது. விவசாயிகளின் மட்டத்திலிருந்து போராட்ட வடிவம் சற்று நகர்ந்து தொழிற்சாலைப் பாட்டாளிகள் மட்டத்தில் உருவாக ஆரம்பித்தது. ஐரோப்பியர்கள் போன பின்பு நாட்டில் வேரூன்றிய தொழிற்சாலைப் பொருளாதாரமும் முதலாளி வர்க்கமும் உள்ளூர்வாசிகள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதோடு நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்க தலைமைப் பீடங்களை அதிகாரபீடங்களாக்கித் தங்கள் வசப்படுத்தினார்கள். தங்களைக் காப்பாற்ற எளிதில் எரியக் கூடிய மொழிரீதியான உணர்வுகளை மக்கள் மத்தியில் கட்டவிழித்து விட்டனர். இந்த உணர்வு அலை வளர வளரப் போராட்டம் இப்ப ஆரம்பமாகி இருக்குது" என்று பெரியதொரு விளக்கம் கூறி முடித்தாள் இதிகா.

சிவகுமார் எதிர்பார்க்கவேயில்லை. ஒரு மேடைச் சொற்பொழிவே ஆற்றி விட்டாள். இவ்வளவு உலக அறிவு இதிகாவுக்கு உண்டா? அவனால் நம்ப முடியவில்லை! அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே அவள் போய் விட்டாள். இனி இதிகா விடயத்தில் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று மனதுக்குள் ஒரு எச்சரிக்கை உணர்வை வளர்த்துக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17

டாக்சியிலிருந்து இறங்கி அறைக்குள் வந்து கட்டிலில் பொத்தென்று விழுந்தான் காந்தன். கதவைக் கூடச் சாத்தவில்லை. உறங்கிப் போனான். இதற்குள் காந்தன் கைதான விடயம் அவன் நண்பனுக்குத் தெரியவர அவன் மூலமாக அது சுவந்திகா வின் காதை அடைந்தது. சுவந்திகா கலங்கி விட்டாள். உடனே போய்க் காந்தனைப் பார்க்க வேண்டுமென்று துடியாயத் துடித் தாள். எதிர்பாராதவிதமாக அவளின் தகப்பன் திலகரத்னா அவளைப் போகக் கூடாது என்றார். அவள் எங்கே போகப் போகிறாள் என்பது இவருக்கு எப்படித் தெரியும்? அப்படியானால் காந்தன் கைதான விடயம் இவருக்கு எப்படித் தெரியும்?. சுவந்திகா மனதுக்குள் பல கேள்விகளை எழுப்பிக் கொண்டிருந்தாள். ஆயினும் வெளிக்காட்டிக் கொள்ளாமல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அவரைப் பொலிஸ் பிடிச்சதாம் நான் போய்ப் பார்க்க வேணும்”
“எனக்குத் தெரியும்.... நான் தான் அவனைப் பிடிச்சுக் குடுத்தனான்” என்று சிரித்துக் கொண்டே கூறினார் திலகரத்னா. சுவந்திகாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. கையில் ஒரு கத்தியிருந்தால் தகப்பனைக் கத்தியால் குத்திக் கொன்றிருப்பாள். அவளுக்கு எங்கிருந்து தான் தைரியம் வந்ததோ தெரியாது... தகப்பனையும் மதியாது விடுவிடென்று வெளியில் நடந்தாள்.
“இப்ப போனால் இனி வீட்டுக்குள்ளை வரக்கூடாது”என்று ஆத்திரத்தில் கத்தினார் திலகரத்னா.
“வரமாட்டன்”என்று ஆக்ரோசமாக அவளும் கத்தி விட்டுப் போய்விட்டாள். பஸ் பிடிச்சுக் காந்தன் அறையை அடைவதற்குள் அவள் இதயமே நின்று விடும் போலிருந்தது. காந்தனின் அறையை அடைந்ததும் அதிர்ந்து போய்விட்டாள். கதவு ஓவென்று திறந்திருந்தது. எட்டிப் பார்த்தாள். காந்தன் கட்டிலில் படுத்துக் கிடந்தான்.

அவனைக் குழப்பாது மெதுவாகச் சென்று ஸ்டவ்வைப் பற்ற வைத்துத் தேநீர் தயாரித்தாள். அவன் மெதுவாக அசைவது புரிந்தது. அவனருகில் சென்று தொட்டுப் பார்த்தாள். உடம்பு அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. அவனது தலையை மெதுவாகத் தூக்கி மடியில் வைத்து ஆதரவாகத் தடவினாள். ஸ்பரிச உணர்வினால் கண் விழித்த அவன் தான் சுவந்திகாவின் மடியில் படுத்திருப்பதையும் அவள் ஆதரவாகத் தன்னைத் தடவுவதையும் பார்த்துக் கண் கலங்கினான். சுவந்திகா என்று அனுங்கினான். வெளியில் காயங்கள் தெரியாவிட்டாலும் உட்காயங்கள் பலமாக இருந்தன. கன்னம் அதைத்துப் போய் இருந்தது. சொண்டில் ஒரு வெடிப்பிருந்தது. உடுப்புக்களெல்லாம் கசங்கியிருந்தன. மெதுவாக அவனைப் படுத்திவிட்டுத் தேநீர் போட்டாள். தேநீரைத் தயாரித்து நன்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறச் செய்து அவனை மெதுவாக நிமிர்த்திப் பருக்கி விட்டாள். இவ்வளவும் அவள் செய்து கொண்டிருக்கும்போது மனம் இன்னொரு போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இன்று திரும்ப வீட்டுக்குப் போவதா? விடுவதா? காந்தனை இந்நிலையில் விட்டுப் போகவும் முடியாது போனால் வீட்டில் சுமுகமான வரவேற்பும் கிடைக்கப் போவதில்லை. வருவது வரட்டும். இங்கையே தங்கிவிடுவோம் என்று அவள் முடிவெடுக்கும் போது கீழ் அறையில் இருக்கும் சிதம்பரப் பிள்ளை வாசலில் நின்றிருந்தார். சுவந்திகா கதவைத் திறந்தது அவருக்கு வியப்பாக இருந்தது. சமாளித்துக் கொண்டு

"தம்பிக்கு ஒரு தந்தி வந்திருக்குது"என்று கொடுத்து விட்டுப் போய்விட்டார். அவசர அவசரமாகத் தந்தியைப் பிரித்தாள். உள்ளே சந்திரன் மெயில் வண்டியில் வருவதாகக் காந்தனின் தந்தை அறிவித்திருந்தார். கட்டிலிலிருந்தபடியே

"என்ன சுவந்திகா தந்தி" என்றான். தந்தியை அவன் கையில் கொடுத்துவிட்டு அறையில் அங்குமிங்குமாக இருந்த உடுப்புக்களை எல்லாம் அலுமாரியில் மடித்து வைத்தாள். இப்போது அறை களைகட்டிவிட்டது. ஏதோ புதுக்குடித்தனம் வந்த பெண் போல் எல்லாவற்றையும் செய்து கொண்டிருந்தாள். அடுத்துச் சமைக்க வேண்டும். வேலைகளைச் செய்து கொண்டே தம்பியை நான் போய்க் கூட்டிக் கொண்டு வாறன் என்றாள். அவன் எதுவும் சொல்லவில்லை. என்ன முறையில் சமைப்பது? ஏதோ உனக்குத் தெரிந்ததைச் செய் என்று மனம் கூறியது. அரிசி இருந்தது. கத்தரிக்காய் இருந்தது. மீன் இருந்தது. பிறகென்ன களத்தில் இறங்கி விட்டாள். அவள் கை வண்ணம் களைகட்டியது. சிறிது நேரத்தில் சமையல் முடிந்தது. காந்தனுக்கு அருகில் வந்தாள். அவன் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தான். அவனை உசுப்பினாள். அவன் மெதுவாகக் கண் விழித்தான். சுவந்திகா அருகில் நிற்பதைப்பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னும் போகவில்லையா?"என்று கேட்டான்.
"எங்கை போறது?"அவள் திரும்பிக் கேட்டாள்.
"வீட்டைதான்"
"இனிமேல் போகப் போறதில்லை"என்று திடமாகக் கூறினாள். அவளது உறுதி காந்தனுக்குப் பயத்தைக் கொடுத்தது. மெதுவாகக் கையை ஊன்றி எழும்பியிருந்தான். அறையைப் பார்த்த அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.
"கொஞ்சம் எழும்புங்கோ முகத்தைக் கழுவிப் போட்டுச் சாப் பிடுவம்" என்றாள். அவனைத் தாங்கிக் குளியல் அறைக்குக் கொண்டு சென்று முகத்தைக் கழுவி மீண்டும் கட்டிலில் கொண்டு வந்து இருத்தினாள். சாப்பாட்டைப் போட்டு வந்து அவன் முன் வைத்து விட்டு அவனைப் பார்த்தாள். அவனின் புன்னகைக்கான காரணம் அவளுக்கு விளங்கியபோதும் விளங்காதது மாதிரி சாப்பாட்டை அவனுக்கு ஊட்டத் தொடங்கினாள். அவன் கண்கள் கண்ணீர் உகுத்தன.
"ஏய் என்ன இது?"என்று கூறியவாறு அவன் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.
"தம்பி நாளைக்கு
மெயில் வண்டியிலை வாறான்" வாறான்" என்ன செய்யிறது.
"கீழ் அறை ஐயாவைக் கேட்பமே" என்றாள் சுவந்திகா. இந்த யோசனை காந்தனுக்கும் சரியாகப்பட்டது. இருவரும் சாப்பிட்டு விட்டுப் படுப்பதற்குத் தயாரானார்கள். காந்தனைப் படுக்க வைத்துப் போர்வையால் போர்த்தினாள். தான் ஒரு பெட்சீட்டை நிலத்தில் விரித்துவிட்டு அதில் படுத்தாள். படுத்ததும் நித்திரை அவளை அணைத்துக் கொண்டது. மறுநாள் காலையில் முதலில் விழித்துக் கொண்ட அவள் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு காந்தனையும் எழுப்பித் தேநீர் வைத்து இருவரும் பருகினார்கள். அவள் எடுத்த முடிவை எதிர்க்கவும் முடியாமல் ஆதரிக்கவும் முடியாமல் மனதுக்குள் துன்பப்பட்டுக் கொண்டிருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தன்.

"நான் போய்ச் சந்திரனைக் கூட்டி வாறன்" என்றாள். அவள் போகும் பொழுது

"கீழ் அறை ஐயாவை ஒருக்கால் வரச் சொல்லும்" தலையாட்டி விட்டுப் புறப்பட்ட அவள் போகும் வழியில் அவன் சொன்னதையும் செய்து விட்டு மணிக்கூட்டைப் பார்த்தபடி புகையிரத நிலையத்தை நோக்கி வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

அவள் புகையிரத நிலையத்தை அடையவும் புகையிரதம் வந்து நிற்கவும் சரியாக இருந்தது. சந்திரனை நேரில் பார்த்ததில்லை. படத்தில் பார்த்திருக்கிறாள். அந்தக் குறிப்பை வைத்துக் கொண்டு ஒவ்வொரு பெட்டியாகத் தேடிக் கொண்டு போகக் கடைசிப் பெட்டியை விட்டு வெளியே வந்து கொண்டிருந்தான் அவன். அவனை அடையாளம் கண்டு கொண்ட சுவந்திகா அவனை நோக்கிச் சென்றாள். சந்திரனோடு சிவகுமாரும் வந்திருந்ததால் சற்றுத் தயங்கிய சுவந்திகா வந்த காரியத்தை முடிப்பதற்காகத் தயக்கத்தை விட்டுச் சந்திரனைப் பார்த்து "நீங்கள் காந்தனின் தம்பி தானே"என்று கேட்டாள்.

"ஓம்"என்று கூறிய அவன்

"நீங்கள்...." என்று இழுத்தான். கண நேரத்துக்குள் யாரென்பதைத் சிவகுமார் ஊகித்துக் கண்டு பிடித்துவிட்டான். மூவருமாக அறையை வந்தடைய பதினைந்து நிமிடங்கள் எடுத்தது. இருவரையும் அறையில் விட்டுவிட்டு அவசர அவசரமாக காந்தனிடம் சொல்லி விட்டுக் கந்தோருக்குப் புறப்பட்டாள். காந்தன் தனக்கு நடந்த விடயங்களையும் சுவந்திகா எடுத்த தீர்மானத்தையும் அவர்களிருவருக்கும் கூறினான். இவற்றைக் கேட்ட சந்திர னுக்கும் சிவகுமாருக்கும் வியப்பாகவும் திகைப்பாகவும் பயமாகவும் இருந்தது.

கந்தோர் முழுவதும் காந்தனைப் பற்றித்தான் கதை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கதைத்தார்கள். ஒரு சிலர் காந்தனை அப்பாவியாகவும் ஒரு சிலர் பயங்கரவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகளின் நண்பனாகவும் சோடித்துக் கதைத்தனர். சுவந்திகா வைக் கண்டதும் கதையை விடுவதும் பின்னர் தொடர்வதுமாக இருந்தார்கள். சுவந்திகா எதுவும் கதைக்கவில்லை. தன்னுடைய வேலைகளை முடித்து விட்டு பத்தாவது மேசையிலிருக்கும் சுகந்த சில்வாவை அணுகினாள். சுகந்த சில்வா எழுதுவினைஞர் சங்கத் தலைவர். காந்தனும் அந்தச் சங்கத்தின் அங்கத்துவன். அவள் தனக்கு முன்னால் வந்து நின்றவுடன் என்ன கேட்கப் போகிறாள் என்பது விளங்கினாலும் விளங்காதது போல் "என்னம்மா எப்படிச் சுகம்?"என்றார்.

"காந்தனுக்கு நடந்தது உங்களுக்குத் தெரியும் இண்டைக்குக் கூட்டம் கூடி இதுக்கொரு முடிவு எடுக்கவேணும்"

"இதிலை பெரிய சங்கடம் இருக்குது சுவந்திகா"

"என்ன சார் சங்கடம். காந்தன் எங்கடை உத்தியோகத்தர். அதுவும் அரச ஊழியர். சங்க உறுப்பினருக்கு அநியாயம் நடக் கேக்கை அதைத் தட்டிக் கேட்கச் சங்கத்தாலை முடியாதெண் டால் பிறகென்னத்துக்குச் சங்கம். அவளின் இந்த ஆக்ரோ சமான வாதம் அவரைத் திக்குமுக்காட வைத்துவிட்டது"

"சரியம்மா.... உனக்குக் கூட்டம் தானே வேணும். அதிலை என்ன முடிவு எடுக்கப்படுகிறதோ அதை நீ ஏற்க வேண்டும் என்ன?"

சுவந்திகாவும் தலையாட்டி விட்டுப் போய் இருக்கையில் அமர்ந்தாள். சுவந்திகா போன பின் சுகந்த சில்வா சங்கக் கூட்டம் கந்தோர் முடிந்த பின் நடக்க இருப்பதாக அறிவிக்கும் அலுவ லில் முனைந்தார். நாலு மணிக்குக் கந்தோர் முடிகிறது. நாலரை மணிக்குக் கூட்டம். கந்தோரின் கூட்ட மண்டபத்தில் எல்லோ ரும் இருந்தனர். சுகந்தசில்வா எழுந்து பிரச்சனையைக் கூறி னார். இப்படித்தான் கூறினார்.

"எங்களுடைய சக உத்தியோகத்தரும் சங்க அங்கத்தவருமான காந்தனுக்கு நடந்த சம்பவம் உங்களுக்கெல்லாம் தெரியும். இதை ஆட்சேபித்து அரசுக்குக் கடிதம் எழுத வேண்டும் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானத்தை சுவந்திகா கொண்டு வந்துள்ளார். இது சம்பந்த மான உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம்"

சுகந்தசில்வா அமர்ந்து விட்டார். மூலையிலிருந்து ஒரு குரல் வந்தது. "இது அரசியல் பிரச்சனை. இங்கை விவாதிக்க வேண்டிய அவசியமில்லை"

"இங்கை நடக்கிறது இலக்கியக் கூட்டம் இல்லை. தொழிற் சங்கக் கூட்டம். தொழிற்சங்கங்களை அரசியலிலிருந்து பிரிப்பது முட்டாள்தனம்" என்று கத்தினாள் சுவந்திகா.

"காந்தன் அப்பாவி அவரைப் பொலிஸ் பிடித்தது அநியாயம். பயங்கரவாதச் செயல் யாழ்ப்பாணத்திலை நடக்கலாம். எவரையும் விசாரிக்க பொலிசுக்கு அதிகாரம் இருக்கு ஆனால் அடிக்க அவங்களுக்கு அதிகாரம் இல்லை. இது சம்பந்தமாக எங்கடை சங்கம் நடவடிக்கை எடுக்கவேணும். இல்லை யெண்டால் நாளைக்கு எங்களுக்கும் இது நடக்கலாம்" ஒரு நல்ல மனிதன் குரல் எழுப்பினான். சுவந்திகா நன்றியோடு அவனைப் பார்த்தாள்.

"கொழும்பிலை இருந்தாலும் யாழ்பாணத்திலை இருந்தாலும் காந்தன் தமிழன்தான். தமிழர் இப்ப பயங்கரவாத நடவடிக் கையிலை ஈடுபட்டிருக்கினம். காந்தன் உதவி செய்திருக்கலாம் அல்லது செய்யாமலிருக்கலாம். நாங்கள் இதிலை தலை யிடாமல் இருக்கிறது தான் நல்லது. இந்தச் சங்கம் நாட்டின் தொழிற் பிரச்சனையை கவனிக்கத்தானேயொழிய நாட்டின் ஐக்கியத்தைக் குலைக்கும் பயங்கரவாதிகளுக்காக அரசிய லிலை தலையிட அல்ல"

"முழுத்தமிழர்களையும் பயங்கரவாதிகளாக நினைக்கிறது முட்டாள் தனம்" இப்படி மாறி மாறிக் கதைத்துக் கொண்டி ருந்தார்கள். சுவந்திகா விரக்தியில் பேசாமலிருந்தாள். சுகந்தசில்வா எழும்பினார்.

"எல்லாரும் இப்படிக் கதைப்பதால் பிரச்சினை தீராது. இந்தப் பிரச்சினையை வாக்கெடுப்புக்கு விடலாமென்று பார்க்கிறன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நினைக்கிறவை கையை உயர்த்துங்கோ"என்றார். மூன்றே மூன்று கைகள் எழும்பின. அதிலே வியப்பு என்னவென்றால் அங்கிருந்த தமிழ் உறுப்பினர்கள் கூடக் காந்தனுக்கு ஆதரவாகக் கை உயர்த்தவில்லை. துவேசம் பிடிச்ச சனியன்கள் என்று பலமாகத் திட்டிவிட்டுக் கூட்டத்தை விட்டு வேகமாக வெளியேறினாள் சுவந்திகா.

முதுகெலும்பில்லாத தமிழர் மத்தியிலும் துவேசம் பிடிச்ச சிங்களவர் மத்தியிலும் அவள் எப்படி நியா யத்தை எதிர்பார்க்க முடியும்? பஸ் நிலையத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். "சுவந்திகா" என்றொரு குரல் கேட்டுத் திரும்பினாள். தகப்பன் திலகரத்னா நின்றிருந்தார். அவளுக்குப் பதட்டமாக இருந்தது. அருகில் வந்து

"ஏன் வீட்டை வரேல்லை?"என்று கேட்டார்.

"வர விருப்பமில்லை"

"அப்ப இனி வரமாட்டியோ"

"அப்படித்தான்"

"அப்படியெண்டால் அந்தப் பயங்கரவாதியோடைதான் இருக் கிறியோ?"

"பயங்கரவாதியல்ல பயங்கரவாதியாக்கப்பட்ட ஒரு அப்பாவி"

"தேவையில்லாமல் பாழுங் கிணற்றிலை விழுகிறாய். என்னைப் பகைச்சுக்கொண்டு உன்னாலை வாழமுடியுமா?"

"முயற்சிக்கிறேன்" என்று கூறிக் கொண்டு விறுவிறுவென்று நடக்க ஆரம்பித்தாள். அவள் போவதையே பார்த்துக் கொண்டு நின்ற திலகரத்னாவிற்கு உலகமே தன்னை எதிர்ப்பது போன்ற மாயை ஏற்பட்டது. வேகமாகத் திரும்பி நடந்தார். அறைக்கு வந்த சுவந்திகா சோர்வோடு தொப்பென்று கதிரையில் விழுந்தாள். சத்தம் கேட்டு விழித்த காந்தன் சுவந்திகாவைப் பார்த்தான். சுவந்திகாவின் சோர்வு நிலை அவனுக்குத் திகைப்பைக் கொடுத்தது. என்ன? என்று கேட்பதைப் போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளைப் பார்த்தான்.

"வாறன் முகம் கழுவிப்போட்டு எல்லாம் ஆறுதலாகச் சொல்லிறன்"

"உங்களுக்கிப்ப எப்படி" என்றவாறு குளியலறைக்குள் போனாள். காந்தன் அவளை வியப்போடு பார்த்தான்.

சிவகுமாரும் சந்திரனும் அவளது பதட்டத்தைப் பார்த்துச் சங்கடப்பட்டனர்.

எல்லோருக்கும் தேநீர் போட்டு வந்து கொடுத்தாள். தேநீர் குடித்துக் கொண்டிருந்தபோது நடந்த விடயத்தைக் கூறினாள். தமிழ் அங்கத்தவர்களின் விடயத்தைக் கூறியபோது சிவகுமாருக்கு வெட்கமாக இருந்தது. பின்பு சந்திரனைப் பற்றிக் கதைத்தார்கள். சிவகுமார் தான் அவசியமாகப் போகவேண்டுமென்று கூறி அன்றே அங்கிருந்து புறப்படுவதாகக் கூறினான். சந்திரனைத்தான் தனக்குத் தெரிந்தவர்கள் மூலமாக ஜெர்மனிக்கு அனுப்பி வைப்பதாகக் கூறினாள். சிவகுமார் அவளை நன்றியோடு பார்த்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18

சந்திரனைக் கொழும்பில் விட்டு விட்டு உடனேயே திரும்பிவிட்டான் சிவகுமார். வீட்டுக்கு வந்த அவன் பாடசாலைக்குத் தொலைபேசி மூலமாகச் செய்தி அனுப்பி விட்டு பத்திரிகை அலுவலாக யாழ்ப்பாணம் போக வெளிக்கிட்டுக் கொண்டிருக்கும்போது சுந்தரம் மாஸ்டர் வந்து

"யாழ்ப்பாண நிலமை சரியில்லைத் தம்பி" என்று மறித்தார்.

"இல்லை மாஸ்டர் நான் எப்படியும் போக வேணும். நான் எப்படியும் சமாளித்து வந்து விடுவன்" இப்படி அவன் கூறியபின் அவர் எதுவும் கதைக்கவில்லை. சிவகுமாரும் புறப்பட்டு விட்டான். அன்று யாழ்ப்பாண நகரமே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண் டிருந்தது. ஒரே கண்ணி வெடியில் பதின் மூன்று இராணுவத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுங்கப்பட்டிருந்தனர். ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு முதன் முதலில் பத்துக்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலி கொடுக்கப்பட்ட நிகழ்ச்சி இது.

நிகழ்ச்சி நடந்து அரைமணி நேரத்தில் எல்லா இராணுவ நிலையத்திலிருந்தும் புற்றீசல்கள் போல் இராணுவம் வெறி கொண்டு புறப்பட்டிருந்தனர். வெறி நாய்கள் போல் அலைந்து கொண்டிருந்தனர். கண்ணில் காண்பவர்களை யெல்லாம் சுட்டுத் தள்ளினர். யாருக்கும் எதுவும் புரியவில்லை. வீடுகளுக்குள் நுழைந்து இருப்பவர்களை யெல்லாம் இழுத்துப் போட்டுச் சுட்டனர். சிறுவர்.. பெரியவர்... ஆண்... பெண் என்ற பேதமில்லை. அங்கு யார் உயிருடன் இருந்தார்களோ அவர்களின் உயிர்கள் பறிக்கப் பட்டன. வீடுகள் கொளுத்தப் பட்டன. பல வீடுகள் போட்டி போட்டு எரிந்து கொண்டிருந்தன. பல உயிர்கள் ஏன் ஏது என்று கேட்க முன் பரலோகம் சென்று விட்டனர்.

சுந்தரம் மாஸ்டரின் எச்சரிக்கையையும் மீறி ஏதோ அலுவலாக யாழ்ப்பாணம் வந்த சிவகுமார் இந்த நெருக்கடியில் அகப்பட்டுக் கொண்டான். சிவகுமார் தலை தெறிக்க ஓடினான். அன்றைக்கு யாராவது ஓட்டப் போட்டி வைத்திருந்தால் அவன் தான் முதலாவது. ஓடும் போது முன்னே வருவது மதிலானாலும் வேலியானாலும் பாய்ந்து பாய்ந்து ஓடினான். சிலவேளை பறவை போலப் பறந்தான். பறக்கும் போது சில சமயம் விழுந்தான். விழுந்தால் நோக வேண்டும் ஆனால் இன்று அவனுக்கு நோகவில்லை. நோகுதென்று படுத்தால் உயிர் போய்விடும்.! எழும்பி எழும்பி ஓடினான். முன்னால் ஒரு வீடு தெரிந்தது. வீட்டு வாசலை நோக்கி ஓடினான். கதவு பூட்டியிருந்தது. தட்டு தட்டென்று தட்டினான். யாரும் திறக்கவில்லை. மரண பயம் அவனைத் துரத்தியது. மீண்டும் பாய்ச்சல் யாருடைய வீட்டுக் கதவும் அவனுக்காகத் திறக்கவில்லை. யார்தான் கதவைத் திறப்பார்கள். எல்லோரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருக்கும்போது இவனுக்காகக் கதவைத் திறந்து இவன் உயிரைக் காப்பாற்ற வேண்டிய நிலை யாருக்குத்தான் வரும்? இனி ஓட முடியாத நிலை! சிவகுமாருக்கு மூச்சிரைத்தது. இதயம் படபட வென்று அடித்தது. ஆபத்பாந்தன் போல் முன்னால் ஒரு புளிய மரம். மளமளவென்று ஏறிவிட்டான். என்ன துணிவு! என்ன லாவகம்! என்ன வேகம்! மேலே ஏறி ஒரு கிளையில் அமர்ந்த பின்பு தான் இதயம் மெதுவாக அடிக்க ஆரம்பித்தது. சிவகுமார் ஓடத் தொடங்கிய போது காலை பத்து மணி. இப்போது நேரம் ஐந்து மணி. எவ்வளவு நேரம் ஓடியிருக்கிறான். இருள் பரவிக் கொண்டிருந்தது. பசியில் சிறு குடலைப் பெருங்குடல் தின்று கொண்டிருந்தது. புளிய மரத்தில் இருந்தவாறு வீதியைப் பார்த்தான். இராணுவ வாகனங்கள் சென்று கொண்டிருந்தன. மனிதத் தலைகளையே காணோம். நேரம் ஏழு மணியாகியதும் மரத்தை விட்டு இறங்கினான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுப் புளிய மரம் இருந்த காணிக்கு அடுத்த காணிக்குள் சென்று அங்கிருக்கும் வீட்டைச் சற்று உற்றுப் பார்த்தான். வீட்டுள் விளக்கெரிந்து கொண்டிருந்தது. யன்னலூடாகப் பார்த்தான். ஆள் நடமாட்டம் தெரிந்தது. துணிந்து கதவைத் தட்டினான்.

அவன் கதவைத் தட்டியதும் வீட்டினுள் எரிந்து கொண்டிருந்த விளக்கு அணைந்தது. என்ன எச்சரிக்கை! சிவ குமார் மீண்டும் தட்டினான். நான் ஆமியில்லையென மெதுவாகத் தமிழில் அறுத்து உறுத்துக் கூறினான். சிறிது நேரம் எவ்வித சப்தமும் இல்லை. மீண்டும் அதே வசனத்தைக் கூறக் கதவுக்குச் சற்றுத் தள்ளியுள்ள யன்னலூடாக ஒரு வயதுபோனவர் எட்டிப் பார்த்தார்.

தன்னுடைய நிலையை எட்டிப் பார்த்த முதியவருக்கு விளக்கினான். அந்த முதியவர் என்ன நினைத் தாரோ தெரியவில்லைச் சடுதியாகக் கதவைத் திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை உள்ளே எடுத்து விட்டார். அவன் உள்ளே வந்ததும் சிறிது நேரத்தில் ஒரு இளம் பெண் தேநீர் கொண்டு வந்து அவன் முன் வைத்தாள்.

அவளை எங்கோ சந்தித்ததாகப்பட்டது சிவகுமாருக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19

அவளைப் பார்த்த நேரம் தொடக்கம் குழம்பிக் கொண்டிருந்த சிவகுமாருக்கு அடை யாளம் மெதுவாகப் புரிந்தது. அன்று புகையி ரதத்தில் அவன் வரும்போது சந்தித்த அதே முகம். அவனது மனம் வர்ணித்த அதே முகம். சாந்தம் தவழ்ந்த முகம். பத்தொன்பது வயது இருக்கலாம். பருவ வயது. சிவகுமார் சந்திக் கின்ற மூன்றாவது பெண் இவள். இதிகாவின் முகத்திலோடும் வேக ரேகைகள் இவள் முகத்தி லில்லை. பதிலாக உறுதி நிறைந்த சாந்த ரேகைகள் ஓடிக் கொண்டிருந்தன. அவளை ஒருதரம் நிமிர்ந்து பார்த்து விட்டு

"பேத்தியின் பெயர் என்ன?"

"சாந்தரூபி... சாந்தா என்று கூப்பிடுவம்."

இந்தப் பெயரும் அவனுக்குப் பரிச்சயமான பெயர் போல் இருந்தது. ஓரமாக ஒதுங்கி நின்று கவனித்துக்கொண்டிருந்தாள் சாந்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாந்தா இப்படி இருக்கலாமே!"

முற்றிலும் புதிய ஒருவன் இன்னும் அறிமுகமாகி ஒரு மணி நேரமும் ஆகவில்லை அவளைச் சாந்தா என்று கூப்பிட்டு விட்டான். சாந்தாவுக்குச் சங்கடமாக இருந்தது. அமைதியாக வந்து இருந்தாள். அப்போ இரண்டு மூன்று வெடிச் சத்தங்கள் கேட்டன. பட்டென்று விளக்கை அணைத்தனர். வீட்டுக்கு முன் வீதியால் யாரோ ஓடுவது போன்ற சத்தம் கேட்டது.

"ஆரையோ கலைக்கிறாங்கள் போலக் கிடக்கு" கிழவர் மெதுவாக முணு முணுத்தார். "வெறி பிடிச்சுத் திரியிறான்கள்" சாந்தா கூறினாள்.

"பிள்ளை தம்பிக்குப் பசி போல சாப்பாடு கொண்டு வந்து வையம்மா" என்றார். சாந்தாவும் சாப்பாட்டைக் கொண்டு வந்து சிவகுமாருக்குப் பரிமாறினாள். சிவகுமார் எதையுமே கவனிக்காமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். யாருக்குமே நித்திரை வரவில்லை. சாப்பிட்டுக் கை கழுவி விட்டு அதே இடத்தில் வந்தமர்ந்தான் சிவகுமார்

"தம்பி எந்த ஊர்?"

"நான் கரவெட்டிக் கிராமத்தைச் சேர்ந்தவன். கொழும்பில் ஒரு பத்திரிகைக் காரியாலயத்திலை வேலை செய்தனான். இப்ப கரவெட்டியிலை ஒரு பாடசாலையிலை ஆசிரியர் வேலை கிடைச்சு வந்திருக்கிறன்." என்று கூறிவிட்டுச் சாந்தாவைப் பார்த்து "உங்களுக்கு இலக்கியத்திலை நல்ல விருப்பம் போலை?"என்று கேட்டான். அவள் ஓமென்று மெதுவாகத் தலையசைத்தாள்.

" அண்டைக்கு நீங்கள் அர்த்தநாரீஸ்வரர் என்ற நாவல் வாசித்ததை அவதானிச்சன். நானும் அந்த நாவல் வாசிச்சனான்" அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

" உங்களுக்கு அந்த நாவல் பிடிச்சுதா?" அவன்தான் மீண்டும் கேட்டான்.

" ஓம்.. ஆண் பெண் சமத்துவம் பற்றி வித்தியாசமாக அணுகும் ஒரு நாவல்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" அந்த நாவலிலை கதாநாயகி சுமிதா நடந்து கொண்ட முறை சரியென்று நினைக்கிறீர்களா?"
"அந்தச் சூழ்நிலையிலை சுமிதாவுக்கு வேறை தெரிவு இல்லை என்றே நினைக்கிறேன். கல்யாணமாகாத தன் மச்சினியைக் காப்பாற்ற தன்னைப் பலி கொடுக்கலாம் என்கின்ற கணநேர முடிவுதான் அது"
"அது எங்கடை பண்பாட்டுக்கு ஒத்துவராத முடிவு என்று தோன்றவில்லையா?" என்று சிவகுமார் கேட்க
அவள் சிரித்தபடி " அந்த நாவலின் கருத்தே பெண்கள்மேல் அநாவசியமாக விதிக்கப்பட்ட பண்பாட்டு விலங்கை உடைப்பதுதானே." என்று அவள் கூறியபோது சிவகுமாரால் எதுவும் கூற முடியவில்லை.
"அந்த நாவலில் ஆண்களால் பெண்கள்மேல் ஆணவத்தோடு நிகழும் பலாத்காரம் பற்றிய விமர்சனம் தெளிவாகவுள்ளது"
" அப்படி நீங்கள் சொல்ல முடியாது அந்த நாவலில் விபா என்ற பாத்திரத்தின் கணவன் அவனது அண்ணியால் பலாத்காரம் செய்யப்படுவது பற்றியும் கூறப்பட்டுள்ளதே" என்று சிவகுமார் கூறினான்.
இவர்கள் உரையாடுகின்ற எதுவும் சாந்தாவின் தாத்தாவுக்குப் புரியவேயில்லை.
அவருக்குத் தூக்கம் வர ஆரம்பித்து விட்டது. இருந்த இடத்திலேயே கொட்டாவி விட்டபடி தூங்கிவிட்டார்.
" இந்த நாவல்பற்றி நாங்கள் பின்பு நேரங்கிடைக்கும் கதைக்க வேண்டும்." என்றான் சிவகுமார். சாந்தா ஆமென்பதுபோல் தலையை ஆட்டினாள்.
சாந்தாவுக்குத் தூக்கம் வரவில்லை. நிலத்தைப் பார்த்தபடி எதையோ யோசித்துக் கொண்டிருந்தாள்.
"என்ன பலமாக யோசிக்கிறியள்"சிவகுமார் மௌனத்தை குழப்பிக் கேட்டான். அவள் பதிலேதும் கூறவில்லை. ஒரு புன்சிரிப்பு மட்டும் உதிர்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பத்திரிகையிலை ஆசிரியராக இருக்கிறியளா?"
"இருந்தனான் இப்ப இல்லை"
"ஏன்?"
"ஒரு தன்மானப் பிரச்சனையிலை வேலையை உதறி எறிஞ் சிட்டன்."
"அப்ப இப்ப....."
"ஒரு பத்திரிகை தொடங்கலாமென்றிருக்கிறன்"
"பத்திரிகைக்கு என்ன பெயர் வைச்சிருக்கிறியள்?"
**"திறப்பு"**
"என்ரை வாழ்த்துக்கள். விலாசம் தந்தியளெண்டால் நான் ஏதும் அனுப்பலாம்" என்று கூறிவிட்டுப் பேப்பரும் பேனையும் எடுக்க உள்ளே போனாள். என்ன அமைதியான உரையாடல்.! ஆர்ப்பாட்டமில்லாத அதிகப் பிரசங்கித்தனமில்லாமல் அழ கான அளவான உரையாடல்.! தனக்குள் அவளை மெச்சிக் கொண்டான். அவள் பேனையும் பேப்பரும் கொண்டு வந்து கொடுக்க விலாசத்தை எழுதிக் கொடுத்தான். இவ்வளவோடு அவர்களின் உரையாடல் நின்று விட்டது. நேரமும் அதிகாலை ஐந்து மணியாகி விட்டது. தூங்கிக் கொண்டிருந்த பெரியவரும் எழும்பி விட்டார். சிவகுமார் போவதற்குத் தயாரானான். சாந்தா தேநீர் போட்டுக் கொடுத் தாள். தேநீரைக் குடித்து விட்டு வெளியில் வந்தான். வானம் நிர்மலமாக இருந்தது. " தம்பி என்ன அவசரம்? பிள்ளை புட்டு அவிப்பாள் சாப் பிட்டிட்டுப போகலாமே? என்றார்.
" இல்லைத் தாத்தா என்னைக் காணாமல் வீட்டிலை யோசிக் கப் போகினம். நான் போறதுதான் நல்லம்" என்றான் சிவகுமார். அவனது இந்தப் பதிலால் அவர்கள் திருப்திப்பட்ட மாதிரி இல்லை.
" நான் அடுத்தமுறை இந்தப் பக்கம் வரேக்கை வாறன்." என்று கூறிவிட்டு அவர்கள் வீட்டைவிட்டு வெளியே வந்து பஸ் ஸ்ராண்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

குளியலறையை விட்டு வெளியில் வந்த சுவந்திகா அலுப்புத் தீரக் கதிரையில் இருந் தாள். காந்தன் சுவந்திகாவையே பார்த் துக் கொண்டிருந்தான். சுவந்திகா கந்தோரில் நடந்தனவற்றையிட்டுக் கவலை யாக உள் ளது என்றாள்.

"நான் எதிர்பார்த்தது தான்" என்றான் காந்தன்.

"என்ன எதிர்பார்த்தது.... எல்லோரும் இரக்க மற்றவர்கள்"அவள் கத்தினாள். அவளின் ஆவேசம் அவனுக்குப் புரிந்தது. இயல்பா கவே உணர்ச்சி வசப்படும் சுவந்திகாவுக்கு நடந்த நிகழ்ச்சி நிரம்பப் பதற்றத்தைக் கொடுத்திருந்தது. இதைப் புரிந்து கொண்ட காந்தன் மேற்கொண்டெதுவும் கேட்க வில்லை. கதவு தட்டிக் கேட்டது. சுவந்திகா கதவைத் திறக்கச் சந்திரன் நின்றிருந்தான்.

"வாரும்"என்று அவனை அழைத்து அமரச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னாள். சிறிது நேரம் மூவரும் எதுவும் கதைக்கவில்லை.
"சந்திரன் விசயமாய்க் கதைச்சனான்" சுவந்திகாதான் ஆரம் பித்தாள்.
"எந்த நாட்டுக்குப் போக" காந்தன் கேட்டான்.
"இப்ப ஜேர்மனிக்குப் போறது தான் சுலபம். முதலிலை அங்கை போகட்டும். அதுக்குப் பிறகு பார்ப்பம்"
"என்ன சந்திரன் ஜேர்மனிக்குப் போறியே" சந்திரன் எதுவும் கூறவில்லை. ஏனென்றால் கேள்வியையும் பதிலையும் அவர்களே கூறி விட்டார்கள்.
"சந்திரன் கொஞ்சம் இரும் சாப்பிடலாம்" என்று கூறிவிட்டுச் சமையலில் துரிதமாக இறங்கினாள்.
"சந்திரன் நாளைக்கே முயற்சி பண்ண வேண்டிவரும்? அநேக மாக நாளைக்குச் சரி வரலாம். ஒழுங்கு பண்ணின இன்னொரு பொடியன் யாழ்ப்பாணத்திலிருந்து வரவில்லையாம். அந்த இடத்திற்கு இவர்" என்ற சுவந்திகா தொடர்ந்து
"லக்கேஜ் கனக்க வேண்டாமாம். ஒரு சூட்கேஸ் போதுமாம்" சந்திரன் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தான். அரை மணியில் சமையல் முடித்துவிட்டாள். சந்திரன் சாப்பிட்டு விட்டுக் கீழ் அறைக்குப் போய்விட்டான். சுவந்திகாவும் ஒரு ஓரத்தில் படுத்து விட்டாள். நேரம் வேகமாக ஓடிக் கொண் டிருந்தது. காலை எழும்பியவுடன் காந்தனுக்குத் தேத்தண்ணி போட்டுக் கொடுத்து விட்டு அவசர அவசரமாக கீழிறங்கிச் சந்திரனை வெளிக்கிடச் சொல்லி விட்டு வெளியே போய்க் கந்தோருக்கு லீவு என்று தன் நண்பிக்கு ரெலிபோன் செய்து விட்டு வந்தபோது அவளுக்கு மூச்சிரைத்தது. சந்திரனும் சுவந்திகாவும் அந்த ஏஜென்சிக்காரனை அடைந்தபோது நேரம் ஒன்பது மணி. எல்லாம் கதைத்துச் சந்திரனை அவனிடம் ஒப்படைத்து விட்டுத் திரும்பி விட்டாள். திரும்பிக் கொண்டி ருந்தபோது தான் அந்த இடிச்செய்தி அவளின் காதினை வந்தடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தன் கூறிய செய்தி சுவந்திகாவை அதிர்ச்சிக் குள்ளாக்கியது. காந்தனுக்கு இந்த விடயத்தைக் கீழறையில் உள்ள இன்னுமொரு தமிழ்ஆள்தான் கூறியிருந்தார். யாழ்ப்பாணத்திலை நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பிலும் கலவரம் ஆரம்பமாகலாம் என்பதே. ஒரே ரத்தம் ஓடுகின்ற இந்த மனிதர்களுக்கிடையில் தான் எவ்வளவு குரோத மனப் பான்மை.

"சுவந்திகா கட்டாயம் இனக் கலவரம் வருமா?"

"எங்கடை அரசியல்வாதிகளுக்குத் தேவை. அதனாலை கட்டாயம் வரும்."

"இதனாலை பலபேர் இறக்க வேண்டி வருமே. அதைப்பற்றி யாருக்குக் கவலை. நீங்களும் நானும்தான் கவலைப்படுறம்"

"புத்தமதத்தைப் பின்பற்றும் சிங்கள மக்கள் ஏன் இப்படி நடக்கினம்"

"புத்தரைத்தான் கேக்கவேணும்" என்று இடக்காகப் பதில் கூறினாள் சுவந்திகா.

"ஏன் சுவந்திகா ஒரு மாதிரி இருக்கிறீர்?"

"எனக்கொண்டுமில்லை. காந்தன் நீங்கள் பேசாமல் படுங்கோ. நான் போய் சாமான் வாங்கி வாறன்" என்று கூறிவிட்டுப் புறப்பட்டாள். விடைதெரியாத வினாக்களையெல்லாம் மனதுக்குள் எழுப்பியவாறு புரண்டு படுத்தான் காந்தன். வெளியே போன சுவந்திகாவுக்கு வெளிச் சூழ்நிலை சாதாரணமாக இருப்பதாகத் தெரியவில்லை. கூட்டம் கூட்டமாக நின்று கதைத்துக் கொண்டிருந்தனர். தமிழர்கள் நிலத்தைப் பார்த்தபடி வேகமாக நடந்து கொண்டிருந்தனர். ஏதோ ஒன்றுக்காக ஆயத்தங்கள் நடைபெறுவது அவளுக்குப் புரிந்தது. அதுவும் அவளுக்குத் தெரிந்த அப்பாவின் கட்சிக்காரர்கள் முன்னின்று சில ஆயத்தங்கள் செய்வதை அவள் கவனிக்கத் தவறவில்லை. எதேச்சையாக நடக்கப்போகிற இனக்கலவரமாக அவள் இதனை நினைக்கவில்லை. பழிவாங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்குடன் அரசாங்கமே இதனைத் திட்டமிட்டுத் தொடங்குகின்றது என்பதை அவள் புரிந்து கொண்டாள். தன் னினத்தவர்களின் இந்தக் கபடத்தனத்தையும் கையாலாகாத்தனத்தையும் எண்ணி மனதுக்குள் வருத்தப்பட்டுக் கொண்டாள். அவசர அவசரமாக எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டு திரும்பினாள் சுவந்திகா. அவளுடைய இருதயம் வேகமாக அடித்துக் கொண்டிருந்தது.

இனக் கலவரம் ஆரம்பித்தால் தன்னுடைய தகப்பனே ஆட்களை வைத்துக் காந்தனைக் கொல்வார் என்பது அவளுக்குத் தெரியும். ஆகவே ஏதாவது முன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவள் மனம் அவசரப்பட்டது. முதல் வேலையாக இடம் மாறவேண்டும். எங்கே போவது? தகப்பனிடமிருந்து தப்புவது சுலபமான வேலையல்ல என்பதும் அவளுக்குப் புரியும். ஒரேவழி சிங்களப் பிரதேசத்தை விட்டே வெளியேற வேண்டும். சாமான்க ளைக் கொண்டு வந்து வைத்து விட்டுக் காந்தனைப் பார்த்தாள். அவன் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். சிறு குழந்தைபோல் தூங்கிக் கொண்டிருக்கும் அவனைச் சிறிது நேரம் ரசித்து விட்டு மெதுவாகத் தட்டினாள். திடுக்கிட்டுப் பதகழித்துக் கொண்டு எழும்பினான்.
"என்ன பயந்திட்டியள் போல..."
"சீச்சீ..."என்று தன்னைச் சமாளித்துக்கொண்டு நெளிந்தான்
"காந்தன் வெளியிலை நிலைமை சரியில்லை. கலவரம் வரும் போல கிடக்குது" என்று கூறிவிட்டு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். காந்தனுக்குத் திக்கென்றிருந்தது. 58ஆம் ஆண்டு 77ஆம் ஆண்டு கலவரத்தைப்பற்றி கேள்விப்பட்டிருக்கிறான். இப்போ அப்படி ஒரு நிலமை வரப்போகிறது. அதற்குள் இவனும் அகப்பட்டிருக்கிறான். காந்தனுக்குக் கை காலெல்லாம் நடுங்கியது. "சுவந்திகாவைக் கட்டினதாலை விட்டிடுவாங்கள்" அவன் இதயத்தின் ஒரு மூலையிலிருந்து ஒரு ஆறுதல் மொழி வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாங்கள் இந்த அறையை விட்டுப் போகவேணும்"
"ஏன் நீர் இருக்கிறீர்தானே?" என்ன பெட்டைத்தனம்! அவளுக் குப் பின்னால் ஒளிந்து கொள்கின்ற அசட்டுத்தனம்!
"நான் இருக்கிறது தான் பிரச்சினை. என்ரை அப்பா பொல்லா தவர். இந்தக் கலவரத்தைச் சாட்டாக வைத்து உங்களை முடிச் சுப் போடுவர்" இப்படிச் சுவந்திகா சொன்னதும் நிலமையின் பயங்கரம் அவனுக்குப் புரிந்தது.
"என்னை முடிச்சால் அவற்றை பிள்ளை தானே விதவையாவாள்" ஏதோ புத்திசாலித்தனமாகக் கேட்டுவிட்டது போல் அவளைப் பார்த்தான். அவனுடைய அறியாமையை மனதுக்குள் எண்ணிச் சிரித்தபடி..
"அவருக்கு அதைப்பற்றியெல்லாம் கவலையிருந்தால் உங்களை ஏன் பொலிசிலை பிடிச்சுக்கொடுத்தவர்?"
"அவரா பிடிச்சுக் கொடுத்தவர்?"
"பின்னை யாரெண்டு நினைக்கிறியள்?" காந்தன் கலங்கிப் போய்விட்டான். அவனுக்கு இந்த விடயங்களெல்லாம் புரியாத தாகவே இருந்தது. ஆண்டவன் இப்படிப்பட்ட மனிதர்களை யெல்லாம் ஏன் படைக்கிறான்? விடைதெரியாத வினாக்கள் இவனுக்கு மட்டும்தான் வரும் போலும்!
"அப்ப எங்கை போறது?" சலிப்போடு கேட்டான் காந்தன். " நான் ஒரு தீர்மானம் எடுத்திருக்கிறன். அதுக்கு நீங்கள் ஓத்து வரவேணும்"
"என்ன? நாங்கள் யாழ்ப்பணம் போவமோ!"என்றாள்.
"அங்கை என்ன பாதுகாப்பு கொட்டியா கிடக்குது? கலவரப் பயத்திலை உமக்கு விசர் பிடிச்சிட்டுது" அவனுடைய இந்தக் கிண்டல் அவளுக்கு வேதனையைக் கொடுத்தது. அவள் எதுவும் கதைக்கவில்லை.
"நாங்கள் அங்கை போக அப்பா வெளியிலை போ எண்டால் என்ன செய்யிறது?"
"அப்படிச் சொல்லமாட்டார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதெப்படி உறுதியாய்ச் சொல்கிறீர்?"
"நீங்கள் என்னைக் காதலிக்கிறியள் என்று தெரிஞ்ச பிறகு உங்களை வெளியேற்றினவரே? இல்லைத்தானே! அதின்ரை அர்த்தம் அவர் சம்மதம் இல்லாவிட்டாலும் எதிர்க்கமாட்டார் என்பதுதான்" அவளை நிமிர்ந்து வியப்போடு பார்த்தான் காந்தன்.

எவ்வளவு துல்லியமாக மனித மனங்களை எடைபோடுகிறாள். அவள் அவனின் பதிலை எதிர்பார்க்கவில்லை. வேகமாக அவசியமான உடுப்புக்களை மட்டும் பொறுக்கி எடுத்துப் பெட்டியில் அடுக்கத் தொடங்கினாள். அவள் உறுதியாகத் தீர்மானித்துவிட்டதை அவளின் செய்கைகளில் புரிந்து கொண்ட காந்தன் மேற்கொண்டு எதுவும் கதைக்காமல் உதவி செய்வதில் முன்னின்றான். தனிமனித நிலையில் இருக்கும் தங்களிருவருக்கும் இடையிலுள்ள விளங்கிக் கொள்ளும் விட்டுக் கொடுக்கும் மனோபாவம் சமூக நிலையில் ஏன் இன்னும் உருவாகவில்லை?

இதற்கும் விடை அவனுக்குக் கிடைக்கவில்லை. மறுநாட்காலை இவர்களுக்காகவே விடிந்தது. வேளையோடு இருவரும் எழும்பி விட்டனர். சுவந்திகா வெளி நிலவரத்தை அறிந்துவரப் புறப்பட்டாள். போனவள் பத்து நிமிடத்தில் பதட்டத்துடன் ஓடி வந்தாள்.
" காந்தன் நான் நினைச்சது சரி. கலவரம் தொடங்கி விட்டது. காடையர் கூட்டம் கடையெல்லாத்தையும் கொளுத்துது. காணிற தமிழ் ஆக்களையெல்லாம் வெட்டிறாங்களாம்" என்ற பதட்டத்தோடு சொன்னாள்.

யாழ்ப்பாணம் போவது சாத்தியப்படாது. அதே நேரம் இந்த அறையில் இருப்பது அதைவிடப் பயங்கரம்! சுவந்திகா எதையோ தீர்மானம் செய்து கொண்டு வெளியே போனாள். போனவள் பத்து நிமிடத்தில் உள்ளே வந்து காந்தனை அவசரப்படுத்தி வெளியில் காத்து நின்ற ராக்சியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றினாள். காந்தன் பயத்தில் பொம்மை மாதிரி இயங்கினான். அவனது உடல் பதறிக் கொண்டிருந்தது. ராக்சி சிறிய சிறிய வீதிகளால் சென்று பிரதான வீதியில் ஏறியது. பிரதான வீதியில் வைத்துக் காடையர் கூட்டம் இவர்களை மறித்தது.

"தெமள இன்னவாத?"என்றொருவன் கத்தினான். சுவந்திகா பதிலுக்கு ஏதோ கூறினாள். ராக்சி ட்றைவரும் ஏதோ கூறினான். விட்டு விட்டார்கள். ராக்சி விரைந்தது.

"சுவந்திகா இப்ப எங்கை போறம்"

"பேசாமல் வாங்கோ. நான் எல்லாத்தையும் கவனிக்கிறன்"

அவளின் மறைமுகமாக வந்த எச்சரிக்கைத் தொனி அவன் வாயை அடைத்து விட்டது. சுவந்திகா வழிகாட்ட ராக்சி ஒரு குறுக்கு வீதியில் சென்று நின்றது. ராக்சிக்குரிய பணத்தைக் கொடுத்து விட்டுக் காந்தனையும் அழைத்துக் கொண்டு அந்த நாற்பதாம் இலக்க வீட்டினுள் நுழைந்தாள். அது சுவந்திகாவின் நண்பியின் வீடு. நடுத்தர வயதுள்ள மனிதர் இவர்களை வரவேற்றார்.

அவரது முகத்தில் சாந்தரேகைகள் அமைதியாக ஓடிக் கொண்டிருந்தன. வரவேற்பறையில் இருந்தபடியே வீட்டை ஒரு தரம் நோட்டம் விட்டான் காந்தன். சுவந்திகாவை நண்பி வந்து அழைத்துச் சென்றாள். வரவேற்பறையில் எதிரும் புதிருமாக அந்த மனிதரும் காந்தனும் இருந்தனர்.

"ஐ. ஆம் பெர்னாண்டோ" என்று ஆங்கிலத்தில் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பதிலுக்குக் காந்தனும் தன்னை அறிமுகம் செய்தான். அவருக்குத் தமிழ் தெரியாது. காந்தனுக்குச் சிங்களம் தெரியாது. இருவருக்கும் நன்கு தெரிந்த ஆங்கிலம் தொடர்புப் பாலமாகச் சரளமாக உரையாடத் தொடங்கி னார்கள். வீட்டை மிக அழகாக வைத்திருந்தனர். புத்தரின் திருவுருவம் அழகாக வைக்கப்பட்டிருந்தது. காந்தனின் கண்கள் அப்படியே சுற்றி வரும் போது ஓரிடத்தில் நிலைகுத்தி நின்றது. அவனின் வியப்பைப் புரிந்து கொண்ட பெர்னாண்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"லெனின்"என்றார்.

"புத்தரும் லெனினும் ஒரே வீட்டில்..?" என்று இழுத்தான்.

"அதனாலென்ன மதங்களுக்கெதிராகப் புரட்சி பண்ணியவர் புத்தர். தொழிலாளர் நலனுக்காகப் புரட்சி செய்தவர் லெனின். புத்தர் என் மனைவிக்காக. லெனின் எனக்காக." என்று கூறிவிட்டுச் சிரித்தார் பெர்ணாண்டோ.

"எனக்கும் இப்படியான அபிப்பிராயம் உண்டு. இவர்கள் எல்லாம் காலத்துக்குக் காலம் மனித குலத்தை மீட்பதற்காக உதித்தவர்கள்"

"வெளியிலே மனிதர்கள் தம்மைத் தாமே வெட்டிக் கொண் டிருக்கும் போது நாம் இருவரும் புத்தரைப் பற்றியும் லெனினைப் பற்றியும் கதைத்துக் கொண்டிருக்கிறோம். இது சரியாகப்ப டுகிறதா உங்களுக்கு"

"ஏன் நாங்களும் வெட்டிக் கொள்வோம் என்கிறீர்களா?"

"இல்லை அவர்களும் எங்களைப் போல கதைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.?"

"அளவுக்கு மீறி ஆசைப்படுகிறியள்."

"எதிரும் புதிருமாக உள்ள சமூகத்தைச் சேர்ந்த இருவரும் இன்பமாக உரையாடிக் கொண்டிருக்கும்போது அதே சமூகங் களைச் சேர்ந்த மற்றவர்கள் ஏன் அடிபட்டுக் கொண்டி ருக்கிறார்கள் என்பதைக் கொஞ்சம் கூட என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை"

இதற்குப் பதில் கூறாமல் பெர்னாண்டோ புன்னகைத்தார்.

" இதற்குக் காரணம் உங்கள் இளைஞர்கள்"

" ஏன்?"

" உரிமையைக் கேட்பது தவறில்லை. தேர்ந்தெடுத்த பாதை தவறானதே. இன்று அங்கே தோன்றியுள்ள சண்டை வெறும் குழுச் சண்டையாகவே உள்ளது. மக்கள் கலந்து கொண்ட ஒன்றாக இல்லை. இதனால் இனவாதம் இன்னும் கூடுமே யொழிய குறைய வாய்ப்பில்லை. அங்கே குழு நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் போது சிங்கள இனவெறிகொண்ட அரசியல்வா திகள் இதை வாய்ப்பாகக் கொண்டு முழுச் சிங்கள சமூகத் தையும் இலகுவாக அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிராகத் திருப்பி விட்டுவிட்டு விட்டார்கள்." இப்படி அவர் கூறுவதை யும் அவரின் தொலை நோக்குச் சிந்தனையும் அவனை வியப்பி லாழ்த்தியது.

"டாடி..... அவரைச் சாப்பிடக் கூட்டி வாருங்கோ" என்ற குரல் கேட்டு இருவரும் எழும்பினார்கள். வெளியில் தமிழரைத் தேடித் தேடி வெட்டுகிறார்கள். இங்கே மரியாதையாக அழைக்கப்பட்டு உணவு பரிமாறப்படுகிறது. இதற்கு நான் ஒரு சிங்களப் பெண்ணை மணந்தது காரணமா? அல்லது மனிதா பிமானம் காரணமா? இதே பெர்னாண்டோ இன்னொரு தமிழரை ஆதரிப்பாரா? வினாக்கள் மீண்டும் கோர்வை களாகின்றன. சாப்பிடும் போது பெர்னாண்டோ கேட்டார்.

"மிஸ்டர் காந்தன் நீங்கள் சமுதாயத்தைப் பற்றி நிரம்பச் சிந்திக்கிறியள்"

"ஏன் நீங்கள் சிந்திப்பதில்லையா?"

"சிந்திக்க எனக்கு நேரம் இல்லை"

" நீங்கள் சமூகத்தைப் பற்றி நடைமுறைக்கு சாத்தியப்படாத தத்துவங்களை முன்னிறுத்திச் சிந்திக்கிறீர்கள்?" சுவந்திகா குறுக்கிட்டாள்.

"ஏன் அப்படி நினைக்கிறீர்கள்? இன்றைக்கு ஆரம்பிக்கப்பட் டுள்ள ஆயுதப் போராட்டம் வெற்றியடையக் கூடிய சாத்தியம் உண்டா? உலக வல்லரசுகளும் அயல் நாடுகளும் ஆயுதந் தாங்கிய குழு வெற்றி பெறுவதை விடுவார்கள் என்று நினைக் கிறீர்களா?" அவருடைய வாதத்தில் ஒரு நியாயம் இருப்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டதால் அங்கு அமைதி நிலவியது. அவர் தொடர்ந்தார்.

" மக்கள் மீது நம்பிக்கை இல்லாமல் மக்களை தமது கோரிக்கைகளுக்குச் சார்பாக மாற்றாமல் வெறுமனே ஆயுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலத்தை நம்பினால் அந்த ஆயுதம் இல்லாதபோது நேர டியாகத் தோல்வியை நோக்கித்தான் போராட்டம் செல்லும். அப்போது சொந்த மக்களே அவர்களைக் காட்டிக் கொடுக்க ஆரம்பித்துவிடுவார்கள் ." பெர்ணான்டோவின் விளக்கம் அவர்களை அதிர வைத்தது.

காந்தனின் சாப்பாட்டுக் கோப்பை வெறுமையாகிக் கொண்டிருந்தது.

"கொஞ்சம் சோறு போடவா?" சுவந்திகாவின் நண்பி கேட்டாள்.

"இல்லை காணும்"

"உங்களுக்கு....." அவரும் போதும் என்று விட்டார். சிறிது நேரம் எதுவும் கதையாமல் சாப்பிட்டனர். சாப்பிட்ட பின் இருவரும் வரவேற்பறைக்கு வந்தனர். சுவந்திகாவும் கூட வந்து அமர்ந்தாள். "சுவந்திகா சந்திரன் பாடு தெரியாது. ஒருக்கா போன் பண்ணிப்பார்" சுவந்திகாஎழுந்து சென்று சந்திரனைப் பொறுப்புக் கொடுத்த ஏஜன்சிகாரனுக்குப் போன் பண் ணினாள். சந்திரன் ஜெர்மனிக்கான விமானத்தில் ஏறி விட்ட தாகச் செய்தி வந்தது. செய்தியைக் காந்தனுக்குச் சொன்னாள். அப்போது மௌனத்தைக் கிழித்துக் கொண்டு வீட்டு மணி அடித்தது.

மணிச் சத்தத்தைத் தொடர்ந்து பெர்னாண்டோ கதவைத் திறந்தார். பெர்னாண்டோவின் மனைவி தான் நின்றிருந்தாள். "வெளியிலை சரியான பிரச்சினை. எல்லாத் தமிழ்க் கடையும் எரிஞ்சிட்டுது. கன தமிழ் ஆக்கள் றோட்டிலை செத்துக் கிடக்கி னம்"என்றாள்.

"பொலிஸ் இல்லையோ? பொலிசும் சேர்ந்துதான் செய்யுதாம்" பெர்னாண்டோ கவலையுடன் காந்தனைப் பார்த்தார்.

"சமூகச் சீரழிவைப் பார்த்தீங்களா? வேலியே பயிரை மேயிறமாதிரி பொலிசே பகையை வளர்க்குது." என்றான் காந்தன்.

"அப்படிச் சொல்லாதேயும் இது அரசியற் பிரச்சினை. இதைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கியதே தமிழ் இளைஞர்கள்தான்"

காந்தன் சோகமாக இருப்பதைச் சுவந்திகா பார்த்துக் கொண்டிருந்தாள். பெர்னாண்டோ அதற்கு மேல் கதைக்கவில்லை. நிறுத்திக் கொண்டார்.

"அடுத்து நாங்கள் என்ன செய்வது" சுவந்திகாகேட்டாள்.

"இஞ்ச நாலைந்து நாளைக்கு மறைஞ்சிருங்கோ பிறகு பார்ப்பம்" என்றார் பொர்னாண்டோ.

சுவந்திகாவுக்கு இதில் உடன்பாடில்லை. தாங்கள் இங்கிருக்கப்போய் இவர்களுக்கும் ஏதும் பிரச்சினை வந்து விடக்கூடாதே என்று பயந்தாள். காந்தனுக்கும் சுவந்திகாவிற்கும் ஒரு அறை ஒதுக்கப்பட்டது. இருவரும் கட்டிலில் படுத்துக் கிடந்தபடியே சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

"காந்தன் என்ன கனக்க யோசிக்கிறியள்"

"இந்தச் சமூகத்தை நினைக்கத்தான் பயமாயிருக்குது சுவந்திகா"

"நாங்கள் அடுத்து என்ன செய்யிறதெண்டு யோசியாமல் வேறை ஏதோ யோசிக்கிறியள்"

"எனக்கு ஒண்டுமே புரியாதாம்"

"காந்தன் கன நாளைக்கு நாங்கள் இங்கே இருக்கக் கூடாது"

"எனக்குத் தெரியும் என்ன செய்யலாமெண்டு நினைக்கிறாய்?"

"அகதிகள் முகாமுக்குப் போய் அங்கையிருந்து யாழ்ப்பாணம் போவம்" என்று கூறியபடியே உறங்கிப் போனாள்.

அவளது தோளில் தலையை வைத்தபடியே அவனும் உறங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21

அறிமுகமில்லாதவர்கள் வீட்டுக்குள் நுழைந்து அறிமுகமாகி வெளிவந்த சிவகுமார் வெறிச் சோடிக் கிடக்கும் வீதியை ஒரு தடவை பார்த்தான். ஆள் நடமாட்டம் என்பது மருந் துக்குக் கூட இல்லாமலிருந்தது. ஒரு இ.போ.ச வண்டி வந்தது. கையைக் காட்டி மறித்து அதில் ஏறிக் கொண்டான். பஸ்சில் அவன் நடத்துனர் செலுத்துனர் இந்த மூவரைத் தவிர வேறு எவருமேயில்லை.

தம்பி "எவ்விடம்" நடத்துனர் கேட்டார்.

"இது எங்கை போகுதண்ணை"

"பருத்தித்துறைவரை போகும் தம்பி"

"அப்ப பருத்துறைக்கொரு ரிக்கட் போடுங்கோ" என்ற கூறிவிட்டுப் பின் சீட்டில் போய் அமர்ந்து கொண்டான். தன் எண்ணத்திற்குக் குலுங்கிக் குலுங்கி அழுதபடி வண்டி போய்க் கொண்டிருந்தது. நடத்துனர் ரிக்கற்றைக் கொண்டுவந்து கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காசைக் கொடுத்துக் கொண்டே அண்ணை ரவுணுக்கை என்ன பாடு?"என்று கேட்டான்.

"அதை ஏன் கேட்கிறாய் தம்பி. கனசனத்தை முடிச்சுப் போட்டான்கள். பாவம் சனங்கள்...... எங்கடை பெடியன்கள் சரியான கெட்டிக்காரன்கள்."

"ஏன் இவ்வளவு சனத்தை சாக்காட்டினதுக்கோ?"சிவகுமார் கோபமாகக் கேட்டான்.

"சனத்தைச் சாக்காட்டினது ஆமிக்காரன்கள் தம்பி. எங்கடை பெடியன்கள் ஆமிக்காரன்களையெல்லோ சாக்காட்டினவங்கள்"

"ஆமிக்காரனைச் சாக்காட்டினால் அவங்கள் சனத்தைச் சாக் காட்டுவாங்கள் என்பது உங்கடை பொடியன்களுக்குத் தெரி யாதோ?"வார்த்தைகள் வேகமாக வெளிவந்தன. நடத்துனர் முழிமுழியென்று முழித்தார். இடையில் பஸ் நின்று வேறு இருவரை ஏற்றியது. சிவகுமாரோடு கதைப்பது விசர் வேலை யென்று நடத்துனர் நினைத்தாரோ என்னவோ அதற்குப் பிறகு அவனுக்குக் கிட்ட அவர் வரவேயில்லை.

இயல்பாகவே இச் சமூகத்தின் மீது பாசங்கொண்டவன் சிவகுமார். பெருமையும் தனிமைத்துவமும் சமூகக் கட்டுக்கோப்பும் கொண்ட இச் சமூகம் தவறான ஒரு பாதையில் தவிர்க்க முடியாமல் பயணத்தைத் தொடங்கி விட்டதோ என்று தனக்குள் முறுகினான். திறப்புவில் காரசாரமாக இதைப்பற்றி எழுத வேண்டுமென்று தீர்மானித்த வண்ணம் வீடு வந்து சேர்ந்தான். வந்த போது நேரம் பதி னொன்று. கவலையே உருவாக இருந்த இதிகா அவனைக் கண்டதும் மலர்ந்த விதத்தை எப்படி வர்ணிப்பது? உள்ளே வந்த சிவகுமார் களைப்பு மிகுதியால் தொப்பென்று கதிரையில் இருந்தான். இதிகா ஓடிப்போய் தேநீர் போட்டு வந்தாள். வாங்கிப் பருகினான். எனக்கு அலுப்பாய் இருக்குது இதிகா படுக்கப்போறன் என்று சொல்லிவிட்டு அறைக்குள் நுழைந்து விட்டான். படுக்கையில் படுத்தானேயொழிய நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவில்லை. எழுந்து யன்னல் அருகே வந்து வெளியே பார்த்தான். அப்போது தான் அந்தச் சம்பவம் நடந்தது. வெளிக் கதவருகில் ஒரு வாலிபன் நின்றிருந்தான். அவன் சுற்றும் முற்றும் பார்ப்பதை அறைக்குள் நின்றவாறே கவனித்த சிவகுமார் யன்னல் ஓரமாக மறைந்து நின்று அவதானித்தான். அவன் கதவைத் தட்டவும் விரைந்து கதவடிக்குச் சென்ற இதிகா திரும்பிச் சிவகுமாரின் அறையைப் பார்த்தாள். சிவகுமார் மறைந்து விட்டான். அந்த வாலிபன் கடிதம் ஒன்றைக் கொடுத்து மெதுவாக ஏதோ சொல்வதையும் சிவ குமார் அவதானித்தான். யார் இந்த வாலிபன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22

கதவு தட்டப்படும் ஓசை கேட்டுக் காந்தனும் சுவந்திகாவும் திடுக்கிட்டு எழும்பினர். உடையைச் சரி செய்து கொண்டு கதவைத் திறந்தாள் சுவந்திகா. Good morning என்று கூறியபடி பெர்னாண்டோ நின்றிருந்தார். பதிலுக்குக் Good morning கூறியபடியே நேரத்தைப் பார்த்தாள்.

பத்து மணி!

இவ்வளவு நேரமாகவா படுத்திருந்தோம்! அவர்களை எழுப்பி விட்டு விட்டு அவர் போய் விட்டார். சுவந்திகா காந்தனையும் எழுப்பி காலைக் கடன்களை முடித்தார்கள். இவர்கள் வரும்வரை பெர்ணான்டோ வரவேற்பறையில் காத்திருந்தார். எதற்குமே பதட்டப்படாத அவர்கூட இன்று பதட்ட நிலையில் இருந்தார். வரவேற்பறைக்கு வந்த சுவந்திகாவும் காந்தனும் ஆளை ஆள் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவந்திகாவின் நண்பி வேலைக்குப் போய் விட்டிருந்தாள்.
"வெளியிலை நிலமை நிரம்ப மோசம்" என்றார் பெர்னாண்டோ. சுவந்திகாவும் காந்தனும் ஒருவரையெருவர் பார்த்துக் கொண்டனர்.
"தமிழ் ஆக்களின்ரை ஒரு கடை கூட மிச்சமில்லை. கன தமிழ் ஆக்களின்ரை பிரேதங்கள் ரோட்டிலை கிடக்குதாம். அரசாங்கத்தின்ரை கட்டுப்பாட்டிலை படைகள் இல்லையாம்" காந்தனின் முகம் கறுத்திருந்தது.
"யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு லொறியிலை புத்த பிக்குகளின்ரை பிரேதங்கள் வருகுதெண்டும் கதைக்கிறான்கள்" இடையில் புகுந்த திருமதி பெர்னாண்டோ கூறினார்.
"வெள்ளவத்தைப் பகுதியிலை தமிழரை மறைத்து வைத்திருந்த சிங்கள ஆட்களின்ரை வீடுகளும் சரியாம்"
"அரசாங்கம் என்ன செய்யுது?"காந்தன் கேட்டான்.
"அரசாங்கம் என்ன செய்யிறது தம்பி. அரசின்ரை கையிலை இராணுவமோ பொலிசோ இல்லை. எல்லாம் தன்னிச்சையாய் இயங்குதாம்"
"கடவுள் கூடப் பார்த்துக் கொண்டு தானே இருக்கிறார்"காந்தன் பொங்கி வெடித்தான்.
"இப்ப தமிழ் ஆக்களைப் பள்ளிக்கூடம் வழிய அகதிகளாய் விடுகினம்"
"சொந்த நாட்டிலேயே அகதிகளாகிற நிலமை தமிழருக்கு" சுவந்திகாகூறினாள்.
"எல்லாமே பயங்கரமாய் இருக்குது. வெள்ளவத்தையிலை தமிழ்க் குடும்பத்தைப் பாதுகாத்து வைத்ததற்காக அந்தச் சிங்களக் குடும்பத்தையும் கொலை செய்து போட்டான்கள்" திருமதி பெர்னாண்டோ கூறினாள். சுவந்திகாவிற்கும் காந்தனுக்கும் நிலமை புரிந்தது.
"அப்ப நாங்களும் அகதிமுகாமுக்குப் போவம்" சுவந்திகா கூறினாள். பெர்னாண்டோவும் மனைவியும் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறவில்லை.
பேச்சுக்குத் தன்னிலும் வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்களைக் குற்றம் சொல்ல முடியாது. நிலைமை அப்படி! சுவந்திகா தயாரானாள். எப்படி போவது?
"எனக்குத் தெரிஞ்ச ஆமிக்கொமாண்டர் இருக்கிறார். அவரோடை கதைச்சுப் பார்ப்பம்" என்றார் பெர்னாண்டோ. இருவரும் தலையாட்டினார்கள். பெர்னாண்டோ காரியத்தில் இறங்கினார். பலமுறை முயற்சி செய்து ஒரு மாதிரியாகத் தொடர்பு கிடைத்தது. விடயத்தைப் பக்குவமாக எடுத்துக் கூறினார். இன்னும் சிறிது நேரத்தில் அங்கு வருவதாக பதில் கூறினார். பதிலைக் கூறிவிட்டுத் தனக்கும் அந்த இராணுவக் கொமாண்டருக்கும் உள்ள தொடர்பு பற்றி விளாசித் தள்ளினார். இதை ரசிக்கும் நிலையில் சுவந்திகாவும் காந்தனும் இல்லை. ஒப்புக்காகக் கேட்டுக் கொண்டிருந்தனர். நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் ஜீப்பொன்று அவர்கள் வீட்டின் முன் வந்து நின்றது. நல்ல திடகாத்திரமும் முக வசீகரமும் கொண்ட அந்த ஆமிக்கொமாண்டர் இவர்களுக்குக் கைகொடுத்துக் காலை வணக்கம் சொன்னார். பின்பு நேரத்தைக் கருத்தில் கொண்டு எங்களை வந்து ஜீப்பில் ஏறச் சொன்னார். ஜீப்பில் செல்லும் போது வழி நெடுகப் பார்த்த காந்தன் கலங்கிக் கொண்டு சென்றான்.

ஒரு படசாலையில் இயங்கிக் கொண்டிருந்த அகதிகள் முகாமில் எங்களை விட்டு விட்டுப் போய் விட்டார். கலங்கிக் கனத்த முகங்களுடன் மனித கூட்டம் ஒன்று அங்கிருந்தது. அடி வாங்கி யவர்கள் தப்பி வந்தவர்கள் பாலியல் வன்முறையினால் பாதிக்கப் பட்ட பெண்கள் என்று பலரகமாக இருந்தார்கள். இவர்களோடு ஒரு ரகமாகக் காந்தனும் சுவந்திகாவும் சேர்ந்து கொண்டனர். குறைந்தது சுமார் 500 பேர் இருப்பார்கள். இன்று காலைதான் அந்த அகதிமுகாம் திறக்கப்பட்டிருந்தது. இன்னும் உணவு சம்பந்தமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்கள் ஒழுங்கு செய்யப்படவில்லை. குழந்தைகள் பசியால் அழுதன. பெரியவர்கள் பசியால் பசியை விழுங்கிக் கொண்டிருந்தனர். சோகமயமான அந்தச் சூழலுக்குள் வந்து சுவந்திகாவும் காந்தனும் ஒரு மூலையில் ஒதுங்கினர். இருவர் மனமும் பாரமாக இருந்தன. போதாகக் குறைக்கு சுவந்திகாவைச் சிலர் சந்தேகக் கண்களோடு பார்க்கவும் செய்தனர். இதை உணர்ந்த சுவந்திகா காந்தனைத் தட்டி மெதுவாகக் கூறினாள்.

சுவந்திகா கூறிய இந்தச் செய்தி அவனுக்குக் கலக்கத்தைக் கொடுத்தது. இந்தப் பார்வைகளைப் பற்றிக் கொஞ்சமும் அவன் சிந்திக்கவில்லை. எல்லாத் தமிழரும் சேர்ந்து சுவந்திகாவைக் கொல்ல வந்தால் என்ன செய்வது? எந்தப் பிரச்சினைக்கும் மனதிற்குள் கேள்வி எழுப்புவதோடு அவன் சோர்ந்து போகிறான். அவன் வினாக்களுக்கு விடை கிடைப்பதேயில்லை. விடைக்காக அவன் முயற்சிப்பதும் இல்லை.

ஏனென்றால் அவன் சகலதும் கடவுளின் நிரல்களே என்று மனதார நம்புகின்றான். வருவது பாதகமாக இருந்தாலும் சந்தோசத்தோடு ஏற்றுக் கொள்ளும் மன நிலை கொண்டவனாகிறான். படைக்கப்பட்ட உயிர்களை வாழ விடுவதும் வாழ்விப்பதும் அழிப்பதும் அவனே என்று உள்ளார நம்புகிறவன். கருத்து முதல் வாதத்தின் அப்பட்டமான ஒரு குழந்தை இவன். காந்தனிடத்தில் உள்ள இந்த குணாம்சம் தான் அவன் மேல் ஒரு கவர்ச்சியை சுவந்திகாவிற்கு ஏற்படுத்தியது. இருவரும் இணைந்த பின் அதே குணாம்சம் துன்பத்தையும் ஏற்படுத்தியது. அவனுக்காகச் சகலத்தையும் உதறித் தள்ளிவிட்டு வந்து விட்டாள். தன்னுடைய சமூகத்தை விட்டுப் புதிய சமூகத்தின் கவர்ச்சிப் பிரதேசத்திற்குள் வந்துவிட்டாள். இந்தச் சமூகம் அவளைக் கவருமா? கலைக்குமா? என்பது ஒரு வினாக்குறி தான்! ஆனால் இனி அவளுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வும் சாவும் இந்தச் சமூகத்தோடுதான் என்பது முடிந்த முடிவு.

"சாப்பாடு வந்திட்டுதாம்" பக்கத்திலிருந்த வயது போன மனிதர் கூறிக் கொண்டே எழும்பிப் போனார்.

சுவந்திகாவினால்சும்மா இருக்க முடிய வில்லை. சாப்பாட்டுக்காக எழும்பிப் போன சுவந்திகா வாசலில் தகப்பன் நிற்பதைப் பார்த்து அதிர்ந்து விட்டாள். இவர் இங்கே இப்படி? அவள் பார்த்த அதே நேரம் அவரும் பார்த்து விட்டார். சுவந்திகாவின் நெஞ்சு ஒரு முறை அதிர்ந்தது. விறுவிறென்று நகர்ந்து மறுபுறம் சென்றுவிட்டாள். சாப்பாடு வந்ததாக எல்லோரும் கதைத் தார்கள். ஆனால் யாருக்குமே சாப்பாடு கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சுவந்திகா சென்று பார்த்தாள். இத்தனை கவலைக்குள்ளும் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. அங்கே சாப்பாடு வரவில்லை. அரிசியும் மாவும் மூட்டையாக வந்திருந்தது. சாப்பிட விரும்பினால் சமைத்துச் சாப்பிடுங்கோ. இல்லை எண்டால் பட்டினி கிடவுங்கோ என்று போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

தமிழர்களுக்கென்று ஒரு விசேட குணம் உண்டு. ஏதாவது காரியம் செய்ய வேண்டுமென்றால் உடனே ஒரு குழு உருவாகும். குழுவின் தலைவர் காரியதரிசி எல்லாம் தெரிவு செய்யப்பட்டு ஈற்றில் காரியம் முடியமுன்பு அடிபட்டு எல்லாரும் கலைந்த தலையைப் பிய்த்துக் கொண்டு நிற்பார்கள். இது பரம்பரைக் குணம். இங்கும் அப்படித்தான். இங்கும் ஒரு தொண்டர் குழு உருவானது. குழு வேகமாகச் செயற்பட ஆரம்பித்தது. முதற் செயற்பாடு உணவு வழங்குவது என்று தீர்மானித்தனர். கலவரத்தில் பாதிக்கப்பட்ட சாப்பாட்டுக் கடைத் தொழிலாளர்கள் தாமாக முன் வந்தனர். சமையல் வேகமாக நடந்தது. பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்பர். எல்லோரும் நகமும் சதையும் போல் நின்று காரியமாற்றினார். துன்பத்தில் இருப்பதைக் காணும் அந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியைப் பார்க்க ரம்மியமாக இருந்தது. சுவந்திகாவும் அவர்களுள் ஒருத்தியாக நின்று உதவி புரிந்தாள்.

"அது தான் தமிழ்ப் பெடியனைக் கட்டின சிங்களப் பெட்டை உவள் என்ன திட்டத்தோட இதுக்குள்ளை வந்திருக்கிறாளோ...?"

"நஞ்சு கிஞ்சு கலந்து கூண்டோடை முடிக்கப் போறாளோ என்னவோ...? வெளியிலை உவளின்ரை ஆட்கள் வெட்டிறான்கள். உவள் இஞ்சை சமைக்க வந்திட்டாள்..." சுவந்திகாவின் காதில் இந்த வார்த்தைகள் நுழையாமலில்லை. பொறுமையாகச் சகித்துக் கொண்டு நின்றாள். இந்த வசனங்களைச் சுவந்திகா மட்டுமல்ல இன்னுமொரு வாலிபனும் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் தான் தொண்டர் குழுத்தலைவன். அவன் மெதுவாக நகர்ந்து கதைத்தவர்களை நெருங்கினான். யாருக்கும் தெரியாமல் அவர்களை எச்சரித்த விதத்தை சுவந்திகாவின் கண்கள் விழுங்கிக் கொண்டன. நன்றியோடு ஒரு புன்னைகை அவனை நோக்கிச் சென்றது. சுவந்திகா திரும்பவும் காந்தன் இருக்குமிடம் வந்தாள். காந்தன் அவ்விடத்தில் இல்லை. மெதுவாக வாசற் பக்கம் கண்களைச் சுற்றிப் படரவிட்டாள். தகப்பன் நிற்கிறாரா என்று பார்த்தாள். அவர் அங்கு இல்லை. அவளுக்கு நிம்மதியாக இருந்தது. காந்தனையும் காணவில்லை. எங்கே போயிருப்பான்?. சிந்தித்தபடியே நிலத்தில் இருந்து விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23

ஒரு வாலிபன் வந்ததும் அவன் இதிகாவுக்கு கடிதம் கொடுத்ததும் சிவகுமாருக்குக் குழப்பத்தைக் கொடுத்தாலும் எதுவும் நடவாதது போல் மறுநாள் நடந்து கொண்டான். அவளுடைய நடைமுறையில் மட்டும் அவன் பல மாறுதல்களை அவதானிக்கத் தவறவில்லை. அன்றைய தினசரியுடன் வந்த சுந்தரம் மாஸ்டர்

"தம்பி கொழும்பிலை பெரிய கலவரமாம்" என்ற செய்தியைக் கூறினார். சிவகுமார் எதிர்பார்த்த ஒன்றுதான். மக்களின் மனநிலைகளையும் யதார்த்தங்களையும் புரிந்து கொள்ள முடியாத அரசியல்வாதிகளால் இதைவிட வேறு என்ன செய்ய முடியும்? மகன் என்ன பாடோ பயமாயிருக்குத் தம்பி என்று அங்கலாய்த்தார் சுந்தரம் மாஸ்டர்.

"பயப்படாதையுங்கோ மாஸ்டர் அவருக்கு ஒண்டும் நடக்காது"என்று கூறினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார்
"இதிகா எங்கை மாஸ்டர்? "
"எனக்கு அவள் ஒண்டும் சொல்லிறதில்லைத் தம்பி. காலமை வெள்ளென எழும்பி ஆரோ சிநேகிதியிட்டைப் போட்டு வாறனெண்டிட்டுப் போனவள்.... இன்னும் காணயில்லை" என்று சலிப்போடு கூறியவர்
"மெய்யே தம்பி சந்திரன் ஜெர்மனிக்குப் போயிருப்பானே" சிவகுமாருக்கு அவரைப் பார்க்கப் பரிதாபமாகவிருந்தது.
"சந்திரன் கட்டாயம் ஏறியிருப்பார். அவரை நான் ஒரு பொறுப்பான ஆளிட்டைத்தான் குடுத்திட்டு வந்தனான்"

இதிகாவின் போக்கு மாற்றம் அவனுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. வெளியில் வந்து வீதியைப் பார்த்துக் கொண்டு நின்றான். நேற்று ஒரு பொடியன் வந்து கடிதம் கொடுக்கிறான். இன்றைக்குக் காலையே எழும்பிப் போய்விட்டாள். சிவகுமாருக்கு வியப்பாகவும் அதேநேரம் பயமாகவுமிருந்து.

அப்போது வாசலில் மணியடித்தபடி தபாற்காரன் வந்திருந்தான். வாசலுக்குச் சென்று கடிதத்தை வாங்கினான். கடிதம் வந்தது. கடிதத்தை வாங்கிய சிவகுமார் முகவரியைப் பார்த்தான். அது அவனுக்குத்தான் வந்திருந்தது. சாந்தா அனுப்பியிருந்தாள். அழகான ஒரு சிறுகதை **திறப்பு**க்கு அனுப்பியிருந்தாள். கதையின் தலைப்பு இனவெறி. மேலோட்டமாக அதனை வாசித்துப் பார்த்த சிவகுமார் மனதுக்குள் மகிழ்ச்சி அடைந்தான். சாந்தாவின் அறிவும் தூரப்பார்வையும் அவனுக்கு வியப்பைக் கொடுத்தன. சிறிய வயதில் பெரிய சிந்தனைகளை என்ன லாவண்யமாகப் புகுத்துகின்றாள். இவன் இப்படியாக நினைத்துக் கொண்டிருக்கும் போது இதிகா வெளியிலிருந்து அவசரஅவசரமாக வந்தாள்.வந்தவள் என்ன கையில் கடிதம் என்று கேட்டுக் கொண்டே அவனருகில் வந்தாள். கதையொன்று **திறப்பு**க்கு வந்திருக்குது என்றவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை அவளிடம் கொடுத்தான். அதை வாங்கிப் படித்த அவள் "நல்லாயிருக்குது யார் எழுதியது?"என்றாள்.

"சாந்தா"

"ஆரிந்த சாந்தா.. அவளுக்கென்னண்டு உங்கடை விலாசம் தெரியும்?" என்ன தான் அறிவு பூர்வமான சிந்தனை உடைய வளாக இருந்தாலும் இன்னுமொரு பெண் சிவகுமாரினுடைய விலாசத்தைத் தெரிந்து கொள்ளவோ அவனுக்கு எழுதுவதையோ அங்கீகரிக்க முடியாது தவித்தாள். அவளுடைய கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட போதிலும் புரியாத மாதிரிக் கதையைத் தொடர்ந்தான். சிவகுமார் சாந்தாவைச் சந்தித்த சூழ்நிலையையும் அந்த ஒரு இரவில் சாந்தாவின் உயர்ந்த பழக்க வழக்கங்களைத் தான் அவதானித்துக் கொண்டதையும் அவளிடம் உள்ள இலக்கிய உயர்வையும் தன்னால் முடிந்த ளவுக்கு விபரித்தான் சிவகுமார். இவனது இந்த விபரிப்பு இதிகாவுக்கு எரியிற நெருப்பிலை எண்ணெய் ஊற்றியது போலாயிற்று. முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டு போய்விட்டாள். அவளைச் சீண்டுவதில் அவனுக்கொரு இன்பம். போனவளின் பின்னால் தொடர்ந்து போனான். இதிகா... பிகு பண்ணிக் கொண்டு போனாலும் அவன் கூப்பிட்டதும் நின்று விட்டாள்.

"திறப்பு கெதியாய் வெளியிடவேணும்" கதையைத் திசை திருப்பினான். திறப்பு வெளிவர வேண்டுமென்பதில் அவ ளுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு என்பது அவனுக்குத் தெரியும். திறப்பு பற்றிக் கதைத்ததும் நின்ற இதிகா

"ஏன் சாந்தாவைக் கேட்கலாமே?"என்றாள். சிவகுமார் சிரித்துக் கொண்டே

"இது என்ன இதிகா சின்னப் பிள்ளையைப் போல"என்றான். அப்போ சுந்தரம் மாஸ்டர் உள்ளே நுழைந்து கொண்டிருந்தார். உள்ளே நுழைந்த சுந்தரம் மாஸ்டர் இருவரும் கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்துப் புன்னைகைத்தபடி தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலையில் இறங்கினார். அவன் கூறியது அவளுக்குச் சிரிப் பாக இருந்தது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துவிட்டுக் கிணற்றுக் கட்டில் அமர்ந்தனர்.

"யாழ்ப்பாணத்திலை நடந்த நிகழ்ச்சி தமிழரின்ரை விடுதலைப் பாதையிலை ஒரு திருப்புமுனை" என்றாள் இதிகா.

"எந்த வகையில்?"

"நெடுக அரசியல் வாதிகள் சொல்லிற பொய்களிலை மயங்கி குட்டக் குட்ட குனிந்து கொண்டிருந்த தமிழ் இனம் நேற்றைய நிகழ்ச்சி மூலம் ஒரு நாட்டின்ரை இராணுவத்துக்கு சவால் விட் டிருக்கு"

"இல்லையே சனம் சவால்விடவில்லையே. இளைய தலை முறையைச் சேர்ந்த பத்துப்பேர் சேர்ந்து இரணுவத்தைத் தாக்கியிருக்கினம். இவை எப்படி சனத்தைப் பிரதி நிதித்துத்து வப்படுத்தலாகும். இது தமிழ் இனவழிப்புக்கான ஆரம்பம்"

"காலப்போக்கிலை இது நிகழலாம் தானே. சீனாவிலை மாசேதுங் கூட ஆரம்பிக்கேக்கை பத்துப் பேர்தான். எல்லா நாட்டிலையும் ஆயுதப் போராட்டம் ஒரு குழு நிலையிலை ஆரம்பிச்சுப் பிறகு பரந்த மக்கள் போராட்டமாகத்தானே மாறியிருக்கு.. என்னைப் பொறுத்தவரை நிச்சயமாய் இந்த நிகழ்ச்சி மக்களைச் சிந்திக்க வைக்கும். மக்களுக்குச் சிந்திக்கிற துக்கான ஒரு தைரியத்தையாவது கொடுக்கும்"

" மாசேதுங் குழு நிலையில் இருக்கும்போது கிராமங்களில் உள்ள மக்கள் மத்தியில் பரவி வேலை செய்யும்படி தன் னுடைய தோழர்களைப் பணித்தார். ஆயுதம் பாவிக்கமுன் அதன் அவசியம் பற்றி மக்களுக்குத் தெரிய வேண்டு மென்று ஒவ்வொரு கிராமமாக அந்த மக்களோடு மக்களாகக் கலந்து வேலை செய்தார். அப்படிச் செய்யாவிட்டால் அர்த்தமில்லாமல் பல உயிர்களை இழப்போம். இதைப் புரிந்து கொள் இதிகா."

"விடுதலைப் போராட்டத்தின்ரை ஆரம்பத்திலை அழிவுகள் தவிர்க்க முடியாதது தான். ஒன்றை இழந்தால்தான் இன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னொன்றை அடையலாம்"
"போராடி அழியலாம். போராடாமல் அப்பாவி நிலையிலை அழியிற மக்களுக்கு விடுதலைப் போர் மீது பயத்தைத்தான் தோற்றுவிக்கும்"
"அப்ப போராட்டம் பிழையா?"
"அப்படி நான் சொல்லேல்லை. தமிழர்கள் தங்கள் விடுதலைக்காக போராடவேண்டிய கால கட்டம்தான் இது. ஆனால் ஒரு குழு நிலைப் போராட்டமாய் இல்லாமல் மக்களை இணைத்ததாய் இருக்கவேண்டும்."
"கம்யூனிச வாதிகள் நெடுக மனப்பாடமாய் உதைத்தான் சொல்லிறியள். அதற்கான வேலைத்திட்டங்களை என்றைக் காவது முன் வைச்சிருக்கிறியளே. நீங்கள் சீனாவிலையும் ருசியாவிலையும் மழை பெய்ய இஞ்சை குடைபிடிக்கிற ஆக்கள் தானே. யதார்த்தம் யதார்த்தம் எண்டு கதைப்பியள் ஆனால் யதார்த்தமான பிரச்சனைகளை அணுகக்கூட உங்களுக்குத் தெரியாது. பாரதியார் சொன்ன மாதிரி நீங்கள் எல்லாம் வாய்ப் பேச்சிலைதான் வீரர். இண்டைக்குத் தமிழ் மக்கள் இருக்கிற நிலையிலை முதல் அவர்களுக்குத் தன்னம்பிக்கை ஏற்பட வேணும். அதற்கு இப்படியான சில வேலைகள் அவசியம்" என்று பொரிந்து தள்ளினாள் இதிகா.
"தன்னம்பிக்கை தத்துவ ரீதியாகத்தான் ஏற்பட வேணும். ஆயுத நடவடிக்கையின் கவர்ச்சியினால் ஏற்பட்டால் அது நிலைக்காது. சினிமாப்படம் பார்த்து விட்டு மறந்த மாதிரித்தான் இருக்கும்"
"உங்கடை வாதம் பிழை. நடை முறையிலை சாத்தியப்படாது. எழுதவும் சொல்லவும் தான் நல்லாயிருக்கும். திறப்புவிலை எங்கடை விடுதலைப் போரை நீங்கள் வலியுறுத்தி மக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்ட வேணும்."
"திறப்பு மக்களைச் சார்ந்தது. மக்களுக்கு எது சரியோ? எது பாதகமோ? அதை அப்பட்டமாய் எழுதுவன். இப்ப நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியை கடுமையாய் விமர்சிக்கப்போறன்"
"உங்களுக்குப் பிடிக்காவிட்டால் விடுங்கோவன். ஏன் வீணாய் விமர்சிக்கப் போய் வில்லங்கத்தைத் தேடிறியள்"
"அப்படி என்ன வில்லங்கம் வரும்"
"அது ஏன் உங்களுக்கு? நீங்கள் பிரச்சனையளுக்கை அகப்படிறதை நான் விரும்பேல்லை"
"உண்மையை எழுத நான் பயப்படமாட்டன். என்ன சூழ்நிலையிலை என்ன காரணத்துக்காக திறப்பு தொடங்கி னனான் எண்டு உமக்குத் தெரியும் தானே?"
"சொல்ல வேண்டியது என் கடமை. இனி உங்களைப் பொறுத்தது" என்று சொல்லிவிட்டு எழும்பினாள். சிவகுமாருக்கு அவளின் போக்கு விசித்திரமாக இருந்தது. எவ்வளவு மாறிவிட்டாள்! இதிகா போன பின்பு சிறிது நேரம் இருந்துவிட்டு தன் அறைக்குள் வந்து படுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 24

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருந்து கிழக்கு ஜேர்மனி நோக்கிப் பயண மான சந்திரன் முதற் தடவையாக விமானத்தில் பயணமாவதால் பதட்டத்தோடு இருந்தான். அவனை அனுப்பியவர் கூறியவைகளை மனத்திற்குள் நினைத்துக் கொண்டான். விமானம் கிழக்கு ஜேர்மனியில் இறங்கியதும் விமானநிலைய அதிகாரிகளுக்குப் பாரிஸ் போவதாகச் சொல்லவேண்டும். பிறகு அங்கிருந்து ராக்சியில் ஏறி மேற்கு ஜெர்மனி எல்லைக்குச் சென்று அங்குள்ள கடவையில் பாரிஸ் ரிக்கற்றைக் காட்டி வெளியே வந்து பாரிஸ் செல்லும் புகை வண்டியில் ஏற வேண்டும். அப்புகைவண்டி ஜேர்மன் ஊடாகச் செல்லும். செல்லும் பொழுது ஹனோவர் என்ற ஸ்ரேசன் வரும் அதில் இறங்கினால் முத்து என்பவர் உங்களைச் சந்தித்து மேற்கொண்டு செய்யவேண்டியவைகளைச் செய்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு விடயங்களையும் ஞாபகத்தில் வைத்துச் செய்ய வேண்டும்.

தவறினால் திரும்பவும் கட்டுநாயக்காவுக்கு வந்துவிடுவீர் எனக் கூறி அனுப்பி விட்டார்.

இரவு நேரப் பயணமாதலால் விமானத்தில் சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தார்கள். சந்திரனால் இருந்த பதட்டத்தில் சாப்பிட முடியவில்லை.

ஒப்புக்கு அதில் உள்ள பாண் துண்டைமட்டும் கடித்துவிட்டு வைத்து விட்டான்.

இன்னும் சில மணித்தியாலங்களில் கிழக்கு ஜேர்மனியை அடைந்து விடலாம். அதன்பின் அவர் சொன்னவை யாவும் அட்சரம் பிசகாமல் நடக்கவேண்டுமே. மனதுக்குள் தான் தினமும் வணங்கும் அந்திரான் முருகனைத் துணைக்கு அழைத்துக் கொண்டான்.

விமானம் குலுங்கியபடி கிழக்கு ஜெர்மனி மண்ணைத் தொட்டது.

அந்த நேரம் இந்தப் பயணங்கள் ரஸ்ய விமான மான ஏரோபிளற் மூலமாகவே நடைபெற்றது. தமிழர்களை ஏற்றி இறக்கிய தட்டிவான் என்று பகிடியாகச் சொல்வார்கள். கிழக்கு ஜெர்மனி மண்ணில் கால் வைத்தபோது திடுக்கிட்டு விட்டான் சந்திரன். அவ்வளவு குளிர். ஒரு மேற்சட்டை மட்டுமே போட்டிருந்தான். அவன் இதைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. சமாளித்தபடி மற்றவர்களோடு சேர்ந்து வேகமாகக் கட்டிடத்தை நோக்கி நடந்தான். அவனை எல்லோரும் வியப்புடன் பார்ப்பது புரிந்தது. கட்டிடத்திற்குள் வந்த பின்தான் அவனுக்கு நிம்மதியாகவிருந்தது. சூடு அவனுடைய உடலுக்கு இதமாகவிருந்தது.

“நீங்களும் பாரிசுக்குத்தான் போகிறீர்களா?” தமிழில் யாரோ கேட்டார்கள். தமிழ்க் குரலைக் கேட்டதும் சந்திரனுக்குச் சந்தோசமாகவிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பிப்பார்த்தான். குரலுக்குரியவள் ஒரு பெண். சட்டென்று நின்று " ஓம் நீங்கள்.."

" நானும் அங்கைதான் போறன்"

அழகாக இருந்தாள். மெழுகில் வார்க்கப்பட்ட சிலைபோல் எல்லாம் அழகாக இருந்தன. சந்திரன் அவளைப் பார்த்து மெல்லிய சிரிப்பை உதிரவிட்டான். ஆளுக்காள் துணை கிடைத்துவிட்டதைப்போல் இருவரும் மனதுக்குள் திருப்தி அடைந்தனர்.

சந்திரனுக்குத் தனக்கு எல்லாம் தெரியும் என்று அவளுக்குக் காட்டவேண்டுமென்ற ஆண்களுக்கே உருவான உணர்வு வந்தது. அவளருகே சென்று " பாரிசுக்கு ரிக்கற் வைச்சிருக்கிறியளோ?..இப்ப பாஸ்போட் செக் பண்ணேக்கை கேட்பாங்கள் தடக்குப்படாமல் சொல்லுங்கோ" என்றான். அவளும் தலையாட்டியபடி " எனக்குத் தெரியும். என்னை அனுப்பினவர் எல்லாம் சொல்லிவிட்டவர்" என்று சாதாரணமாகச் சொன்னாள்.

" ஓ.. அப்ப நீங்களும் என்னைப்போலத்தான். அப்ப வழியிலை..." என்று அவன் இழுக்க அவள் சிரித்தபடி " கனோவரிலை இறங்க வேணும் " என்று முடித்தாள். அவள் சொல்லி முடிய அவனுக்குச் சிரிப்பு வந்தது. இருவரும் சிரித்தார்கள். அவள் சிரிக்கும்போது நிரம்ப அழகாக இருந்தாள். சந்திரனும் அதனை ரசித்தான்.

" நீங்கள் யம்பர் கொண்டு வரேல்லையா?" என்று கேட்டாள். அவனுக்கு யம்பர் என்ற சொல்லுப் புரியவேயில்லை.

" அதென்ன யம்பர்.." என்றான்.

" இந்த நாடுகளிலை சரியான குளிர் எண்டு அத்தான் அனுப்பி விட்டவர்."

"ஓ.. நீங்கள் கலியாணம் கட்டியிட்டுக் கணவரிட்டைப் போறியளோ?" என்று கவலையோடு கேட்டான்.

"இல்லையில்லை எனக்கு இன்னும் கலியாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கயில்லை. அத்தான் எண்டது என்ரை அக்காவிடை புருசன்."

சந்திரன் மெதுவாகச் சிரித்தான். அந்தச் சிரிப்புக்கு எத்தனையோ அர்த்தங்கள்.

" இவ்வளவு நேரம் கதைக்கிறம். இன்னும் பெயர்கள் தெரியாது" என்று அவள் கேட்டாள்.

" ஒமெல்லே.. என்ரை பெயர் சந்திரன்.."

" என்ரை பெயர் நந்தினி" என்றாள்.

அதற்குள் பரிசோதனை இடத்திற்கு வந்துவிட்டார்கள்.

அந்த உத்தியோகத்தர் கடவுச்சீட்டைப் பார்த்துவிட்டு எங்கை போகிறாய் என சந்திரனைக் கேட்க சந்திரனும் பாரிசுக்குப் போறன்... என்று கூற அவர் ஒன்றும் கூறாமல் ஒரு சீல் அடித்துவிட்டு இண்டைக்கு மாலை 5 மணிக்கு முதல் தங்கடை நாட்டை விட்டு வெளியேறிவிடவேண்டுமெனக் கூறிவிட்டார். அதேபோலத்தான் நந்தினியும் கடவுச்சீட்டைக் காட்டிவிட்டு வெளியே வந்தாள்.

"இனி அடுத்தது ராக்சி பிடித்து மேற்கு ஜேர்மனி எல்லைக்குப் போகவேணும் சரிதானே" என்று அவன் கூற நந்தினி சிரித்தபடி "கொஞ்சம் பொறுங்கோ .." என்று தன் பையைக் கிளறி ஒரு யம்பரை எடுத்து

"அத்தான் எக்ஸ்ராவாய் அனுப்பினவர். இதைப் போடுங்கோ சரியாய்க் குளிரும்" அவளை நன்றியோடு பார்த்த சந்திரன் வாங்கி அணிந்தான். சொல்லி வைத்தாற்போல் அளவாக இருந்தது. வெளியில் வந்து ராக்சி ஒன்றில் ஏறிப் போகும் இடத்தைக் கூறினார்கள். அந்த ராக்சி றைவருக்குப் பழக்கம் போலிருக்கிறது ஒன்றுமே கதைக்காமல் மேற்கு ஜெர்மனியின் எல்லை அருகில் கொண்டு வந்து நிறுத்தினான். அவனுக்குக் காசை கொடுத்துவிட்டு சந்திரனும் நந்தினியும் எல்லைக் கதவருகே வந்தார்கள். அங்கும் தங்களின் கடவுச் சீட்டு பாரிஸ் செல்லும் ரிக்கற் காட்டிவிட்டு வெளியே வந்ததும் அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிரத நிலையமாகவிருந்தது. பனி கொட்டிக் கொண்டிருந்தது. என்னதான் உடுப்புப் போட்டிருந்தாலும் குளிரை இருவராலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நடுங்கினார்கள். புகையிரதங்கள் இரு பக்கமும் ஓடிக் கொண்டிருந்தன. எது பாரிஸ் செல்கிறதென இருவருக்கும் தெரியவில்லை. யாரையாவது கேட்கலாமென்று நினைத்தாலும் எவரும் நின்று பதில் கூறும் நிலையில் இல்லை. கடைசியாக ஒரு வயது போன பெண்ணைப் பிடித்துக் கொண்டார்கள். அந்தப் பெண்ணுக்கு ஆங்கிலம் புரியவில்லை. பாரிஸ்.. பாரிஸ் என்று சந்திரன் சத்தமாகச் சொல்லிக்கேட்டான். இறுதியில் ஒருமாதிரி அந்தப் பெண் தெற்கே போகும் புகையிரத்தைக் காட்டிச் சொன்னாள்.

அவசரஅவசரமாக ஓடிப்போய் ஏறிக் கொண்டார்கள்.

"எங்களின் ஊர் புகையிரதம் போலில்லை." சந்திரன் கூறினான். அதனை நந்தினியும் ஆமோதித்தாள். ஒரு பெட்டியில் இருவரும் போய் இருந்து கொண்டார்கள்.

அடுத்தது ஹனோவரில் இறங்கவேண்டும் என்று ஞாபகப்படுத்திக் கொண்டனர். இதை ஞாபகப்படுத்திக் கொண்டபோது இருவருக்கும் சிரிப்பு வந்தது. நந்தினி தன் பையிலிருந்து பிஸ்கட் இரண்டை எடுத்துச் சந்திரனுக்குக் கொடுத்தாள்.

"நீங்கள் தயாராகவே வந்திருக்கிறியள்" என்று கூறிக்கொண்டே அவள் கொடுத்த பிஸ்கற்றினை வாங்கிக் கொண்டான்.

"ஓ.. அக்கா எல்லாம் போனுக்குள்ளாலை சொன்னவ. உங்களுக்கு இஞ்சை ஆரும் இல்லையே"

"இல்லை. ஏஜன்சிக்காரன் ஆரையோ ஒழுங்கு செய்திருக்கிறான். அவன் எங்கை கொண்டுபோய் விடிறானோ அங்கை போகவேண்டியதுதான். என்றான் சந்திரன்.

" உங்கடை அக்காவின்ரை விலாசம் இருந்தால் தாங்கோவன். ஒரு நேரம் சந்திக்கலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ ஓம் தாறன்..” என்று கூறிவிட்டு பெட்டியிலிருந்து ஒரு பேனையும் சிறுபேப்பரும் எடுத்து எழுதிக் கொடுத்தாள்.

இப்படி இவர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருக்கும்போதே ஹனோவர் நிலையம் வந்துவிட்டது.

இருவரும் இறங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25

காந்தனையும் அழைத்துக் கொண்டு கதவடிக்கு வந்த சுவந்திகா தகப்பனைத் தேடினாள். ஒரு ஓரமாக அவர் நிற்பது தெரிந்தது. அவள் அவரைப் பார்க்க அவர் அவளைக் காணவும் சரியாக இருந்தது. இவர்களுக்கருகில் வந்த திலகரத்னாவின் பார்வையில் தெரிந்த சோகம் சுவந்திகாவை உலுக்கியது. அதைக் காட்டிக் கொள்ளாமல் தகப்பனையே உற்றுப் பார்த்தாள். அவர் காந்தனோடு கதைத்த போது அந்தக் கதையின் ஒவ்வொரு சொல்லிலும் அன்பு நிரம்பிச் சிந்துவது போலிருந்தது சுவந்திகாவுக்கு.

“நான் உயிரோடை இருக்கும் வரைக்கும் நீங்கள் இங்கை இருக்கக் கூடாது” என்று அவர் கூறியபோது சுவந்திகா தன்னையே மறந்து போனாள். விதி ஒரு மனிதனைச் சுற்றும்போது சிந்திக்கும் தன்மை எல்லாவற்றையும் மனிதன் இழந்து விடுகிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலும். சுவந்திகா இப்படி என்றால் காந்தன் அதற்கு மேலாக இருந்தான்.

அந்தக் கணத்தில் சிங்களவர்கள் எல்லாம் நல்லவர்கள் என்றும் தமிழர்கள் எல்லாம் கூடாதவர்கள் என்றும் மனம் எண்ணியது என்றால் பாருங்களேன்! தன் னுடைய வாழ்க்கையில் இனி ஒரு வசந்தம் வீசப்போகிறதென்று எண்ணிக் கொண்டான்.

சுவந்திகா தகப்பனை முரடன் என்று இது வரை எண்ணியவற்றை எல்லாம் மூட்டை கட்டி அவரை ஒரு புத்தராக மனதிற்குள் நினைக்கிற அளவுக்குப் போய்விட்டாள். கொஞ்சம் கூடச் சந்தேகம் வராமல் திலகரத்னா நடந்து கொண்டார். இப்படியெல்லாம் இவர்கள் மனதிற்குள் கற்பனை செய்து கொண்டிருக்கும் போது தன் திட்டப்படி வலைக்குள் விழுந்து விட்ட இரு இளசுகளையும் பார்த்து மனதிற்குள் வக்கிரமாகச் சிரித்துக் கொண்டார் திலகரத்னா. என்னதான் மனதிற்குள் வக்கிரமாகச் சிரித்துக்கொண்டாலும் முகத்தில் மட்டும் அன்பு வழியும் பாவனையை வைத்துக் கொள்வதில் அசகாயசூரராக இருந்தார் அவர். இதுவரை நாளும் மனதிற்குள் யாழ்ப்பாணத்துப் பொடியன்களில் அனுதாபம் கொண்டிருந்த காந்தன் இப்போது காணாததைக் கண்டமாதிரி மனதிற்குள் திட்டினான். இவனுடைய இந்தக் கற்பனையெல்லாவற்றையும் உடைத்துத் தம்பி என்று அவர் அழைத்தபோது உண்மையிலேயே அவன் அவருள் அமிழ்ந்து போனான். அவர் அழைத்தபோது எவ்வித மறுப்பும் சொல்லாமல் புறப்பட்டனர். விதி அவர்களைப் பார்த்துச் சிரித்தவாறே கூடப் புறப்பட்டது. இது யாருக்குத் தெரியும்?

சுவந்திகாவின் வீட்டைக் கார் நெருங்கத் தாயைக் காணப் போகிறோம் என்ற சந்தோசத்தில் திளைத்துப் போயிருந்தாள் சுவந்திகா. கார் நின்றதும் வாசலில் காத்து நிற்கும் தாயை ஓடிப் போய்க் கட்டிப் பிடித்தாள். அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுதான் அவசர அவசரமாக அவள் காதுக்குள் அந்த பயங்கரமான செய்தியைச் சொன்னது அந்தத் தாயுள்ளம். இதைத்தவிர வேறென்ன செய்ய முடியும்?

சுவந்திகாவின் இதயம் ஒரு தடவை நின்று மீண்டும் இயங்கத் தொடங்கியது. அவளின் கனவுகள் கற்பனைகள் எல்லாம் பொலபொல வென்று உதிர்ந்தன. வேகமாகத் திரும்பினாள். நால்வரின் பிடியில் அகப்பட்ட காந்தன் திமிறிக் கொண்டிருந்தான். அவனை எப்படியாவது காப்பாற்ற வேண்டுமென்று பாய்ந்த அவளின் காலைத் தட்டிக் குப்புற வீழ்த்தி நிலத்தோடு வைத்து அமத்தியது ஒரு மனித மிருகம். சுவந்திகா பலம் கொண்ட மட்டும் கத்தினாள். யாருமே அவளின் கதறலைக் கேட்கவில்லை. பல மனித மிருகங்கள் வேடிக்கை பார்க்கச் சுவந்திகா கதறக்கதற அந்தக் கோரசம்பவம் நடக்கத் தொடங்கியது. ஒரு சடப்பொருளை வெட்டுவது போல் வெட்டினார்கள். என்ன வெறி! சுவந்திகா பார்க்க அவள் தகப்பனே அவனை வெட்டினான். கொஞ்ச நேரத்துக்கு முன் சிரித்துக் கதைத்த காந்தன் சுவந்திகாவின் இதய அரசன் சுவந்திகாவின் இரு கண்களும் பார்த்துக் கொண்டிருக்கப் பரிதாபமாக உயிரை விட்டுக் கொண்டிருந்தான். தான் மனதார நேசித்த காந்தனைத் தன் தகப்பனே வெட்டிக் கொல்லும் காட்சியில் ஏற்பட்ட அதிர்ச்சியில் மயங்கி விட்டாள். எவ்வளவு நேரம் மயங்கி இருந்தாளோ தெரியாது விழித்தபோது வீட்டுக்குள் வளர்த்தப் பட்டிருந்தாள். அவள் கண் விழித்தபோது நடுச்சாமம் மூன்று மணி. அந்தக் காட்சி அவள் கண்களில் படமாக ஓடியது. அவளுக்குள் அவளையறியாமலே ஒரு வெறி தோன்ற ஆரம்பித்திருந்தது. மெதுவாகத் தலையைத் திருப்பிப் பார்த்தாள். தாய் அருகில் படுத்திருந்தாள். கொஞ்சம் தள்ளித் தகப்பன் என்ற மிருகம் படுத்திருந்தது. என்ன நினைத்தாளோ? தெரியாது அவளுள் ஆத்மீகம் நிறைந்த ஒரு உத்வேகம் தோன்றிக் கொண்டிருந்தது. வெளியில் எழும்பிப் போனவள் கத்தியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே வந்தாள். கண்களில் கொலை வெறி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. தகப்பனருகே வந்தவள் எதைப்பற்றியுமே யோசிக்கவில்லை. கண்ணை மூடிக்கொண்டு வெட்டினாள். இரத்தம் பீச்சியடித்தது. சத்தம் கூட வரவில்லை. ஒரே வெட்டு தலை வேறு முண்டம் வேறு ஆகிவிட்டது. அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டு நின்றவள் தன் நிலைபெற்று வெளியே ஓடி வந்தாள். இரத்தத்தைக் கழுவி விட்டுத் தாய் எழும்புவதற்குள் ஓடிவிடவேண்டுமெனத் துரிதமாகச் செயற்பட்டாள். கையில் ஒரு பெட்டியோடு எவ்விதமான நோக்குமில்லாமல் வேகவேகமாக வீட்டைவிட்டு வெளியேறி பஸ் நிலையத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தாள் சுவந்திகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 26

வேகத்தில் கொலையைச் செய் தவளுக்கு அடுத்து எங்கே போவது என்பது புரியவில்லை. பிரதான வீதிக்கு வர பஸ் ஒன்று வந்தது. ஏறிக் கொண்டாள். கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன் பாக உள்ள பஸ் தரிப்பிடத்தில் இறங்கி வீதிக் குக் குறுக்கால் நடந்து காந்தனது அறையை அடைந்தாள். அறையுள் காந்தன் விலாசத் துக்கு வந்திருந்த கடிதத்தை எடுத்து உடைத் தாள். சந்திரன் போட்டிருந்தான். தான் ஜேர்ம னிக்கு சுகமாகப் போய்ச் சேர்ந்ததாகவும் கலவரம் பற்றிக் கேள்விப்பட்டதாகவும் அண்ணியையும் கூட்டிக் கொண்டு யாழ்ப் பாணம் போகும் படியும் எழுதியிருந்தான். வாசித்துக் கொண்டிருக்கும் போது கண்ணீர் பொலபொலவென்று வடிந்தது. மனதுக்குள் ஒரு வஞ்சினம் உருவாக எழும்பிப் பெட்டி யொன்று எடுத்துக் காந்தனது உடுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவற்றையும் படத்தையும் எடுத்து வைத்தாள். மறக்காமல் யாழ்ப்பாண வீட்டு விலாசத்தை எடுத்துத் தன்னுடைய சட்டைப்பையுள் வைத்து விட்டு விறு விறுவென்று வெளியில் வந்தாள்.

அரை குறையாக எரிந்த கடைகள் மெதுவாக எரிந்து கொண்டிருந்தன. வீதியில் சன நடமாட்டம் இல்லை. வீதியைக் கடந்து புகையிரத நிலையத்துக்குள் சென்று அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தாள். மூச்சு இப்போது தான் வந்து போய்க் கொண்டிருந்தது. எத்தனை நாள் காந்தனோடு இந்த இடத்தில் இருந்து கதைத்திருப்பாள். காந்தனை நினைக்க நினைக்க அழுகைதான் வந்தது. காதலனையும் இழந்து தகப்பனையும் கொலை செய்துவிட்டு நிர்க்கதியாக நிற்கும் அவள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு அடுத்து என்ன செய்வது? எங்கே போவது? எனச்சிந்திக்க ஆரம்பித்தாள். மனதை எந்தக் கோணத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு யோசித்தபோதும் முடிவு யாழ்ப்பாணம் போவதே மேல் என்பதாக வந்தது. முடிவு செய்துவிட்டாள்.!

யாழ்ப்பாணத்தை நோக்கிப் புகையிரதம் போய்க் கொண்டிருந்தது. மூன்றாம் வகுப்புப் பெட்டியில் ஒரு மூலையில் அவள் இருந்தாள். ஒரே சனமாக இருந்தது. கலவரத்துக்குப் பிறகு ஓடுகிற முதல் புகையிரதம் இது. ஒவ்வொரு பெட்டியிலும் ஒவ்வொரு ராணுவக்காரன் துவக்கோடு நின்றிருந்தான். அவ்வளவு துன்பத்திலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. இவர்கள் யாரைக்காக்க நிற்கிறார்கள்? இவர்கள் தானே கலவரத்தின் காவல்காரர்கள். யன்னலூடாக வெளியே பார்த்தாள்.

கண்ணைப் பறிக்கும் ரம்மியமான இயற்கைக் காட்சிகள் இருந்த போதும் சுவந்திகாவிற்கு அவையெல்லாம் சூனியமாகவே இருந்தன.

எத்தனையோ விதமான மனங்களைச் சுமந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணம் எவ்வித சலனமுமின்றிப் பாட்டுப் பாடிய வண் ணம் சென்று கொண்டிருந்தது அப்புகையிரதம். காந்தனது வீடு செல்ல எந்த நிலையத்தில் இறங்குவது? எதுவுமே தெரி யாமல் புறப்பட்டுவிட்ட இந்தப் பயணத்தை நினைக்கச் சுவந்திகாவுக்கு விரக்தியாகவே இருந்தது. இவள் இப்படிக் குழப்பிக் கொண்டிருக்கும் போது அவளை இரு கண்கள் கவனித்துக் கொண்டிருந்தன. சும்மா திரும்பிய சுவந்திகாவும் அக்கண்களைச் சந்தித்தாள். அக்கண்களுக்குரியவன் ஒரு இளைஞன். அவனை எங்கோ சந்தித்தது போன்ற உணர்வு அவளுக்கு. எங்கே?

அவளை நீண்ட நேரம் சிந்திக்க அவன் விடவில்லை.

"நீங்கள் Mrs காந்தன் தானே.?" என்றான்.

"ஆமாம். நீங்கள்..."

"நாங்கள் அகதி முகாமிலை சந்திச்சமே ஞாபகமில்லையா?" என்று கேட்டான். இப்போது தான் சுவந்திகாவிற்கு விளங்கியது அகதிகள் முகாமில் தொண்டர் படையில் அவனும் இருந்தது. தன்னைத் தெரிந்த ஒருவன் அந்தக் கூட்டத்திற்குள் உருவானமை அவளுக்குத் தெம்பைக் கொடுத்தது. தனக்கு நடந்தவைகளை இப்போ அவனிடம் சொல்ல முடியாது. சொல்லக் கூடிய சூழ்நிலையும் இல்லை. இருந்தாலும் அவனுடைய நட்பு அவளுக்குத் தேவை என நினைத்தமையால் அவனை நினைவு படுத்தி மெதுவாக சிரித்தாள்.

"அகதிகள் முகாமிலை எல்லாரும் போயிட்டினமா?" சுவந்திகா கேட்டாள்.

"இல்லை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அனுப்புகினம்"

"நானும் யாழ்ப்பாணம் தான் போறன்" என்று சுவந்திகாசொல்ல வியப்புடன் அவளைப் பார்த்த அவன்.

"உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டனான். பேப்பரிலை எல்லாம் வந்தது. நீங்கள் சரியான துணிச்சல்காரி. இண்டையான் பேப்பரில வந்திருக்குது" என்று சொல்லி பேப்பரை அவளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தான். தான் எதை மறைக்க நினைத்தாளோ அதை அவன் தனக்குத் தெரிந்ததாக காட்டிய போது சிறிது சங்கடப் பட்டாலும் சமாளித்துக் கொண்டு மற்றவர்கள் யாரும் தன்னை அடையாளம் கண்டு கொள்ளாதவாறு மறைத்துக் கொண்டாள்.

"அந்த நேரத்திலை என்னாலை அப்படித்தான் நடக்க முடிஞ் சுது. உலகத்தின்ரை கண்களுக்கு அது தவறாகப்பட்டாலும் என் மனசாட்சிக்கு நியாயமாகத்தான் படுகுது"

"சில விடயங்களை நியாய அநியாயக் கோட்பாடுகளுக்குள்ளை அடக்க முடியாது. காந்தனுக்கு நடந்தது நியாயம் என்றால் நீங்கள் செய்ததும் நியாயம்தான்"அவன் கூறியதை அமைதி யாகக் கேட்டுக் கொண்டிருந்த சுவந்திகா

"நான் இப்ப அவர் வீட்டை போறன். அவையளிலை ஆரையும் எனக்குத் தெரியாது. எதிர்த் தாக்கத்தை நினைக்க பயமாயிருக் குது"

"உங்கடை முடிவு சரி. இனி உங்கடை சமூகம் உங்களை ஏற்காது. காந்தனின் பெற்றோர் கட்டாயம் உங்களை ஏற்பி னம். எங்கடை சமூகம் கட்டாயம் உங்களை வரவேற்றுத்தான் ஆகவேண்டும். அதுதான் மனிதாபிமானம். தற்செயலாய் உங்களுக்கு அங்கை வரவேற்புக் கிடைக்காவிட்டால் என்ரை வீட்டை பயப்படாமல் வாங்கோ. ஆனால் பொலிசா ரின்ரை கண்களிலையிருந்து உங்களை எப்படிக் காப்பாற்றப் போறியள்" என்று மிக மெதுவாகக் கேட்டுவிட்டுத் தன் விலாசத்தை ஒரு துண்டில் எழுதிக் கொடுத்தான். அவனை நன்றியோடு பார்த்தாள் சுவந்திகா. இவ்வளவு தூரம் கதைத்தும் அவன் பெயர் அவளுக்குத் தெரியாமல் இருந்தது. அவன் எழுதித் தந்த துண்டைப் பார்த்தாள் முகுந்தன் என்றிருந்தது.

"உங்களிட்டைக் காந்தன் விலாசம் இருக்கோ?"

"இருக்கு என்ற சொல்லி அதை எடுத்துக் கொடுத்தாள். அதை வாங்கிப் பார்த்த அவன் இதுக்கு நீங்கள் கொடிகாமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரேசனிலை இறங்கவேணும். ஸ்ரேசனுக்கு முன்னாலை பஸ் நிற்கும். பருத்தித்துறை போற பஸ்சிலை ஏறினியளெண்டால் ஆரைக் கேட்டாலும் கரவெட்டியைக் காட்டுவினம். எதுக்கும் கவனமாகப் போங்கோ" இப்போ அவளுக்கு நிம்மதியாக இருந்தது. அவள் எவ்வளவுதான் சரளமாகத் தமிழ் கதைத் தாலும் அவளின் உடலமைப்பு அவள் தமிழச்சி அல்ல என்ப தைக் காட்டிக் கொடுத்தது. கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலாக அப் புகையிரதத்தில் இருந்ததால் அவளை ஒருவித வெறுப்புடனேயே நோக்கினார்கள். இதனை முகுந்தனும் அவதானித்தான். ஆனாலும் இது பார்வை அளவில்தான் இருக்கும் அத்துமீறாது என மனதுள் கணக்கிட்டுக் கொண்டு அடுத்த ஸ்ரேசனில் சுவந்திகாவிடம் விடைபெற்றுக் கொண்டு இறங்கிவிட்டான். யன்னலினூடாக எட்டிப் பார்த்தாள். காடுகள் தெரிந்த இடங்களில் பனை மரங்கள் தெரிந்தன. யாழ்ப்பாணப் பிரதேசம் இதுதான் என அவை பறைசாற்றின. கொடிகாமம் வந்தது. சுவந்திகா இறங்கிக் கொண்டாள். முற்றிலும் புதிய பிரதேசம். முகுந்தன் கூறியவாறு வெளியில் வந்து பருத்தித்துறை போகும் பஸ்சில் ஏறிக்கொண்டாள். நடத்துனரிடம் தன்னை கரவெட்டியில் இறக்கிவிடும்படி கூறிவிட்டு அமர்ந்து விட்டாள்.

கரவெட்டியின் நகரம் நெல்லியடி. பஸ் வண்டி நெல்லியடியில் நின்றது. நெல்லியடியிலிருந்து காந்தனின் வீட்டுக்கு நடந்து செல்ல வேண்டுமென்று ஒருவர் வழிகாட் டினார். அப்போது நேரம் ஒன்பது மணி. நெல்லியடியில் இறங்கிய சுவந்திகாவுக்கு திகைப்பாக இருந்தது. முற்றிலும் புதிய ஊர். பஸ் நிலையத்துக்கு நேரே உள்ள கடைக்குச் சென்று தன் கையிலுள்ள விலாசத்தைக் காட்டிக் கேட்டாள். அந்தக் கடைக்காரரர் காட்டிய வழியில் சென்று காந்தன் வீட்டை அடைந்த போது நேரம் பத்து மணியாகிவிட்டது. மெதுவாகக் கதவைத் தட்டினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார்தான் கதவைத் திறந்தான். அவனுக்குத் திகைப்பாக இருந்தது. ஏற்கனவே பார்த்த ஒரு முகம்.
"நீங்கள் சுவந்திகாதானே..." சந்திரனைக் கொழும்புக்குக் கொண்டு சென்று விடப் போனபோது பார்த்த அறிமுகம். சுவந்திகாவிற்கு நிம்மதியாக இருந்தது. தன்னைத் தெரிந்த ஒரு மனிதன் இருக்கிறானே என்று.
"வாங்கோ உள்ளை" என்று கூப்பிட்டு இருத்திவிட்டுத் தானும் அமர்ந்தான். அப்போதுதான் வெளியிலிருந்து உள்ளே நுழைந்த இதிகா சுவந்திகாவைப் பார்த்து ஒரு புன்சிரிப்பை மட்டும் உதிர்த்து விட்டுச் சிவகுமாரிடம் வந்த விருந்தாளி என நினைத்து உள்ளே போய்விட்டாள். இதைக் கவனித்த சிவகுமார் உள்ளே போய்
"இதிகா உம்மட்டை வந்த விருந்தாளி" என்றான். வியப்போடு வந்த இதிகா சுவந்திகாவைக் கேள்விக் குறியோடு பார்த்தாள்.
"என்ரை பெயர் சுவந்திகா. உங்கடை அண்ணாவின்ரை மனைவி" என்று தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டாள். இதிகாவுக்குப் பக்கென்றிருந்தது. பதிலேதும் கூறாமல் அவளையே பார்ததுக் கொண்டிருந்தாள். பூகம்பம் உருவாகக் கூடிய சாத்தியக்கூறு இருப்பதாக சிவகுமார் உள் மனம் கூறியது.
"ஏன் மிஸ்டர் காந்தன் வரவில்லையா?" என்று சிவகுமார் கேட்டான். இல்லை என்று கூறிவிட்டு அழத்தொடங்கினாள் சுவந்திகா. அவள் அழுது முடியட்டும் என்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த இருவரும் ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதென்பதை மட்டும் தமக்குள் கணக்கிட்டுக் கொண்டனர். அவள் மெதுவாக விசும்பிய வண்ணம் நடந்தவைகளை விளக்கினாள். இதிகா ஓ வென்று கதறினாள். அவளின் கதறல் கேட்டுப் பின் வளவில் நின்ற சுந்தரம் மாஸ்டர் அடுத்த வளவில் நின்ற கனகமக்கா இருவரும் கையில் வைத்திருந்தவைகளை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரம் மாஸ்டருக்கு எதுவுமே விளங்கவில்லை.

"அண்ணா.... அண்ணா" என்று இதிகா கத்த அவளோடு சேர்ந்து அவரும் அழுதார். சிவகுமாரின் கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தது. விடயத்தை புரிந்து கொண்ட கனகமக்கா அக்கம் பக்கம் எல்லாம் விடயத்தைச் சொல்ல எல்லோரும் குழுமி விட்டனர். சிவகுமார் நிலமையைப் புரிந்து கொண்டு புத்திசாலித்தனமாகச் சுவந்திகாவை அழைத்துச் சென்று தன் அறையுள் அமர்த்தினான். பிரேதம் இல்லாத செத்த வீடு நடந்து கொண்டிருந்தது. அழுது அழுது உடல் சோர்ந்து மயங்கி விட்டாள் இதிகா. சுந்தரம் மாஸ்டரும் சோர்ந்து போய் ஒரு மூலையில் சுருண்டு விட்டார். வந்தவர்களும் தங்களால் முடிந்த மட்டும் சோகங்களைக் கொட்டிவிட்டுப் புறப்பட்டு விட்டனர். இப்போ வீட்டில் சுவந்திகா இதிகா சுந்தரம் மாஸ்டர் சிவகுமார் நால்வரும் தான் இருந்தனர். நால்வரும் ஆளுக்கொரு மௌனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தனர்.

வளி மண்டலத்தில் சோக அலைகள் ஊர்ந்து கொண்டிருந்தன. சாமிப் படத்தின் முன் எரிந்து கொண்டிருந்த சாம்பிராணிக் குச்சு அழுதழுது எரிந்து கொண்டிருந்தது. இதிகா சுவந்திகாவை ஏற்றுக் கொள்ளமாட்டாள் ஆனால் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று சிவகுமார் மனதுக்குள் நினைத்துக் கொண்டான். பக்கத்து வீட்டுக் கனகமக்கா சாப்பாடு கொண்டு வந்திருந்தாள். சாப்பாட்டை வாங்கி வைத்துவிட்டு முதலில் சுந்தரம் மாஸ்டரை எழுப்பினான். அவர் மெதுவாகக் கண் விழித்தார். நிரம்பக் கலங்கி விட்டார். அவரைப் பார்க்கச் சிவகுமாராலேயே தாங்க முடியவில்லை. சிறிது சாப்பிடும்படி அவரைக் கேட்டான். அவர் மறுத்து விட்டார். இதிகாவை எழுப்பிக் கேட்டான். மறுத்துவிட்டாள். எழும்பியவள் ஏகாந்தமாக எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தப் பார்வையில் கிஞ்சித்தும் சோகம் இல்லை. சிவகுமார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடச் சம்மதிக்கவேயில்லை. சாப்பாட்டை எடுத்துக் கொண்டு சுவந்திகாவிடம் சென்றான். சுவந்திகா கண்களில் நீர் வழிய இருந்தாள். அவளுடைய பார்வையில் ஒரு வெறுமை இருந்தது. கணவனைக் கண் முன்னால் கொலை செய்யும் போது எதுவுமே செய்ய முடியாதிருந்தவள். தகப்பனைத் தானே வெட்டிக் கொன்றவள். இப்போ தங்குமிடமின்றி இவர்களையே நாடி வந்து வேதனையோடு இருக்கிறாள். எவ்வளவு துன்பமான விதி இவளுக்கு! அவள் சாப்பாட்டை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. சிவகுமார் எவ்வளவோ நயமாகச் சொல்லிப் பார்த்தான். எதுவுமே பயனற்றுப் போய்விட்டது. அன்று அந்த வீட்டில் எவருமே சாப்பிடவில்லை. சாப்பாடு உறக்கம் இரண்டுமே இருக்கவில்லை!

பொழுது விடிய விடிய சிவகுமார் கலங்கிக் கொண்டிருந்தான். இதிகாவின் குணம் அவனுக்குத் தெரியும்! அவள் பழையவளாகவும் இப்போது இல்லை. நிரம்பத் தீவிரத்தன்மை கொணடிருந்தாள். அவளுக்கும் தீவிரவாத சக்திகளுக்கும் தொடர்பிருப்பதாக எண்ணினான். இப்போ நடந்த நிகழ்ச்சி அவளின் தீவிரத் தன்மையை மேலும் மேலும் அதிகரிக்கப் போகிறது. சுவந்திகாவை இப்போ என்ன செய்வது? எவ்வளவு துயரமான சம்பவம்! தன்னினத்தையும் துறந்து விட்டாள். அண்டவந்த இனத்திலும் நிலமை வேதனைக்குரியதாக இருக்கிறது. அறைக்கு வெளியே வந்து எட்டிப் பார்த்தான். இதிகா எழும்பியிருந்தாள். சுந்தரம் மாஸ்டரும் எழும்பியிருந்தார். மெதுவாக அவர்களுக்குக் கிட்டப் போனான். அவனை நிமிர்ந்து பார்த்தாள் இதிகா. "எங்கை அவள்?" என்று கத்தினாள். அவளுடைய கத்தலின் வெம்மை சிவகுமாரையே சுட்டதென்றால் சுவந்திகா எந்த மட்டில்? எதற்குமே கலங்காத நெஞ்சுரம் கொண்ட சிவகுமார் எதுவுமே விளங்காதவன் போல் "ஆர்" என்று கேட்டான். அவனை எரித்து விடுவது போல் பார்த்துவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவள்தான் அந்தச் சிங்களத்தி" நறுக்குத் தெரித்தாற்போல் வார்த்தைகள் குத்தின. என்ன அநாகரிகமான வார்த்தைகள்.! இப்போ தான் வந்த பெண்ணைப் பற்றிய விபரங்கள் சுந்தரம் மாஸ்டருக்குப் புரிந்தது.

"அவள் இஞ்சை இருக்கக் கூடாது" என்று கத்தினாள். சிவகுமார் சுந்தரம் மாஸ்டரைக் கூட்டிக் கொண்டு போய் நடந்தவற்றை விளக்கினான்.

"புருசனையும் இழந்து புருசனுக்காகத் தகப்பனையே கொலை செய்து அநாதரவாய் எங்களை மதிச்சு வந்திருக்கிற பெண்ணை நாங்களும் மதிக்கத்தானே மாஸ்டர் வேணும்" என்று சிவகுமார் கேட்ட விதம் அவரின் மனதை இளக வைத்துவிட்டது. இப்படி ஒரு சந்தர்ப்பத்தைத்தான் அவன் எதிர்பார்த்திருந்தான். அது உடனடியாக வந்தபோது மனசு கொள்ள மகிழ்ந்தான். இனி அடுத்த கட்டமாக அவரை உசார்ப்படுத்தினான்.

"இந்தச் சந்தர்ப்பத்திலை நீங்கள் கொஞ்சம் உசராய் நிண்டால் காரியம் கையை மிஞ்சாது. இல்லாட்டில் ஊர் சிரிக்கும்" என்று பக்குவமாகச் சொன்னான். "நீ பயப்பிடாதை தம்பி நான் எல்லாம் பார்க்கிறன்"என்று கூறிவிட்டு உள்ளே வந்தவர்.

"பிள்ளை சுவந்திகா...." என்று கூப்பிட்டார். இதிகா திடுக்கிட்டுப்போய் அவரைப் பாரத்தாள். "அப்பா..." என்று கத்தினாள்.

"நீ பேசாமலிரு எனக்கெல்லாம் தெரியும். தலையிருக்க வால் ஆடக் கூடாது" என்றார். இப்போ இதிகாவின் கோபம் சிவகுமார் மேல் திரும்பியது.

"ஓ...! எல்லாம் உம்மடை வேலையோ!" என்று அவன் மேல் பாய "பொத்தடி வாய்... உனக்கு நல்லாய் வாய் நீளுது..." என்று கூறியவாறு பாய்ந்து அவளின் கன்னத்தில் ஐந்து விரல்களையும் பதித்தார் சுந்தரம் மாஸ்டர். இதைச் சிவகுமாரும் எதிர்பார்க் கவில்லை. ஏன் இதிகாவும் எதிர்பார்க்கவில்லை. இதிகா பதறிப்போனாள். சிவகுமார் மேலும் அது தொடராமல் அவரைப் பிடித்தான். எவ்வளவு காலத்திற்குப் பிறகு தகப்பன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கு அடித்திருக்கிறார். அவள் மேற்கொண்டு எதுவும் கதைக்கவில்லை. சட்டென்று எழும்பித் தன்னுடைய அறைக்குள் சென்ற அவள் ஏதும் செய்துவிடுவாளோ என்று சுந்தரம் மாஸ்டர் கலங்கினார். அவள் அவ்வளவு கோழையல்ல என்று குறிப்பால் உணர்த்தினான் சிவகுமார். ஒரு பெரிய சிக்கலை ஓரளவு முடிவுக்குக் கொண்டு வந்த நிம்மதியில் தன் அறையை எட்டிப் பார்த்தான். சுவந்திகா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். சுந்தரம் மாஸ்டர் கூப்பிட்டபோது அவள் வராமல் உறங்கிக் கொண்டிருந்ததும் நல்லதாகப் போயிற்று என்று மனதுள் நினைத்துக் கொண்டு தன் அலுவல்களைக் கவனிக்கத் தயாரானான் சிவகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27

அச்சகத்துக்குச் சென்று பத்திரிகைக்கான விடயதானங்களைக் கொடுத்து விட்டுப் பஸ் நிலையத்துக்கு வந்தான் சிவகுமார். யாழ்ப் பாண பஸ் வர இன்னும் அரை மணித்தியாலம் இருந்தது. சுவந்திகாவைப் பற்றிய சிந்தனைகள் அவன் மனதில் அலை பாய்ந்து கொண்டி ருந்தது. எவ்வளவு துணிவான பெண்! துணிந்து வந்திருக்கிறாளே என்பதை நினைக்கும்போது உடலெல்லாம் சிலிர்த்தது.

சந்தியிலுள்ள புத்தகக் கடைக்குச் சென்று பத்திரிகை ஒன்றை வாங்கி வந்து பஸ் நிலையக் கம்பியில் சாய்ந்த வண்ணம் படித்தான். பத்திரிகையில் கொழும்பு நிலவரம் பந்தி பந்தியாக இருந்தது. ஆயிரக் கணக்கான அகதிகள் முகாம்களில் இருக்கிறார்கள் என்றும் அவர்கள் விரைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றும் அரசாங்க அறிக்கை கூறியது. வெளிநாடுகள் அரசைக்கண்டித்திருப்பதாயும், இதன் பொருட்டு இந்திய வெளி நாட்டமைச்சர் நாளை வருவார் என்றுமிருந்தது. இவற்றை வாசிக்கும்போது என்னவோ போலிருந்தது சொந்த நாட்டி லேயே அந்த நாட்டுப் பிரஜை அகதியாக நேர்ந்த கோலத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. பத்திரிகையை மூடிவிட்டுப் பஸ்வரும் திசையில் பார்வையைச் செலுத்தினான். ஆடி அசைந்து குலுங்கி இ.போ.ச பஸ் வந்து கொண்டிருந்தது. பஸ்ஸில் ஏறிக் கொண்டவனது மனது மட்டும் அழுது கொண்டிருந்தது. யன்னலூடாக வெளியே பார்த்தான். பச்சைப் பசேல் என்ற மரங்கள். அழகான குடிசைகள். ரம்மியமாக இருக்கும் இந்த இயற்கைக் காட்சிகளை ரசிக்க அவனால் முடியவில்லை. மனம் போராடிக் கொண்டிருந்தது. "யாழ்ப்பாணம்"என்ற கொண்டக்டரின் குரல் கேட்டுத் திடுக்கிட்ட சிவகுமார் பஸ்ஸை விட்டு இறங்கிக் கொண்டான். இறங்கியவன் நேராகக் கஸ்தூரியார் வீதியால் சென்று வின்சர் தியேட்டரையும் தாண்டிச் சாந்தா வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். வீதியில் போவோர் வருவோரெல்லாம் கொழும்பைப் பற்றியே கதைத் தார்கள். எல்லேருடைய முகங்களிலும் சோகம் தன்னிச்சையாக இடம் பிடித்திருந்தது. அவன் சாந்தா வீட்டுக்கு வந்து கதவைத் தட்டும் போது நேரம் பத்து மணியாகி இருந்தது. அவன் கதவைத் தட்டிய போது சாந்தாவின் தாத்தாதான் கதவைத் திறந்தார்.

"தம்பியா என்ன இந்தப் பக்கம்?"

"ரவுணுக்கு வந்தாப்போலை உங்களையும் பார்த்துப் போகலா மெண்டு..." இது அப்பட்டமான பொய். அவன் வந்ததே சாந்தாவைப் பார்க்கத்தான். ஏதோ ஒரு குற்ற உணர்வு உண்மை யைச் சொல்வதைத் தடுத்து விட்டது.

"சாந்தா சிவகுமார் தம்பி வந்திருக்கிறார்"என்று குரல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார் தாத்தா. சமையலறையில் அலுவலாக இருந்த சாந்தா வெளி யில் வந்தாள். அவனைக் கண்டு மெல்லிய புன் சிரிப்பை உதிர்த்து விட்டு அருகில் கதிரையில் அமர்ந்தாள்.

"உங்கடை கதை கிடைச்சுது"

"நல்லமா... பிடிச்சுதா?"

"ம்.... நல்லாயிருக்குது"

"இன்னும் நாலைஞ்சு எழுதி வைச்சிருக்கிறேன்"

"அப்ப **திறப்பு**க்கு எழுத்துப் பஞ்சமில்லை"

"கருத்து உங்களுக்குப் பிடிச்சுதா?"

"இன்றைய சூழ்நிலையைப் புதிய கோணத்திலை பார்க்கிறியள்."

"**திறப்பு** எப்ப வருகுது?"

"அநேகமாய் இன்னும் பத்து நாளிலை வரும்"

"மறக்காமல் எனக்கொண்டு அனுப்பி வையுங்கோ" என்று கூறிவிட்டு தேநீர் போடக் குசினிக்குள் போனாள். கண்களைச் சுழல விட்டான். சிறிய வீடாக இருந்தாலும் அழகாக இருந்தது. மேசையின் மீது ஒரு புத்தகம் இருந்தது. மெதுவாக எழுப்பிப் போய் அதனை எடுத்துப் பார்த்தான். கலை இலக்கியம் பற்றிய யெனான் கருத்தரங்கு என்றிருந்தது. அவனுக்கு வியப்பாகவும் இருந்தது. இதையெல்லாம் இவள் படிக்கிறாளா? அவன் புத்தகத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே வந்த சாந்தா தேநீரை அவன் கையில் கொடுத்துவிட்டு,

"எனக்கு இலக்கியத்தில் யதார்த்தத் தன்மையை உருவாக்கியதே இந்தப் புத்தகம் தான். எந்தப் பிரச்சனையையும் கூர்மையாகப் பார்த்துத் தெளிவடைய எனக்குப் பல வழிகளிலை இந்தப் புத்தகம் உதவி இருக்குது" அவள் இப்படித் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கும் போது அவளையே வைத்த கண்வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான் சிவகுமார் .

"என்னை விடத் தீவிரமாகவும் புத்திசாலியாகவும் இருக்கிறியள்" என்றான் சிவகுமார்

"எனக்கிந்தத் தீவிரவாதம் என்ற சொல்லுப் பிடிக்காது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சரியானதைப் படிக்கிறன் சரியானதை எழுதிறன். சரியான வர்களோடை தொடர்பு கொள்ளிறன். இதை ஏன் தீவிரம் என்று சொல்லிறியள்” சிவகுமார் வாயடைத்துப் போயிருந்தான். எவ்வளவு தெளிவான வசனங்கள்.

“அதெப்படிச் சொல்கிறியள். சாதாரண நிலையிலை நீங்கள் சொல்கிற மாதிரி ஒருவரும் இருக்கிறதில்லையே”

“சாதாரண நிலைக்கு அடுத்த அசாதாரணம் தீவிரம்தானே”

“இல்லையே! சாதாரண நிலையிலிருந்து சிறப்பு நிலைக்கு வந்திருக்கிறேனே ஒழிய சாதாரண நிலையை மறுத்து முரணாக எதிர் நிலைக்குப் போகவில்லையே. அப்படிப் போயிருந்தால் தீவிரம் என்று சொல்லலாம்” என்று அவள் கூறியபோது அடுத்து என்ன கூறுவதென்று அவனுக்குப் புரியவில்லை. அவனுடைய இந்தத் தர்மசங்கடமான நிலையை அவள் ரசித்தாள். அவன் தன்னைச் சமாளித்துக் கொண்டு

“எங்க தாத்தாவைக் காணவில்லை” என்று கதையை மாற்றினான். அவள் சிரித்துக் கொண்டே

“சரி கதையை விடுவம். என்ன விசயம் வந்தனீங்கள்” என்று கேட்டாள்.

“இல்லை... நான் வேறை அலுவலாய் ரவுணுக்க வந்தனான். அதாலை உங்களையும் பார்த்துப் போகலாமெண்டுதான்.”

“எனக்கெண்டால் அப்பிடிப்படேல்லை”

“நீங்கள் தாத்தாவோடை இருக்கிறியள்...... உங்கடை அப்பா..... அம்மா....”

“அது பெரிய கதை” என்று பெருமூச்சுவிட்டு விட்டு

“உங்களுக்குச் சொன்னாலென்ன. அம்மாவும் அப்பாவும் 77ஆம் ஆண்டுக் கலவரத்திலை பரலோகம் போயிட்டினம். அப்ப நாங்கள் பதுளையிலை இருந்தம். ஒரு நாள் இரவு திடீரென நுழைஞ்ச சிங்களக் காடையன்கள் வீட்டையும் கொள்ளையடிச்சு அப்பாவையும் வெட்டிப்போட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவைத் தூக்கிக் கொண்டு போட்டான்கள். நானும் தம்பியும் கட்டிலுக்குக் கீழைபோய் ஒழிச்சதாலை தப்பினம். இண்டு வரைக்கும் அம்மாவைப் பற்றி ஒரு தகவலுமில்லை."
அவள் சொல்லி முடித்துவிட்டு அழுதாள். சிவகுமார் திடுக்கிட்டுச் சிலைபோல் இருந்தான். இந்த அழகான சிலைக்குள் இத்தனை துன்பங்களா! மனங்கலங்கினான்.
" அழாதையுங்கோ. அழுகையாலை எதுவும் நடந்து விடாது. உப்பிடி 58 இலையும் நடந்தது 77 இலையும் நடந்தது இப்ப 83 இலையும் நடந்து முடிஞ்சுது "
" இதற்கு முடிவில்லையா? நாங்கள் நெடுகலும் இப்படியே செத்துக் கொண்டிருக்கிறதா?"
" அர்த்தமுள்ள அவளின் வினாவுக்கு எப்படியான பதிலைக் கூறமுடியும்? சிவகுமாருக்குக் குழப்பமாக இருந்தது. இதற்கெல்லாம் அரசியல்வாதிகள்தான் என்று தப்பிக் கொள்ள முடியாது. ஏனென்றால் முன்னே இருப்பவள் சிந்திக்கும் திறன் கொண்ட ஒரு பெண். ஆதலால் சிவகுமார் அமைதி காத்தான்.
" நீங்கள் சொல்லலாம் சிங்களத் தொழிலாளர்களையும் இணைத்த ஒரு புரட்சிதான் இவற்றுக்கான தீர்வு என. ஆனால் இப்படிக் கூறுவதெல்லாம் வெறும் சித்தாந்தம்தான். நடைமுறையிலை சரி வராது."
அவளிடமிருந்து வந்த இந்த வார்த்தைகள் அவனைக் குழப்பின. இவள் சொல்லுவதைப் பார்த்தால் இதிகா தேர்ந்தெடுத்த பாதை சரியெண்ட மாதிரியெல்லோ இருக்குது" இரண்டு வித்தியாசமான பெண் அறிவு ஜீவிகள் மத்தியில்தான் சிக்குப்பட்டிருப்பது தினகரனுக்குப் புரிந்தது.
" நீங்கள் யெனான் கருத்தரங்கையும் படிக்கிறியள். பிறகு இப்படியும் கதைக்கிறியள். ஒரே குழப்பமாயிருக்குது." என்றான் சிவகுமார்.
" ஓ..நான் யெனான் கருத்தரங்கை வாசிச்சவுடன் என்னைக் கொம்யூனிஸ்ட் என்று நினைச்சிட்டியளோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வேறை எப்படி எடுக்கிறது?"

" அந்த நாட்டுச் சூழலுக்கேற்றமாதிரி சீனமக்களும் ரஸ்ய மக்களும் எடுத்த முடிவுகளை வைச்சு எப்படி நாங்கள் முடிவெடுக்கிறது? இஞ்சை கொம்யூனிஸ்ட் என்டு சொல்லிறவை அதைத்தான் செய்யினம். அதனாலைதான் உங்களுக்குக் குழப்பம் வந்தது." என்று அவள் கூறியபோது சிவகுமாருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. திரும்ப அதைப்பற்றிக் கதைக்கவும் அவன் விரும்பவில்லை.

"நீங்கள் சொல்லிற விசயம் சட்டுப்புட்டென்று முடிவெடுக்கிற விடயமில்லை. ஆறுதலாய்க் கதைப்பம். இருட்ட முன்னம் வீட்டை போகவேணும்." என்று சமாளித்துவிட்டுப் புறப்படத் தயாரானான் சிவகுமார்.

அவன் தொடர்ந்து கதையாமல் நழுவ முயற்சிப்பதை சாந்தா தனக்குள் நன்றாக ரசித்தாள்.

சிவகுமார் வரும் வழியில் சாந்தாவைப்பற்றியே நினைத்துக் கொண்டு வந்தான். அவளுடைய அணுகு முறையும் சிந்தனையும் அவனை வியப்படையவே வைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28

சிவகுமார் யாழ்ப்பாணம் போய் விட்டு வந்தபோது சுவந்திகா அவனுடைய அறையில் இருக்கவில்லை. அவனுக்குத் திக்கென்றிருந்தது. வெளியில் சுந்தரம் மாஸ்டரைக் கேட்க கேட்க வாயை உன்ன, அவரே
"சுவந்திகாவிற்குப் பின்பக்க அறையைக் குடுத்திருக்கிறன் தம்பி" என்றார். அவனுக்கு நிம்மதியாக இருந்தது. அப்போது அவசர அவசரமாக உள்ளே நுழைந்தாள் இதிகா. அவளுடைய கையில் சில அச்சடிக்கப்பட்ட போஸ்டர்கள் இருந்ததைத் சிவகுமாரின் கண்கள் கவனித்தாலும் கவனியாதது போல
"என்ன இதிகா எப்படிச் சுகம்?" என்றான். அவள் பதிலேதும் கூறாது அவனை முறாய்த்துப் பார்த்துவிட்டு அறைக்குள் போய்விட்டாள். அவளுடைய கையில் இருந்த போஸ்டர்களைக் கொண்டு அவளுக்கும் தீவிரவாதக் குழுவுக்கும் தொடர்பு உண்டாகிவிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டான்.

அவன் தன்னுடைய அறைக்குப் போகத் திரும்ப சுவந்திகா அறையை விட்டு வெளியே வந்தாள்.

"எப்படி இருக்கிறியள்.?"என்று சிவகுமார் கேட்க,

"இருக்கிறன்"என்றவாறே கதிரை ஒன்றில் அமர்ந்தாள்.

சிவகுமாரும் கதிரையில் இருக்கச் சிறிது நேரம் அமைதியாக இருவரும் இருந்தனர்.

"நீங்கள் நல்லா தமிழ் கதைக்கிறியள்" என்று அமைதியைக் கிழித்தது சிவகுமாரின் குரல்.

"நாய்க்கு வேடம் போட்டால் குரைக்கத்தானே வேண்டும்"

"ஆர் உங்களுக்குத் தமிழ் படிப்பிச்சது"

"அவர் தான்" காந்தனின் நினைவு வந்து சிறிது நேரம் முகட்டைப் பார்த்தபடி இருந்தாள்.

"நீங்கள் துணிஞ்சனீங்கள்"

"ஒரு பெண்ணுக்குத் துணிச்சல் இல்லாவிட்டால் இந்தச் சமூகத்திலை வாழ ஏலாது"

"உண்மைதான். இதிகாவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறியள்?" இப்படி சிவகுமார் கேட்கும் போது அறைக்குள்ளிருந்தபடி இவர்களின் உரையாடலை செவிமடுத்துக் கொண்டிருந்த இதிகா உசாரானாள்.

"என்ன நினைக்கிறது. ஒரு அப்பாவிப் பெண். அவவின்ரை நிலைமையிலை நான் இருந்தாலும் அப்படித்தான் நடப்பன். ஒன்று அவள் சகோதரனை இழந்த கோபம். மற்றது இண்டைக்கு எதிரும் புதிருமாக மாறிக் கொண்டிருக்கிற சமூகத்தைச் சேர்ந்தவள் என்பதாலை இருக்கலாம்"

"நீங்கள் பெருந்தன்மையாய் கதைக்கிறியள். இதிகாவையிட்டு உங்களுக்குக் கோபம் இருந்தால் எனக்காக அவளை மன்னிச்சுக் கொள்ளுங்கோ"

"இது என்ன? யாரை யார் மன்னிக்கிறது. ஏன் இதிகா எனக்கென்ன செய்தவ? ஒரு சாதாரண பெண்ணாக நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டா. என்னைக் கொறகொறவென்று இழுத்துப் போய் றோட்டிலை விட்டவவா? இல்லையே! இதிலிருந்து அவவின்ரை மனது முழுசாய் வெறுக்கயில்லை எண்டு தானே அர்த்தம்" சுவந்திகாவின் இந்த வசனங்கள் இதிகாவை அதிர்ச்சிக்குள்ளாக்கின. சிவகுமாருக்கு ஆச்சரியமாக இருந்தது. தான் சந்திக்கும் ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு கோணத்தில் நிற்பதை நினைத்தபோது மிகமிக ஆச்சரியப்பட்டான். சிறிது நேரம் இருவரும் கதைக்கவில்லை.

"கொழும்பிலை நிலவரம் சரியான மோசமாகுது" என்றான் சிவகுமார்

"அரசாங்கம் தன்ரை சுய நலத்துக்காக இதைச் செய்யுது. ஆனால் இதனாலை அரசாங்கம் தான் பெருங் கஸ்டப்படப் போகுது. எங்கடை பெடியளுக்கும் தேவையில்லாத வேலை. சினிமாப் படங்களைப் பார்த்துவிட்டு ஸ்ரண்ட விளையாட்டு விளையாடுகினம். கஸ்டப்படுகிறதும் சாகிறதும் சனங்கள் தானே" என்று சிவகுமார் சொன்ன போது அறைக்குள்ளிருந்த இதிகா பற்களை நறநற வென்று கடித்தாள்.

"உங்கடை பார்வை சரியான பிழை. உங்கடை இளைஞர்களைப் பொறுத்தவரை ஆயிரம் பிரச்சனைகள். எந்த அரசும் அவயின்ரை பிரச்சனையைத் தீர்த்து வைக்கவில்லை. கல்வியிலை பிரச்சினை.. வேலையிலை பிரச்சினை. இந்தப் பிரச்சினையள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாவிட்டால் இப் படித்தான் நடக்கும். சிவப்பு கட்சிகள் பிரச்சனைகளை இனங் கண்டு வெறும் கோகூஷங்களை எழுப்பிச்சினமே யொழிய நடைமுறையிலை எந்தத் தீர்வையும் வைக்கவில்லை. இந்த நிலையிலை விரக்தி அடைந்த இளைஞர் தங்கடை கையிலை ஆயுதத்தைத் தூக்கிச்சினம். இப்பதானே தொடங்கியிருக்கினம் போகத்தானே தெரியும். சும்மா ஸ்ரண்ட் விளையாட்டென்று அவையின்ரை போராட்டத்தைக் கொச்சப்படுத்தாதையும்" சுவந்திகா இப்படிக் கதைப்பாள் என்று சிவகுமார் கனவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கவில்லை. உள்ளுக்குள்ளிருந்த இதிகாவிற்கும் ஆச்ச ரியமாக இருந்தது. சுவந்திகா இன்னும் தொடர்ந்தாள்.

"ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் மறுக்கப்படும் போது அதற்கெதிராகக் கிளர்ந்தெழுவதும் ஆர்ப்பாட்டம் செய்வதும் அவன் உரிமை. இதற்கெதிராக எதிராளி ஆயுதத் தைத் தூக்கினால் அவனும் ஆயதத்தைத் தூக்கவேண்டியது தவிர்க்க முடியாத கட்டாயம் தானே. காந்தனோடை கதைக் கேக்கை யாழ்ப்பாண இளைஞர்களின்ரை நடவடிக்கைகளை நான் வெறுத்திருக்கிறன். ஆனால் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்துப் பார்க்கேக்கை அவை செய்யிறது பிழை மாதிரி எனக்குத் தெரியேல்லை" சுவந்திகா இப்படிச் சொல்லச் சொல்ல அறையுள்ளிருந்த இதிகா சிலையாகிப் போனாள்.

" நீங்கள் சொல்லிறது சரியெண்டு எடுத்தாலும் மக்களுக்குப் போராட்டத்தின்ரை நோக்கம் தெரியாமல் ஆயுதத்தைத் தூக்கினால் சாகிறதென்னவோ மக்கள்தானே. இப்ப இந்த வீட்டை எடுத்துப் பாருங்கோ.. சந்திரன் போராட்டத்திலை பங்குபற்றாமல் வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகிறான். இப்படி எத்தனையோ இளைஞர்கள் நாட்டைவிட்டு ஓடுகினம். இது எல்லாம் இந்தப் போராட்டத்தின் நோக்கமும் தெளிவின் மையும்தானே காரணம்." சிவகுமாரின் வாதத்தைக் கேட்ட இதிகா அறையுள் கடுப்பாகிக் கொண்டிருந்தாள். சுவந்திகா என்ன சொல்லப்போகிறாள் என்பதைச் செவிமடுக்கத் தயாராகினாள். " நீங்கள் உப்பிடிச் சொல்வது தவறு. பிழையான பார்வையும் கூட. நீங்கள் சொல்லுகிற மக்கள் யார்? தங்களின் பிள்ளைகளின் படிப்பினால் பாதிக்கப்பட்டவர்களும் வேலை இன்மையால் துன்பப்படும் பிள்ளைகளின் அப்பா அம்மாதானே. அவர்களுக்கு இந்த அரசாங்கம் செய்வது எதுவும் தெரியாதென்று நினைக்கிறீர்களா? இந்த அரசாங்கத்தை என்ன புகழ்ந்து கொண்டா இருக்கிறார்கள். இவர்கள் போலி அரசியல் வாதிகளாலை ஏமாற்றப்பட்டுக் கொண்டல்லவா இருக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். வாக்குப் போடுவதும் அதன்பின் தங்கள் பிள்ளைகளின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்ற எண்ணத்தில் கனவு காண்பவர்களுமாகவல்லவா இருக்கிறார்கள். இந்தச் சுயநலமான அரசியல்வாதிகளின் தூண்டலில்தானே இது நடக்கிறது. இவர்களை வழிநடத்தக் கொள்கைகள் வகுக்க ஒரு மாசேதுங் போல ஒரு லெனின் போல தலைவர்கள் இல்லையே. இன்று இந்த நாட்டுச் சூழலிலை யுத்தம் தொடங்கியிருக்குது. இனித் தான் இவர்கள் மத்தியில் தலைவன் உருவாகுவான். அது வரையும் இளைஞர்கள் நாட்டைவிட்டு ஓடிக் கொண்டிருப்பார்கள் பெற்றாரும் தங்கள் பிள்ளைகள் மட்டும் தப்பினால் போதும் என்று கருதிக் கொண்டிருப்பார்கள்." என்று கூறிவிட்டு அவனைப் பார்த்தாள். சிவகுமார் மிரண்டு போயிருந்தான்.

இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த இதிகாவுக்கு சுவந்திகாமீதிருந்த வெறுப்பு அனுதாபமாக மாறத் தொடங்கியிருந்தது. அப்போது கதவு தட்டிச் சத்தம் கேட்டது. சிவகுமார் அருகே போய் விசாரிக்க அங்கு நின்றிருந்த இளைஞன் இதிகாவைப் பாரக்க வந்திருப்பதாகக் கூறினான். சிவகுமார் அவனை மேலுங் கீழுமாகப் பார்த்து விட்டு உள்ளே வந்து இதிகாவிற்கு அறிவித்தான். வெளியே வந்த இதிகா எட்டிப் பார்த்து அவனை உள்ளே அழைத்தாள். உள்ளே வந்தவனுக்கு ஒரே திகைப்பு. சுவந்திகாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. இருவரும் ஒரே சமயத்தில் "நீங்களா?" என்றார்கள்.

சிவகுமாரும் இதிகாவும் ஆளை ஆள் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டனர். இவர்கள் இருவரும் திகைத்துப் போய் நிற்பதைப் பார்த்து அந்த இளைஞனை அகதி முகாமில் சந்தித்ததையும் பின்பு புகையிரதத்தில் சந்தித்ததையும் கூறினாள் சுவந்திகா. ஆனால் சிவகுமார் இதிகாவைப் பார்த்து

"இந்த நண்பர் யார் என்று சொல்லவில்லையே? என்று கேட்டான்" இதிகா உடனே பதில் கூறாமல் சிறிது நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியாக இருந்தாள். பின்பு என்ன நினைத்தாளோ தெரியாது,

"இவர் என்னோடை கூடப் படிச்சவர்" என்று இதிகா கூறினாள். சிவகுமாருக்கு விளங்கிவிட்டது. சுவந்திகாவுக்கு முன் கூறத் தயங்குகிறாள் என்று நினைத்து

" ஆ .. அப்படியா நீங்கள் அங்காலை போய்க் கதையுங்கோ" என்று சிவகுமார் கூறினான்.

" நான் பிறகு உங்களைச் சந்திக்கிறன்" என்று வந்த முகுந்தன் சுவந்திகாவிற்குக் கூறிவிட்டு இதிகாவோடு நகர்ந்தான். இதிகா எதுவும் கூறவில்லை. இருவரும் வெளியில் சென்று கதவடியில் நின்று கதைத்தனர். வந்தவன் சுவந்திகாவைப்பற்றி ஏதோ இதிகாவிற்குக் கூறினான். சிறிது நேரத்தில் அவன் போய்விட்டான். போகும்போது இதிகாவிடம் எதையோ கொடுத்துவிட்டுச் செல்வதையும் சிவகுமார் அவதானிக்கவே செய்தான். வீட்டுள் வந்த இதிகா தன்னைச் சுதாரித்துக் கொண்டு தேநீர் போடவா? என்று கேட்டுவிட்டுச் சுவந்திகாவைப் பார்த்து

"அண்ணி உங்களுக்கும் போடவா?"என்று கேட்டாள். இவள் இப்படிக் கேட்டதும் திடுக்கிட்டுத் திரும்பிய சுவந்திகாவுக்கு ஆயிரம் மின்னல்கள் ஒரே நேரத்தில் தன்னைத் தாக்கியது போலிருந்தது. சிவகுமாருக்கு விண்ணில் பறக்காத குறை. இதிகா புன்சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டுக் குசினிக்குள் போய்விட்டாள். தேநீரைக் குடித்து விட்டு நாட்டுப் பிரச்சனைபற்றி நால்வரும் காரசாரமாக விவாதித்தனர். நேரம் போய்க் கொண்டிருந்தது. சிவகுமார் தான் படுக்கப்போவதாகச் சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் போனான். சுவந்திகா சிறிது நேரம் இருந்து விட்டுப் போய்ப் படுத்தாள். இதிகா மட்டும் தனியே இருந்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29

புகையிரதம் கனோவர் நிலையத்தை அடைந்ததும் நந்தினியும் சந்திரனும் விடைபெற்றுக் கொண்டனர். புகை யிரதத்தைவிட்டு இறங்கிய சந்திரன் தன்னை யார் கூட்ட வந்திருப்பார்கள் என்று தேடினான். நந்தினிக்கு அவளின் அக்கா கணவர் வந்திருந்தார். சந்திரனுக்கருகில் ஒருவர் வந்து

" நீங்கள்தான் சந்திரனோ?" என்று கேட்டார். சந்திரன் தலையாட்ட இருவரும் நிலையத்தை விட்டு வெளியே வந்து காரில் ஏறிப் புறப்பட்டனர்.

காரில் மேலும் மூவர் இருந்தனர்.

"தம்பி இவையும் உம்மைப் போலத்தான். கனக்க யோசியாதையும். நான் உங்களை இப்ப முன்ஸ்ரர் என்ற சிற்றியிலை எங்கடை பொடியள் இருக்கிற கட்டிடத்திலை கொண்டு போய் விடுவன். அவையள் அடுத்து என்ன செய்யிறதெண்டு சொல்லுவினம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அவர் கூறினார். சந்திரன் தலையாட்டிவிட்டுப் பேசாமல் இருந்தான். கார் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

இரண்டு மணித்தியாலயங்கள் ஓடி ஒரு பழைய கட்டிடத்தின் முன் சென்று நின்றது. அந்தக் கட்டிடத்திற்குள் சென்றார்கள். சந்திரனுக்கு அங்கு பல இளைஞர்களைக் கண்டபோது ஆச்சரியமாகவிருந்தது. இவ்வளவு பேர் நாட்டைவிட்டு வந்து விட்டார்களா எனத் தனக்குள்தானே கேள்வி கேட்டுக் கொண்டான்.

கூட்டிக் கொண்டு வந்தவர் அங்கிருந்த மதன் என்பவரிடம் சந்திரனை ஒப்படைத்துவிட்டுத் தன் வேலை முடிந்தது எனக் கூறிவிட்டுப் புறப்பட்டுவிட்டார். அவர் போனதும் அங்கிருந்த இளைஞர்கள் சந்திரனைச் சூழ்ந்து கொண்டு நாட்டு விபரங்களைக் கேட்பதில் ஆவலாக இருந்தனர். சந்திரனுக்கு அந்தச் சூழ்நிலை பிடித்துக் கொண்டது. அவர்க ளோடு சகஜமாகப் பழகத் தொடங்கினான்.

எல்லோரும் எந்தப் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட தென்பதையும் எத்தனை ஆமிக்காரர் இறந்தனர் என்பதையும் அறியும் ஆவலில்தான் இருந்தனர். சந்திரனும் தனக்குத் தெரிந்தளவு விடயங்களைக் கொஞ்சம் கூட்டிக் குறைத்து விலாவாரியாகச் சொன்னான்.

மதன் றொட்டி கொண்டு வந்து சந்திரனுக்குக் கொடுத்தான். றொட்டியும் பருப்புக்கறியும் சுவையாக இருந்தது. சாப்பிட்டு நிமிர்ந்தபோது மனம் ஒரு பாதுகாப்பு இருக்கிறதென்ற உணர்வை அடைந்தது.

ஆனாலும் மனம் ஊரிலுள்ள அப்பா அக்கா பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருந்தது. அவன் புறப்பட்ட நேரம்தான் கலவரமும் தொடங்கி இருந்தது. கொழும்பில் அவனது அண்ணனும் அண்ணியாகப் போகின்றவரும் இருக்கிறார்கள். அண்ணி சிங்கள இனம் என்பதால் அண்ண னுக்கு எதுவும் நடக்காது எனத் தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பு அலுப்பாக இருந்தது. மதனின் அறையில் உள்ள கட்டிலில் படுத்தான். படுத்தானே ஒழிய மனம் பலவிதமான சிந்தனைகளில் ஆழ்ந்தது. நந்தினியின் நினைவும் வந்தது. விலாசம் உள்ளமையால் கடிதம் போட்டுப்பார்க்கலாம் என்று நினைத்தான். இப்படியே நினைத்தபடி தூங்கிவிட்டான். மறுநாள் காலை எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு வந்த போது

" மச்சான் நாங்கள். சோசல் கட்டடத்திற்குப்போய் அகதி அப்பிளிக்கேசன் கொடுக்க வேணும்" என்றான்.

சந்திரனுக்கு ஒன்றும் புரியவில்லை. மதன் சந்திரனையும் அழைத்துக் கொண்டு அடுத்த அறையிலுள்ள ஒருவரிடம் கூட்டிச் சென்றான்.

அவரைப் பார்த்து " ஐயா இவருக்கொரு அசைலம் அப்பி ளிக்கேசன் எழுதவேண்டும்"

அவர் ஒரு நடுத்தர வயதுள்ளவராக இருந்தார்.

"ஓ.. எப்ப வந்தவர்?"

"ராத்திரித்தான் வந்தவர்"

அவர் ஒரு கடதாசி எடுத்துச் சந்திரனின் பெயர் ஊர் விபரம் எல்லாம் கேட்டுவிட்டு எழுதத் தொடங்கினார். அரை மணித்தியாலமாக யோசித்து யோசித்து எழுதிக் கொண் டிருந்தார். என்னதான் எழுதுகிறார் என்று சந்திரன் முழுசினான். எழுதி முடித்ததும் தான் எழுதியதைச் சத்தமாக வாசித்தார்.

சந்திரனுக்குப் பயமாக இருந்தது. இதில் சந்திரனை இராணுவம் பிடித்ததாகவும் ஒரு கிழமையாக வைத்துச் சித்திரவதை செய்ததாகவும் அதிலிருந்து எப்படியோ தப்பி ஏஜன்சிகாரரின் துணையோடு இங்கு வந்து சேர்ந் ததாகவும் எழுதியிருந்தார். அதிற் சொல்லப்பட்ட எதுவுமே சந்திரனுக்கு நடக்கவில்லை.

" அண்ணை உதிலை உள்ள எதுவுமே எனக்கு நடக்கவில்லை. நீங்கள் ஏதோ பக்கத்திலை நின்று பார்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதியெல்லே எழுதியிருக்கிறியள்." என்று சந்திரன் கூறினான்.
" தம்பி இப்படி எழுதாவிட்டால்..நாளைக்கே உன்னைப் பிளேனிலை ஏத்தி அனுப்பிப்போடுவாங்கள்"
" ஆதாரம் ஒண்டும் கேட்க மாட்டாங்களே.. "
" சீச்சீ.. தம்பி இவங்கள்.. இந்த வெள்ளைக்காரன்கள் மனிசரையும் அவையின்ரை வார்த்தையையும் நம்புறவங்கள். ஒரு நாளும் ஆதாரம் கேட்க மாட்டான்கள்."

சந்திரனுக்குத் திகைப்பாகவும் அதே நேரம் அருவருப்பாகவும் இருந்தது. எவ்வளவு பொய். சந்திரன் எதுவுமே திருப்பிக் கதைக்கவில்லை. அவர் கையெழுத்து வைக்கச் சொன்ன இடத்தில் வைத்தான்.

பிறகு மதனோடு அந்த நகரத்திலுள்ள வெளி நாட்டுக் காரியாலயத்திற்குச் சென்றான். அங்கிருந்த அதிகாரியோடு ஜேர்மன் மொழியில் மதன் ஏதோ கதைத்தான். அந்த அதிகாரி சந்திரனை மேலும் கீழும் பார்த்தார். அந்தக் கடிதத்தை மதன் கொடுத்தான். அவர் எதுவும் கேட்கவில்லை. முழுதாக வாசித்தமாதிரியும் தெரியவில்லை. ஏதோ ஒரு பத்திரத்தில் சந்திரனின் பெயர் விபரங்களை எழுதிவிட்டு அந்தப் பத்திரத்தில் ஒரு சீல் அடித்துவிட்டு சந்திரனிடம் அதைக் கொடுத்தார். அதை வாங்கிக்கொண்ட சந்திரனும் மதனும் அவருக்கு நன்றி கூறிவிட்டு வெளியே வந்தனர்.
"விசயம் முடிஞ்சுது. உனக்கு இப்ப தற்காலிக விசா தந்திருக் கிறாங்கள்" என்று மதன் கூற சந்திரன் அடுத்து என்ன செய்யிறது என்று கேட்டான்.
"இனி வேலை தேடவேணும். பயப்பிடாதை அதுவும் எடுக்கலாம். சோசலிலை மாதம் மாதம் காசு தருவாங்கள். சுளையாயத் தருவாங்கள். எங்கையாவது களவாய் வேலை செய்தால் அந்த மாதிரிக் கை நிறையக் காசு மிதக்கும்"
தவறான செய்கைகளைச்சர்வ சாதாரணமாகக்கதைக்கும்மதனைப் பார்க்கச் சந்திரனுக்கு வியப்பாகவும் பயமாகவும் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதும் கதைக்காமல் மதனோடு வந்து கொண்டிருந்தான்.
“ மதன் வீட்டுக்குக் கடிதம் எழுதவேணும்..” என்றான் சந்திரன்.
“வாரும் உந்தக் கடையுக்குள்ளை போவம்” என்று பக்கத்தில் இருந்த கடையொன்றுக்குள் மதன் சென்றான்.
அந்தக் கடையைப் பார்த்ததும் சந்திரன் ஏங்கிப் போனான். இப்படியொரு பெரிய கடையை முதல்முதலாக இப்போதுதான் பார்க்கிறான் சந்திரன்.
இருவருமாகக் கொப்பிகள் விற்கிற பகுதிக்குச் சென்று சந்திரனுக்குக் கடிதம் எழுத ஒரு கொப்பியும் பேனையும் வாங்கிக் கொண்டு வெளியில் வந்து இருக்குமிடத்திற்குச் செல்ல பஸ்சில் ஏறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 30

காலை பொலபொலவென்று விடிந்தது. இரவு முழுவதும் சிவகுமாருக்கு நித்திரை யில்லை. தீவிரவாத இயக்கம் ஒன்றுடன் இதிகா தொடர்பு வைத்தது அவனுக்குப் பிடிக்கவில்லை. மனசுக்குப் பிடித்தவளாக அவள் இருந்தபோதும் கொள்கையில் எதிரும் புதிருமாக இருக்கிறாளே என்று மனம் குழம்பினான். எப்படி முடிவெடுப்பதென்று அவனுக்குப் புரியவில்லை. படுக்கையில் இருந்தபடியே முகட்டைப் பார்த்த வண்ணம் சிந்தித்துக் கொண்டிருந்தான் சிவகுமார். சில நாட்களாகவே அவனுடைய மனம் அவனை யறியாமல் இதிகாவையும் சாந்தாவையும் ஒப்பிட்டுப் பார்க்க ஆரம்பித்திருந்தது. தபால்காரன் மணியடிக்கும் சத்தம் கேட்டது. யன்னலூ டாக எட்டிப் பார்த்தான். இதிகா கடிதங்களை வாங்கிக் கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவகுமார் அறைக்கு வெளியே வந்தான். இதிகா அவனை நிமிர்ந்து பார்க்கத் திராணியில்லாதவள் போல் பார்த்து அவன் கடிதங்களைக் கொடுத்தாள். கடிதம் ஒன்று சாந்தாவிடமிருந்து வந்திருந்தது. மற்றது இதிகாவிற்கு ஜெர்மனியிலிருந்து சந்திரன் எழுதியிருந்தான். சந்திரனுடைய கடிதத்தில் காந்தனையும், சுவந்திகாவையும் பற்றி விசாரித்து எழுதியிருந்தான். காந்த னைப்பற்றி அவன் விசாரித்த விதம் அவள் கண்களில் கண்ணீரைத் தோற்றியது. கண்களைக் கசக்கிக் கொண்டு தொடர்ந்து வாசித்தாள். சுவந்திகாவைப்பற்றி அவன் எழுதியிருந்த வசனங்கள் அவளின் கோபத்தீயை மேலும் அணைத்தன. இப்படி அவள் வாசித்துக் கொண்டிருக்கும் போது சுவந்திகா வெளியில் வந்தாள். சுந்தரம் மாஸ்டரும் நுழைந்து கொண்டிருந்தார். சுந்தரம் மாஸ்டர் நுழைந்ததை இதிகா கவனிக்கவில்லை.

"உங்களைப் பற்றித் தம்பி கடிதம் எழுதியிருக்கிறான்" இதிகா சுவந்திகாவைப் பார்த்துச் சொன்ன போது, சுவந்திகா திகைத்து விட்டாள் என்றாலும் சமாளித்துக் கொண்டு

"ஆர் சந்திரனோ?"என்று சாதாரணமாகக் கேட்டாள். வந்து கொண்டிருந்த சுந்தரம் மாஸ்டருக்கு இந்த உரையாடல் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அவர் கனவிலும் இதிகாவின் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. அதைக் காணாத மாதிரி,

"பிள்ளை ஆற்றை கடிதம்?"என்றார்.

"தம்பி கடிதம் போட்டிருக்கிறான். ஜேர்மனியிலை சரியான குளிராம்"என்று கூறி முடிக்குமுன் கடிதத்தைத் தன் கையில் வாங்கிவிட்டார் சுந்தரம் மாஸ்டர். இந்த நேரம் பார்த்துச் சிவகுமாரும் வெளியில் வந்தான். அவனை எதிர் கொள்ள முடியாமலோ என்னவோ அவன் வந்ததும் உள்ளே போய் விட்டாள். சிவகுமார் ஒரு புன்சிரிப்புடன் வந்து

"என்ன மாஸ்டர் மகனின்ரை கடிதத்திலை என்ன சொல்லியிருக்கிறான்" என்று சூழ்நிலையை மாற்றினான். சிவகுமார் வந்ததும் இதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதைச் சுவந்திகா அவதானிக்கத்தான் செய்தாள். பின்பு சிவகுமார் போனதும் வெளியில் வந்த இதிகா ஹோலில் உள்ள கதிரையில் அமர்ந்தாள்.

"அண்ணி உங்களுக்கு என் மேலை கோபமா?" என்று கேட்டாள் இதிகா.

"ஏன்?"

"நீங்கள் வந்தவுடனேயே ஆத்திரத்திலை சரியாய் கத்திப் போட்டன். நான் இப்பிடித்தான் சரியான அவசரக்காரி. எனக்குச் சரியான முன்கோபம். எதையும் யோசிக்க மாட்டன். படபட வென்று பேசிப்போடுவன். பின்னுக்கு முன்னுக்கு வாறதைப்பற்றி யோசிக்கிறதேயில்லை. நான் சின்னனிலையிருந்து இப்படித்தான். என்னை மாற்றவேணுமெண்டுதான் யோசிக்கிறன். முடியேல்லை. எனக்குச் சிங்களவரென்றால் வெறுப்பு. அண்ணாவின்ரை சாவுக்கு நீங்கள் தான்காரணம் எண்டு நினைச்சுப் போட்டன். நீங்கள் நேற்றுச் சிவகுமாரோடை இருந்து கதைக்கேக்கை தான் உங்கடை நிலைமை புரிஞ்சுது" என்று மூச்சுவிடாமல் தன்னைத்தானே விமர்சனம் செய்தாள் இதிகா.

சுவந்திகாவுக்கு அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. "நான் ஒண்டும் கோபிக்கேல்லை. ஆனால் சிங்கள வரெல்லாரையும் ஏன் எதிர்க்கிறீர் எண்டுதான் எனக்குப் புரியேல்லை. நான் விளங்கிக் கொண்டளவு உமக்கும் தீவிரவாத இயக்கத் துக்கும் தொடர்பு இருக்கெண்டுதான் நினைக்கிறன் சரிதானே"

"நான் உள்ளுக்கை இன்னும் போகேல்லை. அவையளை எனக்குப் பிடிக்கும்."

"நீர் பயப்பிடாதையும். நான் எண்டைக்கு உங்கடை அண்ணனைக் கலியாணம் கட்டினனோ அண்டைக்கே நான் உங்களிலை ஒருத்தி. உங்களை நினைக்க எனக்குப் பெருமையாயிருக்குது. உரிமைக்காக நீங்கள் போராடுறது சரி. ஆனால் போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மை மக்களின்ரை ஆதரவோடுதான் வெல்லும். இது வரலாறு. போராட்டம் அரசுக்கெதிராக இருக்கவேணுமேயொழிய மக்களுக்கெதிரானதாக இருக்கக் கூடாது" என்றாள் சுவந்திகா. அவள் சொல்வதையே கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த இதிகா வியப்பு மிகுதியில் மேலும் என்ன பேசுவதென்றறியாமல் முழித்தாள்.

" உங்கடை இயக்கங்கள் முதலிலை மக்களுக்குப் போராட்டத்தைப்பற்றித் தெளிவான அறிவைக் கொடுக்க வேணும். இண்டைக்கு இதுதான் தேவை. ஆயுத பாவனையைக் குறைச்சு அதை வெறும் தற்பாதுகாப்புக்காக மட்டும் வைச்சுக் கொண்டு முழுத் தமிழ் மக்களையும் அரசுக்கெதிரான போராட்டத்துக்கு வழி நடத்தவேணும். உங்கடை போராட்டம் நியாயமானது என்று சிங்கள மக்களிட்டையும் நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டும். தனித்து ஒரு சிறுபான்மை இனம் போராடி ஜெயித்தாதாக வரலாறு இல்லை"

"நீங்கள் என்ன கொம்யூனிஸ்டா? அவையின்ரை பாணியிலை கதைக்கிறியள்"

"இல்லையே. எனக்குக் கொம்னியூஸ்ட் என்று சொல்லித் திரியிறவையைப் பிடிக்காது. இவர்கள் சரியான முற்போக்கு முலாம் பூசிய பிற்போக்கு வாதிகள். மக்களைப் பேசவும் விடமாட்டினம். அதே நேரம் தத்துவத்தையும் சரியாய் சொல்லிக் குடுக்க மாட்டினம். தங்களுக்கு அரைகுறையாய்த் தெரிஞ்ச விசயங்களையெல்லாம் மக்களுக்குக் கூறிக் குழப்புவினம்"

"இது உண்மைதான். இவர் சிவகுமாரும் உப்படித்தான் போராட்டத்தை முழுத் தவறு என்று மட்டும் சொல்லிப்போட்டுத் தீர்வு எதையும் கூறாமல் மழுப்புவார். உங்களுக்குக் கனக்க விசயம் தெரியுது. எங்களோடை நீங்களும் சேர்ந்தால் நல்லது தானே" என்றாள் இதிகா.

"கொஞ்சம் யதார்த்தமாய்ச் சிந்தியும். நான் நீங்கள் போராடிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனத்தைச் சேர்ந்தவள். உங்கடை இயக்கங்கள் சிங்களவர்களை எதிரிகளாகக் கருதுகிறார்கள். அவை என்னை எப்படிச் சேர்ப்பினம். சொல்லப்போனால் அன்றைக்கு வந்த முகுந்தன் மூலமாக இவ்வளவைக்கு நான் வந்த விசயம் இயக்கத்திற்குத் தெரியும். சிலவேளை என்னை ஒரு உளவாளியாகக் கூடக் கருதலாம். ஆதலால் எனக்கு எதுவும் நடக்கலாம். " என்று சுவந்திகா குறியபோதுதான் நிலைமையின் பயங்கரம் இதிகாவிற்குப் புரிந்தது.

அப்போது கதவு தட்டிச் சத்தம் கேட்டது. இதிகா போய் எட்டிப் பார்த்தாள். யாரோ ஒரு பெண் வாசலில் நிற்பது தெரிந்தது. இதிகா போய்க் கூட்டி வந்தாள்.

"நான் சாந்தா. சிவகுமார் நிற்கிறாரோ?"

"இல்லை. இருங்கோ வந்திடுவார்"

"நீங்கள் தான் இதிகாவே?"

"ஓம்"

"உங்களைப்பற்றி அடிக்கடி கதைக்கிறவர்"

"அடிக்கடி அங்கை வாறவரோ?"

"யாழ்ப்பாணம் வந்தால் வீட்டையும் வருவார்"

"அவ எங்கடை அண்ணி அவவிடை பெயர்....."

"தெரியும் சுவந்திகா"

"பிறகென்ன எல்லாம் தெரியுது"

"ஹலோ" என்று சுவந்திகாவைப் பார்த்துக் கூறினாள். பதிலுக்கு? சுவந்திகாஅவளைப் பார்த்துப் புன்சிரிப்பொன்றை உதிர்த்தாள். இவர்கள் கதைத்துக் கொண்டிருக்கும் போது சிவகுமார் உள்ளே நுழைந்தான். பத்திரிகை அலுவலாக வெளியில் சென்ற சிவகுமார் வீட்டுக்கு வந்தபோது சாந்தா வந்திருப்பதையும் அவளுடன் சுவந்திகா கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து அதிசயப்பட்டாலும் கவனியாதது போல் அவர்களுடன் வந்து கலந்து கொண்டான். தேநீரோடு வெளியில் வந்த இதிகா, சிவகுமாரும் வந்திருப்பதைப் பார்த்துத் தன்னுடைய தேநீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குக் கொடுத்தாள்.

"அகதிகள் முகாமிலை இருக்கிற சனங்களெல்லாம் கப்பலிலை வருகினம்" என்று கூறினான் சிவகுமார்

"சொந்த நாட்டுப் பிரசை தன் நாட்டிலே அகதியாகி யாழ்ப் பாணம் வருவதென்றால் சரியான வெட்கமான விசயம்" என்று சுவந்திகா சொன்னாள்.

"அதைவிடச் சிரிப்பு இன்னொரு நாட்டுக்குப் பாதுகாப்புத் தேடி அனுப்புறது மாதிரி யாழ்ப்பாணம் அனுப்புறது அவையே நாட்டை இரண்டாய்ப் பிரிக்கிற மாதிரி இருக்கு" என்றாள் சாந்தா.

"சாந்தா இதிலையிருந்து என்ன தெரியுது? தமிழனுக்குக் கட்டாயம் ஒரு நாடு தேவை. இல்லையெண்டால் அவன் உயிர் வாழ முடியாது. முந்தி எனக்கு இதிலை உடன்பாடில்லை. ஆனால் இவ்வளவும் நடந்தாப் போலை எந்த ஒரு இனமும் தான் வாழத் தனக்கென்றொரு இடத்திலை முழு உரிமையோடு வாழவேணும். ஆனால், உலகத்தின்ரை இன்றைய நிலையிலை சிறுபான்மை இனங்கள் மேற்கூறிய இரண்டுக்காகவும் போராடவேண்டிய கால கட்டம் தான் வாய்த்திருக்கு" என்றாள் சுவந்திகா.

சுவந்திகாவின் அணுகுமுறைகள் மிகமிக வித்தியாசமாக இருந்தன. "என்னைப் பொறுத்தவரை தனிநாட்டுக் கோரிக்கை அர்த்தமில்லாதது. அது ஒரு கற்பனைக் கூத்து" என்று சிவகுமார் சொல்ல அதைச் சாந்தாவும் ஆமோதித்தாள்.

"நீங்கள் இரண்டு பேரும் யதார்த்தமாய்ப் பிரச்சினையைச் சிந்திக்காமல் சீனாவிலை பெய்யிற மழைக்குச் சிலோனிலை குடைபிடிக்கிறவை மாதிரிக் கதைக்கிறியள்" என்று இதிகா சீறி விழுந்தாள். பேச்சு வேறு திசையில் அனலாக மாறுவதை யுணர்ந்த சுவந்திகா, இதிகாவை அடக்கினாள். யாருக்குமே கட்டுப்படாத இதிகா சுவந்திகாவுக்குக் கட்டுப்பட்டு விட்டாள். அத்தோடு பேச்சுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. சாந்தா சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருந்து விட்டுப் புறப்பட்டு விட்டாள். சுவந்திகா தன்பாட்டில் இருந்து சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. இதை அவதானித்த இதிகாவும் சிவகுமாரும் அவளருகில் வந்து ஆறுதல் கூறினர்.

" நீங்கள் வந்து அகதிகள் கப்பலிலை வருகினம் என்று சொன்ன உடனை எனக்குக் காந்தன் ஞாபகம்தான் வந்தது." என்று கூறிவிட்டுக் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

" நானும் அவரும் அகதி முகாமிலைதான் இருந்தம். அதை எப்படியோ அறிஞ்ச என் அப்பா வஞ்சகமாய் எங்களை அங்கிருந்து கூட்டிப் போய்... " அழுது குழறினாள்.

" என்ரை அப்பாவைப்பற்றி எனக்கு நல்லாய்த் தெரியும். இவரோடை போறது ஆபத்தென்று திரும்பத் திரும்பக் காந்தனுக்குக் கூறினனான். ஆனால் அவர் எங்கடை அப்பாவை மதித்து நம்பினார். எல்லாம் நாசமாயப் போச்சுது. இல்லையெண்டால் இப்ப கப்பலிலை அவரும் நானும் வந்திருப்பம்." என்று கூறிவிட்டு விக்கிவிக்கி அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31

காலை பொலபொலவென்று விடிந்தது. வீட்டு வேலைகளை அவசர அவசரமாகச் செய்து கொண்டிருந்தாள். அவளின் அவசரம் அவள் எங்கோ போவதற்கு ஆயத்தமாகிறாள் என்பது புரிந்தது. சிவகுமார் அறையைவிட்டு வெளியில் வந்தபோது தேநீரைக் கொண்டு போய்க் கொடுத்தாள். வாங்கிக்கொண்ட சிவகுமார்

"இதிகா வெளியாலை போறியளோ?" என்று கேட்டான். அவள் அதற்கு எந்தப் பதிலும் கூறாமல் அவசரஅவசரமாகக் குசினிக்குள் போய்விட்டாள்.

சிவகுமார் தலையை ஆட்டிவிட்டுப் புறப்பட்டு வெளியே போனான்.

இதிகாவின் அவசரத்தை உணர்ந்த சுவந்திகா "இதிகா நீங்கள் வெளியிலை போறதெண்டால் போங்கோ நான் சமையலைக் கவனிக்கிறன்". இதிகா அவளை நன்றியோடு பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே புறப்பட்டுப் போன இதிகா தன்னுடைய பிரசாரப் பிரிவுத் தலைவரைச் சந்தித்தாள். அன்றைய சந்திப்பின் நோக்கமே சுவந்திகாவைப் பற்றி முடிந்தவரை விளக்கினாள். சுவந்திகா கூறிய ஆபத்து நிகழ்ந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தாள். அவரும் தலைமையிடம் இதுபற்றிக் கூறுவதாகவும் மற்றைய இயக்கங்களால் ஏதும் நடந்தால் தாம் ஒன்றும் செயயமுடியாது என்றும் கூறிவைத்தார். இதிகாவுக்கு நிரம்பக் குழப்பமாகவும் பயமாகவும் இருந்தது. இதிகா சோர்ந்த மனத்துடன் வீட்டுக்கு வந்து கதிரையில் தொப்பென்று இருந்தாள். சமைத்துக் கொண்டிருந்த சுவந்திகா சத்தம் கேட்டு வெளியே வந்தாள். இதிகாவின் சோர்விலிருந்து நடந்ததை ஊகித்துக் கொண்டாள். மெதுவாக இதிகாவுக்கு அருகில் வந்து அவளைத் தட்டிக் கொடுத்து

"என்ன இதிகா சோர்வாக இருக்கிறியள்? ஏதும் பிரச்சினையே?"

இதிகா திடுக்கிட்டு அவளைப் பரிதாபமாகப் பார்த்தாள். இதிகா அவளுக்கு நடந்தவற்றை விளக்கித் தான் பிரச்சாரப் பிரிவில் இருப்பதாகவும் கூறுகிறாள். இயக்க விதிகளின்படி இதிகா இப்படிக் கூறியிருக்கக் கூடாது. ஆனால் தன்னையும றியாமல் கூறிவிட்டாள்.

"இதிகா முதலில் உன்னை நீ திடப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கடை போராட்டம் இன்று தற்காப்பு நிலையிலைதான் இருக்கு. சிங்களவரிட்டையிருந்து உங்களைக் காப்பத்திறதுதான் நோக்கம். அப்படியிருக்கேக்கை எனக்குவரும் ஆபத்து சாதாரணமான நிகழ்வுதான். இதற்காக மனஞ் சோராமல் உற்சாகமாய் உங்கடை விடுதலைப் போரிலை ஈடுபடு. நான் ஜயாவைப் பார்த்துக் கொள்கின்றேன்"

என்று சுவந்திகா சொன்னபோது மெய்சிலிர்த்துப் போன இதிகா வேகமாக எழும்பி அவளைக் கட்டிப் பிடித்து அழுதாள்.

"உங்களோடை வாழ அண்ணாவுக்குக் குடுத்து வைக்கயில் லையே" என்று கேவிக்கேவி அழுதாள். அவளை ஆறுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திவிட்டுக் குசினிக்குள் சென்று விட்டாள் சுவந்திகா. வெளியே போயிருந்த சுந்தரம் மாஸ்டர் உள்ளே வந்து கொண்டிருந்தார். இதிகா தனிய இருப்பதைப் பார்த்து அவளுக்கருகில் சென்று தலையைத் தடவிக் கொடுத்த வண்ணம் "பிள்ளை கொம்மா இருந்திருந்தால் இவ்வளவைக்குக் கலியாணம் நடந்திருக்கும். கொண்ணையும் எங்களை விட்டிட்டுப் போட்டான். நீயெண்டாலும் ஒரு கலியாணத்தைக் கட்டிப் பிள்ளை குட்டியோடை இருந்தால்தான் எங்கடை குடும்பம் தழைக்கும். இவ்வளவு நாளும் கதைக்காத ஒரு விசயத்தை இண்டைக்குக் கதைக்கப் போறன். எங்கடை வீட்டிலை இருக்கிற தம்பி சிவகுமாரோடை நீ பழகிறதைப் பார்த்துக் கொண்டுதான் வாறன். உனக்கு அந்தத் தம்பியிலை விருப்பம் எண்டாச் சொல்லு. நான் ஜாம் ஜாம் என்று கலியாணத்தை நடத்தி வைக்கிறன். ஆருக்கும் நான் பயப்பிட மாட்டன்." என்று கூறிவிட்டு அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

இதிகா எதுவும் கூறாமல் நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய மனதிற்குள் ஒரு போராட்டமே நடந்து கொண்டிருந்தது. இறுதியில் என்ன சொல்வதென்று முடிவெடுத்து "அப்பா நீங்கள் சொல்வது நியாயம். அம்மா போனாப் போலை நீங்கள் என்னை வளர்த்த விதம் எல்லாம் எனக்குத் தெரியுது. ஆனால் நான் இப்ப நீங்கள் சொல்லிற மாதிரிச் செய்ய முடியாமல் தவிக்கிறேன். நீங்கள் சொன்ன மாதிரித் சிவகுமாரை நான் விரும்பியது உண்மைதான். நீங்கள் எதிர்த்தால்கூட அவரைத் தான் கட்ட வேணுமென்று மனதுக்கை நினைச்சுக் கொண்டிருந்தனான். இப்ப நீங்களே அவரைக் கட்டு என்று சொல்லேக்கை என்னாலை முடியாது என்று மட்டும் தான் சொல்லலாமப்பா" என்று கூறிவிட்டு விக்கிவிக்கி அழுதாள். அவர் அவளின் பரிதாபகரமான நிலமை யைப் பார்த்து முதுகில் தடவி ஆதூரப்படுத்தினார்.

"இப்ப நான் ஓமெண்டால் கூட அவர் ஓமெண்ண மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கடை விடுதலைப் போராட்டமெல்லாம் அவருக்குப் பிடிக்காது. நான் என்ரை உயிரை எங்கடை விடுதலைப் போருக்கு அர்ப்பணிச்சிட்டடன். என்னைத் தடுக்காதை யுங்கோ" என்று கதறினாள். அவளின் இந்த வார்த்தைகள் அவருக்குள் ஒரு குழப்ப நிலையை உருவாக்கியது. திடுக்கிட்டுவிட்டார். இதிகா இயக்கத்தோடு தொடர்புபட்ட விடயங்கள் அவருக்குத் தெரியாது. இது அவருக்கு மேல் யாரோ பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டதுபோல் உணர்ந்தார். அவரால் இதனை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. யாராவது போராடி தரட்டும் தன் பிள்ளைகள் மட்டும் அப்படியே இருக்கட்டும் என்ற மன நிலையிலேயே இருந்தார்.

வெளியில் போயிருந்த சிவகுமார் அப்போ உள்ளே நுழைந்து கொண்டிருந்தான். இதிகாவும் சுந்தரம் மாஸ்டரும் இருந்த நிலை அவனுக்கு ஐயத்தை ஏற்படுத்தியது. நேராகத் தன் அறைக்குள் போய்விட்டான். சிறிது நேரத்தில் அறைக்கதவு தட்டும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தான். சுந்தரம் மாஸ்டர் வாசலில் நின்றிருந்தார்.

"தம்பி உங்களோடை கொஞ்சம் கதைக்கலாமா" என்று கேட்டார்.

"உள்ளை வாங்கோ மாஸ்டர்" என்று அவன் கூற உள்ளே வந்த சுந்தரம் மாஸ்டர் அவனுடைய கையைப் பிடிச்சுக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டார்.

சிவகுமாருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

"தம்பி இதிகா இயக்கத்திலை சேர்ந்திட்டாள் போலை"

என்று கூறியபோது சிவகுமார் திடுக்கிட்டுவிட்டான். இந்த விடயம் சிவகுமாருக்கு ஒன்றும் புதிதல்ல. அதை மாஸ்டர் அறிந்து கொண்டமையே அவனுக்குத் திகைப்பை உண்டு பண்ணியது.

" மாஸ்டர் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். நான் இதிகாவோடை கதைக்கிறன்." என்று கூறி அவரை ஆற்றுப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பி வைத்தான். இயக்கம் இன்னும் பெண்களைப் போராளிகளாக்கும் எண் ணத்தில் இல்லை என்பதை சிவகுமார் அறிந்து வைத்திருந்தான். எதற்கும் நேரடியாக இதிகாவுடன் கதைப்பதுதான் நல்லது.

அறையைவிட்டு வெளியில் வந்து பார்த்தான். இதிகா குசினிக்குள் சுவந்திகாவோடு சமையலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள். சுவந்திகாவை நினைக்கும்போது அவனுக்கு வியப்பாக இருந்தது. வேறு இனப் பெண்ணாக இருந்தாலும் எவ்வளவு சீக்கிரமாக எல்லோருடனும் சேர்ந்துவிட்டாள். இதிகா வெளியில் வருமட்டும் பத்திரிகையை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தான். பத்து நிமிடத்தில் வெளியில் வந்தவள் சிவகுமார் வெளியில் இருப்பதைப் பார்த்து

" என்ன சிவகுமார் பள்ளிக்கூடம் போகயில்லையா? " என்றாள்

"இண்டைக்குப் போகயில்லை" என்றான்.

"ஏன்?"

"சில வேலையள் இருக்கு"

இதிகா பக்கத்திலுள்ள கதிரையில் இருந்தாள்.

"இதிகா நான் உங்களோடை கொஞ்சம் கதைக்கவேணும்." என்றான் சிவகுமார். இதிகாவுக்குப் பயமாகவிருந்தது. தகப்பன் காலைமை கதைத்ததுபற்றிக் கதைக்கப்போகிறானோ? அப்படிக் கதைத்தால் என்ன பதில் சொல்வது என மனதிற்குள் போராடினாள்.

"இதிகா இப்ப கொஞ்சநாளாய் உங்கடை நடவடிக்கையிலை சில மாற்றங்கள் தெரியுது."

" இல்லையே நான் சாதாரணமாய்த்தானே இருக்கிறன்" என்றாள்.

" உண்மையைக் கதைப்பமா?"

" கதையுங்கோ"

" உன்னுடைய தனிப்பட்ட முடிவுகளிலை நான் தலையிட வில்லை. நீ இயக்கத்திலை சேர்ந்து விட்டதாக அப்பா கருதுகிறார். இது உண்மையா? அவன் நேரடியாகவே கேட்டுவிட்டான். சிவகுமாரின் கேள்வியால் திக்குமுக்காடிப் போன இதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் முழித்தாள். ஆனாலும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு
"ஓம்.."
"இயக்கம் பெண்களை ஏற்றுக் கொள்ளுதா?"
"இப்ப பிரச்சாரப் பிரிவிலை சேர்த்திருக்கினம். போகப்போக மற்றப் பிரிவுகளிலையும் சேர்ப்பினம் என்று நினைக்கிறன்"
இதற்குமேல் இந்த விடயம்பற்றி இதிகாவுடன் உரையாடச் சிவகுமார் விரும்பவில்லை.
அப்போது கதவு தட்டிக்கேட்டது. சிவகுமார் எட்டிப் பார்த்தான். அன்று வந்த வாலிபன் முகுந்தன் வாசலில் நின்றிருந்தான்.
" உங்களிட்டைத்தான் போல இருக்குது" என்று கூறிவிட்டுச் சிவகுமார் தனது அறைக்குள் சென்றுவிட்டான்.
வாசலடிக்குச் சென்ற இதிகா முகுந்தனோடு சில நிமிடங்கள் ஏதோ கதைத்தாள். அவன் அவள் கையில் கடிதம் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

கடிதத்தோடு உள்ளே வந்த இதிகா அறைக்குள் சென்று கடிதத்தை விரித்துப் படித்தாள். கடிதத்தில் இருந்த விடயம் அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் இதை எப்படித் தகப்பனோடு கதைப்பதெனக் குழம்பினாள். கடிதத்தில் இயக்கம் பெண்களை உள்வாங்கத் தீர்மானித்திருப்பதாகவும் சில பெண்களை பயிற்சிக்கு அனுப்ப உள்ளதாகவும் தெரிவு செய்யப்பட்டவர்களில் இதிகாவும் ஒருவரெனவும் குறிப்பிடப் பட்டிருந்தது. படித்ததும் அந்தக்கடிதத்தை அழித்துவிடும்படி கேட்டிருந்தார்கள். இதுபற்றிய விடயங்களை யாரிடமும் கதைக்கவேண்டாமென்றும் கடுமையாக உத்தரவிட்டிருந்தார்கள். தகப்பனையிட்டு மனம் கவலைப்பட்டாலும் சுவந்திகா தன்னைவிடத் தன் தகப்பனைப் பார்ப்பாள் என்கின்ற மனத் தைரியம் இருந்தது. இதிகா புறப்படத் தயாராகிவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A. KUGAN
72, 2nd LANE
ANANDA PURE
TRINCO

## 32

அன்று காலை விடிந்தபோது இதிகா வீட்டில் இல்லை. சுந்தரம்மாஸ்டர் இடி விழுந்ததுபோல் இருந்தார். சிவகுமாரும் சுவந்திகாவும் அவரைத் தேற்றுவதில் கவன மாக இருந்தார்கள்.

சந்திரன் இப்படி ஒரு முடிவு எடுத்து விடுவான் என்ற பயத்தில்தான் அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார். இதிகா இப்படிச் செய்வாளென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. இதிகாவைத் திரும்ப எப்படி எடுப்பது என்றெல்லாம் பல வகை யாகச் சிந்தித்தார். ஆனால் இது ஒருவழிப் பாதை என்பதை அந்தத் தந்தையுள்ளம் உணரவில்லை. தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் இரண்டு திசைகளில் சென்று தான் அநாதையாகிப் போனதாக அவர் உணரத் தொடங்கினார்.

இப்படி அவர் சிந்தித்துக் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தபால்காரனின் மணிச் சத்தம் கேட்டது.
சத்தம் கேட்டதும் சிவகுமார் போய்க் கடிதங்களைப் பெற்றுக் கொண்டான். கடிதம் சுந்தரம்மாஸ்டருக்கே வந்திருந்தது. கடித உறையைப் பார்த்து அது ஜெர்மனியிலிருந்து வந்திருப்பதாக அறிந்து கொணடான்.
"மாஸ்டர் சந்திரன்ரை கடிதம்" என்று கூறிக் கொடுத்துவிட்டு அவன் அறைக்குள் சென்றுவிட்டான்.

இதிகா எடுத்த முடிவு சரியா பிழையா என சிவகுமாரால் தீர்மானிக்க முடியவில்லை. இனப் பிரச்சினை கூர்மையடையத் தொடங்கிய காலம் இது. இனப் பிரச்சினையானது கூர்மையடைந்து இடதுசாரிகளின் கைகளை விட்டுக் கழன்று சென்று கொண்டிருக்கிற காலம். இனரீதியான அடக்குமுறைகள் உச்சத்தை நோக்கிச் சென்றாலும் அதற்கு எதிரான போராட்ட முன்னெடுப்புகள் சரியான பாதையில் பயணிக்கவில்லை என்றே சிவகுமார் கருதினான். வெறுமனே உணர்ச்சிவசப்பட்ட ஒரு நிலையாகவே அவனுக்குப்பட்டது. தற்சமயம் இது கவர்ச்சிகரமாக இருந்தாலும் நீண்டகால நோக்கில் நிலைத்து நிற்காது என்றே அவன் கருதினான்.
இதற்கு இதிகா போன்ற வாலிப வட்டம் பலியாவது காலத்தின் கட்டாயமே என சிவகுமார் கருதினான்.
சுந்தரம்மாஸ்டரை நினைக்கும்போது அவனுக்குக் கவலையாகவே இருந்தது. அவனுடைய அறைக்கதவு தட்டப்பட்டதுபோல் உணர்ந்தான்.
கதவைத் திறந்தபோது சுவந்திகா வாசலில் நின்றிருந்தாள்.
" உள்ளை வாங்கோ" என்று அவளை வரவேற்று அமரச் செய்தான். சிறிது நேரம் இருவரும் எதுவும் கதைக்கவில்லை.
"மாஸ்டர் என்ன செய்கிறார்?" சிவகுமார் மௌனத்தைக் கலைத்தான். " அவர் யோசித்தபடி இருக்கிறார்"
" இதிகாவின்ரை முடிவு சரியானது தானா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இதிலை சரி பிழை சொல்லமுடியாது. இன்றைய சூழ்நிலை அப்படித்தான் முடிவெடுக்க வைக்கும்"

"எனக்கென்னவோ அவசரப்பட்ட முடிவுபோலப் படுகுது"

"அது நீங்கள் உங்கடை அரசியல் தளத்திலை நின்று கொண்டு சிந்திப்பதால் அப்படித் தோன்றுகிறது. இதிகா போன்ற வாலிப வயதுப் பிள்ளைகள் எவ்விதமான அரசியல் தளமும் இல்லாமல் சிந்திக்கும்போது பழிக்குப்பழி என்ற உணர்வுதான் மேலோங்கும்." என்றாள் சுவந்திகா. அதனை ஏற்றுக்கொண்ட சிவகுமாரும் தலையை அசைத்தான். "சாப்பாடு றெடியாக உள்ளது. பசித்தால் வந்து சாப்பிடுங்கோ." என்று சொல்லிவிட்டு சுவந்திகா வெளியில் சென்றாள். வெளியில் சுந்தரம் மாஸ்டர் சந்திரனின் கடிதத்தை வாசித்துக் கொண்டிருந்தார். கடிதத்தை வாசிக்கும்போது அவர் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அதனைப் பார்க்கும்போது சுவந்திகாவுக்கு வேதனையாகவிருந்தது.

" மாஸ்டர் சாப்பிட வாங்கோவன்." என்று அவரைச் சுவந்திகா சாப்பிடக் கூப்பிடும்போது சிவகுமாரும் அறையைவிட்டு வெளியில் வந்தான். சிரித்தவாறு "அவர் உங்களுக்கு மாஸ்டர் இல்லை மாமா" என்று கூறினான். சுவந்திகா மெதுவாகச் சிரித்தாள். இருவரும் எழும்பிச் சாப்பிட்டார்கள். சாப்பிட்டபின் சிவகுமார் பாடசாலைக்குப் புறப்பட்டான். வெளியில் பெரும்பாலானவர்கள் மத்தியில் இதிகா இயக்கத்தில் சேர்ந்துவிட்டாள் என்ற செய்திதான் பேசு பொருளாக இருந்தது. எவ்வளவுதான் இரகசியமாக இருந்தாலும் அது வெளியில் வந்துவிடும். மாஸ்டர்வீடு கரவெட்டிக் கிராமத் தின் பேசு பொருளாகவே இருந்தது.

" உவருக்கு வேணும். சிங்களத்தியை வீட்டிலை வைச்சிருக்கிறார். போதாக்குறைக்கு கதிர்காமனின்ரை மகனையும் வீட்டிலை வைச்சிருக்கிறார். அப்ப உவற்றை வீட்டு பெட்டையும் ஓடுகாலியாகத்தானே இருப்பாள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதிகா இயக்கத்தில் சேர்ந்தமையை பெருமைக் குரியதாக யாரும் கருதவில்லை. அவளை ஓடுகாலியாகக் கருதுமளவுக்கு இயக்க விடயத்தை மக்கள் கருதினர் என்பது தான் உண்மை. சுவந்திகா அங்கு வந்திருப்பதை அவர்கள் பெரிது படுத்தாவிட்டாலும் சிவகுமார் அங்கு இருப்பது மாஸ்டர் ஏதோ செய்யத்தகாத காரியத்தை செய்துவிட்டார் என்பது போலும் கதைத்துக்கொண்டனர். மாஸ்டர் இதைப்பற்றி யெல்லாம் அலட்டிக் கொள்ளவில்லை. முன்பிருந்த சுந்தரம் மாஸ்டருக்கும் இப்போ உள்ள மாஸ்டருக்கும் இடையில் பலத்த வித்தியாசம் உண்டு. இந்த மாற்றங்களுக்குக் காரணமானவள் இதிகாதான். அந்த இதிகா தனக்கும் சொல் லாமல் இயக்கத்தோடு இணைந்தமை அவருக்கு வேதனையாக இருந்தது.

சந்திரனை அனுப்பியதுபோல் இதிகாவையும் அனுப்பியிருக்கலாமோ என்று நினைத்தார். சிவகுமாரைப் பொறுத்தவரை இதிகாவின் இந்தச் செயற்பாடு தவறாகவே தோன்றியது. இதனால் அவனுக்கு அவள்மேல் சிறிது கோபம் வரவும் செய்தது. இயக்கங்கள் தான் தோன்றித் தனமாக வளர்வதும் நல்லதல்ல என்கின்ற அபிப்பிராயத்திலும் இருந்தான். இதிகாவின் பிரச்சினை இந்தக் குடும்பத்தைச் சிறிது ஆட்டங்காண வைத்தது என்பதுதான் உண்மை. சுந்தரம் மாஸ்டரைப் பொறுத்தவரை மூன்று பிள்ளைகளைப் பெற்று ஒருவனை இனப் பிரச்சினைக்குப் பலியாகவும் ஒரு பிள் ளையை இனப்பிரச்சினையைத் தீர்க்கமுனையும் போராட்டத் திற்கும் மற்றைய பிள்ளையை இனப் பிரச்சினையிலிருந்து தப்பியோடும் ஒருவனாகவுமே உருவாக்கவே முடிந்தது. இதற்கு மிஞ்சி அவர் என்னதான் செய்வது. களைத்துப்போய் நாடியில் கைவைத்தபடி வானத்தைப் பார்த்துக் கொண்டி ருந்தார்.

**பாகம் 1 முற்றும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த நாவலில் வரும்
பாத்திரங்கள்
இதுவரை யாராலும்
பேசப்படவில்லை.
இவர்கள் விடுதலைக்கு
எதிரானவர்களுமில்லை.
இவர்கள்
காட்டிக் கொடுப்பாளர்களாயும்
இருக்கவில்லை.
சாதாரண மனிதர்களே.
ஆனால் இவர்கள் அன்றும்
கருத்திற் கொள்ளப்படவுமில்லை
ஏன் இன்றும் அவர்கள்
புறந்தள்ளப்பட்டே உள்ளனர்.

- மு. தயாளன் -

மகுடம்
ISBN: 978-624-5849-06-2
9 786245 849062
500.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org